
கல்லூரிக்
காலத்திலே...
முத்துலட்சுமி ராகவன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : கல்லூரிக் காலத்திலே... |
| ஆசிரியர் | : முத்துலட்சுமி ராகவன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஆகஸ்ட், 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள். |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 268 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>தபால் பெட்டி எண்: 667,<br>பு.எண்: 32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# கல்லூரிக் காலத்திலே...

# கல்லூரிக் காலத்திலே...

## 1



மதுரையிலிருந்து திருமங்கலம் செல்லும் சாலையின் ஊடே இருக்கும் திருப்பரங்குன்றம்.. முருகப் பெருமான் குடியிருக்கும் ஆறு படை வீடுகளில் ஒன்றான முருகனின் திருக்கோவிலைக் கொண்ட தெய்வ ஸ்தலம்... சிவபெருமான்... பார்வதியின் தெய்வ மகன் முருகன். தேவேந்திரனின் மகளான தெய்வானையைக் கைபிடித்தது இந்த ஸ்தலத்தில்தான்.. குன்றிருக்கும் இடங்களில் எல்லாம் குடியிருக்கும் குமரன்... திருப்பரங்குன்றம் என்று பெயரிலேயே குன்றைக் கொண்டிருக்கும் இந்த

ஸ்தலத்தில்.. குன்றில் குடியிருக்காமல் மலை அடி வாரத்திலேயே கோவில் கொண்டது ஏன்?

இந்த ஸ்தலம் அவர் தெய்வானையை திருமணம் செய்து கொண்ட ஸ்தலம். திருமணத்திற்கு வருகிறவர் களுக்கு மலைறேும் சிரமத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக மலை அடிவாரத்திலேயே கோவில் கொண்டிருக்கிறார். ஆறு படை வீடுகளில் ஒன்றான இந்தத் திருப்பரங்குன்றத்தின் அருகிலிருக்கும் மதுரை மாநகரில் உள்ள மதுரை மெடிக்கல் காலேஜில் வருடா வருடம் நூற்றுக்கணக்கான டாக்டர்கள் படிப்பை முடித்து கல்லூரியிலிருந்து வெளியேறுவார்கள். அதேபோல் வருடா வருடம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் டாக்ட ராகும் கனவுகளோடு அந்தக் கல்லூரியில் முதலா மாண்டு மாணவர்களாக வந்து சேர்வார்கள்.

அன்று விடுமுறை முடிந்து கல்லூரி திறக்கப்பட் டிருந்த நாள்... தினமும் புதிது புதிதாய் முதலாமாண்டில் சேர்ந்த மாணவர்கள் கண்களில் மிரட்சியோடு அந்தக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்தார்கள்.

இதுவரை அவர்கள் இருந்த உலகம் வேறு. இனிமேல் அவர்கள் காணப் போகும் உலகம் வேறு.

பள்ளிப் பருவத்தில் மாணவ மாணவிகளுக்கு இருந்த கட்டுப்பாடுகள் கல்லூரிக் காலத்தில் இருக்காது.

கூண்டுக் கிளிகள். சிறகடிக்கும் பட்டாம் பூச்சிகள் ஆகும் அதிசயம் கல்லூரி காலத்தில் மட்டும்தான் நடக்கும்.

எத்தனையோ நிகழ்வுகள்.. நடப்புகள்.. உறவுகள்.. பிரிவுகள் இந்தக் கல்லூரிக் காலத்தில் நடக்கும்.



நண்பன் பகைவனாவதும்.. பகைவன் நண்பனாவதும் இந்தக் கல்லூரிக் காலத்தில் மிகவும் சகஜமாக நடை பெறும் விஷயம்.

பெற்றோர்களின் பாதுகாப்பு எனப்படும் கூட்டி லிருந்து விடுபட்டு பிள்ளைகள் தன்னிச்சையாக பறக்கத் துடிப்பதும் இந்தக் கல்லூரிக் காலத்தில்தான் நடக்கும்.

நேற்று வரை இரையூட்டுவதற்காக வாய் திறந்த குஞ்சுகள் இன்று சிறகு முளைக்கப் பெற்று தனித் துவத்தை விரும்புவதை அக்குஞ்சுகளைப் பெற்ற தாய் பறவைகள் உணர்வதும் இந்தக் கல்லூரிக் காலத்தில் தான்...

பள்ளி.. வீடு.. இரண்டைத் தவிர வேறு எந்த சிந் தனையும் இல்லாமல் கண்கள் மறைக்கப்பட்ட குதிரை கள் போல் ஓடிக் கொண்டிருந்த சின்னஞ்சிறுசுகள்.. புதிய சிந்தனைகள்.. புதிய நோக்கு.. புதிய குறிக்கோள்கள் என்று பரந்த சிந்தனையுடன் வெளியுலகத்தை தரிசிக்க ஆரம்பிப்பதும் இந்தக் கல்லூரிக் காலத்தில்தான்...

இளமை என்னும் இனிய கனவில்.. இயற்கை அளித்த வசந்த ருதுவில்... பனியில் குளித்த புது மலர்களாய்.. பார்க்கும் இடங்களையெல்லாம் பிருந்தாவனமாய் இளைய தலைமுறையினர் ரசிக்க ஆரம்பிப்பது இந்தக் கல்லூரி காலத்தில்தான்...

இந்தக் கல்லூரி காலத்தை... இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் அளிக்கும் கல்லூரியின் வாசலை மிதித்தான் ஸ்ரீதரன்.

நீண்டிருந்த வாசலின் மண்ணை மானசீகமாக தொட் டுக் கும்பிட்டுக் கொண்டு நடந்தான்... கும்பலாய்

நின்றிருந்த மாணவர்கள் அவனை அழைத்தார்கள். அவர்களின் தலைவன் போல தன்னை கருதிக் கொண்டு டிவிஸ் அப்பாச்சியில் இரு கால்களையும் போட்டு அமர்ந்து கொண்டிருந்த ஒரு சீனியர் மாணவன் அதட்டி னான்.

''உன் பெயர் என்னடா..?''

''ஸ்ரீதரன்..''

''இங்கே எதுக்கு வந்திருக்கிறே...''

அவன் கெத்தாக வினவி விட்டு.. உடனிருந்த மாண வர்களை..

'இது எப்படியிருக்கு.. ஹா.. ஹா..' என்ற தினுசில் நோட்டம் விட.. அவர்கள் 'கொல்'லென்று சிரித் தார்கள்...

ஸ்ரீதரன் சலனமில்லாத முகத்தோடு அவர்களைப் பார்த்தான்.

''இந்தக் கல்லூரிக்கு நீங்கள் எல்லோரும் எதற்கு வந்தீர்களோ. அதற்கு வந்திருக்கிறேன்.''

அந்த மாணவனின் முகம் கடுமையானது. உட னிருந்த மாணவர்கள் அவனை உசுப்பினார்கள்.

''பார்த்தியாடா.. இவனுக்கு இருக்கிற திமிரை. கொஞ்சமாவது சீனியர்களை மதிக்க வேண்டுமென்ற பயம் இருக்கிறதா? இவனையெல்லாம் சும்மா விடக் கூடாதுடா...''

''ஆமாம்டா.. இவனைப் பார்த்து மற்றவனுக பழகிட் டானுங்கன்னா ஜூனியர் பயலுகளுக்கு குளிர் விட்டுப் போகும்டா மச்சி... எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படி ஒரு பதிலைச் சொல்லுவான்.''



''இன்றைக்கு முதன் முதலாய் வருகிற இவனுக்கே இவ்வளவு தெனாவெட்டு இருந்தால் நமக்கு எவ்வளவு இருக்கும். போட்டுத் தாக்குடா மச்சான்...''

அவர்கள் உசுப்பி விட்டதில் வெறியேறிப் போன அந்த மாணவன் தன் அரியாசனமான அப்பாச்சியை விட்டுக் கீழே இறங்கினான்.

''ஏய்.. நீ எந்த ஊருக்கார பயல்டா..?''

''கோவில்பட்டி...''

''இது என்ன ஊர் தெரியுமில்ல...?''

''தெரியும்.. மதுரை...''

''வார்த்தைக்கு வார்த்தை எதிர் வார்த்தையா பேசுகிற..?''

''நீங்க கேட்டதுக்குத்தானே பதில் சொல்லுகிறேன் சீனியர்?''

''இவன் கொஞ்சம் துள்ளுகிற மீனாய்த்தான் தெரி கிறான்டா... கவனிச்சுடுவோமா..?''

''ஏன் சீனியர் இப்படிப் பேசுகிறீங்க?''

''இது மதுரை மண்ணுடா.. மரியாதை கொடுக்க பழகிக்க..''

''நான் மரியாதையாகத்தானே பேசுகிறேன் சீனியர்..?''

''இவனை வெத்தலை பாக்கு போட வைத்தால்தான் இவன் சரிப் படுவான்டா.''

அந்த சீனியர் மாணவன் ஸ்ரீதரனை நெருங்குகையில் அவனது தோள் மீது ஒரு கரம் விழுந்தது. அவன் திரும் பிப் பார்த்தான். ஒரு புதிய மாணவன் நின்று கொண் டிருந்தான்.

''யாருடா... நீ...''

''அவனைப் போலவே இன்றைக்குத்தான் வந்திருக்கும் நியூ ஸ்டுடன்ட்.''

''இந்த வருடம் வந்த ஜூனியர்கள் எல்லாமே ஒரு மார்க்கமாத்தான் இருக்கீங்கடா.. ஏண்டா.. என் தோளில் கை போடும் துணிச்சல் உனக்கு எங்கேயிருந்துடா வந்துச்சு.''

''நீங்க என்ன.. சிங்கமா.. புலியா.. கரடியா? மனுசன் தானே... என்ன நீங்க சீனியர். நாங்க ஜூனியர். இது மட்டும்தானே வித்தியாசம்? மற்றபடி நாம் எல்லோருமே ஸ்டூடன்ட்தானே...?''

''இங்கே பாருடா.. புரட்சித் தளபதி ஒருத்தன் கிளம்பி வந்திருக்கிறத.. இப்படி எத்தனை பேர்டா கிளம்பி வந்திருக்கீங்க.''

''அதை என் கிளாஸில் போய் உட்கார்ந்து எண்ணிப் பார்த்து விட்டு வந்து சொல்லவா...''

''டேய்.. அவனை விட இவனுக்குத் திமிர் அதிகமா இருக்கு. இவனை முதலில் போடனும்டா...''

''நானும் வந்ததில் இருந்து பார்க்கிறேன். நீங்கள் ஒரு ஸ்டூடன்ட் பேசுவது போலவே பேசவில்லையே... ரவுடிகளின் லாங்வேஜில் பேசுகிறீர்களே... நாங்கள் டாக்டர்கள் ஆக.. நான்கரை வருடம் போக வேண்டும்... நீங்கள் இன்னும் ஆறு மாதங்களில் டாக்டர்கள் ஆகி இந்த காலேஜை விட்டு வெளியேறப் போகிறீர்கள். ஆனால் நீங்கள் அதை சுத்தமாய் மறந்து விட்டிங்க போல இருக்கே...''

''ஏய்ய்.. என்னடா நடக்குது இங்கே..? நான் இங்கே சீனியரா? இல்லை நீ சீனியரா? நான் உன்னை ராகிங் பண்ணப் பார்த்தால் நீ ராகிங் பண்ணிக் கொண்டு இருக்கிறாயே...''



''மன்னிச்சுங்க சீனியர்.. நீங்கள் ஏன் எங்களை ராகிங் பண்ண வேண்டும்?''

''ஏன்னா.. நான் பர்ஸ்ட் இயர் ஸ்டூடன்டா இருக்கும் போது என்னை பயங்கரமா ராகிங் பண்ணினாங்கடா. நானெல்லாம் அவங்க கிட்ட உன்னைப் போல் வாய டிக்கவில்லை. மண்டி போட்டேன்.''

''அவங்க பண்ணியதற்கு நீங்க அவங்களைத்தானே தண்டிக்கணும்? எங்களை ஏன் டார்ச்சர் பண்றீங்க...?''

''ஏண்டா... நீ ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறாயா? இந்த காலேஜில் படிக்கணும்கிற எண்ணம் இருக்கா.. இல்லையா..?''

''கஷ்டப்பட்டு படிச்சு.. ப்ளஸ் டூவில் நிறைய மார்க் வாங்கி.. டாக்டர் ஆகணும்கிற ஆசையோடு வந்திருக்கிற எங்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இது...?''

''ஊஹூம்.. நீ வழிக்கு வர மாட்டே.. முதலில் சட்டையைக் கழட்டுடா.''

''எதற்கு.''

''கேள்வி கேட்கிறாய்..? சொன்னதைச் செய்.''

''நீங்கள் சொன்னதை நான் செய்தால். பயங்கர பின் விளைவுகள் வரும்.. பரவாயில்லையா?''

''என்னடா.. பிலிம் காட்டுகிற?''

''பிலிம் காட்டாமல் என்ன செய்வேன்னு நினைக்கறீங்க.. என் அப்பா சென்ட்ரல் மினிஸ்டர். என் அத்தை ஸ்டேட் மினிஸ்டர்.''

அஜீத் நிதானமாகச் சொல்ல பந்தாவுடன் நெருங்கிய அந்த சீனியர் மாணவன் பம்மினான். அவன் அருகிலிருந்தவர்கள். அவனை அம்பேல் என்று விட்டு விட்டு.. ஆளுக்கொரு திசையில் பறந்து விட்டார்கள்.

செய்வதறியாது சமாளிக்கும் பாவனையில் சிரித்தவன்.

''உன் பெயர் என்னப்பா..'' என்று மகா அன்புடன் வினவினான்.

''அஜீத்...''

''அட.. நம்ம 'தலை'யோட பேரு. எந்த ஊருப்பா?''

''தூத்துக்குடி...''

''அட வீரம் விளைஞ்ச மண்ணு.. அதுதான் இந்த நிமிர்வாய் பேசுகிற போ.. போய் நல்லாப் படி.''

ஸ்ரீதரனின் தோளின் கை போட்டுக் கொண்டு அஜீத் நடந்தான்.

''தேங்க்ஸ்.''

''எதற்குலே.''

''என்னை அவர்களிடமிருந்து காப்பாற்றியதற்கு.''

''தேங்க்ஸ் சொல்வதற்கு பதில் வேறு ஒன்றைச் செய்வாயா?''

''என்ன செய்ய?''

''அடுத்த வருடம்.. இதே போல் ஜூனியர் ஸ்டூடண்ட்ஸ் வரும்போது நீ இம்மீடியட் சீனியர் ஆகிவிட்டகெத்தில் அவர்களை ராகிங் பண்ணாமல் இருப்பியாலே...''

தூத்துக்குடிக்காரன் என்பதால் இயல்பாக 'லே..' போட்ட அஜீத், ஸ்ரீதரனுடன் வகுப்பறைக்குள் நுழைந்தான். எங்கே உட்காரலாம் என்று சுற்று முற்றும் பார்த்தவன்.. ஆஜானுபாகுவான தன் உடல்வாகிற்கு பின்னால் அமர்வதே சரி என்ற எண்ணத்துடன்.. பின்னால் சென்று அங்கு ஏற்கனவே அமர்ந்திருந்த பிரசாத்தைப் பார்த்து,



''எழும்புலே..'' என்றான்.

பிரசாத் திகைத்தான். அவனுக்கு ஒல்லியான உடல் வாகு. தன் உடல் வாகைப் பார்த்து ஆஜானுபாகுவான அஜீத் கேலி பேசுகிறான் என்ற கோபத்தோடு,

''வந்த அன்றைக்கே கேலி பேசுகிறாயா?'' என்று சண்டைக்குப் போனான்.

அஜீத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. அருகிலிருந்த ஸ்ரீதரனைப் பார்த்து..

''ஏன்லே.. இவனுக்கு எதற்கு இத்தனை கோபம்? இவனை எழும்பத்தானே சொன்னேன். கேலி எங்கே பேசினேன்...'' என்று வினவினான்.

ஸ்ரீதரனுக்கு சிரிப்பு வந்து விட்டது. அவன் அஜீத்தைப் பார்த்து..

''நீ இவனை 'எழுந்திரு'ன்னு சொல்லியிருக்கணும். எழும்புன்னா இவன் என்ன நினைப்பான்? எலும்புதான் இருக்கு.. சதையைக் காணோம்ன்னு ஒல்லியா இருக்கிற இவனை கேலி பண்ணுகிறதாய் நினைக்க மாட்டானா?'' என்று புரிய வைத்தான்.

அஜீத்திற்கும் சிரிப்பு வந்து விட்டது. அவன் அன்புடன் அணைப்பதாய் நினைத்து உண்மையிலேயே எலும்புகள் வலிக்கும் அளவுக்கு பிரசாத்தை இறுக்கி அணைத்தான்.

''நான் தூத்துக்குடிக்காரன்லே. பேச்சு வழக்கு வேறயா இருக்கும்.. உன்னைப் போய் நான் கிண்டல் பண்ணு வேனா. நீ என் தோஸ்தாச்சே.''

அஜீத் பிரசாத்தின் தோள் மேல் கை போட்டு அணைத்துக் கொண்டபடி அமர்ந்தான்... அப்படித்தான் முதல் நாளிலேயே அஜீத்.. ஸ்ரீதரன்.. பிரசாத் மூவரும் ஒன்று பட்டனர். அருகருகே அமர்ந்து கொண்டனர்.

அவர்களது வகுப்பறைக்குள் வெள்ளை வெளேரென்ற சருமத்துடன் ரணத்தின் செழுமையை பறைசாற்றும் நடை உடை பாவனையோடு 'டக்.. டக்கென்று ஹை ஹீல்ஸ் சப்திக்க சாரா நுழைந்தாள். ஏற்கெனவே அமர்ந்திருந்தவர்களை.. முக்கியமாய் மாணவர்களை அலட்சியமாய் பார்த்தபடி.. முன் வரிசையில் அமர்ந் தாள்.

''யாருலே.. இவ.. குதிரைக்குட்டி மாதிரி வந்தா.. இப்படி ஒரு லுக் விட்டுட்டு கெத்தா உட்காருகிறா.. சீனியர் பொண்ணு எவளாச்சும் ராகிங் பண்ண உள்ளே வந்துட்டாளோ...'' அஜீத் கால்களை நீட்டியபடி சாய்ந்து அமர்ந்து வினவினான்.

''எனக்குத் தெரியலையே...'' என்றான் பிரசாத்.

''உனக்குத் தெரியாதுங்கிறதை நான் ஒத்துக் கிறேன்லே.. நான் எழும்புன்னு சொன்னாலே உனக்குத் தெரியாது. இவள் யாருன்னா தெரிந்திருக்கப் போகிறது? நான் உன்னைக் கேட்கவில்லை. பொதுவாய் தான் கேட்டேன். ஏன்லே ராதா.. உனக்குத் தெரியுமாலே?''

'ராதா' என்றழைக்கப்பட்ட ராதாகிருஷ்ணன்.. மதுரை மண்ணின் மைந்தன். நுனி மூக்கில் கோபத்தோடு



இருப்பவன்.. வாயைத் திறந்தால் மதுரைத் தமிழ் மணக்கப் பேசுபவன். அவனைப் பார்த்து அஜீத் இப்படிக் கேட்கவும் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. புஸ்.. புஸ்ஸென்று மூச்சு விட்டுக் கொண்டு அஜீத்தையும்.. மற்ற மாணவர்களையும் உறுத்துப் பார்த்தபடி பொரிய ஆரம்பித்தான்.

''வாடா.. வா.. எங்கிருந்துடா இத்தனை பேர் கிளம்பி வந்திருக்கீங்க?''

''இது என்னலே இவன் இப்படி பேசுதான். எல்லோருமே ஆளுக்கொரு ஊரிலிருந்து இல்ல கிளம்பி வந்திருக் கிறோம்?''

''உங்களுக்கு நான்தான் கிடைத்தேனா?''

''இங்க பாரு.. இவனுக்கு கோபம் வருவதை? ஏன்லே.. நீதானே மதுரைக்காரன்.. உனக்கு விவரம் தெரியுமான்னு கேட்டேன்.''

''ஆமாண்டா.. பொம்பளைப் புள்ளைகளைப் பத்தி விவரம் சொல்லத்தானே.. என் அப்பாவும்.. அம்மாவும் என்னை இங்கே அனுப்பி வச்சிருக்காங்க.. எடுபட்ட தனமா பேசுகிறதெல்லாம் என்கிட்ட வேணாம் சொல் லிட்டேன்.''

''ஏய்ய்.. சும்மா நிறுத்துலே.. குழம்பில போட்ட மீனு மாதிரி ஏன் இந்தக் குதி குதிக்கிற..? தெரிஞ்சா சொல்லு... தெரியலைன்னா... வாயை மூடு.''

அஜீத்தும்.. ராதாகிருஷ்ணனும் உக்கிரமாய் மோதிக் கொள்ளப் போனபோது ராபர்ட் இடையில் புகுந்து தடுத்தான்.

''ஏங்க.. நாமெல்லாம் ஒரே கிளாஸ். நாமே சண்டை போட்டுக்கிட்டா எப்படி. அந்தப் பெண் யாராயிருந்தால் நமக்கென்ன.. நாம நம்ம வேலையைப் பார்ப்போம்.''

''அதை இவன் மண்டையில் ஏறுகிறது போல் சொல்லுங்க ராபர்ட்.''

ராபர்ட் 'வாங்க.. போங்க..' என்று பேசுவதைக் கண்ட அஜீத் வியப்புடன் புருவத்தை உயர்த்தினான்.

''ஏன்லே.. இவன் எதுக்கு வாங்க.. போங்கன்னு கூப்பிடுகிறான்...''

''அப்புறம் உன்னைப் போல்.. வாலே.. போலேன்னு 'லே' போடுவான்னு நினைத்தாயா? அவன் மரியாதை தெரிந்தவன்..'' ராதாகிருஷ்ணன் அஜீத்தை முறைத்துக் கொண்டே பதில் சொன்னான்.

''அப்ப.. எனக்கு மரியாதை தெரியாதுன்னு சொல்கிறாயா? பல்லைக் கழட்டி விடுவேன்ல்ல... பார்த்துப் பேசு...''

''என் கை என்ன பூப்பறிக்குமா? பிஞ்சு போய் விடும்லே...''

''என்னலே.. இவன் என்னவோ.. பூ.. பிஞ்சுங்கிறான்.''

'பிய்ந்து போய் விடும்..' என்ற சொல்தான் மருவி 'பிஞ்சு' என்று ஆகி விட்டிருக்கிறது என்பதைப் புரியாதவனாய் அஜீத் வினவ.. மற்றவர்கள் அதை அவன் உணராமல் இருக்க.. ஏதேதோ சொல்லி சமாளித்தார்கள்.

அலெக்ஸ் சுவாரஸ்யமாய் கன்னத்தில் கை வைத்து.. ராதாகிருஷ்ணனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதை தற்செயலாய் பார்த்து விட்ட ராதாகிருஷ்ணனின் மூக்கு விடைத்தது.



''ஏன்டா.. இங்கே என்ன டான்ஸா ஆடிக் கொண்டிருக்கிறோம். இப்படி வேடிக்கைப் பார்க்கிற.. கண்ணைப் பாரு.. அப்படியே களவாணிப்பய கண்ணு.. இந்தா பாரு.. அடங்கியிரு.. இது மதுரை...''

அன்று மாலை... பிரசாத்திடமும்.. ராபர்ட்டிடமும் ராதாகிருஷ்ணன் பேசுவது போலவே பேசிக் காட்டிச் சிரித்தான் அலெக்ஸ்.

# 2



**வ**குப்புகள் ஆரம்பிக்கப்பட்டு.. நாட்கள் ஓட ஆரம்பித்தன. புதிய மாணவர்கள்... மெல்ல.. மெல்ல பழைய மாணவர்கள் ஆகிக் கொண்டு வந்தார்கள். அஜீத்துடன் மோதிய ராதாகிருஷ்ணன் அவன் தோள் மேல் கை போட்டுக் கொண்டான். ஹாஸ்டல் பிடிக்கவில்லையென்று ராபர்ட் ஹாஸ்டலை விட்டு வெளியேறி... தனி வீடு பார்த்துத் தங்க... அலெக்ஸும் அவனுடன் சேர்ந்து கொண்டு.. வாடகையைப் பகிர்ந்து கொண்டான்.. எங்கும் தன் கொடியை பறக்க விடும் அஜீத்திற்கு ஹாஸ்டல் ஒரு பிரச்னையாக இருக்கவில்லை. வகுப்பறை இனிமையான தருணங்களை வழங்கிக் கொண்டிருந்தது.

அன்று காலையில்... அடித்து விடும் சிகப்பில் உடை உடுத்திக் கொண்டு வந்த சாரா.. அதே கலரில் லிப்ஸ்டிக் வேறு போட்டிருந்தாள். அஜீத் புருவம் உயர்த்தினான்.

''ஏண்லே.. இவ படிக்க வருகிறாளா.. இல்லை நடிக்க வருகிறாளா.''

''உனக்கு அது தேவையா.. பேசாமல் உன் ஜோலிக் கழுதையைப் பார்ப்பியா.. அதை விட்டுவிட்டு அவளை ஏன் நோட்டம் விடுகிறே...''

அருகில் அமர்ந்திருந்த ராதாகிருஷ்ணன் அடிக் குரலில் உறுமினான். அலெக்ஸ் அவன் பேசுவதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். பிரசாத்தும் ராபர்ட் டும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ரகசியமாய் சிரித்துக் கொண்டனர்.. அதை ராதாகிருஷ்ணன் பார்த்து விட்டான்.

''ஏண்டா... கண்ணழகா.. உன் ஆனந்தக் கண்ணைக் காட்டி முழிச்சுக்கிட்டு.. ஏண்டா என்னை இப்படிப் பார்க்கிற?'' என்று அலெக்ஸிடம் அவன் மோத..

''ஏன்லே.. இவன் ஆம்பளைப் பையன்தானே.. இவன் பார்த்தால் நீ ஏன்லே டென்ஷன் ஆகிறாய்.. ஹா.. ஹா..'' என்றான் அஜீத்.

''இவன் வேலை உனக்குத் தெரியாது அஜீத். இவன் என்னை இமிடேட் பண்ணுகிறான். என்னை மாதிரியே பேசிக் காட்டுகிறான்.''

''அப்படியா.. ஏன்லே அலெக்ஸ்.. போயும் போயும் நீ இமிடேட் பண்ண இவன்தான் கிடைத்தானா? வேறு எந்த நல்ல மூஞ்சியும் கிடைக்கவில்லையா?''

''அஜீத்.. வேண்டாம்.. காலையில் இருந்தே.. நீ கடுப் படிக்கிற.''

''காலையில் இருந்தேவா.. இவன் என்னலே சொல்லு கிறான். ஓ.. நீ அதைச் சொல்கிறாயா? ஏன்லே



அலெக்ஸ்.. நான் இவனைக் கண்ட நாள் முதல் இந்த நாள் வரை கேட்கனும்.. கேட்கனும்ன்னு நினைத்துக் கிட்டு இருக்கேன்.. இவன் ஏன்லே.. அவளைப் பற்றி நான் பேசினாலே டென்சன் ஆகிறான்.''

அலெக்ஸ் உற்சாகமாக கண் சிமிட்டியபடி கூறினான்.

''அது வேறு ஒன்றுமில்லை அஜீத்... அவள் இவனைப் பார்த்து 'நீ ரொம்ப நல்லவன்..'னு சொல்லிட்டாளாம்.. அதுதான் சார்.. இந்தப் பாடுபடுகிறார்.''

''நல்லவன்னு சொன்னாளா.. யாரு.. இவனைப் பார்த்தா அப்படி ஒரு வார்த்தையைச் சொன்னாள். ச்ச்.. ச்ச்..'' என்றான் அஜீத்.

''எதுக்குடா இப்ப நாயைக் கூப்பிடுற...'' என்று எரிந்து விழுந்தான் ராதாகிருஷ்ணன்.

''அதுதானே.. நீ பாட்டுக்கு.. ச்ச்.. போடாதே அஜீத்.. நம்ம காலேஜ் காம்பவுண்டுக்கு வெளியில் நாய்களுக்கு பஞ்சமில்லை.. நீ கூப்பிட்டு வைத்தால்.. அது பாட்டுக்கு நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்து விடப் போகிறது..'' ராபர்ட் கவலையாகக் கூறினான்.

''நாயை நினைத்து இவன் ஏன்லே இப்படிக் கவலைப் படுகிறான்.''

''அவனுக்கு நாய் என்றாலே பிடிக்காது அஜீத்.'' பிர சாத் சிரித்தான்.

''ஆனால் எனக்குப் பிடிக்கும்'' என்று அலெக்ஸ் சொன்னான்.

''இப்ப எதுக்கு நாயைப் பத்தி ஆராய்ச்சி பண்ணுகிற'' ராபர்ட் வினவ,

''அதுதானே.. எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ டிராக் மாறுகிறோமே.. அலெக்ஸ்.. நான்கூட அந்த சாரா பொண்ணின் அலட்டலைப் பார்த்து.. ரொம்ப விவரமான பொண்ணுன்னு நினைச்சுட்டேன். அவள் கடைசியில் இப்படி ஒரு அப்பாவியாய் இருக்காளே.. இவனைப் பார்த்து 'நல்லவன்னு' சொல்லிட்டாளே..'' என்று அஜீத் கூறினான்.

அலெக்ஸ் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

''எதுக்குடா.. இந்தச் சிரிப்பாணி சிரிக்கிற.. இந்தா அஜீத்.. நீ வாயைத் திறந்தாலே எனக்கு வில்லங்கம் தான். வேண்டாம் சொல்லிட்டேன்.''

ராதாகிருஷ்ணன் கோபமாய் எழுந்து கொள்ள முயல.

''அட.. இருலே.. இதுக்குப் போய் கோவிச்சுக்கிட்டு போறவன்..'' என்று அஜீத் கட்டிக் கொண்டான்.

திடீரென்று முன் பெஞ்ச் பக்கம் சத்தம் கேட்டது.. ஆனந்த் எதையோ கூற.. சாரா கோபமாய் பேசிக் கொண் டிருந்தாள். அவள் அருகிலிருந்த லேகா.. சாரா பேசுவதை ஆமோதித்துக் கொண்டிருந்தாள்.

''என்னலே.. அங்கே கலவரம் வெடிச்சுருக்கு...''

''தெரியவில்லை அஜீத்.. ஆனந்த் கிட்டத்தான் சாரா கோபமாய் பேசிக்கிட்டு இருக்கா. இவனைப் போய் ஏன் பேசுகிறா..?''

''டேய் கண்ணழகா.. ஆனந்த் என்னவோ யோக்கியம் போல் பேசுகிறாயே.. இவன் அவளிடம் என்ன சொன் னானோ.. என்னவோ.''

''ராதா.. வாயை மூடு.. ஆனந்த் யோக்கியமில்லாமல் நீதான் யோக்கியமா? நீ போய் கேர்ள்ஸிடம் பீலா



விட்டுக் கொண்டு நடிப்பது போல் நாங்க செய்ய மாட்டோம்.. அடக்கி வாசி...''

''அவனைச் சொன்னால் உனக்கேன்டா பிரசாத் கோபம் வருது? நான் உன்னைச் சொன்னேனா?''

''யாரைச் சொன்னால் என்ன? அவனைச் சொன்னால் என்னைச் சொன்னது போல்தான்.. ஏண்டா.. நம்ம பாய்ஸுன்னு நினைக்காமல் கேர்ள்ஸுக்கே சப்போர்ட் பண்றே...''

''இவன் எதுவும் பேசாமலா அவள் சண்டை போடு வாள்? நான் நியாயத்தைத் தான்டா சொன்னேன்.''

''உன் நியாயத்தைத் தூக்கி உடைப்பில் போடு... நீயும் உன் நியாயமும்.. ஒருத்தி உன்னைப் பார்த்து நல்லவன்னு தெரியாத் தனமாய் சொல்லி விட்டாள் என்பதற்காக... நம்ம பிரண்டையே பேசுகிறாயே.. நீ எட்டப்பன் பரம்பரையில் பிறந்தவனாடா..?''

''டேய் அலெக்ஸ்.. என் பரம்பரையை இழுக்காதே.. என் பரம்பரையைப் பத்தி உனக்கென்ன தெரியும்.. திருமலை நாயக்கர்கிட்ட வீரவாள் வாங்கின பரம்ப ரைடா.. எங்க பரம்பரை.''

''பரவாயில்லைலே. காலங்கார்த்தாலே.. ஒரு பெண் பிள்ளை வெடியைப் பத்த வைச்சு அங்க போட்டால்.. இங்க வெடிக்குதாலே.. லேய் ராதா... அடங்கு.. அதோ ஆனந்த் வருகிறான். என்னன்னு விசாரிப்போம்.''

அருகில் வந்த ஆனந்த் கோபாவேசமாய் இருந்தான். கண்கள் சிவந்திருந்திருந்தன... கைகள் புடைத்துக் கொண்டிருந்தன.

''அவனை உட்கார வைத்து.. அரைபாட்டில் தண்ணியை அவன் வாயில் ஊத்துங்கலே.. கோபம் அடங்கட்டும். அப்புறம் என்னன்னு விசாரிப்போம்.''

ராபர்ட் கொடுத்த தண்ணீரை மடக்... மடக்கென்று குடித்த ஆனந்த் ஆசுவாசமானான்.

''என்னலே.. என்ன சமாச்சாரம்.. அவ ஏன்.. எண்ணெயில் போட் மீன் போல இந்தப் பொரி.. பொரியறாள்..''

அஜீத் விசாரிக்க.. அலெக்ஸ் பிரசாத்தின் காதில் முணுமுணுத்தான்.

''இவன் ஒருத்தன்.. தூத்துக்குடியில் பிறந்தாலும் பிறந்தான்.. மீன் ஒன்றைத் தவிர வேறு எதையும் உவமை சொல்ல மாட்டேன் என்கிறான்.''

ஆனந்த் தெம்பு வரப் பெற்றவனாய் அவர்களிடம் கூறினான்.

''கேளுங்கடா.. நான் பாட்டுக்கு சீழ்க்கை அடிச்சுக்கிட்டு உள்ளே வருகிறேன்.. அந்த சாரா எழுந்திருச்சு என் கூட சண்டைக்கு வருகிறாள்டா.''

ஆனந்திடம் இந்தக் குணம் உண்டு.. அவன் உற்சாகமாய் இருக்கும்போது சீழ்க்கை அடிப்பான். அப்போது அவனிடம் யார் கேட்டாலும் சீழ்க்கையிலேயே பதில் சொல்வான். ஒரு முறை சினிமாப் பாட்டையே சீழ்க்கையில் பாடிக் கொண்டிருந்தான்.. காலை நேர புத்துணர்வில் அவன்பாட்டுக்கு தன் போக்கில் சீழ்க்கையடித்துக் கொண்டு வந்திருக்கிறான். சாராவை அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஆனால் காலையிலிருந்தே எல்லோரும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது



போல் உணர்ந்த சாரா எழுந்து நின்று ஆனந்தைப் பார்த்து..

''என்கிட்ட இதையெல்லாம் வைத்துக் கொள்ளாதே..'' என்று கூறியிருக்கிறாள்.

ஆனந்த் சீழ்க்கையை நிறுத்தாமல் புருவத்தை உயர்த்தியிருக்கிறான். சாரா இன்னும் டென்சன் ஆகிவிட்டாள்.

''என்ன திமிரா..?'' என்று கேட்டு விட்டாள்.

அவ்வளவுதான் ஆனந்தின் சீழ்க்கை தானாய் நின்று விட அவன் சண்டைக்குப் போய் விட்டான்.

''யாரைப் பார்த்து திமிரா என்கிறாய்?''

''ஏன்.. உன்னைப் பார்த்துத் தான்...''

''உன் திமிரைப் பற்றி இந்த காலேஜே பேசுது. நீ என்னைத் திமிர் என்கிறாயா.''

''என்னைப் பற்றித் தேவையில்லாமல் பேசினால் நடக்கிறதே வேற...''

''ஏன் மனுஷியாய் நீ நடக்காமல் வேறு மாதிரி நடக்கப் போகிறாயா?''

''கிண்டல் பண்ணுகிறாயா?''

''ஆமாம். இப்ப அதுக்கு என்னங்கிற?''

''என்னை நீ கிண்டல் பண்ணுவதாய் ஹெச்.ஓ.டியிடம் புகார் கொடுப்பேன்.''

''போ.. போய் கொடு.. இந்தா பார்... நான் உன் முகரை எப்படியிருக்குன்னுகூட இதுநாள் வரை பார்த்தது இல்லை. இனிமேல் எனக்கு அதுதாண்டி வேலை.. நீ என்ன செய்கிறாய்ன்னு நானும் பார்க்கிறேன்.''

அஜீத் உற்சாகமாய் வாயில் விரலை வைத்து சீழ்க்கை அடித்தான்.

''வாரே.. வா.. மச்சான் சபதம் போட்டு விட்டு வந்துட்டான்லே.. சபதம்ன்னா இதுதான் சபதம். நாமளும் இருக்கோமே.. ஏன்லே.. ராதா.. உன் பாட்டனும் முப் பாட்டனும் வீரவாள் வாங்கி என்னாலே பிரயோசனம்.. இப்படி ஒரு வீரசபதத்தை நீ போட்டிருக்கிறாயா?''

அலெக்ஸ் மேஜையை படபடவென்று தட்டி அஜீத் சொன்னதை ஆமோதித்தான். பின்னால் மாணவர்களின் உற்சாகமான கலாட்டா குரலைக் கேட்டு சாரா திரும்பிப் பார்த்தாள்.

அஜீத் வாயின் மேல் தன் இரு கைகளையும் குவித்து அவளைப் பார்த்து..

''ஊய்ய்...'' என்றான்.

சாராவின் முகம் மாறியது. அவள் இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த ராதாகிருஷ்ணன் அவசரமாய் அஜீத்தை கண்டித்தான்.

''அஜீத்.. நீ செய்வது தப்பு. பெண்கள் நம் வீட்டின் கண்கள்.. அவர்களைக் கிண்டல் பண்ணுவதோ.. கேலி செய்வதோ.. உலக மகா தப்பு...''

பேசும்போது ஓரக் கண்ணால் சாரா தன்னைக் கவனிக்கிறாள் என்பதை உறுதி செய்து கொண்டான். சாரா நன்றி கலந்த பார்வை ஒன்றை ராதாகிருஷ்ணனின் பக்கம் வீசி விட்டு.. திரும்பி ஒரு பேப்பரை எடுத்து மடமடவென்று எழுத ஆரம்பித்தான்.

அஜீத் ராதாகிருஷ்ணனை முறைத்தான்.



''பொறுக்குலே...'' என்றான்.

''எதைடா பொறுக்கச் சொல்கிற...''

''அவளோட இந்தப் பார்வைக்காகத்தானே.. நல்லவன் வேஷம் போட்டாய்.. அவளும் பார்வையை வீசி விட் டாள். பொறுக்கு.. உன்னை மாதிரி ஆளுகளை எல்லாம் உட்கார வைச்சு சுடனும்லே...''

''ஏண்டா.. எல்லோரும் நிற்க வைத்துத்தானே சுடம் னும்பாங்க... நீ என்ன மாற்றிச் சொல்கிறாய்'' அலெக்ஸ் சந்தேகம் கேட்டான்.

''கூடப் படிக்கிறவன்கிற பரிதாபத்தில் சொல்லியிருப் பான். நின்றால் கால் வலிக்காதா...'' அக்கறையாய் ராதாகிருஷ்ணனின் கால்களைப் பார்த்துக் கொண்டே ஸ்ரீதரன் விளக்கம் கூறினான்.

''ஆமாண்டா.. எல்லோரும் என்னையே வாருங்க.. நல்லதைச் சொன்னால் எவனும் கேட்டுக்க மாட்டான்..'' ராதாகிருஷ்ணன் வேண்டுமென்றே சத்தமாய் பேசி னான்.

அவனது கணிப்பு சரியாக இருந்தது. சாரா அவனைப் திரும்பிப் பார்த்துக் கனிவோடு புன்னகைத்து வைத்தாள்.

நிராயுதபாணியாய்.. தன் நண்பர்களின் மத்தியில் தான் மாட்டிக் கொண்டு இருப்பதை உணராமல் ராதா கிருஷ்ணன் பதிலுக்கு சிரித்து வைக்க.. ஆத்திரமான ஆனந்த் அவன் முதுகில் மொத்தினான். அனைவரும் அவனுடன் சேர்ந்து கொண்டனர்.

''எழுந்திருலே.. நீ போய் பெண் பிள்ளைகள் மத்தி யில் உட்கார்ந்து கொள்.. இந்த இடம் உனக்கு லாயக்குப் படாது...'' அஜீத் அவனது தோள் பையைத் தூக்கி

பெண்கள் பக்கம் எறிய.. அது மிகச் சரியாக சாராவின் மடியில் போய் விழுந்தது.

''இவன் பைகூட இவனை மாதிரியே இருக்குதுலே...'' அஜீத் தலையில் அடித்துக் கொள்ள...

''அதிர்ஷ்டக்காரப் பை...'' என்று ரசித்தான் அலெக்ஸ்.

சாரா உன்மத்தம் பிடித்தவள் போல் ஆகி விட்டாள். மாணவர்கள் இருக்கும் திசை பக்கம் திரும்பிப் பார்த்து அவள் பெயர்களை எழுத ஆரம்பிக்க.. அவளது அருகில் அமர்ந்திருந்த லேகா.. தானும் திரும்பிப் பார்த்து.. சில பெயர்களைச் சொன்னாள்.

''இவளை நல்லவள்ன்னு நினைத்தால்.. இவளும்.. அந்த அலட்டிகூட சேர்ந்துகிட்டாளே...'' பிரசாத் கவலைப் பட்டான்.

''இவன் ஏன்டா.. அவளைப் பற்றிக் கவலைப்படு கிறான்.''

''உனக்குத் தெரியாதாடா ராபர்ட்...? இவன் வந்ததில் இருந்து அந்த லேகாவை லேசு... லேசாய் பார்த்துக்கிட்டு இருக்கான்டா...''

''இதைப் பாருலே.. இப்படி ஒரு பிட் ஓடுதா.. ஏன்லே அலெக்ஸு.. இதை ஏன்.. இத்தனை நாளாய் என்கிட்ட சொல்லலே... பிரசாத்... நடத்து.. நடத்து..''

''சும்மாயிருங்கடா.. அவளைப் பார்த்தால் அமைதி யான பொண்ணு போல தெரியுது.. அதைத்தான் சொன் னேன். நீங்க வேற.. கிளப்பாதீங்க...'' பிரசாத் வெட்கப் பட்டான்.

அஜீத்திற்கு அவனது வெட்கத்தைக் கண்டு சிரிப்பு வந்தது. அவன் 'ஹோ... ஹோ'வென்று சிரித்துக் கொண்



டிருக்கும்போது.. வகுப்பறைக்குள் ஹெச்.ஓ.டி. நுழைந் தார்.

அவசரமாய் அனைவரும் எழுந்து நிற்க... சாரா... போய் தன் கையில் இருந்த பேப்பரை அவரிடம் கொடுத்தாள்.

''லே.. ஆனந்த்.. பெட்டிசன் பெரியநாயகி பெரிய பேப்பரா நீட்டுகிறாள்டா.. இந்தக் கிளாஸில் இருக்கிற மொத்த ஆண் பிள்ளைகள் பெயரையெல்லாம் எழுதி யிருக்கிறாளோ..'' என்று அஜீத் முணுமுணுக்க.

''அத்தனை பேரையும் எழுதியிருக்க மாட்டாள்டா.. இந்த எட்டப்பன் பெயரை மட்டும் விட்டிருப்பாள். இவன்தான் ரொம்ப நல்லவன் ஆச்சே.'' அலெக்ஸ் ராதாகிருஷ்ணனை முறைத்தான்.

''என்னையே ஏன்டா இழுக்கிற.. பொம்பளப் புள்ளைய கேலி பண்ணாதீங்கடான்னு சொன்னேன். அது ஒரு குத்தமாடா...'' ராதாகிருஷ்ணன் சமாதானத்திற்கு வந் தான்.

''ஆன்னா.. மான்னா.. இதை ஒன்றைச் சொல்லி விடுகிறான். ஏண்டா.. நாங்க என்னவோ அவளுகளை கேலி பண்ணத்தான் கிளாஸ் ரூமிற்கு வருவது போல் அவள் பிலிம் காட்டிக்கிட்டு இருக்காள். நீ என்ன அவளுக்கு அல்லக்கையா?'' ஆனந்த் கொதித்தான்.

''லே.. பொறுங்கலே.. தலைவர் அந்த பேப்பரைப் பிரிக்கக் கூட இல்லை... என்ன நடக்கிறதுன்னு கவனிக் கலாம்.''

எல்லோரும் அமைதியாய் அமர.. வகுப்பறையில் குண்டூசி விழுந்தால் கூடச் சப்தம் கேட்பது போல் நிசப்தம் நிலவியது.

ஹெச்.ஓ.டி. சாரா தந்த பேப்பரை கையில் பிடித்துக் கொண்டு.

''இது என்ன...?'' என்று கேட்டார்.

''கம்ப்ளெயின்ட் பேப்பர் சார்...''

''என்ன கம்ப்ளெயின்ட்...?''

''இந்தக் கிளாஸ் பாய்ஸெல்லாம் என்னைக் கிண்டல் பண்ணுகிறார்கள். அவங்க பெயரையும் அவங்க என்ன செய்தாங்க.. என்ன பேசினாங்க.. என்பதையும் அந்த பேப்பரில் எழுதி வைத்திருக்கிறேன்.''

ஹெச்.ஓ.டி. அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

சிவந்த நிற சல்வார். முன் பக்கம் இறக்கி வெட்டப் பட்டு இருந்தது. துப்பட்டாவைக் கீழே இறக்கி போடா மல் கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்தாள். உதடுகளில் லிப்ஸ்டிக்.. கண்களில் இமைகளின் மேல்.. ஒப்பனை செய்திருந்தாள்.

''தினசரி.. இரண்டு மணி நேரம் ஆகுமா?'' என்று அவர் கேட்க,

ஹெச்.ஓ.டி. எதற்கு கேட்கிறார். என்ன கேட்கிறார் என்பதைப் புரியாமல் சாரா பதில் சொன்னாள்.

''இருக்கும் சார்.. நான் சரியாய் கவனிப்பதில்லை.''

அஜீத்திற்கு சிரிப்பு வந்து விட்டது. அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''சார்...''

''இப்படி மேக்கப் பண்ணிக்கிட்டு டிரஸ் போட்டுக் கிட்டு வந்தால்... பசங்க எல்லோரும் கேலி பண்ணத் தான் செய்வாங்க. இதோ பாரும்மா.. இது மதுரை.. பெங்களூர் இல்லை.. உன் ஊர் நாகரீகத்தை இங்கே காட்டினால் இப்படித்தான் நடக்கும். இப்படி ஸ்லீவ்



லெஸ் டாப்ஸை போட்டால் பசங்க உன்னைத் திரும்பிப் பார்க்காமல் என்ன செய்வாங்க... மற்ற பெண்கள் யாராவது உன்னைப் போல் டிரஸ் போட்டிருக்காங்களா.. உடலை மறைக்கத்தான் உடை.. நீ இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டினால் கேலி பண்ணத்தானே செய் வார்கள்.. இது காலேஜ்.. ஸ்கூல் இல்லை.. தொட்ட தெற்கெல்லாம் குற்றம் சொல்லாதே... 'ஈவ் டீஸிங்' என்பதற்கு அர்த்தமே வேறு...'' ஹெச்.ஓ.டி.யின் குரலில் கண்டிப்புத் தெரிந்தது.

# 3



அஜீத் நமட்டுச் சிரிப்புடன் ரசித்துக் கொண்டிருப் பதை உணர்ந்த சாராவின் முகம் சிவந்தது. அதை உணராத ஹெச்.ஓ.டி. தொடர்ந்து பேசிக் கொண்டிருந் தார்.

''ஈவ் டீஸிங்ன்னா என்னம்மா. உன்னைத் தவறான முறையில் பார்த்தாலோ இல்லை தவறான வார்த்தை களை உன்னைப் பார்த்துப் பேசினாலோ... நீ கம்ப்ளெ யின்ட் பண்ணுவதில் அர்த்தமிருக்கிறது.. சும்மா.. எல் லோரும் என்னைப் பார்க்கிறாங்கன்னு கம்ப்ளெயின்ட் பண்ணாதே.''

அஜீத் அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீதரனின் காதைக் கடித்தான்.

''ஏண்லே.. நாம பார்க்கணும்கிறதுக்காகத்தானே இவ்வளவு மேக்கப் போட்டுக்கிட்டு சலம்பிக்கிட்டு

வருகிறாள்.. பார்க்கலைன்னா வருத்தப்படுவாளேங்கிற ஆதங்கத்தில்தானே பார்க்கறோம். அதைப் புரிஞ்சுக்க மாட்டேன் என்கிறாளே...''

''வேணும்னா... நான் போய் ஹெச்.ஓ.டி. கிட்ட இதையும் சொல்லச் சொல்லி சொல்லிவிட்டு வரவா..?''

''நீ செய்தாலும் செய்வேலே...''

ஹெச்.ஓ.டி. சாரா கொடுத்த பேப்பரை திருப்பிக் கொடுத்துவிட்டு புத்திமதி கூறும் பாவனையில் இதமாகக் கூறினார்.

''இதோ பாரும்மா.. இது கோ-எஜுகேசன் காலேஜ்.. பாய்ஸை ஏன் எதிரியாகப் பார்க்கிறாய்? பிரண்ட்லியாக பழகிப் பாரேன்.. ஆண்.. பெண் வித்தியாசமெல்லாம் வராமல் வி ஆர் ஹியூமன் பீயிங்க்ஸ்ன்னு இருந்து பாரேன்.. நீ அவங்க இல்லாத உலகில் வாழவும் முடியாது.. அவங்களும் பெண்கள் இல்லாத உலகில் வாழ முடியாது. ஸோ.. நீங்கள் ஒற்றுமையாக படிக்கும் வழியைப் பாருங்கள்.. பாய்ஸ்.. உங்களையும் வார்ன் பண்ணுகிறேன்... பாய்ஸ்... கேர்ள்ஸுங்கிற வித்தியாசம் இல்லாமல் பழகுங்கள்.''

சாராவின் முகம் சுண்டி விட்டது. அன்றிலிருந்து அவள் பெயர் மாணவர்கள் மத்தியில் 'பெட்டிசன் பெரிய நாயகி' என்று ஆகிப் போனது.

''ஏன்லே.. ஆனந்த் தினமும் அவள் முகத்தைப் பார்க்கிறதுதான் இனி உன் வேலைன்னு சபதம் போட்டிருக்கயே.. அவள் முகத்தைப் பார்த்து என்னலே செய்யப் போறே...''



''அது தெரியாதாடா அஜீத்.. கல்யாணம் பண்ணிக் கொள்வான்.''

''அலெக்ஸ்.. இவன் மட்டும் அவளை கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு வை.. பர்ஸ்ட் நைட்டே இவன் வாழ்க்கையில் கிடையாது. அம்பேல்தான்.''

''ஏண்டா பாவி.. இப்படி சாபம் விடுகிற...''

''பின்னே..? நீ தொட்டாலே அவள் பெட்டிசன் போடுவாளே...''

மாணவர்கள் ஹோஹோவென்று சிரிப்பதைக் கண்டும் காணாதவள் போல் சாரா.. தனது தோள் பையை மாட்டிக் கொண்டு சென்று விட்டாள்.

''நீ அவசரப்பட்டுட்டியோன்னு தோணுது சாரா...''

உடன் நடந்த லேகா கூறினாள்.

''எனக்கும் அப்படித்தான் தோணுது...''

''அவன் சாதாரணமாகவே விசில் அடிக்கிறவன் தான்... எனக்குத் தெரியும்.. உன்னைப் பர்த்துத்தான் விசிலடித்தான்னு நிச்சயம் சொல்ல முடியாது.''

''கிளாஸ் ரூமிற்குள் விசில் அடிக்கலாமா?''

''கூடாதுதான்.. ஆனால் பசங்க உலகமே வேறு சாரா.''

''அந்தப் பசங்க மத்தியில்தான் ராதாகிருஷ்ணன் போல ஜென்டில்மேன்களும் இருக்கிறாங்க.. ஹி இஸ் ஸோ.. நைஸ்.. பட்.. அந்த அஜீத் இருக்கிறானே.. சுத்த ரோக்.. அவனும்.. அவன் பேச்சும்.. எதுக்கெடுத்தாலும் 'லே' போட்டுக் கொண்டு.. எனக்கு பெட்டிசன் பெரிய நாயகின்னு பெயர் வைத்திருக்கிறானாம்.. அவனைத் தூக்கி.. தூத்துக்குடி கடலில் போட்டால்தான் என் மனம் ஆறும்.''

''அவன் சுறா மீன் மேல் சவாரி செய்து கொண்டு வந்து நமக்கு முன்னால் கரையில் நிற்பான். மினிஸ்டர் வீட்டுப் பையன்.. வீண் வம்பு எதுக்குடி?''

''நீ எதுக்கு அவனுக்கு இவ்வளவு சப்போர்ட் பண்ணு கிற?''

''உள்ளதைச் சொன்னால் சப்போர்ட்டா.. பேசாமல் வா.''

அடுத்து வந்த தினங்களில்... காலேஜில் சாராவைக் கண்டாலே சீழ்க்கை அடிக்க ஆரம்பித்தான் ஆனந்த்.. வகுப்பறை தவிர.. மற்ற இடங்களில் அவனது சீழ்க்கை யொலி அவளைத் தொடர்ந்து கொண்டே இருந்தது. பொறுக்க முடியாமல் தோழிகளிடம் தூது விட்டாள் சாரா.

''ராபர்ட்... ஏன்லே டல்லா இருக்கே...?''

''ச்சு.. ஒன்றுமில்லைடா.. இவன் தொல்லை தாங் கலை.''

''எவன் தொல்லை..?''

''அதுதான் என்னோடு ஹவுஸ் மேட்டாய் ஒருவன் தங்குகிறானே.''

''யாரைச் சொல்றே.. நம்ம அலெக்ஸையா? அவன் என்ன பண்ணினான்?''

''நாய் வளர்க்கணும்கிறான்.''

''வளர்த்தால் வளர்த்து விட்டுப் போகிறான்...''

''அஜீத்.. வேண்டாம்.. அவனைத் தூண்டி விடாதே.. இவன் படுத்தும் பாடே தாங்க முடியவில்லை. இதில் இவனுடைய நாய் வேற வந்து படுத்தணுமா?''



''இவன் என்னடா படுத்துகிறான்.''

''அதை என்கிட்ட கேட்காதே பிரசாத் கிட்டக் கேளு.. எனக்குச் சொல்கிற மூடு இல்லை...''

''என்னலே.. பிரசாத்.. என்ன விஷயம்லே.''

பிரசாத் வாயைத் திறக்கப் போகையில் அஜிதா அங்கு வர... அஜீத் புருவம் தூக்கினான்.

''என்னலே.. இது... கோழிப் பண்ணையிலிருந்து ஒரு கோழி மட்டும் பிரிஞ்சு நம்ம சேவல் பண்ணை பக்கம் வருது. இவ இந்நேரம் வரைக்கும் பெட்டிசன் பெரிய நாயகி பக்கத்தில் இல்ல உட்கார்ந்திருந்தாள்.''

அஜிதா நேராக வந்து அஜீத்தின் முகம் பார்த்தாள்.

''அஜீத்.. நான் உன்கிட்டப் பேசணும்.''

''ஏன்.. எங்களைப் பார்த்தால் உனக்கு கிளாஸ் மேட் டாகத் தெரியலையா? அது என்ன அவனிடம் மட்டும் உனக்குப் பேச்சு...''

''பொறுடா ஸ்ரீதரா.. உனக்கு விவரமே பத்தலைடா.. இவள் பெயர் அஜிதா.. மச்சான் பெயர் அஜீத்.. மேட்ச் ஆகுதுல்ல.. அதுதான்.. என்ன அஜிதா நான் சொல்வது சரிதானே..''

''அலெக்ஸ் ப்ளீஸ்.. நான் முக்கியமாய் பேச வந்திருக் கிறேன்.''

''இருங்கலே.. பாப்பா என்ன சொல்கிறதுன்னு கேப் போம்.''

''பாப்பாவா.. யார்.. நானா?''

''சும்மா ஒரு பாசத்திலே சொல்கிறதுதான்.. நீ சொல் லும்மா..''

''அம்மாவா?''

''இது என்னலே.. இந்தப் பொண்ணு பாப்பான்னாலும் முறைக்குது. அம்மான்னாலும் அலறுது. இதுகிட்ட எப்படிப் பேசுறது. ராதா எங்கேலே போனான்? பெண்கள் கிட்ட பேச்சு வார்த்தை நடத்த அவன்தான் லாயக்கு.''

''அஜித்.. சாரா வருத்தப்படுகிறாள்.''

''சாராவா..? யாருலே அது.''

''நம்ம பெட்டிசன் பெரிய நாயகிதான் மச்சான்.''

''அப்படிச் சொன்னாத்தானே நமக்குத் தெரியும்? அதை விட்டு விட்டு அப்பா அம்மா வைத்த பெயரைச் சொன்னால் யாருக்குத் தெரியும்? ஏம்மா அஜிதா.. பெட்டிஷன் பெரியநாயகி எதுக்கு வருத்தப்படுது? பெட்டிசன் போட பேப்பர் கிடைக்கலையா? நான் வேணும்னால் வாங்கித் தரவா..?''

''அஜீத்.. நாம் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ்.''

''நீ சொல்லித்தான் தெரியனுமா? எங்களுக்குத் தெரியாதா? இதைச் சொல்லவா இவ்வளவு தூரம் வந்தே..?''

''நாம கொஞ்சம் மெச்சூரா பிஹேவ் பண்ணனும்.''

''அதை உன் பிரண்டு பெட்டிசன் பெரியநாயகி கிட்ட சொல்லு.''

''ஆல்ரெடி நாங்க எல்லாம் சொல்லிட்டோம்.''

''அப்புறம் என்ன?''

''அவள் அன்றைக்கு நடந்ததற்கு வருத்தப்படுகிறாள்...''

''அப்படியா..? ஏய் ரவிந்திரா.. விலகுலே.. அது வருத்தப்படறதைப் பார்ப்போம்.''



அஜீத் தன் நண்பனின் தலையை விலக்கி எட்டிப் பார்க்கையில் சாரா.. திவ்யாவிடம் எதையோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா.. அந்தப் பொண்ணு வருத்தப்படுதுன்னு சொன்னே.. சிரிச்சுக்கிட்டு இருக்குது..?''

இவனிடம் தூது வருகின்ற வேலையை ஏன்தான் ஏற்றுக் கொண்டோமோ என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் அஜிதா. இவனுக்கு ஏன் பெண்களைக் கண்டாலே ஆவதில்லை என்ற கேள்வியை நெஞ்சிலேயே புதைத்துக் கொண்டவள்..

''நாம பிரண்ட்ஸா ஆகிடலாம்ன்னு அவள் சொல்லச் சொன்னாள்'' என்றான்.

''அதாவது வெள்ளைக் கொடி காட்டுது.''

''ஆமாம்.. நாம சமாதானமாகப் போய்விடலாம்.''

''அப்படியா.. அதுவும் சரிதான். ஆமாம். சமாதானமா போகணும்னால் சமாதான உடன்படிக்கை ஏதாவது செய்துகொள்ள வேண்டுமே.. என்ன சொல்லி விட்டிருக்கு?''

அஜீத்தின் சாதுர்யத்தைக் கண்டு அவனது நண்பர்கள் மனதிற்குள் நகைத்துக் கொண்டிருக்க.. அதை அறியாத அஜிதா.. சாரா சொல்லி விட்டதைச் சொன்னாள்.

''ஆனந்த்.. சாராவை பாலோ பண்ணுவதை நிறுத்தணுமாம்.''

''ஏன்லே.. நீ அந்தப் பெண்ணை பாலோ பண்ணுகிறாயா?''

''சேச்சே.. நான் போகிற பாதையில் எனக்கு முன்னாலேயே அந்தப் பொண்ணு தினமும் போகுது அஜீத். இதை நீ என்னன்னு கேளு.''

''கேட்டியாம்மா.. இவன் ஒண்ணும் அந்தப் பொண்ணை பாலோ பண்ணவில்லையாம்.. அதுதான் இவனுக்கு முன்னாடியே போகுதாம். உன் பிரண்டு கிட்ட சொல்லி வை. இதெல்லாம் சரியில்லே. ஆம் பளைன்னா அவ்வளவு இளக்காரமா போச்சா? பெட்டிசன் போட அதுக்குத்தான் தெரியுமா? எனக்குத் தெரியாதா? இனிமே என் பிரண்ட் போகிற பாதையில் அவனுக்கு முன்னாடியே போகிற வேலையெல்லாம் வைத்துக்கக் கூடாதுன்னு நான் கட் அன்ட் ரைட்டா சொல்லி விட் டேன்னு போய் சொல்லு.''

அஜிதாவிற்கு.. சிரிப்பதா.. இல்லை அழுவதா என்று தெரியவில்லை.

''அஜீத்.. தினமும் அவளைப் பார்த்தால் விசிலடிக்க லாமா?''

''யார் விசிலடித்தது நானா?''

''உன்னைப் போய் சொல்வேனா?''

''பின்னே.. வேறு யாரைச் சொல்கிறாய்?''

''தெரியாதது போல் கேட்கிறாயே...''

''தெரியாமல்தான்ம்மா கேட்கிறேன். சொல்லு.''

''விசிலடிச்சான் குஞ்சு.. நம்ம காலேஜில் வேறு யார் இருக்கிறாங்க.. எல்லாம் நம்ம ஆனந்த்தான்.''

''நம்ம ஆனந்தா? புதுசா என்னம்மா சொந்தம் கொண் டாடுகிற?''

''என்ன இருந்தாலும் என் கிளாஸ் மேட் இல்லையா?''

''நெஞ்சை டச் பண்ணிட்டம்மா.. லே.. ஆனந்த்.. நீ விசிலடித்தாயா?''



''விசிலடிக்கிறதா? அது எப்படி மச்சான்...''

''அடடா.. பயபுள்ளைக்கு இது தெரியலை... இந்தப் பச்சைப் பிள்ளையைப் பார்த்து பழி போடுகிறீர்களேம்மா.. இது உங்களுக்கே நியாயமா இருக்கா..? ஆனந்த்.. விசி லடிக்கிறது எப்படின்னா.. இப்படி விரலை மடக்கிக் கணும். நாக்கை மடிச்சுக்கணும். இப்படிச் செய்யனும்.''

''இப்படியா மச்சான்.''

''இப்படி இல்லைலே.. இப்படி.''

அஜீத் பலமாய் விசிலடிக்க சாரா திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''எனக்கு வரலைடா மச்சான்.''

''பாவம்.. இவனுக்கு வரலையாம். அதனால்.. இரண டாவது உடன்படிக்கையும் கேன்சல்.. அப்புறம் வேறு என்ன..''

''சொல்லிட்டாலும்..''

அஜிதா நொடித்து விட்டுப் போய் விட்டாள். அவள் மனம் அஜீத்தை தாளித்துக் கொண்டிருந்தது.

''என்னடி சொல்கிறானுங்க...?'

''இது வேலைக்கு ஆகாது சாரா.''

''ஏன்..?''

''அந்த அஜீத் மலை இறங்க மாட்டேன்கிறான். அவனுக்கு பெண்களைக் கண்டாலே ஆக மாட்டேன் என்கிறது.''

''அவனுக்கு ஆகாவிட்டால் நமக்கு என்ன வந்தது? சொல்லிப் பார்ப்போம். கேட்டால் கேட்கட்டும்.. கேட்கா விட்டால் போகட்டும்.''

சாரா தீவிரமான முகபாவனையுடன் பேசிக் கொண் டிருந்ததை கவனித்த அஜீத் நண்பர்களிடம் கூறினான்.

''விக்டோரியா மகாராணி.. வினயமா பேசுகிறாளே.. என்னலே பேசுகிறா.. ஒரு இழவும் காதில் விழ மாட் டேங்குதே...''

''அவங்க அவ்வளவு தூரத்தில் இருந்தால் எப்படி காதில் விழுகும்..?''

''இடைவெளி குறையனும்கிறே...''

''ஆமாம்...''

''அப்படி அவளுக பேசுகிற பேச்சை அவசியம் கேட் கணுமாலே.. தொலையுது விடு.. பிரசாத்.. ராபர்ட் கதைக்கு வா.''

பிரசாத்தின் வீட்டிற்கு இரண்டு தெரு தள்ளித்தான் ராபர்ட்டும்... அலெக்ஸும் குடியிருந்தனர். அவர்களது வீட்டிலேயே பெரும்பான்மை நேரங்களைக் கழிக்கும் பிரசாத் கூறினான்.

''டேய்.. நேத்து டி.வி. பார்த்துக்கிட்டு இருந்தோம்டா.''

''இதுக்காலே இவ்வளவு பில்ட்-அப் கொடுக்கிற?''

''சொல்வதைக் கேளு. டி.வி.யில் விளம்பரம் ஒன்று வந்தது.''

''அது ஒன்று வராதே... ஓராயிரம் வருமே.. விளம் பரத்தை நம்பித்தானேடா.. இத்தனை சேனல்கள் இருக்கு?''

''அந்த விளம்பரத்தில் ஒரு மிடில் ஏஜ் லேடி.. வந் தாங்க.. பட் அவங்க மிடில் ஏஜ் போல இல்லாமல் செம கியூட்டா இருந்தாங்க...''



''எதைப் போய் ரசிக்கிறான் பாருலே...''

''நான் ரசிக்கலைடா அஜீத்குட்டி.''

பிரசாத்திற்கு பிரியம் அதிகமானால் ஆஜானுபாகு வான அஜீத்தை 'அஜீத்குட்டி' என்றுதான் அழைப்பான்.

''யானைக்குட்டின்னு கூப்பிடு.. கேட்டுக்கிறேன்.. இது என்னலே அஜீத்குட்டி.''

''நான் அப்படித்தான் கூப்பிடுவேன்...''

''ஓகே.. கூப்பிட்டுக்க... நீ அந்த லேடியை ரசிக் கலைன்னா வேறு யார் ரசித்தது...?''

''நம்ம ராபர்ட் தான் ரசித்தான்.''

''இங்க பாருங்கலே. இந்தக் கூத்தை.. இவன் ரசிக்கக் கூடச் செய்வானா?''

ராபர்ட் அமைதியானவன்.. படிப்பாளி.. பேசுகிற வார்த்தைகளை யோசித்து பேசுபவன்.. அவனை ஆச்சரியமாகப் பார்த்தான் அஜய்.

''சரிலே.. இவன் ரசிச்சா.. இவங்க இரண்டு பேருக் குள்ள என்ன பிரச்னை வருது?''

''இவன்.. அந்த லேடியை.. வெரி கியூட்ன்னான். அதற்கு நம்ம அலெக்ஸ்.. அந்த லேடி.. ஒரு ஆன்ட்டிங் கிறதை மறந்து விடாதேன்னு சொன்னான்.. இவனுக்கு கோபம் வந்து விட்டது.''

அஜீத்திற்கு சிரிப்பு வந்து விட்டது...

''ஏன்லே.. இதுக்குப் போயா.. இப்படி உர்ருன்னு இருக்கிற.''

''அதுக்கு மட்டும் இல்லே அஜீத்.''

''இன்னும் இருக்கா.. என்னலே...''

''ராபர்ட் நேற்று அவனுடைய செல்போனில் ஒரு பாட்டைக் கேட்டுக் கிட்டு இருந்தான்.''

''என்ன பாட்டு...?''

''நெஞ்சினிலே.. நெஞ்சினிலே ஒரு பாட்டு.''

''அதுக்கென்னலே..''

''அந்தப் பாட்டுன்னா ராபர்ட்டுக்கு ரொம்பப் பிடிக்கும். ரசித்துக் கேட்பான். அலெக்ஸ் என்ன பண்ணினான்னா.. ராபர்ட்கிட்ட.. அந்தப் பாட்டை ஒவ்வொரு வரியாய் கேளேன்னான்...''

''ஏன்லே.. அந்தப் பாட்டுக்கென்ன?''

''நீ கேட்டுப் பாரேன்..''

பிரசாத் செல்போனில் அந்தப் பாட்டைப் போட்டான். திருமண நாளை எதிர் நோக்கியிருக்கும். கன்னிப் பெண் பாடுவது போல இருக்கும். அந்தப் பாடலின் வரிகளில்.. திருமணத்தைப் பற்றிய எதிர்பார்ப்பு தெரிந்தது.

''கூந்தலில் மலர்கள் எதற்கு..'' என்று கேட்கும் பெண் அதற்கான விளக்கத்தைக் கூறவும்.. அஜீத் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

''இதையெல்லாம்.. இவ்வளவு நுணுக்கமாக இவன் கேட்டிருக்கிறானாலே..''

''இவன் கேட்டது மட்டுமில்லாமல்.. ராபர்ட்டையும் கேட்க வைத்து விட்டான். ராபர்ட்டுக்கு அந்தப் பாட்டின் ராகம் பிடிக்கும்.. அர்த்தத்தை உணராமல் அந்தப் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தவனிடம்.. இவன் அர்த்



தத்தை பிட்டுப் பிட்டு வைக்க.. ராபர்ட்டிற்கு.. ஏன் டான்னு ஆகி விட்டது.. இப்போதெல்லாம் அலெக்ஸ் முன்னால் பாட்டுக் கேட்கவே இவன் பயப்படுகிறான்.''

''நல்லா பஞ்சாயத்துக்கு வந்தீகலே.. லேய் அலெக்ஸு.. எங்கிருந்துலே உனக்கு இவ்வளவு ஞானம் வருது?''

''அது தானாய் வருது அஜீத்.''

அலெக்ஸ் பெருமையாய் ராபர்ட்டைப் பார்க்க.. அவன் முறைத்தான். அப்போது... செல்வி அவர்களைக் கடந்து போனாள். அவள் கையில் இருந்த புத்தகங்களில் ஒன்று நழுவி கீழே விழுந்தது.

அது ராபர்ட்டின் அருகே விழுந்து வைக்க.. அவன் குனிந்து அதை எடுத்துக் கொண்டு பேந்தப் பேந்த விழித்தான்.

''என்னலே அது?''

''புத்தகம்?''

''யாருடையது?''

''என்ன அஜீத்.. தெரியாதது போல் கேட்கிறாய்? செல்வியுடையது தான்... என் பக்கத்தில் விழுந்தது தெரியாமல் போகுது.''

''ம்.. பெயரெல்லாம் தெரியுதில்ல.. அப்பக் கூப்பிட்டுக் கொடுக்க வேண்டியதுதானே. அதை விட்டு விட்டு.. ஏன்லே.. ஆடு திருடின கள்ளன் போல இந்த விழி விழிக்கிறாய்?''

''எப்படிடா கூப்பிடுவது?''

''ஏன் வாயால்தான் கூப்பிடனும். எலே. இவனுக்குக் கூப்பிட்டுக் காண்பிங்கலே.. பார்த்துக்கலே ராபர்ட்.. இவங்க கூப்பிடுவது போல் கூப்பிடு.''

ராபர்ட் வாயை அசைத்தான்.. வார்த்தைகள் வர வில்லை. அஜீத் அவன் வாய் அசைவதை விசித்திரமாய் பார்த்தபடி.

''என்னலே.. இது..'' என்று அலெக்ஸைப் பார்த்துக் கேட்டான்.

''அது வேறு ஒண்ணுமில்லை அஜீத்... அவன் கூப் பிடத்தான் நினைக்கிறான். ஆனா.. இஞ்சி இடுப்பழக னுக்கு.. வாயில் வார்த்தைகள் வரவில்லை. வெறும் காத் துத்தான் வருது.''

ராபர்ட் அலெக்ஸை முறைத்தான்.

''ஆரம்பிச்சுட்டியா...''

''அப்போ நீ கூப்பிடு...''

''ஏன் நீ கூப்பிட வேண்டியதுதானே..?''

''நானா புத்தகத்தை எடுத்தேன்..?''

''எடுத்தால் நான்தான் கூப்பிட்டுக் கொடுக்கணுமா? நீ குடுக்க வேண்டியது தானே...''

''அடச்சை... இதற்கு ஒரு வழக்காலே.. ஏம்மா.. செல்வி.. இங்கே வாம்மா...''

அஜீத் அழைக்கவும்.. அந்தச் செல்வி நின்றாள்.. திரும்பிப் பார்த்தாள்.. பின் அவர்களுக்கு அருகில் வந்து நின்றாள்.

ர்ாபர்ட்டின் இதயத்தில் யாரோ.. டிரம் வாசிக்க ஆரம்பித்தார்கள். புத்தகத்தை பிடித்திருந்த அவனது கைகள் நடுங்கின. வாய் குழறியது.



# 4



அஜீத்தின் முன்னே வந்து நின்ற செல்வி...

''ஏன் என்னைக் கூப்பிட்டாய்?'' என்று வினவினாள்.

''இவனுக்காகத்தான் கூப்பிட்டேன்..'' அஜீத் ராபர்ட்டின் பக்கம் கை காட்ட.. ராபர்ட் பதறி விட்டான்.

''அது ஒண்ணுமில்லைங்க.. சும்மாதான்..'' என்று உளறிக் கொட்டிக் கிளறி மூடினான்.

''சும்மா கூப்பிட்டிங்களா?'' அவள் சந்தேகமாய் பார்க்க.. அலெக்ஸின் விழிகள் சுவாரஸ்யமாய் ராபர்ட்டை நோக்கின.

''இது வேறா..'' என்று நொந்து போனான் ராபர்ட்.

''நீங்க.. வேற.. தப்பா நினைக்காதீங்க... உங்க புத்தகம் கீழே விழுந்து விட்டது. அதைக் கொடுக்கத்தான்...''

''இவ்வளவுதானா... நான் என்னவோ.. ஏதோன்னு பயந்து விட்டேன்.''

''நல்லதாகவே நினைம்மா.. கண்டதையும் நினைத் தால் என்னவோ.. ஏதோன்னுதான் தோன்றும்.. புத்தகம் கிடந்தால் கிடந்து விட்டுப் போகட்டும். நமக்கு என் னலே வந்தது.. சொன்னாக் கேட்கறீங்களா.''

''கோபித்துக் கொள்ளாதே அஜீத்.''

''நீ கிளம்பும்மா.. லே.. புத்தகத்தைக் கொடு லே...''

ராபர்ட் புத்தகத்தைக் கொடுக்க.. அதை வாங்கிக் கொண்ட செல்வியின் கண்களும்.. ராபர்ட்டின் கண்களும் கலந்தன. அங்கிருந்து நகர்ந்து போனவள். நடந்து கொண்டே.. ராபர்ட்டை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றாள்.

ராபர்ட் இந்த உலகத்திலேயே இல்லை.. கண்கள் செருக இருந்தவனைப் பார்த்து... அஜீத்திற்கு கவலை வந்து விட்டது.

''இவன் ஏன்லே.. இப்படி போஸ் கொடுக்கிறான்?''

''அது வேறு ஒண்ணுமில்லை அஜீத்.. எல்லாம் பார்வை செய்த மாயம்தான்..'' என்ற அலெக்ஸ்.. ராபர்ட்டைப் பார்த்துக் கண் சிமிட்டி,

''நீ பார்த்த பார்வை...'' என்று பாட ஆரம்பித்தான்.

''உன்னை...'' என்று கடுப்பான ராபர்ட். கையில் இருந்த புத்தகத்தை தூக்கி அலெக்ஸின் மேல் எறிந்தான்.

''விடுலே.. இது என்ன சின்னப் பிள்ளைத்தனமா இருக்கு. அவ பாட்டுக்கு பார்த்து விட்டுப் போகிறாள். நம்ப பயல் பதிலுக்கு பார்க்காம என்ன பண்ணுவான்? எதிலயும் ஒரு நியாயம் வேணும்லே...''

''இது எல்லாம் சரி அஜீத்.. நீ ஏன் எந்தப் பெண்ணையும் திரும்பிக் கூட பார்க்க மாட்டேன்கிற?''

''எவலே.. என்னைத் திரும்பிப் பார்க்கிறா? இந்தா பேசுவதற்கு கூலி கேட்கிறான் பாரு.. இவனையில்ல அப்படி ஓர் பார்வை பார்த்துவிட்டுப் போகிறாள்.''

''நீதான் பொம்பளைப் புள்ளைகளை அப்படி அரட்டி வச்சிருக்கயே.. அப்புறம் தைரியமா எப்படி உன்னைத்



திரும்பிப் பார்ப்பாக...'' என்று கூறியபடி ராதாகிருஷ்ணன் அங்கு வந்து உட்கார்ந்தான்.

''வாலே... ராதா... என்னடா.. செல்வி.. வந்து.. நின்னு.. பின் சென்று விட்டதே.. பொம்பளைப் புள்ளைகளோட ஆதர்ச நாயகன் இன்னும் ஆஜராகவில்லையேன்னு நினைத்தேன். உடனே வந்துட்ட.. ஏன்லே அலெக்ஸு.. இதை இங்கிலீஷில் எதுவோ சொல்வாங்களே.''

''எனக்கு இங்கிலீஷ் தெரியாது அஜீத்.''

''அது தெரியாமலா.. டாக்டருக்குப் படிக்க வந்துட்ட?''

''என்னவோ.. வந்துவிட்டேன்.. இப்ப தமிழில் சொல்லவா? வேண்டாமா?''

''சொல்லு.. சொல்லு.''

''பேயை நினைத்தவுடன் வந்து நிற்குமாம்... இதை இன்னொரு விதமாகவும் சொல்லலாம்.. சொல்லவா..?''

''அதை ஏன் விட்டு வைக்கிற.. சொல்லு.. சொல்லு.''

''எட்டப்பனை நினைத்தவுடன்.. அவன் கிட்டப்பனாய் வந்து நிற்பானாம்.''

''ச்சு... ச்சு.. என்னமா சொல்றயே நீ.. அலெக்ஸ்.. இதையெல்லாம் எங்கேலே கண்டு பிடிச்ச.. எப்படிலே.. எப்படிலே..''

நடிகர் திலகம் தன் தம்பியைக் கட்டிப் பிடிக்கும் பாவனையில் அஜீத்.. அலெக்ஸிடம் நாத்தழுதழுக்கப் பேசி கட்டிக்கொள்ள.. ராதாகிருஷ்ணனின் முகத்தில் கோபம் வந்தது.

''என்னடா.. என்னை வைத்து ஓட்டறீங்களா?''

''என்னலே.. ராதா.. என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியை கேட்டுப்புட்டியேலே. உன்னைப் போய் நான் ஓட்டுவேனா.'' என்று உருக்கமாகப் பேசிய அஜய்.. சட்டென்று முகம் மாறி.

''இப்படியெல்லாம் நான் கேட்பேன்னு நினைத்தியாலே.. ஆமாம். உன்னை ஓட்டுகிறேன்தான். இப்ப அதுக்கு என்ன செய்யணும்கிறே...'' என்று விடைத்தான்.

''ஹா.. ஹா..'' என்று அலெக்ஸ் சிரிக்க.

''கண்ணழகா.. எதுக்குடா இந்தச் சிரிப்பு சிரிக்கிற?'' என்று ராதாகிருஷ்ணன் அவனை முறைத்தான்.

''அஜீத் உன்கிட்ட உருகினதும்.. என்னடா.. வெள்ளைக் காக்காய் மல்லாக்கப் பறக்குதுன்னு நினைத்தேன். ஆனால்.. சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லைன்னு அஜீத் நிரூபிச்சிட்டான். ஹா.. ஹா..''

''போதும்டா.. பல்லு.. சுளுக்கிக்கப் போகுது.''

''அது சரி அஜீத்..

மோதல்.. மோதல்.. மோதல்..

மோதலுக்குப் பின்னால்.. மோதலுக்குப் பின்னால்

காதல்.. காதல்.. காதல்ன்னு பாரதியார் பாடியிருக்காரே...''

''அடப்பாவி அலெக்ஸ். பாரதியார் எங்கேலே அப்படி ஒரு கவிதையைப் பாடினார். நீயே உல்டா பண்ணி விட்டு.. பாரதியை ஏன் டிஸ்டர்ப் பண்றே.. விஷயத்துக்கு வா.''

''அந்த சாராகூட உனக்கு மோதல் வந்திருக்கு.''



''எனக்கு எங்கலே மோதல் வந்திருக்கு..? நம்ம ஆனந்துக்கு இல்ல மோதல் வந்திருக்கு.''

''யாருக்கு வந்தால் என்ன? அவள் ஆனந்தை விட்டு விட்டு உன்னையே முறைக்கிறாளா இல்லையா?''

''ஆமாம்லே.. ஆனந்தை ஆனந்தப் பார்வை பார்க்கிறாள். என்னை மட்டும் முறைக்கிறாள். சவட்டுக் கழுதை.. எல்லோரையும் தான் முறைக்குது.''

''உன்னை மட்டும் அதிகமாய் முறைக்குதா இல்லையா?''

''இப்ப அதுக்கு என்னலே.''

''சாராகூட உனக்கு மோதல் வந்திருப்பதால் அவள் கூட உனக்குக் காதல் வர சான்ஸ் இருக்கா.. இல்லையா.''

''அப்படியே மண்டையில் போட்டு விடுவேன். இப்பத் தெரியுதுலே.. ஏன் உன்னை ராபர்ட் வீடு கட்டி அடிக்கிறான்னு. அவள் கூட மல்லுக்கு நிற்கிறது. நம்ம ஆனந்துதான். மோதலோ.. காதலோ.. அது அவங்க பாடு.. நாம நண்பனுக்குத் தோள் கொடுக்கனும். அவன் காலை வாரக்கூடாது... எதிலயும் ஒரு தர்மம் இருக்கணும்லே...''

''ஆமாண்டா. அந்த சாரா ஆனந்தை திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள். இதில் நீ தோள் கொடுக்க என்னடா இருக்கு.''

''இதில் உனக்கு என்னலே வருத்தம்? எலே ராதா.. இது ஆனந்திற்கும் சாராவுக்கும் உள்ள பிரச்னை. அவள் ஆனந்தை திரும்பிப் பார்த்தால் உனக்கென்ன... பார்க்கா விட்டால் உனக்கென்ன..?''

''அதெப்படி அப்படி விட முடியும்? இது பொம் பளைப் புள்ளைகளோட கௌரவப் பிரச்னை.''

''நாங்களும் பொம்பளைக இருக்கிற வீட்டில் பொறந்து வளர்ந்தவங்கதான். எங்களுக்கும் தாய் குலத்தின் மதிப் பும் மரியாதையும் தெரியும். நீ ஊடே கொடி பிடிக்காமல் உன் ஜோலிக் கழுதையை பார்த்துக்கிட்டுப் போ.''

ராதாகிருஷ்ணன் எழுந்து.. சாராவை நோக்கிச் சென்றான். அவன் ஏதோ சொல்லவும்.. சாரா அஜீத் தையும்... ஆனந்தையும் திரும்பிப் பார்த்து முறைத்தாள். அலெக்ஸ் முணுமுணுத்தான்.

''அஜீத்.. எட்டப்பன் அவனோட வேலையைக் காட்டி விட்டான் போல.. சாரா திரும்பி முறைக்கிற முறைப்பில் நாம பத்தி எறிஞ்சிருவோம்போல இருக்கே. இப்ப என்ன செய்யலாம்?''

''எதுவும் செய்ய வேண்டாம்.. வெள்ளைக்காரச்சியே எழுந்து வருகிறாள் பாரு...''

'வெள்ளைக்காரச்சி' என்று அஜீத்தால் அன்புடன் விளிக்கப்படும் சாரா.. அக்கினிப் பறவையாய் அவர்களை நோக்கி வந்தாள். அவள் வருவதைக் கவனிக்காதவர்கள் போல் நண்பர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டு பேச ஆரம்பித்தனர்.. சாரா அஜீத்தை நோக்கி,

''அஜீத்.. நான் உன் கூடப் பேசணும்'' என்று கூறி னாள்.

''ஏண்லே.. அலெக்ஸ்.. ராவணன் படம் ரிலீஸா கிருச்சே. நீ போகலியா.''

''அவன் எதுக்குப் போகணும். நீதானே முக்கியமாகப் போகணும்.''



''ஏம்மா சாரா.. உனக்கு என்ன பிரச்னை? நாங்க பசங்க.. சினிமாவைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கோம்... நீ ஏன் ஊடாலே.. வருகிற.. போய் உன் பிரண்ட்ஸ் கிட்டப் பேச வேண்டியதுதானே. அது என்ன.. என்னை மட்டும் ராவணன் படத்துக்குப் போகச் சொல்றே. என்ன விஷயம்?''

''உனக்கும் அந்த ராவணன் புத்திதானே இருக்கு. அதனால்தான் உன்னை முக்கியமாய் போகச் சொன் னேன்.''

''இந்தா பாரும்மா.. பெண் பிள்ளையாச்சேன்னு பார்க்கிறேன். என்னைப் பார்த்தால் உனக்கு ராவணன் மாதிரி தெரியுதா? ஏன் நான் எவளையாவது தூக்கிக்கிட்டு வந்தேனா. இது நல்லா இல்லை.. ஆனந்த் சொல்லி வைலே.''

அவ்வளவுதான் சாராவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''என்மேல் கோபம்ன்னா என்னிடம் நேராப்பேசு. அதை விட்டுவிட்டு ஆனந்த் கிட்ட ஏன் சொல்கிற. அவன் யார் என்னைக் கண்டிக்க?''

''இதோ பாரும்மா. இந்தப் பஞ்சாயத்துக்கு நான் வரலை... இப்ப நீ ஏன் என்கிட்ட வந்து.. என்னைப் பார்த்து 'ராவணன்'னு சொன்னே? முதலில் அதுக்குப் பதில் சொல்லு.''

''வேண்டாம்.. அஜீத்.. என்கிட்ட மோதாதே...''

''உனக்கும் எனக்கும் என்ன பிரச்னை?''

''நீ ஏன் ஆனந்திற்கு சப்போர்ட் பண்ணுகிற?''

''ஏன்னா.. அவன் என் நண்பன்.''

''அதுக்காக.. அவன் என்ன செய்தாலும் கேள்வி கேட்காமல் சப்போர்ட் பண்ணுவியா? நியாய.. அநியாயம் வேண்டாமா? அவன் என் பின்னாலேயே சுற்றுகிறான். அது தெரியுமா உனக்கு?''

''அப்படியா தெரியாதே. இரு உன் முன்னாலேயே இவனைக் கண்டிக்கிறேன். ஏன்லே ஆனந்த் இவளை ஏன்லே சுத்துகிற. இவளைச் சுத்துகிறதுக்குப் பதில் நவகிரகங்களைச் சுத்தினாலாவது நல்லது நடக்கும். இதைச் சுத்தி என்ன ஆகப் போகுது.''

''தப்புத்தான் அஜீத். என் புத்திக்கு இது எட்டலையே.''

''பார்த்தியாம்மா. இவன் நல்லவன். சொன்னால் கேட்டுக்குவான். நீ போ.. போய்.. போட்டுக் கொடுக்கிற ராதாகிருஷ்ணனை புகழ்ந்து பேசு.. எங்க கிட்ட நின்று பேசி.. எங்க நேரத்தை வீணடிக்காதே. டேய் வாங்கடா. ராவணன் படத்துக்கு டிக்கெட் கிடைக்குதான்னு பார்க்கலாம்.''

அஜீத் எழுந்து முன்னால் செல்ல.. மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள். ஆனந்த் மட்டும் தேங்கினான். சாராவைப் பார்த்து..

''தேக்குமரக் காடு பெரிசுதான்.

தீக்குச்சி என்னவோ சிரிசுதான்.

தேக்குமரக் காடு எரியுதடி..''

என்று சன்னமாய் பாடினான்.

''என்ன திமிரா?''

''ஆமாம்.''



''என்கிட்ட இதையெல்லாம் வைத்துக் கொள்ளாதே...''

''வைத்துக் கொள்வேன்.''

''நீயென்ன ரெளடியா?''

''ஆமாம் ரெளடிதான். காதல் ரெளடி.''

''காதலா. அடப்பாவி. இப்போதுதான் முதல் வருடத்தை முடித்து இரண்டாம் வருடத்திற்கு வந்திருக்கிறோம். அதற்குள் காதலா?''

''இன்னும் இரண்டரை வருசம் தான் இருக்குன்னு நானே கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். நீ அதற்குள்.. என்கிறாயே...''

''நீயும். உன் மூஞ்சியும்.. பார்க்கவே சகிக்கவில்லை. இதில் என் மேல் காதல்ங்கிற.''

''எனக்கு மட்டும் உன் முகரையை பார்க்கச் சகிக்குதா? நான் பாட்டுக்கு தேமேன்னு நானாச்சு.. நானடிக்கும் விசிலாச்சுன்னு இருந்தேன். என்னை வம்புக்கிழுத்து.. உன் முகரையைப் பார்க்க வைத்ததே நீதானே.''

''என்னது.. நான் உன்னை வம்புக்கு இழுத்தேனா?''

''பின்னே.. நீ தானே உன்னைப் பார்த்து நான் விசிலடிப்பதாய் என் மேல் பழி போட்டாய்.. அப்புறம் தானே.. நான் உன் முகரையைப் பார்க்கவே ஆரம்பித்தேன். எனக்கு ஒரு சந்தேகம் சாரா.''

''என்ன?''

''உனக்கு என் மேல் ஒரு இதுதானே...''

''கொலையே பண்ணிடுவேன். உளராதே...''

''ஏய்.. ஏய்.. இப்படியெல்லாம் நடித்தால் நான் ஏமாந்து விடுவேனா? மனதிற்குள் என் மேல் ஒரு இது இல்

லாமலா.. நான் உன்னைப் பார்த்து விசிலடிப்பதாய் சொல்லி என்னை.. உன்னை.. பார்க்க வைத்தாய்.. ம்..?''

''உன் மேல்.. எனக்கு.. இதுவா..? ஹ....''

சாரா உதட்டை அலட்சியமாகச் சுளித்தாள். ஆனந்த் அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தவாறு மீண்டும் பாட ஆரம்பித்தான்.

''உசிரே போகுது.. உசிரே போகுது..

உதட்டை நீ கொஞ்சம் சுழிக்கையிலே...''

''ஏன்டா.. எல்லோரும் வில்லனாகவே ஆசைப்பட றீங்க?''

''ஹீரோவாகத்தான் நீ விடமாட்டேன் என்கிறாயே...''

''ஆனந்த்.. நாம் காம்ப்ரமைஸ் பண்ணிக் கொள்ளலாம்.''

''என்னவென்று... நீ என் மேலிருக்கிற இதுவை ஒப்புக் கொண்டு என்னை காதலிக்க ஆரம்பிக்கப் போகிறாய்.. அதுதானே.''

''நீ திருந்தவே மாட்டாயா? அன்றைக்கு நான் செய் தது தப்புத்தான். அதற்காக ஸாரி வேண்டுமானாலும் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என்னை டிஸ்டர்ப் பண்ணாதேடா.. ப்ளீஸ்.''

''ஆமாண்டி... நீ திமிர்தனமாய் என் மேல் பழி போடு வாய். என்னைப் பற்றிக் கம்ப்ளெயின்ட் கொடுப்பாய். ஹெச்.ஓ.டி. நல்லவராய் இருக்கப் போய் நான் தப் பித்தேன். அப்படியில்லாமல் உன் மாலத்தை நம்புகிற வராய் இருந்திருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்?''

''அதுதான்.. எதுவும் நடக்கவில்லையே.''

''அது வேறு உனக்குக் குறையா?''



''நான்தான் ஸாரி சொல்கிறேனே.''

''நீ ஸாரி சொல்லி விட்டால் எல்லாம் சரியாப் போச்சா?''

''பின்னே.. நான் என்னதான் பண்ணனும்கிற?''

''நான் உன்னை சைட் அடிப்பதாகத்தானே நினைத் தாய்? அதுதான் உன் ஆசையைக் கெடுக்க வேண்டா மென்று சைட் அடிக்கிறேன். உன் கவனத்தை கவர விசிலடித்து முயற்சி பண்ணினேன்னுதானே சொன் னாய்? உன் பின்னால் சுற்றி.. உன் கவனத்தை கவர முயற்சி செய்கிறேன்.''

''ஆனந்த்.. வேண்டாம்..''

''நீ வேண்டும். வேண்டாம்ன்னு டிசைட் பண்ண நான் என்ன உன் கையிலிருக்கும் பொம்மையா?''

''நீ என்ன செய்தாலும் நான் உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன்.''

''நான் பார்க்க வைத்து விட்டால்...?''

''அதையும் பார்க்கலாம்...''

''எதையும் பார்க்கலாம் என்கிறாய்? என்னைத்தானே.''

''யு... யு...''

''ஐ.. ஆம்.. ஆனந்த்.. செகன்ட் இயர்.''

''என்னவோ செய்து தொலை. இனி உன்னுடன் பேசுவதில் அர்த்தமே இல்லை. நான் போகிறேன்...''

''நான் வருகிறேன்.''

''எங்கே?''

''உன் பின்னால்தான்.''

சாரா.. கோபத்துடன் தரையை தேய்த்தவாறு விரைந்து நடந்தாள். ஆனந்த் தன் பேண்ட் பாக்கெட்டிற்குள் இரு கைகளையும் நுழைத்தபடி சீழ்க்கையடித்தவாறு அவளைப் பின் தொடர்ந்தான்.

# 5



சதீஷ் காலேஜிற்குள் தன் இரு சக்கர வாகனத்தைத் திருப்பினான்.. காலேஜின் பிரம்மாண்டமான நுழை வாயிலில் இருந்து காலேஜின் உள்ளே ஒட்டிய நீண்டு அகன்ற சிமெண்ட் பாதையின் இரு பக்கமும் மரங்கள் அணிவகுத்து நின்றன. அதனடியில் சிமெண்ட் பெஞ்சுகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றின் மேல் அமர்ந்திருந்த வந்தனா அவனைப் பார்த்து கை அசைத்தாள். பதிலுக்கு சிரித்த சதீஷ் வண்டியை பார்க் பண்ணிவிட்டு அவளிடம் வந்தான். அருகில் அமர்ந்தான்.

''ஹாய் வந்தனா...''

''இன்றைக்கு நீ லேட் சதீஷ்.''

''ஆமாம். அம்மா டிபன் செய்ய லேட் ஆகி விட்டது.''

''நான் அப்போதிருந்து வெயிட் பண்ணுகிறேன் தெரியுமா.''

''ஸாரி... அது எனக்கு எப்படித் தெரியும்.''

வந்தனா வாய்க்குள் எதையோ முணுமுணுத்தாள். சதீஷ் புரியாத பார்வை பார்த்தான்.



''என்னப்பா...''

''நத்திங்...''

''நீ நத்திங் என்றால்தான் சம்திங் இருக்குன்னு அர்த்தம். என்னன்னு சொல்லு.''

வந்தனா உதட்டைக் கடித்தாள்.

இவனிடம் என்னவென்று சொல்வது.. எப்படிச் சொல்வது.

அதற்குள், ''சதீஷ்.. நீ இங்கேயாடா இருக்கிறாய்? உன்னை எங்கேயெல்லாம் தேடுவது..?'' என்றபடி பிரசாத் அங்கே வந்து விட்டான். சதீஷ் உடனே எழுந்து,

''பை... வந்தனா... கிளாஸ் ரூமில் பார்ப்போம்..'' என்றபடி பிரசாத்தை நோக்கிப் போய் விட்டான்.

வந்தனா அமைதியாக.. தனியாக.. அமர்ந்திருந்தாள். அவளது விழியோரம் சிறு நீர் முத்துக்கள் உருவாகின. இமைகளைக் கொட்டி அவற்றை சரி செய்து கொண்டு வகுப்பறையை நோக்கி நடந்தாள்.

''இதோ வந்தனாவே வந்து விட்டாளே...'' என்றாள் திவ்யா.

''என்னப்பா...'' என்றபடி அங்கிருந்த பெண்களின் அருகே அமர்ந்தாள் வந்தனா.

''எல்லாம் வர இருக்கும் காலேஜ் டேயைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கோம். ஆமாம். நீ என்ன அங்கே பார்க்கிற?''

''நம்ம பசங்க யாரையும் காணோமேன்னு பார்த்தேன் சாரா.''

''நம்ம பசங்களா..? இது எப்போதிருந்து..'' என்று சாரா முறைக்க.

''கொஞ்ச நாட்களாகவே நடக்குது போல இருக்கு சாரா.. இவள் அந்த சதீஷிடம் அதிகம் பேசுகிறாள்.'' என்றாள் அஜிதா.

''ஏன்டி.. அப்படியா?''

''அதெல்லாம் இல்லைப்பா.. சும்மா நாலு வார்த்தை பேசினால் அதிகம் பேசுவதாய் சொல்லி விடுவதா?''

''சரி.. விடு.. நம்ம கிளாஸ் பசங்க எப்படி கிளாஸிற்குள் இருப்பாங்க? அவங்கதான் வானரங்கள் ஆச்சே... மரத்துக்கடியில் இல்லே மீட்டிங் போட்டுக்கிட்டு இருப் பாங்க...'' என்று சாரா சொல்லிக் கொண்டிருந்த நேரத் தில்... மரத்தடியில் அமர்ந்திருந்த மாணவர்கள் கும்ப லில் அலெக்ஸ் அஜீத்திடம் வினவினான்.

''ஏன்டா அஜீத். நம் கிளாஸில் இருக்கும் பெண் கிளி கள் எல்லாம் எங்கேடா.. காணோம். ஒருத்திகூட கண் ணில் படவேயில்லையே.''

''ஆமாம்லே. அவளுக எங்கே இருக்காளுகன்னு உனக்குப் பாத்துச் சொல்கிறதுதானே என் வேலை? இங்கே தன்னாலே கல்ச்சுரல் டேக்கு என்ன புரோக்ராம் கொடுக்கலாம். எப்படிக் கொடுக்கலாம்னு என்று நாங் களே மண்டையிலிருக்கிற முடியைப் பிய்த்துக் கொண்டு இருக்கிறோம். நீயானால் கிளிகளைத் தேடுகிறாய்.. உனக்கு ரொம்பத்தான் கொழுப்புலே...''

''அலெக்ஸ்.. அவங்கள்ளாம் கிளாஸ் ரூமில் இருக் காங்க.''

''அது உனக்கு எப்படிலே சதீஷ் தெரியும்?''



''அவனுக்குத்தானே தெரியும்?''

''என்னலே அலெக்ஸ். என்ன சொல்ல வர்றே?''

''இவன்.. அந்த வந்தனா கிட்ட கடலை போட்டுக் கிட்டு இருக்கான் அஜீத். உனக்கு இது தெரியாதா?''

''இது எத்தனை நாளாலே நடக்குது...''

''நான் சும்மா பிரண்ட்லியாகத்தான் பேசிக்கிட்டு இருக்கேன் அஜீத். இவன் வேண்டுமென்றே என்னைக் கிண்டல் பண்ணுகிறான்.''

''அலெக்ஸ்.. என்னலே இது.''

''அதை விடு அஜீத். நாம இங்கேதானே இருக் கிறோம். நம்ம கண்ணில் படாம எப்படி கிளிகள் கிளாஸ் ரூமிற்குள் போய் அடைந்ததுகள்?''

''அதுவா ராசா... கிளிக்கு இறக்கை முளைச்சுடுச்சு... உன் கண்ணில் படாமல் பறந்து கிளாஸ் ரூமிற்குள் போய் அடைந்து விட்டது... லொக்.. லொக்..''

அஜீத் நடிகர் திலகமாகி அலெக்ஸை தோள் தழுவிக் கொள்ள சதீஷ் சிரித்தான். அலெக்ஸ் முறைத்தான்.

''இப்ப எதுக்குலே.. அவனை முறைக்கிறே.. கல்ச்சுரல் டேக்கு என்ன புரோக்ராம் கொடுக்கலாமுன்னு சொல்லு...''

''ஆமாம்.. அஜீத்.. நாம் தூள் பரப்பனும்.. நம்ம கிளாஸ் கேர்ள்ஸ் நம்மை பீட் அடிக்கிறது போல் புரோக்ராம் பண்ணனும்கிற வெறியோட இருக்காங்க...'' என்றபடி அங்கு வந்தான் ஆனந்த்.

''நீ எங்கேடா போயிருந்த...'' என்று ஸ்ரீதரன் கேட்டான்.

''வேற எங்கே போயிருப்பான்? அந்த சாராவிற்கு பாடிகார்டு வேலையை பார்த்து.. பத்திரமாய் கிளாஸ்

ரூமிற்குள் உட்கார வைத்து விட்டு வந்திருப்பான். ஆனந்த்... உன் சின்சியர் வொர்க்கைப் பார்த்து என் நெஞ்சம் பூரிக்குதுலே.''

''ஏதோ.. உன் ஆசீர்வாதம் குரு...''

''நடத்து.. நடத்து.. ஆமாம். அவளுக போடுகிற பிளான் உனக்கு எப்படித் தெரிந்தது?''

''பாடிகார்டு போலே.. பாலோ பண்ணிக்கிட்டு போகிறானில்ல.. அவங்க பேசுகிறதை வைத்துக் கண்டு பிடித்து இருப்பான். என்ன ஆனந்த் சரிதானே...''

''உனக்குத்தான் உடம்பெல்லாம் மூளையாச்சே... தப்பாகவா சொல்லப் போகிறாய்? அலெக்ஸ் சொல்வது சரிதான் அஜீத். அவளைப் பாலோ பண்ணும்போது.. என்னை ஓர் பார்வை பார்த்தபடி.. மத்தவங்ககிட்ட அவள் சொன்னாள்.''

''உன்னை உசுப்பேத்தி விடப் பார்த்திருப்பாள். ஆயிரம் தான் சொல்லு அவளுக.. அவளுகளுக்குத் தெரியாமலே நமக்கு பூஸ்ட் கொடுத்து விடுகிறாங்கலே...''

''பூஸ்ட் இஸ் தி சீக்ரெட் ஆப் அவர் எனர்ஜி...'' என்று அலெக்ஸ் கூறினான்.

''யுவர் எனர்ஜின்னு சொல்லுலே. அது என்ன அவர் எனர்ஜின்னு எங்களையும் உன்னோடு கூட்டுச் சேர்த்துக் கொள்கிற...'' என்றான் அஜீத்.

''என்ன அஜீத்.. என்னைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தையை சொல்லிப் புட்ட.. என் நெஞ்சே வெடித்து விடும் போல இருக்கு...''

''எனக்கே போட்டியாலே... இப்படி அப்பாவிப் பிள்ளையைப் போல் கண்களைப் படபடவென்று கொட்டிக்



கொண்டால் நான் ஐயோ பாவம் பச்சைப் பிள்ளைன்னு நம்பி ஏமாந்து விடுவேனாலே.. சும்மாவா உன் கண்ணழகைப் பார்த்து 'கண்ணழகா'ன்னு ராதா திட்டுகிறான். அலெக்ஸ்.. நீ சரியான அலம்பல் பார்ட்டிலே. இங்கே இத்தனை பேர் இருக்கோம். நீ நம் கிளாஸ் பெண் கிளிகளைக் காணோம்ன்னு கண்ணால் வலை வீசுகிற... உன்னை கவனிக்கனும்லே.''

''ஐயோ அஜீத்.. சும்மா ஒரு பேச்சுக்கு கேட்டேன்.''

''இனிமேல் கேட்காதே...''

''நீ சொன்னால் சரிதான்.''

''ஓகே... பாய்ஸ்.. நாம் எல்லோரும் டிராமா போடுகிறோம். அதன் கதை.. வசனம்.. டைரக்ஷன் என்னுடையது... நாம் எல்லோருமே அதில் பார்ட்டிசிபேட் பண்ணப் போகிறோம். மத்தபடி தனித்தனியா அவனவன் திறமையைக் காண்பிங்கலே. அலெக்ஸ் நீ என்ன பண்ணப் போகிற?''

''பாடப் போகிறேன்...''

''என்ன பாட்டு..?''

''வேறு என்ன பாட்டு இங்கிலீஷ் பாட்டுத்தான் கேட்கிறாயா?''

ஐ ஆம் இன் தி வெர்ல்டு...
யு ஆர் லைக் எ பர்டு...''

''தொலைத்து விடுவேன்லே...''

''பாரு அஜீத்... உன் ஊர் என்னவோ.. கட்டபொம்மன் ஊர்தான் அதற்காக இங்கிலீஷ் பாட்டு பாடுவதற்காக என்னைத் தொலைப்பது அவ்வளவு சரியில்லை. சொல்லிட்டேன்.''

''ஒழுங்காய் தமிழ் பாட்டைப் பாடுலே... பிரசாத் நீ.''

''டான்ஸ் ஆடப் போகிறேன். அஜீத் குட்டி.''

''ஏன்லே.. நீ.. என்னைக் குட்டின்னு சொன்னால் இந்த உலகம் தாங்குமாலே.''

''ஏன் அஜீத்குட்டி...''

''சரி.. கூப்பிட்டு விட்டுப் போ. ராபர்ட் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''செல்வியை நினைத்து கவிதை சொல்லப் போகிறான்?''

''நீ மாத்து வாங்கப் போகிறாய். அஜீத்.. இவன் பேசுவது சரியில்லை.''

''விடு ராபர்ட். ஏலே அலெக்ஸ். அவனை ஏன்லே வம்புக்கு இழுக்கிற.. அவன் பாட்டுக்கு காத்தில கோலம் போட்டு... கவிதை சொல்லிக்கிட்டு இருக்கிறான். அவனை வம்புக்கு இழுக்காட்டி உனக்குத் தூக்கமே வராதா?''

''இவன் இதுக்குத்தான் லாயக்கு அஜீத். காத்தில் கோலம் போடாமல் காகிதத்தில் நாலு வரி எழுதி அந்தப் பொண்ணுகிட்ட பினாத்திக் கொண்டிருந்தால் எனக்கு தூக்கம் வந்தாலும் எப்படிடா தூங்க முடியும்.''

''இவன் சொல்வதிலேயும் ஒரு பாயிண்ட் இருக்கு. ஏன்லே ராபர்ட் உன் தூக்கத்தை அவள் கெடுத்தால்.. இவன் தூக்கத்தை ஏன்லே நீ கெடுக்கிற?''

ராபர்ட்டின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

''இங்க பாருலே.. இவன் பண்ற கூத்தை.''



''அவனை விடு.. அவன் அப்படித்தான்.. நீ நம்ம கதைக்கு வா.''

''எந்தக் கதை.. காலேஜ் டேக்கு போடப் போகிற கதையா?''

''இப்ப கிளாஸுக்கு போகிற கதைக்கு.''

அவர்கள் கும்பலாக கிளாஸ் ரூமிற்குள் நுழைந்தார்கள். ஆனந்த் மட்டும் சாராவைக் கடக்கும்போது சின்னதாக விசிலடித்து வைத்தான்.

''கொழுப்பா..'' என்றாள் சாரா.

''ஆமாம். அது எப்படி உனக்குத் தெரிந்தது....'' என்று ஆனந்த் அவளிடம் நின்று விட.

''லேய்.. ஆனந்த்.. இங்கே வாலே.. அங்கே என்னலே பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டு இருக்கே...'' என்று அஜீத் அழைத்தான்.

''சும்மாதான்.. தலை.. இங்க ஒரு மீனு.. ரொம்பத் துள்ளுது..''

''ஒரு நாள் பொரிச்சிரலாம். நீ இப்படி வந்து உட்காரு...''

அவர்கள் சலசலக்கும்போது லெக்சரர் வந்துவிட.. வகுப்பு அமைதியானது.

பிரசாத் வீட்டுக்குள் நுழையும்போதே.. ஜனார்த்தனன் காபி குடித்துக் கொண்டிருந்தார். மகனைக் கண்டதும்.. உள் பக்கமாய் திரும்பி..

''ராதா.. பிரசாத் வந்து விட்டான். அவனுக்கு டிபன் காபி.. எடுத்துக்கிட்டு வா..'' என்று குரல் கொடுத்தார்.

''அம்மா ஆபிஸில் இருந்து வந்து விட்டாங்களா.. டாட்...'' என்றவாறு சோபாவில் அமர்ந்த பிரகாஷ்.. ஷூவைக் கழட்டினான்.

''அப்பவே வந்தாச்சு.. நீ தான் லேட்..'' என்றவாறு கையில் டிபன் காபி கொண்ட டிரேயோடு வந்தாள் ராதா.

''கல்ச்சுரல் டே வருது மம்மி. ரிகர்சல் பார்த்தோம்.''

''இது வேறா? இனி இரண்டு மூன்று வாரங்களுக்கு இதுதான் பேச்சாக இருக்கும். படிப்பை மறந்து விடு வாய்.''

''விடு ராதா.. எப்போதும் படிப்பு.. படிப்பு என்று இருந் தால் எப்படி.. இதுவும் வேண்டும்தானே...''

மகனை மனைவி எப்போது கண்டித்தாலும்.. சடா ரென்று மகனுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் ஜனார்த்தனன் வினவினார். கணவனின் டெக்னிக்கை.. கண்டும் காணாதவள் போல் ராதா.. மகனின் அருகே அமர்ந்தாள்.

''நீ என்ன செய்யப் போகிறாய் பிரசாத்?''

''டான்ஸ் அண்ட் டிராமா.''

''குட்.. டான்ஸிற்கு டிரஸ் எடுக்க வேண்டும் தானே.''

''யூனிபார்மாய் எடுக்கணும். அதை அப்போது பார்த் துக்கலாம்.''

பிரசாத் எழுந்து மாடிக்குப் போய் விட்டான். அவன் போன பின்பு ஜனார்த்தனம் மனைவியைப் பார்த்து.

''டான்ஸ்.. டிராமான்னு டயத்தை வேஸ்ட் பண்ணு கிறான். நீ கொஞ்சம் சொல்லக் கூடாதா?'' என்றார்.



ராதா கணவன் மேல் பாசம் கொண்டவள். அதனால் அவரை எரிக்கும் அளவிற்கு முறைக்காமல் கொஞ்சம் குறைத்தே முறைத்தாள்.

''ஏண்டி முறைக்கிற?''

''ஏன் உங்களுக்கு வாயில்லையா... நீங்கள் சொல்ல வேண்டியதுதானே.''

''நான் சொன்னால் சரி வராது ராதா...''

''அதெல்லாம் வரும்... உங்க டிரிக்கையெல்லாம் வேறு எங்காவது காட்டுங்க... என்னிடம் வேண்டாம். பிள்ளையிடம் ஒரு கேள்வி கேட்கப் போனால் ஊடே வருவது. அவன் இல்லாதபோது அவனைப் பற்றிக் குறைவாய் பேசுவது. இதுவே உங்களுக்கு வழக்கமாகிப் போச்சு.''

ஜனார்த்தனம் பேப்பரை எடுத்து முகத்தை மறைத்துப் பிடித்துக் கொண்டார். இன்றைக்கு இது போதும். இன் னொரு நாள் மீதிக் கச்சேரியை வைத்துக் கொள்ளலாம் என்ற நினைவோடு ராதா வீட்டிற்குள் போய் விட்டாள்.

லேகா.. ஹாஸ்டலில் அவளது ரூமிற்குள் கட்டிலில் குப்புறப்படுத்தவாறு அவளுடைய தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''அச்சா.. டாட்.. இங்கே மழையில்லை. ம்ம்.. நன் றாகப் படிக்கிறேன்.. மாம் என்ன செய்கிறாங்க... நோ பிராப்ளம்.. ம்ம்.. காலேஜ் டே வருது டாட்... அதனால் கிளாஸ்ல்லாம் ரெகுலராக வைப்பதில்லை...'' என்று பேசி முடித்து விட்டுப் போனை அணைத்தாள்.

சேரில் அமர்ந்து.. புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த சாரா..

''உன் டாடியா?'' என்று கேட்டாள்.

''யெஸ்.. மும்பையில் நல்ல மழையாம். இங்கே எப்படின்னு கேட்டார்.''

''ம்ம்.. நம்ம பேரண்ட்ஸ் ஒரு ஊரில்... நாம ஒரு ஊரில். என்ன லைப்.. நினைத்தால்.. வீட்டுக்குப் போகணும் போல இருக்கு.''

''எனக்கும்தான். வந்து இரண்டு வருடங்களாகி விட்டது. இந்த ஹோம்சிக் இன்னும் போகவில்லை.''

''ஏன் லேகா.. உன்னை அந்த பிரசாத் சைட் அடிக் கிறானாமே...''

''அப்படித்தான் அஜிதா சொல்கிறாள்.''

''ஏன் உனக்குத் தெரியாதா?''

''ஏன் தெரியாது.. நன்றாகத் தெரியும். ஆனால்.. அவ னுக்குத் தைரியம் பத்தாது. தூரத்தில் நின்று பார்ப்பான். கிட்ட வந்து பேச மாட்டான்.''

''பேசினால்... நீயும் ஓ.கே. சொல்லி விடுவாய்.''

''முதலில் பேசட்டும்.''

லேகா விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட் டாள்.

மறுநாள் காலேஜில் ரிகர்சல் பார்த்துக் கொண்டிருந்த போது திவ்யா கோபமாய் வந்தாள்.

''ஏண்டி இவ்வளவு கோபமாய் வருகிறாய்...'' என்று சாரா கேட்டாள்.

''அவனுக மூக்கை உடைக்கணும்டி...''

''எவனுக மூக்கை?''



''நம் கிளாஸ் வானரப் பசங்க மூக்கை...''

''ஏன்.. என்ன செய்தானுக...?''

''நம்ம சுபா பரத நாட்டியம் ஆடுகிறாள் இல்லையா?''

''ஆமாம்.''

''அவளைப் பார்த்து அதோ தில்லானா மோகனாம் பாள் போகிறாள்ன்னு சொல்கிறாங்களாம்டி. அவ அப்செட் ஆயிட்டா...''

''கவலையே படாதே.. நாம ஜெயிக்கிறோம்..'' சாரா சூளுரைத்தாள்.



## 6

எங்கும் சந்தோசமாய் துள்ளித் திரியும் மாணவர் கூட்டம்.. பட்டாம்பூச்சிகள் போல் பல வண்ண உடை களில் வலம் வரும் மாணவிகள் கூட்டம்.. 'கல்சுரல் டே' என்று அழைக்கப்படும் நாள் வந்து விட்டது.. நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின...

அஜீத் குழுவினரின் நாடகம் அரங்கேறியது. முதல் காட்சியில் பெண் வேடமிட்ட நேதாஜி வந்தான்... அவன் ஒரு நடிகையாம். கையில் புசுபுசுவென்ற நாயுடன்... மழுமழுவென்று கால்களில் உள்ள முடிகள் மழிக்கப்பட்டு மினி ஸ்கர்ட்டுடன் உண்மையிலேயே பெண் போல் மேடையில் அவன் தோன்ற விசில்கள் தூள் பரந்தன. கூட்டம் கலகலப்பாகியது.

''உன் டாடியா?'' என்று கேட்டாள்.

''யெஸ்.. மும்பையில் நல்ல மழையாம். இங்கே எப்படின்னு கேட்டார்.''

''ம்ம்.. நம்ம பேரண்ட்ஸ் ஒரு ஊரில்... நாம ஒரு ஊரில். என்ன லைப்.. நினைத்தால்.. வீட்டுக்குப் போகணும் போல இருக்கு.''

''எனக்கும்தான். வந்து இரண்டு வருடங்களாகி விட்டது. இந்த ஹோம்சிக் இன்னும் போகவில்லை.''

''ஏன் லேகா.. உன்னை அந்த பிரசாத் சைட் அடிக்கிறானாமே...''

''அப்படித்தான் அஜிதா சொல்கிறாள்.''

''ஏன் உனக்குத் தெரியாதா?''

''ஏன் தெரியாது.. நன்றாகத் தெரியும். ஆனால்.. அவனுக்குத் தைரியம் பத்தாது. தூரத்தில் நின்று பார்ப்பான். கிட்ட வந்து பேச மாட்டான்.''

''பேசினால்... நீயும் ஓ.கே. சொல்லி விடுவாய்.''

''முதலில் பேசட்டும்.''

லேகா விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட்டாள்.

மறுநாள் காலேஜில் ரிகர்சல் பார்த்துக் கொண்டிருந்த போது திவ்யா கோபமாய் வந்தாள்.

''ஏண்டி இவ்வளவு கோபமாய் வருகிறாய்...'' என்று சாரா கேட்டாள்.

''அவனுக மூக்கை உடைக்கணும்டி...''

''எவனுக மூக்கை?''



''நம் கிளாஸ் வானரப் பசங்க மூக்கை...''

''ஏன்.. என்ன செய்தானுக...?''

''நம்ம சுபா பரத நாட்டியம் ஆடுகிறாள் இல்லையா?''

''ஆமாம்.''

''அவளைப் பார்த்து அதோ தில்லானா மோகனாம்பாள் போகிறாள்ன்னு சொல்கிறாங்களாம்டி. அவ அப்செட் ஆயிட்டா...''

''கவலையே படாதே.. நாம ஜெயிக்கிறோம்..'' சாரா சூளுரைத்தாள்.

# 6



எங்கும் சந்தோசமாய் துள்ளித் திரியும் மாணவர் கூட்டம்.. பட்டாம்பூச்சிகள் போல் பல வண்ண உடைகளில் வலம் வரும் மாணவிகள் கூட்டம்.. 'கல்ச்சுரல் டே' என்று அழைக்கப்படும் நாள் வந்து விட்டது.. நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின...

அஜீத் குழுவினரின் நாடகம் அரங்கேறியது. முதல் காட்சியில் பெண் வேடமிட்ட நேதாஜி வந்தான்... அவன் ஒரு நடிகையாம். கையில் புசுபுசுவென்ற நாயுடன்... மழுமழுவென்று கால்களில் உள்ள முடிகள் மழிக்கப்பட்டு மினி ஸ்கர்ட்டுடன் உண்மையிலேயே பெண் போல் மேடையில் அவன் தோன்ற விசில்கள் தூள் பரந்தன. கூட்டம் கலகலப்பாகியது.

ஆனந்த் தயாரிப்பாளராக வந்தான். நேத்தாஜியைப் பார்த்து, ''கால்ஷீட் வேண்டும்'' என்று கேட்டான்.

பெண் வேடமிட்டிருந்த நேதாஜி ஒயிலாய் ஒரு சேரில் அமர்ந்து கொண்டு ''உட்காருங்க'' என்று பெண் குரலில் மழலையாய் மிழற்றிக் கொண்டு விக் முடியை கோதினான்.

உடனே ஆனந்த்.. நேதாஜியின் மடிமேல் உட்காரப் போக.. கூட்டம் கலகலத்துச் சிரித்தது.

''ச்சீய்...'' என்று வெட்கப்பட்ட நேதாஜி,

''இங்கேயில்ல.. அங்கே...'' என்று கைகாட்டவும்.. ஏமாற்றத்தை முகத்தில் காட்டியபடி ஆனந்த் அங்கே உட்கார்ந்தான்.

ஸ்ரீதரன் ஆனந்தின் பி.ஏ.வாம். அவன் மேடைக்கு வர.. ஆர்வமாய் நேதாஜி, ''அவர் யாரு...'' என்று வினவி னான்.

அவனது ஆர்வத்தைக் கண்ட ஆனந்த்.. ஸ்ரீதரனை முறைத்தபடி...

''அவனா.. அவன் என் அல்லக்கை...'' என்றான். கூட்டம் மீண்டும் சிரித்தது.

''உங்களுக்கு என்ன வேணும்..'' நேதாஜி பெண் குரலில் கொஞ்சினான்.

''நீங்கதான் வேணும்.''

''வாட்...?''

''உங்க கால்ஷீட் வேண்டும்.''

''யூ நாட்டி....''

''ஹி.. ஹி.. ஹி...''



''பட்.. எனக்கு ஹீரோ யாரு?''

''நீங்களே சொல்லுங்க மேடம்.''

''ஐ ஸீ... அமீர்கான். சல்மான்கான்.. ஹிருத்திக் ரோஷன், அபிஷேக் பச்சன் இவர்களில் யாராவது ஒருத் தரைப் போடுங்க... இவங்க எல்லாருமே வந்தாலும் ஓ.கே...''

கூட்டம் மீண்டும் கை தட்டியது... ஆனந்தின் மனம் பேசுவது போல் மேடைக்குப் பின்னாலிருந்து குரல் கேட்டது.

''ஏய் பப்ளிமாஸ் மூஞ்சி. உனக்கு நம்ம தமிழ் ஹீரோக்கள் வேண்டாமா? ஹிந்தி ஹீரோக்கள் தான் வேண்டுமா.. நேரம்டி...''

''அதெல்லாம் முடியாதுங்க. நீங்க... நாங்க காட்டுகிற ஹீரோக்களைப் பார்த்துவிட்டு யார் வேணும்னு செலக்ட் பண்ணிக்கங்க. முதலில் நம்ம அமுல்ஹாசன் வருகிறார் பாருங்க...'' என்று ஆனந்த் கூற,

மேடையில் அமுல்ஹாசனாக சதீஷ் தோன்றினான். அவன் பின்னால் இரண்டு பேர் நடந்து வர... அவன் மேடையில் ஒரு மார்க்கமாய் நின்று,

''தன்னைப்போல் தலைவன்'' என்றான்.

''இவர் பிடிச்சிருக்கா...'' என்று ஆனந்த் வினவ,

''ஊஹூம் பிடிக்கலை...'' என்று நேதாஜி தலை யாட்டினான்.

''அப்போ... சுஜித்குமாரை வரச் சொல்லுங்கப்பா...'' என்று ஆனந்த் கூறவும் மேடையில் சுஜித்குமாராய் அலெக்ஸ் தோன்றினான்.

''நல்லா... நல்லா...'' என்று பின்னால் சத்தம் கேட்க.. அவன் சைக்கிளில் வந்தான். அவனுக்கு பாடிகார்டுகள் போல இரண்டு பேர்... அவனை சைக்கிளில் இருந்து இறக்கிவிட்டு கைத்தாங்கலாய் அழைத்து வந்து சேரில் அமர வைத்தனர். அவன் திடீரென்று எழுந்து,

''தீபாவளி.. தல தீபாவளி...'' என்று ஆடிவிட்டுப் போக...

''இவரைப் பிடித்திருக்கிறதா...'' என்று கேட்டான் ஆனந்தன்.

''என் ரேஞ்சே வேறு....'' என்றான் நேதாஜி.

''ஏப்பா.. நம்ம அஜய்யை வரச் சொல்லுங்கப்பா'' என்று ஆனந்த் அழைக்க... மேடையில் ராதாகிருஷ்ணன் அஜய்யாக தோன்றினான்.

''குருவி.. குருவி...'' என்று பாட்டுச் சத்தம் கேட்க.. அவன் குருவி போல் பறந்து காட்டிவிட்டுச் சென்றான்.

''இவர் ஓ.கே.வா...'' என்று ஆனந்த் கேட்க.

''குருவியெல்லாம் எனக்கு வேண்டாம் சார். எனக்கு பருந்துதான் வேண்டும்.'' என்றான் நேதாஜி.

''நான் எங்கேம்மா அதை பறந்து பறந்து தேடுவேன்? இப்ப நம்ம புரட்சி காந்த் வருவார். அவரைப் பார்த்து விட்டு சொல்லுங்க...'' என்று ஆனந்தன் கூற...

மேடையில் புரட்சி காந்தாக அஜீத் தோன்றினான்.

''டுமீல்... டுமீல்...'' என்றபடி தீவிரவாதிகள் போல் உடையணிந்து இருந்த இரு மாணவர்கள் மத்தியில் நின்று கொண்டான். தீவிரவாதிகள் அவனை வளைத்துப் பிடிக்க முயல்கையில்... அவர்களைப் பார்த்து சுட்டு விரலை நீட்டி...



''இந்த மதுரையில் முந்நூற்றி முப்பது டெய்லர் கடை இருக்கு. அதில் அறுநூறு தையல் மிஷின்கள் இருக்கு. அதில் அறுநூறு பேர் ஒரு நாளைக்கு பத்து மணி நேரம் வேலை செய்கிறாங்க.. அதில் நாள் ஒன்றுக்கு ஐயாயிரத்து பத்து துணிகள் தைக்கப்படுது...'' என்று சொல்லிக் கொண்டே வர... தீவிரவாதி கெட்டப்பில் இருந்த மாண வர்கள்,

''ஐயோ... விட்டு விடு...'' என்றபடி அஜீத்தின் கால் களில் விழுந்தனர்.

''என்னலே.. இது.. இந்தக் கடைகளில்.. எந்தக் கடை யில் நீங்க இந்த டிரஸ்ஸை வாங்கினீங்கன்னு கேட்கப் போனால் பொசுக்குன்னு காலில் விழுகிறான்களே...'' என்றபடி அவன் உள்ளே போக...

''இவர்?'' என்று இழுத்தபடி நேதாஜியை ஆனந்த் பார்க்க,

''நோ.. நோ...'' என்றான் அவன்.

''அடக் கடவுளே... இனி கஜினிதான் கதியா...'' என்று ஆனந்தன் கூற மேடையில் கஜினியாக ராபர்ட் தோன்றி னான். வெள்ளை வேட்டி சட்டையில் அவன் கும்பிட்டுக் கொண்டே வர..

''எஜமான் காலடி மண்ணெடுத்து..

நெற்றியில பொட்டு வைப்போம்...'' என்ற பாடல் ஒலித்தது.

ராபர்ட் நின்று நேதாஜியை பார்க்க...

''காலடி மண்ணை எடுத்து நெற்றியில் வைத்துக் கிறதா..? அதில் எத்தனை கிருமிகள் இருக்கும்..? சம்திங் டேன்ஜரஸ்...'' என்று நேதாஜி திரும்பிக் கொண்டான்.

கடுப்பாகிப் போன ராபர்ட்.

''நான் எப்ப வருவேன்.. எப்படி வருவேன்.. எதுக்கு வருவேன்னு யாருக்கும் தெரியாது. ஏன் எனக்கே தெரியாது.'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

''சை... இத்தனை பேரும் வேணாம்னா.. உனக்காக புதுசா ஒரு மூஞ்சியைச் செய்ய முடியுமா? உன்னை வைத்துப் படம் எடுப்பதற்குப் பதில் அந்தப் பணத்தை வைத்து அநாதை விடுதி ஆரம்பிக்கலாம்... புண்ணிய மாவது கிடைக்கும்.''

என்ற ஆனந்தன், அநாதை விடுதி ஆரம்பிக்க முடிவு செய்து மைக்கில் கூறுகிறான். நாடகம் முடிந்து விட்டது.

''சிரித்துச் சிரித்து வயிறே புண்ணாகி விட்டது...'' திவ்யா வயிற்றை பிடித்துக் கொண்டாள்.

''எல்லாமே ரௌடிகள் போல இருக்கிறானுங்க.. ஆனால் உடம்பெல்லாம் மூளை...'' என்று சாரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே விசில் சத்தம் அவளைக் கடந்து சென்றது.

திரும்பாமலே அது ஆனந்தன் என்று உணர்ந்து கொண்ட சாரா...

''ஆனால் திமிர்தான் ஜாஸ்தி'' என்று தொடர்ந்து சொன்னாள்.

''உன்னை விடவா?'' என்ற ஆனந்தனின் குரல் கேட்டு அவள் வெகுண்டு திரும்ப... ஆனந்தன் அஜீத் திடம்,

''உன்னை விடவா நான் நன்றாக நடித்து விட்டேன்..?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.



அவன் கண்கள் சாராவைப் பார்த்துச் சிரித்தன. அவனது நடிப்பைப் புரிந்து கொண்ட சாரா.. எதுவும் செய்ய இயலாமல் கையை பிசைந்து கொண்டே மேடைக்குப் போனாள்.

மேடையில் பெண்களின் நடன நிகழ்ச்சி ஆரம்பித்தது. சுபா முதலில் வந்து...

''கனாக் காண்கிறேன்.

கனாக் காண்கிறேன்.. கண்ணா.

ஒரே மேடையில்..

ஒரே மேடையில்... நாம் இருவருமே...''

என்ற பாடலுக்கு விரைவாய் பரத நாட்டியம் ஆடி முடித்து கைதட்டல்களை அள்ளிச் சென்றாள்.

அஜீத் கோஷ்டியினர்...

''அவள் என்னைத்தான்... பார்த்துப் பாடினாள்...'' என்ற ரீதியில் ஒருவரை ஒருவர் அடித்து விளையாடிக் கொண்டனர்.

அடுத்து பிரசாத் மேடையில் தோன்றினான்.

''பூம்... பூம்... சக்கலக்க...'' என்ற பாடலுக்கு விரைவு நடனம் ஒன்றை ஆடி... மாணவ.. மாணவிகளை ஆர்ப்பரிக்க வைத்து விட்டுச் சென்றான் பிரசாத்.

சாரா.. திவ்யா.. ஜனகா.. அஜிதா.. முதலானோர்.

''ராதை மனதில்..

ராதை மனதில்...

என்ன ரகசியமோ...'' என்ற பாடலுக்கு அழகாய் ஆடி முடித்தனர்.

விழாவின் இறுதியில் வெற்றி பெற்றவர்கள் யார் என்று அறிவிக்கப்பட்டது. முதலாவதாக வெற்றி பெற்ற தாக பெண்களின் நடனம் அறிவிக்கப்பட.. ஜனகா.. துள்ளிக் குதித்து ஓடி வந்தாள்.

''இவ ஏன்லே.. இப்படிக் கண்ணு காது தெரியாம ஓடி வர்றா. வழுக்கி விழுந்து விடப் போகிறாள்...'' என்று அஜீத் சொல்லி வாய் மூடு முன் அவள் கால் சறுக்கி விழுந்து வைத்தாள்.

''ஹோ.. ஹோ...''வென்று மாணவர் குழாம் சிரிக்க.. அஜீத் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு,

''ஏம்மா.. பார்த்து வரக்கூடாது...?'' என்றபடி அவளைத் தூக்கி விட கை நீட்டினான்.

அவள் ரோசமாய் தன் கையை ஊன்றி எழுந்து கொண் டாள். அவமானத்தில் அவள் முகம் கன்றியிருந்தது.

''தன் கையே... தனக்கு உதவி'' என்றான் அஜீத்.

''இதிலெல்லாம் ஒன்றும் குறைச்சல் இல்லை...'' என்றான் ஸ்ரீதரன்.

''மற்றதிலும் குறைச்சல் இல்லையே.''

''அப்படியா சொல்கிற.. எதில்ன்னு நீயே சொல்லி விடு.''

''இதைச் சொன்னவன் அதைச் சொல்ல மாட்டே னாலே.. திமிர்.. ஆணவம்.. அகங்காரம்.. கொழுப்பு.. தான் என்ற நினைவு.. இப்படி அடுக்கிக்கிட்டே போக லாம்லே.. சொல்லச் சொல்ல.. அது பாட்டுக்கு அனுமார் வால் போல நீண்டுக்கிட்டு வரும்லே...''

ஜனகா.. கோபத்துடன் மூச்சிரைக்க.. அஜீத்தை நோக்கி விரல் நீட்டி,



''வேண்டாம்.. அஜீத்..'' என்றாள்.

''என்ன வேண்டாம்.. பார்ஸ்ட் பிரைஸ் வேண்டாமா.. சொல்லி விடவா..?''

''உன்னிடம் போய் மனுஷி பேசுவாளா?''

''உன்னைப் போல் ஜந்துதான் பேசும்.''

'இவனோடு பேசினால் வேலைக்கு ஆகாது..' என்பதை புரிந்து கொண்ட ஜனகா. வாயை மூடிக் கொள்வதே உத்தமம் என்ற முடிவோடு.. கால்களை விந்தியபடி... தோழியரைத் தேடிப் போனாள்.

''ஆ... மெல்ல நட... மெல்ல நட...
மேனி என்னாகும்...'' என்று நடிகர் திலகம் போல் கைகளை மடக்கி நின்று பாடினான் அஜீத்.

''சும்மா சொல்லக் கூடாது தல... அப்படியே நீ சிவாஜி தான்.''

''அப்போ.. அவள்தான் சரோஜாதேவின்னு சொல்றி யாலே...''

''உன்னைப் புகழ்ந்த வாயால் அவளைப் புகழ்வதா...,''

''அதுக்கு ஏன்லே.. விளக்கெண்ணெய் குடித்தது போல முகத்தை வைத்துக்கறே.. சதீஷு... இவளுகளுக்கு இதுதான் தெரியும். நமக்கு என்னென்னவோ தெரியும்..'' என்று அஜீத் சொல்லிக் கொண்டிருக்கும் போதே... நாடகத்திற்கான முதல் பரிசு.. அஜீத் கோஷ்டிக்கு என்று மைக்கில் அறிவிக்கப்பட்டது.

அவ்வளவுதான்.. அஜீத் கோஷ்டியினர் எழுந்து.. மாணவிகளை நோக்கி... கை மடக்கி டான்ஸ் ஆடத் தொடங்கினர்.

''என்ன செய்ய முடியும்? எதிரிகள்ன்னு ஆன பின்னால் எதுவும் செய்ய முடியாது?''

''ஏன் செய்ய முடியாது?''

''இதோ பார்.. அவன்களே காட்டான்கள்.. இதில் போய் நாம் என்ன பண்ண முடியும்?''

''பெண் நினைத்தால் எதுவும் முடியும்?''

''என்னடி.. சினிமா வசனம் போல் சொல்கிற?''

''இல்லை லேகா.. நான் டிசைட் பண்ணிட்டேன்.''

''என்னன்னு?''

''பெண்களயே திரும்பிப் பார்க்காத.. பெண்களை மதிக்காத... ஆண் என்ற திமிரில் ஆடும் அந்த அஜீத்திற்கு பாடம் கற்றுக் கொடுக்கப் போகிறேன்.''

''என்னடி சொல்கிறாய்.''

''யெஸ்... நம்மில் யாராவது அவனைக் காதலிப்பது போல் நடிக்க வேண்டும்.''

''நடித்து...?''

''அவனையும் காதலிக்க வைக்க வேண்டும்...''

''அதன் பின்..?''

சாரா சொன்னாள். லேகா அவளது திட்டம் கேட்டுத் திகைத்தாள்.

''அதன் பின்.. உன் மூஞ்சியைப் போய் யாராவது காதலிப்பார்களான்னு கேட்க வேண்டும்..? அந்தக் காதல் தோல்வியால் அவன் மனம் உடைந்து போக வேண்டும்.. அதை நான் பார்க்க வேண்டும்...''

'என்ன ஒரு கொடிய எண்ணம்..' என்று எண்ணினாள் லேகா.



# 7

‘‘அதற்காக நீ அவனைக் காதலிப்பது போல் நடிக்கப் போகிறாயா?’’

‘‘நான் எப்படி.. அப்படி நடிக்க முடியும்?’’

‘‘ஏன்..?’’

‘‘அவன்தான். ஆனந்திற்கும்.. எனக்கும் மோதலோ.. காதலோ எதுவாக இருந்தாலும் ஊடே அவன் வரமாட்டேன்னு சொல்லியிருக்கானாமே.. நான் அவனிடம் சும்மா பேசப் போனால்கூட அவன் என்னுடன் பேச மாட்டான்.’’

‘‘அப்புறம் என்ன செய்யப் போகிறாய்?’’

‘‘வேறு யாராவதுதான் போக வேண்டும். நீ இதைச் செய்கிறாயா?’’

‘‘ஷட் அப் சாரா.. இது போன்ற பேச்சையெல்லாம் இனிமேல் என்னிடம் பேசாதே.. எனக்கு இது பிடிக்காது.. என் பேமிலிக்கும் பிடிக்காது..’’

‘‘ஓ.கே. கூல் டவுன்.. கூல் டவுன்... நான் வேறு யாராவது மாட்டுவாங்களான்னு பார்க்கிறேன்.’’

மறுநாள் முழுவதும் அடித்துப் போட்டது போலத் தூங்கின நண்பர்கள் மாலையில் ஒன்று சேர்ந்தார்கள். டிராமாவிற்கு பரிசு வாங்கியதைக் கொண்டாட ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனார்கள். அவரவர்க்கு வேண்



டியதை ஆர்டர் கொடுத்து விட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். சாராவும் தன் தோழியருடன் அதே ஹோட்டலுக்கு சாப்பிட வந்து கொண்டிருந்தாள்.

‘‘என்னலே... வெள்ளைக்காரியும் இந்த ஹோட்டலுக்கே வருகிறாளே. நிம்மதியா சாப்பிடக்கூட முடியாமல் ஒரே பெண் வாசனை.. சை..’’

சாரா தன் தோழியருடன் முணு முணுத்தாள்.

‘‘காட்டானும் அவன் கூட்டமும் இங்கேதான் உட்கார்ந்திருக்குதுகடி.. போயும்.. போயும் இங்கே வந்து நுழைந்தோமே...’’

‘‘திரும்பிப் போய் விடலாமா?’’

‘‘எதுக்கு... அவனுகளுக்கு பயந்து கொண்டு போவதாய் அவன் நினைப்பதற்கா?’’

‘‘வேறு என்ன தாண்டி செய்யலாம்?’’

‘‘இவனுகள் இருக்கிற இடத்தில் சாப்பிடனும்னு நமக்கு விதிச்சிருக்கு.. வாங்கடி.. பேசாமல் இங்கேயே சாப்பிடலாம்.’’

அவர்கள் ஒரு மேஜையை தேர்வு செய்து உட்கார.. அஜீத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

‘‘என்னம்மா... அஜிதா.. எங்கே வந்தீங்க..?’’

‘‘நீங்கள்லாம் எதுக்கு வந்தீங்களோ.. அதுக்கு வந்தோம்.’’

‘‘பாருடா... நம்ம பாப்பா கதை சொல்வதை... ம்ம்.. நாங்கள்லாம் கடலை போட வந்தோம். நீங்களும் அதுக்கா வந்தீங்க?’’

அஜிதா பேச வார்த்தை வராமல் அஜீத்தை முறைத்தாள். சாரா சன்னக் குரலில் பேசினாள்.

''விடுடி... அவன்கிட்ட பேச்சுக் கொடுக்காதே. அவன் இப்படித்தான் பேசுவான். திமிர்... உடம்பெல்லாம் திமிர்.''

''ஆமாம் கடலை போடத்தான் வந்தோம்ன்னு சொல்லி விடவா?''

''அது எதுக்கு? ஆஹான்னு அவனுக மகிழ்ந்து போவதற்கா?''

''அதைச் சொல்லு... இந்த மூஞ்சிகளைப் பார்த்தால் கடலை போடவா தோன்றும்? கடலில் போய் விழுகத் தோன்றும்...''

''தெரியுது இல்ல... அவனுகளைத் திரும்பிப் பார்க்காமல் சாப்பிடு.''

அலெக்ஸ் ஆர்வமாய் பெண்கள் பக்கம் பார்த்துக் கொண்டே.

''எனக்கு லெக் பீஸ் மட்டும் போதும்.. வேறு எதுவும் வேண்டாம்'' என்று பீலா விட்டான்.

''ஏன்லே.. இவனுக்கு என்னலே ஆச்சு... லெக்பீஸ் மட்டும் போதும்கிறான். அது எப்படில்லே இவன் வயிற்றுக்குப் போதும்.''

''அது ஒன்றுமில்லை அஜீத். இது வேறு ஒரு விசயம்.''

''என்னலே ராபர்ட்.. புதிர் போடறே.. புதிரை விடுவி.''

''கேர்ள்ஸ் வந்திருக்காங்க இல்ல. இவன் அவங்களைப் பார்த்து விட்டு பிலிம் காட்டுகிறான்.''

''என்னது கோழிப் பண்ணையை பார்த்துவிட்டு கோழியே வேணாம்கிறானா? ஏன்லே. அதுகளே சிக்கனை மேய்ந்து கொண்டு இருக்குதுக. இவன் ஏன் வயிறை வாடப் போடுகிறான். ராபர்ட் நீயாச்சும் சொல்லுலே.''



''இவன் கதை உனக்குத் தெரியாது அஜீத்.''

''நீதான் சொல்லு கேப்போம்.''

''இவன் இங்கே பிலிம் காட்டிவிட்டு.. பாதி ராத்திரியில் காய்ந்து போன பிஸ்கட்டைப் போட்டு நொறுக்குவான் அஜீத்.''

''ஏன்லே.. அலெக்ஸ்.. ராபர்ட் சொல்வது உண்மையா?''

''அவன் கதை உனக்குத் தெரியாது அஜீத்.''

''தெரியலைன்னா நீ சொல்லு...''

''நானாவது பாதி ராத்திரியில் எழுந்து பிஸ்கெட்டைத் தான் திண்பேன். இவன் என்ன செய்வான் தெரியுமா?''

''அதுதான் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டேனில்ல.. திரும்பத் திரும்பத் தெரியுமான்னு ஏன்லே கேக்கிற..?''

''பாதி ராத்திரியில் எழுந்து உட்கார்ந்து ஷேவிங் பண்ணுவான்.''

அலெக்ஸ் சொன்னதைக் கேட்டு.. அஜீத்தின் கையிலிருந்த முள் கரண்டி நழுவியது... திகைப்புடன் ராபர்ட்டைப் பார்த்தான் அவன்.

''என்னலே சொல்கிற.. இவன் பாதி ராத்திரியில் எழுந்து உட்கார்ந்து ஷேவ் செய்வானா?''

''அட.. ஆமாம் அஜீத்.. நான் இல்லாததையா சொல்கிறேன்?''

''இது எப்பலே நடந்தது.''

''போன வாரம் புதன்கிழமை நைட் நாங்க தூங்கிட் டோம்... ஊடே விளக்கு வெளிச்சம் பட்டு கண் கூசிய தால் விழிப்பு வந்தது. எழுந்து உட்கார்ந்து.. மணி பார்த் தால்.. மணி... இரவு இரண்டு...''

''என்னலே... இது சன் டி.வி. மாதிரி.. 'இரவு.. இரண்டு..'ன்னு இப்படிக் கனத்த குரலில் சொல்றே.. அப்புறம் என்னதான் நடந்தது?''

''விழித்துப் பார்த்தால்.. எப்பவும் புத்தகமும் கையு மாய் உட்கார்ந்திருக்கும் பயல்... ஷேவிங் செட்டும் கையுமாய் உட்கார்ந்து இருக்கிறான்..''

''நீ என்னன்னு கேட்கலியா?''

''கேட்டேனே...''

''என்னலே சொன்னான்.''

''தூக்கம் வரவில்லைன்னு சொன்னான்.''

''ஏன்லே.. தூக்கம் வரவில்லைன்னா ஷேவ் பண்ணு வாங்களா?''

''அதை அவன்கிட்ட கேளு. என்கிட்ட ஏன் கேட் கிறே.''

''அவன் தான் மந்திரிச்சு விட்ட கோழியாட்டம் தலையை தொங்கப் போட்டு விட்டானே. அப்புறம்.. அவன்கிட்ட என்னத்தைக் கேட்கிறது.''

''அது என்னவோ எனக்குத் தெரியாது அஜித்... அதுக்கப்புறம் காலையில் நடந்தது பார்... அதுதான் செம காமடி...''

''என்னலே.. என்ன ஆச்சு...''

''காலையில் நான் லேட்டா எழுந்தேன் அஜீத். அவ சரமாய் குளித்து டிரஸ் மாற்றி... காலை டிபனை காலேஜ்



கேன்டினில் சாப்பிட்டுக்கலாம்ன்னு நினைத்து வெளியே கிளம்பப் போனேன். இவனை ரூமில் காணோம். சரி.. இவன்தான் மிட் நைட்டில் ஷேவ் பண்ணின ஆளாச்சே... விடிந்தவுடன் காலேஜிற்கு ஓடியிருப்பான்னு கதவைப் பூட்டப் போனால் கட்டிலுக்கு அடியிலிருந்து இரண்டு கால்கள் வெளியே நீட்டியிருக்கு.''

''இது என்னலே... ஹிட்ச்காக் படம் போல இருக்கு.''

''நானும் பயந்துதான் போனேன். குனிந்து கட்டிலுக்கு அடியில் பார்த்தால்.. இவன் குறட்டை விட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருக்கிறான். நான் நொந்து போய்விட் டேன்.''

''அப்புறம் என்னலே பண்ணினே.''

''வேறு என்ன செய்வேன்? எழுப்பினேன். ஏண்டா.. இப்படித் தூங்கறேன்னு கேட்டால்.. கட்டிலில் படுத்தால் தூக்கம் வரவில்லைன்னு கட்டிலுக்கு அடியில் படுத் தானாம்.''

''கும்பகர்ணன் போலத் தூங்கி விட்டான்.''

''அதுவேதான்.. அப்புறம் அடித்துப் பிடித்து குளித்து விட்டு காலேஜுக்கு ஓடி வந்தான்...''

அஜீத் ராபர்ட்டைக் கூர்ந்து பார்த்தான். அவன் முகத்தில் குடம் குடமாய் அசடு வழிந்தது.

''உன்னை என்னமோன்னு நினைத்தேன் ராபர்ட். கடைசியில் மிட் நைட்டில் ஷேவிங் பண்ணுகிற ஆளா நீ.. ஏன்லே. மிட் நைட்டில் டி.வி.யில் மிட்நைட் மசாலா பார்க்கிறவங்களைத்தான் பார்த்திருக்கிறேன். இதை நான்

கேள்விப்பட்டதே இல்லைலே.''

''சரி விடு.. அஜீத்.. மிட் நைட் மசாலா பார்த்துக் கெட்டுப் போவதற்கு இது எவ்வளவோ தேவலாம்.'' பிரசாத் சப்போர்ட்டுக்கு வந்தான்.

''அது பொது அறிவுடா பிரசாத்.. அதைப் பார்த்து யாரும் கெட்டுப் போக மாட்டாங்க...'' அலெக்ஸ் எடுத்துக் கூறினான்.

''இவன் ஏன்லே.. இப்படி அட்வைஸ் பண்ணுகிறான். இவன் மிட் நைட் மசாலாவைப் பார்ப்பானா?'' அஜீத் வினவ.

''விழுந்து.. விழுந்து பார்ப்பான்..'' என்று போட்டுக் கொடுத்தான் ராபர்ட்.

''என் பொது அறிவுப் பொக்கிஷமே... கை காய்ந்து போய் விட்டது. வாங்கலே கை கழுவப் போகலாம். இவன் பொது அறிவை அப்புறமாய் விலாவாரியாய் பேசலாம்'' என்று அஜீத் எழுந்து கொள்ளப் போனான்.

''ஷ்ஷ்...'' என்று வாயில் விரலை வைத்துக் கூறினான் அலெக்ஸ்.

''என்னலே...''

''அங்கே பார்.''

பிரசாத் எழுந்து கை கழுவப் போகையில்.. பெண்களின் பக்கமிருந்து எழுந்து கொண்ட லேகாவும் கைகழுவப் போனாள். அவள் அவனையே பார்த்துக் கொண்டு போக.. அவள் வருவதைக் கவனிக்காத பிரசாத் இயல்பாய் கைகழுவும் இடத்திற்குச் சென்று விட்டான்.

''நம்ம பயலும் போகிறான்.. இவளும் போகிறாள்.''

''ஆமாண்டா.. இப்பப் பாரு வேடிக்கையை.''



''என்னலே நடக்கும்?''

''வேறு என்ன நடக்கும்? அண்ணலும் நோக்குவான்.. அவளும் நோக்குவாள்..''

''நாமும் நோக்குவோமே...''

''அது அவர்களுக்குத் தெரியாதே.''

பிரசாத் கை கழுவி விட்டு.. திரும்பும்போது.. யதேச்சையாய் அருகில் நோக்கினான். அதே சமயம் கைகழுவிக் கொண்டே லேகாவும் பார்த்தாள். பிரசாத்தின் கண்கள் மின்னின. முகத்தில் ஒளி பரவியது.

''என்னலே.. நோக்கிடுச்சுக.. ஆனால் வாயைத் திறந்து எதுவும் பேசிக்க மாட்டேன்குதுகளே.''

''அதைத்தான் வள்ளுவரும் சொல்லியிருக்கிறார்.''

''என்னன்னு?''

''கண்ணோடு கண் நோக்குங்கால்.. வாய் பேச்சில் என்ன.. பயன்?''

''இப்படியா குறள் இருக்கிறது?''

''குற்றம் குறை இருந்தால் நீ கொடுக்கும் பரிசுத் தொகையை குறைத்துக் குடு ராபர்ட்.''

''லே.. உன் வாய் உன்னை எப்பவும் வாழ வைக்கும்லே.''

''தேங்க்யூ அஜீத். கண்ணதாசன் இதையே எப்படிச் சொல்லியிருக்கார் தெரியுமா?''

''இன்னொரு தரம் தெரியுமான்னு கேட்டால் வாயிலேயே போட்டு விடுவேன்ல.''

''சரி.. சரி.. முறைக்காதே. கண்ணதாசன் என்ன சொல்லியிருக்கார்ன்னா பார்வை ஒன்றே போதுமே... பல்லாயிரம் சொல் வேண்டுமா..'ன்னு சொல்லியிருக்கார்.''

''இதையெல்லாம் எப்பலே நீ யோசிப்பே...''

''இதுக்குன்னு ரூம் போட்டா யோசிப்பாங்க? எல்லாம் தானா வருவதுதான்.''

''என்ன ஒரு தன்னடக்கம்லே உனக்கு?''

''என்னைக் கவனிப்பதை விட்டு விட்டு அவனைக் கவனி.''

''என்னலே இது.. பார்க்கிறான்.. பார்க்கிறான்.. பார்த்துக் கொண்டே நிற்கிறான்?''

''அவன் அப்படித்தான். கைகழுவ திறந்த குழாயை மூடியிருக்கிறானான்னு பாரு.''

''மூடவில்லை. தண்ணீர் கொட்டிக் கொண்டிருக் கிறது.''

''அவளைப் பார்த்தால் இவன் இப்படித்தான் ஆகிப் போகிறான்.''

''இதுக்கு என்னலே பண்ணுவது?''

''காதல் ஒரு கொடிய நோய் அஜீத். இந்த நோய்க்கு மருந்து இந்த நோய்தான்...''

''அடித்தே கொன்று விடுவேன். புரிவது போல் பேசு...''

''என்னத்தைப் பேச... உனக்குத்தான் காதலைப் பற்றிப் பேசினால் புரியாதே.''

''அதுவே ஒரு கழுதை.. அது புரிந்து எனக்கு ஆகப் போகிறதென்னலே.. இப்ப அவன் கதையைப் பார்ப் போம்.''

''என்னத்தைப் பார்க்கிறது? அவன் திரும்பி வரு கிறான்?''



''ஏன்லே..? அவள்தான் அவனை அப்படிப் பார்த் தாளே...''

''பார்க்கிறாள்தான். ஆனால் நம்ம பயல்தான் வாயைத் திறந்தால் முத்து உதிர்ந்து விடும்ன்னு வாயை இறுக மூடிக் கொண்டு திரும்பி வருகிறானே.''

''ஏன்லே பிரசாத்... இப்படி உட்காருலே.''

முகத்தில் ஆயிரம் கோடி சூரியன்கள் ஒளிர அஜீத்தின் அருகே அமர்ந்தான் பிரசாத்.

''என்ன அஜீத்.''

''ஏன்லே ஒரு மார்க்கமா விழிக்கிற?''

''ஒன்றுமில்லை...''

''ஒன்றுமில்லையா.. நீ கைகழுவப் போன இடத்தில் அவளும் வந்திருந்தாள். போல...''

''எவள்...''

''அந்தப் பொண்ணு பேரு என்னலே...''

அஜீத் அலெக்ஸிடம் வினவ பிரசாத் பதில் சொன் னான்.

''லேகா...''

''சொல்லும்போதே வாய் இனிக்குதாக்கும்.''

பிரசாத் பதில் சொல்லாமல் லேகா இருக்கும் திசையைப் பார்த்தான். அதே சமயம் அவளும் இவன் பக்கமாய் பார்த்தாள். அவளது பார்வை போகும் திசையை கவனிக்க சாராவும் ஆண்கள் பக்கம் பார்க்க ஆனந்த் தன் ஒரு விரலை தூக்கி நெற்றியில் வைத்தான். அவசரமாய் பார்வையைத் திருப்பிக் கொண்ட சாரா.

''உன்னால்தாண்டி...'' என்று லேகாவை கடிந்து கொண்டாள்.

''என்னாலா... எது என்னால் நடந்தது...'' பிரசாத்தின் பக்கமிருந்த பார்வையைத் திருப்பாமல் லேகா கேட்டாள்.

''அங்கே என்னடி பார்வை...''

சாரா எரிந்து விழ... அஜிதா 'களுக்'கென்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்..?''

''அவள் அங்கே பார்க்காமல் வேறு எங்கே பார்ப்பாள்? அங்கேதானே பிரசாத் உட்கார்ந்திருக்கிறான்.''

''ஓ.. கதை அப்படிப் போகுதா... ஏன் லேகா.. இப்போதுதானே அவனை வாஷ்பேஷின் பக்கத்தில் பார்த்தாய்...''

''இவள் மட்டுமா பார்த்தாள்? அவனும்தான் பார்த்தான்.''

''அப்போ பேச வேண்டியதுதானே...''

''எங்கே பேசுவது..? அவன் பேசினால்தானே...? அவன் பேசாமலே திரும்பிப் போய் விட்டான்...''

''என்னடி இது...?''

''சும்மாவும் போகவில்லை. இவளைப் பார்த்துக் கொண்டே போய் விட்டான்...''

''வெறும் லுக்தானா? அதற்கா இவள் இப்படி ஜெர்க் ஆகிறாள்?''

சாராவின் வார்த்தைகளில் பாதிக்கப்பட்ட லேகா முகம் சுளித்தாள்.



''பார்க்காமல்.. உன் ஆனந்தைப் போல விசிலடித்துக் கொண்டே பின்னால் வரச் சொல்கிறாயா?''

''என் ஆனந்தனா..? லேகா.. வேண்டாம்.''

''அப்போ.. நீயும் எங்களைப் பற்றிப் பேசாதே... எனக்கு பிரசாத்தின் தயக்கம்தான் பிடித்திருக்கிறது.''

லேகா கோபமாய் எழுந்து செல்ல.. மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

''ஹோட்டல்லே வெறிச்சுன்னு ஆகிவிட்டதடா..'' அலெக்ஸ் கவலைப்பட்டான்.

''கோழிப்பண்ணை காலியாகி விட்டது இல்ல.. அப்படித்தான் இருக்கும். நீ கிளம்பு.. ராபர்ட். இவனைக் கைத்தாங்கலா வீட்டுக்குக் கூப்பிட்டுப்போ.''

''கைத்தாங்கலாகவா.. எதற்கு அஜீத்...''

''கோழிகள் பறந்து விட்ட சோகத்தில் இருக்கானே...''

ராபர்ட்டும்.. பிரசாத்தும் சிரிக்க... அலெக்ஸின் முகத்தில் வெட்கம் சூழ்ந்தது... நண்பர்களிடமிருந்து விடை பெற்று.. வீட்டுக்குச் சென்றான் பிரசாத்.

# 8



**கா**லுக்கு ஒரு தலையணை.. தலைக்கு ஒன்று.. கைக்கு ஒன்றாக.. கட்டில் பூராவும் தலையணைகளை பரத்தி விட்டு தூங்கிக் கொண்டிருந்த பிரசாத்தை..

''டேய்.. பிரசாத் குட்டி.. எழுந்திருடா செல்லம்.. என் தங்கமில்லை.'' என்று கொஞ்சியவாறு எழுப்பினாள் ராதா.

கண் விழித்த பிரசாத் எரிச்சல் பட்டான்.

''ஏன் மம்மி இப்படி இர்ரிடேட் பண்றீங்க?''

''நான் என்னடா பண்ணுகிறேன்?''

''இன்னும் சின்னக் குழந்தைபோல் என்னை ட்ரீட் பண்ணாதீர்கள்ன்னு எத்தனை தடவைதான் சொல்வது. நான் எம்.பி.பி.எஸ். மூன்றாவது வருஷம் படிக்கிறேன்ம்மா.''

''ஏண்டா.. பெற்ற பிள்ளைக்கு நூறு வயதானாலும் அவனுடைய அம்மாவிற்கு அவன் குழந்தைதானேடா...''

''இதையே எத்தனை தரம் சொல்வீங்கம்மா.''

''சரி.. சரி.. காலையிலேயே கோபமா? கொஞ்சுவது ஒரு தப்பாடா..? காபியைக் குடி.''

''எனக்கு வயதாகி விட்டதும்மா.''

''இருபது முடிந்து இருபத்தி ஒன்றாகிறது.. இது ஒரு வயசாடா?''

''நீங்க திருந்தவே மாட்டீங்கம்மா..''

''என்னவோ நான் தப்பு பண்ணி விட்டது போல பேசுகிறாயே... சரி.. சரி.. முறைக்காதே... எழுந்து வா. டாடி உனக்காக புது டிரெஸ் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். வந்து பாரு..''

''யாரைக் கேட்டு வாங்கிக் கொண்டு வந்தார்?''

''ஏன்டா.. உனக்கு புது டிரஸ் எடுக்க அவர் யாரைக் கேட்கணும்?''



''என்னைக் கேட்கணும்...''

''எதுக்குடா..?''

''எனக்குப் பிடிக்க வேண்டாமா?''

''அதற்குத்தான் இந்தக் கோபமா? பிடிச்சிருக்கான்னு பாரு. பிடிக்கலைன்னா வேறு மாத்திக்கலாம்.''

''அதை முதலிலேயே செய்யலாமில்லையா?''

''என்னதான் செய்திருக்கணும்னு நீ நினைக்கிற... உன்னைக் கடைக்குக் கூப்பிட்டுக் கொண்டு போய் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டுமா?''

''அங்கே போனால் மட்டும் என்னை செலக்ட் பண்ண விட்டு விடுவீர்களா? நீங்களும்... டாடியும்.. கலந்துரையாடி.. ஒரு டிரெஸ்ஸை செலக்ட் பண்ணி விட்டு.. பிடித்திருக்கிறதான்னு கடைசியில் என்னைக் கேட்பீர்கள்...''

''உனக்குப் பிடிக்கவில்லையென்றால் சொல்ல வேண்டியது தானே.''

''எப்படிச் சொல்வது.. கடையில் எல்லோர் முன்னாலும் உங்களை விட்டுக் கொடுப்பது போல் ஆகாதா?''

''ஓ.கே... ஓ.கே. நான் இதற்கு ஒரு வழி பண்ணுகிறேன்.. நீ எழுந்து வா.''

பிரசாத் எழுந்து பாத்ரூமிற்குள் சென்று கதவைப் பூட்டிக் கொண்டான். ராதா யோசனையுடன்.. மாடியிறங்கினாள்.

''ராதா.. பிரசாத் எழுந்து விட்டானா...?''

''குளிக்கப் போயிருக்கிறான்...''

''நான் புது டிரெஸ் எடுத்து வந்திருப்பதைச் சொன்னாயா?''

''சொன்னேன்...''

ராதா விட்டேற்றியாய் பதில் சொல்லிவிட்டு சமைய லறைக்குள் புகுந்தாள். ஜனார்த்தனம் அவளைப் பின் தொடர்ந்தார்...

''ஏண்டி என்னவோ போல் பதில் சொல்கிறாய்?''

''வேறு எப்படிச் சொல்ல...?''

''நான் என்னவோ தப்பு செய்து விட்டதுபோல் முகத்தை தூக்கி வைத்துக் கொள்கிறாயே.''

''அவனிடம் பணத்தைக் கொடுத்தால் அவனுக்கு பிடித்த டிரஸ்ஸை அவன் எடுத்துக் கொள்ள மாட் டானா?''

''அவன் பாட்டுக்கு எதையாவது.. கர்ரே.. புர்ரேன்னு எடுத்து மாட்டிக் கொண்டு வருவான். டீசன்ட் லுக் வேண்டாமாடி.''

''நீங்க லுக் விடுவதற்காக அவன் டிரெஸ் எடுத்துக் கணுமா?''

''இப்ப நீ என்னாங்கிற... அப்படியெல்லாம் அவன் இஷ்டத்துக்கு ஆட முடியாது. சொல்லிட்டேன்.. எல் லாம் நீ கொடுக்கிற செல்லம்டி.. அவன் என்ன சொன் னாலும் தலையைத் தலையை ஆட்டு.. அவன் கெட்டுப் போவதே உன்னால்தாண்டி...''

''இதோ பாருங்க.. காலங்கார்த்தாலே என்னிடம் உறண்டை இழுக்காதீங்க.. சொல்லிட்டேன். இப்ப அவன் என்ன பண்ணிட்டான்னு இந்தக் குதி குதிக் கிறீங்க... கையில் பிரம்பு வைத்திருப்பது போல் எந்நேரம் பார்த்தாலும் மிரட்டிக் கொண்டிருக்கும் வேலையை



என்னிடம் மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளை யிடம் வேண்டாம்.''

''உன்னை என்னடி மிரட்டி வைத்திருக்கிறேன்.''

''இப்பக் கேட்கறீங்க பாருங்க. இது கேள்வி.. உங் களுக்குப் பயந்து உங்கள் முன்னால் என்னால் இயல் பாய் பேசிச் சிரிக்க முடிவதில்லை... என்ன பேசினாலும்.. அதற்கு நீங்கள் என்ன சொல்வீர்களோன்னு யோசித்துப் பேச வேண்டியிருக்கிறது... அப்படி பயந்து பயந்து பேசினாலும்... நீ இப்படி பேசியிருக்கக் கூடாது ராதான்னு கமென்ட் பண்ணுங்க...''

''இப்ப என்னதான் சொல்ல வருகிறாய்?''

''இந்த பயம் என்னோடு போகட்டும். தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன். அவனுடைய இன்டிஜுவா லிட்டியையும் நாம் கன்ஸிடர் பண்ணனும்.''

ராதா.. அதற்கு மேல் பேசாமல் சமையலில் ஆழ்ந்து விட்டாள்.

ஜனார்த்தனம் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே நின்றிருந்தார். டைனிங் ஹாலில் பிரசாத்தின் குரல் கேட்டது.

''அம்மா.. டிபன் ரெடியா.. காலேஜுக்கு நேரமாச்சு...''

மகனின் குரல் கேட்டதும் ஜனார்த்தனத்தின் முகம் மாறியது. அவசரமாய் டைனிங் ஹாலுக்குச் சென்று.. அங்கிருந்தபடி குரல் கொடுத்தார்.

''ராதா.. பிள்ளை ரெடியாகி விட்டான். இன்னுமா நீ டிபனை ரெடி பண்ணவில்லை? அவனுக்கு நேரமாகி விட்டதாம்.''

அவசரத்தில் சுடு சாம்பாரை காலில் ஊற்றிக் கொள்ளப் போன ராதா நிதானித்தாள்.

'ஊஹூம். இந்த மனுசனுக்குப் பயந்து ஓடி ஓடி வேலை செய்தால் விழுந்து கொள்வேன். இந்நேரம் வரைக்கும் மகன் மேல் புகார் படித்து விட்டு... மகனைக் கண்டதும் ஓடி ஒட்டிக் கொள்கிறார். அவன் ஜெயித்தால் என் பிள்ளையென்பார். ஏதேனும் சுணங்கி விட்டால்.. உன் பிள்ளை.. உன்னால்தான் கெட்டுப் போகிறேன் என்பார். இந்த வீட்டில் இவர் அடிக்கிற மேளத்திற்கு ஆடி ஆடியே ஓய்ந்து விட்டேன்...'

நிதானமாய் பாத்திரங்களை டைனிங் டேபிளில் கொண்டு போய் அடுக்கினாள் ராதா.

''ஏண்டி லேட்டா செய்யறே. பிள்ளைக்குப் பசிக் காதா...''

'எனக்குத் தெரியும்...' என்ற முகபாவனையுடன் பிரசாத்தின் முன் தட்டை வைத்து பரிமாற ஆரம்பித்தாள் ராதா.

ஜனார்த்தனம் மகனிடம் மென்மையான முகபாவனை யுடன்,

''உனக்கு டிரஸ் எடுத்து வைத்திருக்கிறேன். அம்மா சொன்னாளா?'' என்று கேட்டார்.

''சொன்னாங்க டாடி..'' தன்மையாக பதில் சொன்னான் பிரசாத்.

''இதோ பார்...'' என்று டைனிங் டேபிளின் மீது இருந்த அட்டைப் பெட்டியை பிரித்துக் காட்டினார் ஜனார்த் தனம்.



''பிடித்திருக்கிறதா..'' அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே அவர் கேட்க,

''பென்டாஸ்டிக் டாடி...'' என்று துணியைப் பார்க் காமலே பதில் சொன்னான் பிரசாத்.

'பார்த்தாயா...' என்று மனைவியிடம் விழிகளால் வினவியபடி வெளியே சென்று விட்டார் ஜனார்த்தனம்.

''உண்மையிலேயே உனக்கு இந்த டிரஸ் பிடித் திருக்காடா...?''

''பார்த்துத்தான் சொல்லனும்...''

''இப்போது உன் டாடியிடம் பிடித்திருக்குன்னு சொன்னாயே...''

''பார்க்காமலே சொன்னேன் மம்மி.''

''ஏன்டா...''

''அவர் வாங்கி வந்ததைப் பிடிக்கவில்லையென்று எப்படிச் சொல்வது?''

''என்னிடம் மட்டும் சொல்கிறாயே...''

''அப்படித்தான் சொல்லுவேன்.''

''அதையே அவரிடம் நேரில் சொல்ல வேண்டியது தானே.''

''அது எப்படிம்மா...'' என்றபடி அவன் எழுந்து சென்று விட்டான்.

'நல்ல தகப்பனும்... மகனும்.. எனக்குன்னு வந்து வாய்ச்சீங்க... நீங்க இரண்டு பேரும் ஒற்றுமையாக பேசிக் கொள்வீங்க.. நான் மட்டும் தகப்பனுக்காக மகனிடமும்... மகனுக்காக தகப்பனிடமும்.. பாட்டு வாங்க வேண்டும்.. மத்தளம் போல் இரண்டு பேரும் என்னைப் பந்தாடு கிறீர்களே...'

ராதா மௌனமாக மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

பிரசாத் கல்லூரிக்குள் தன் வாகனத்தை செலுத்திக் கொண்டு போகும் போது வழியில் நடந்து கொண்டிருந்த லேகா தென்பட்டாள்.... லேசாக ஹாரனை அழுத்தினான்.. அவள் திரும்பிப் பார்த்தாள். அவளைப் பார்த்தவாறே வண்டியை விட்டவன்... அவனது தோழர்களுக்கு அருகே சென்று வண்டியை நிறுத்தி இறங்கினான்.

''என்னடா மாப்பிள்ளை... வழியில் நம்ம தங்கச்சிக்கு சிக்னல் கொடுத்தே போல இருக்கே...'' கண்களில் விசமம் வழிய வினவினான் சதிஷ்.

''நம்ம தங்கச்சியா...?''

''ஏண்லே.. கதையை மாத்தறே.. பிரசாத்.. அவனுக்கு மட்டும்தான் அவள் தங்கச்சி.. உனக்கு இல்லே..''

''கிண்டல் பண்றே பார்த்தியா...''

''விடுங்கலே.. நாமெல்லாம் வெற்றிகரமாய் மூன்றாம் வருசத்தில் காலடி எடுத்து வைத்து விட்டோம். இப்பப் போய் சின்னப்புள்ளைத் தனமா பேசிக்கிட்டு.. இருக்காதீங்க...''

''நாங்க பேசுவது இருக்கட்டும்.. முதலில் அவன் பேசினானான்னு கேளு...''

''அவன் பேசாவிட்டால் என்ன... அவன் சார்பா.. நாம் பேசிவிட்டால் போகிறது.. என்னலே பிரசாத்.. நான் போய் பேசிப் பார்க்கட்டுமா?''

பிரசாத் திகிலடைந்து விட்டான்.



'இவனைக் கண்டாலே பெண்களுக்கு ஆகாது... இவன் போய் பேசி.. பிரசாத்தின் காதல் பயிர் வளர்வதா.. அது நடக்கிற காரியமா?'

''அஜீத் குட்டி.. உனக்கு கோடி கும்பிடு.. நீ இதில் தலை கொடுக்காதே...''

''இவன் ஏன்லே... இப்படிப் பயப்படுகிறான்... நான் தூது போகிறேன்னுதானே சொன்னேன்? காதலை கலைத்து விடப் போகிறேன்னா சொன்னேன்...''

''உன்னைக் கண்டாலே அவன் காதல் கலைந்து விடுமோ என்ற பயம் தான்...''

''ஏன்லே ஆனந்த்.... நீயும் இப்படிச் சொல்லலாமா...''

''வேண்டாம் அஜீத்... நடிகர் திலகத்தை விட்டுவிடு... பிரசாத் காதலில் ஜெயிக்கட்டும்.. அதற்கு உதவி பண்ணு...''

''நான்தான் தூது போகிறேன்னு சொல்கிறேனே...''

''அப்படி எதுவும் செய்து விடாதே... அதுதான் அவனுக்கு நீ செய்யும் மிகப்பெரிய உதவி...''

''ஏன்லே... காதலுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராதுன்னு முடிவே பண்ணிட்டிங்களா....''

''உனக்கும் நம் கிளாஸ் பொண்ணுகளுக்கும் தான் சரிப்பட்டு வராது...''

''என்னலே பிரசாத்.. உன் காதலை வளர்க்க என்னை உதவி செய்ய விடாமல் என் கைகளை கட்டிப் போட்டு விட்டாயே...''

''நீ போகாவிட்டால் என்ன நான் போகிறேன்...'' என்று எழுந்தான் ஸ்ரீதரன்.

ஸ்ரீதரன் பிரசாத் தடுக்கத் தடுக்க லேகாவிடம் போய் விட்டான். தனியே நடந்து கொண்டிருந்தவளின் அருகே போய்,

''எக்ஸ்யூஸ் மி...'' என்றான்.

''யெஸ்...'' என்றாள் அவள் மிடுக்குடன்.

'ஆமாம்... இவள் பெரிய பிரைம் மினிஸ்டர்.. யெஸ் சொல்கிறாள்...' என்று மனதிற்குள் தாளித்தபடி.

''உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்..'' என்றான் ஸ்ரீதரன்.

''சொல்லு...''

''நம் கிளாஸில் ஒருவன் உன்னை லவ் பண்ணு கிறான்...''

''யார்... பிரசாத்தா...''

''பரவாயில்லை கண்டுபிடித்து விட்டாய்.. எனக்கு விளக்கம் சொல்கிற வேலை மிச்சம்...''

''இப்போ அதற்கு என்ன?''

ஸ்ரீதரன் திகைத்தான். இவள் என்ன இவ்வளவு சாதா ரணமாகச் சொல்கிறாள்.

''லேகா.. அவன் உன்னைக் காதலிக்கிறான்...''

''முதலில் அவனை டாக்டர் ஆகச் சொல்லு...''

அவள் போய் விட்டாள்... ஸ்ரீதரன் திரும்பி வந்து விவரம் சொன்னான். பிரசாத் யோசனையில் ஆழ்ந்தான்.

'அவள் சொல்வதற்கு என்ன அர்த்தம்...'

''அவள் நல்ல பெண் என்று அர்த்தம்...'' என்றாள் ராதா.



''என்னம்மா இப்படிச் சொல்கிறீர்கள்..? அப்போ.. நான் நல்ல பையன் இல்லையா?'' பிரசாத் முகம் வாடி னான்.

''நீயும் நல்ல பையன் தாண்டா... இல்லாவிட்டால்... சைட் அடிப்பது முதற்கொண்டு... லவ் பண்ணுவது வரை என்னிடம் எப்படி ஷேர் பண்ணிக் கொள்வாய்? நீ நல்ல மகனாக இருப்பதால்தானே... எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்கிறாய்... உன்னை விட அவள் உயர்த் தின்னு நான் சொல்லவில்லை பிரசாத்... அவள் உனக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறாள்... அதனால் நல்ல பெண் என்றேன்...''

''அவள் சொல்லாவிட்டால் நான் படிக்கமாட்டேனா?''

''அவள் சொன்ன பின்பு... இன்னும் ஜெயிக்க வேண டும் என்ற வெறி உன் மனதில் வருமில்லையா? நீ இப்போது படிப்பதை விட நன்றாகப் படிப்பாய் தானே...''

ராதா சொன்னதுதான் உண்மையாக இருந்தது.. லேகாவின் வாய்மொழி... பிரசாத்தை இரவும்... பகலும் படிக்க வைத்தது. அந்த செமஸ்டரில் அவன் எப் போதையும் விட அதிக மதிப்பெண்கள் வாங்கினான்... ராதாவின் புன்முறுவல்.. 'இப்போது என்ன சொல் கிறாய்..' என்று பிரசாத்தைப் பார்த்துக் கேட்டது.

''எப்படி மாம்... இதைக் கண்டுபிடிச்சீங்க...''

''ரிஸர்ச் பண்ணினேன்டா...''

தாயும் மகனும் சிரித்துக் கொண்டிருக்கையில்,

''என்ன விசயம்? சிரிச்சுக்கிட்டு இருக்கீங்க.. எனக்கும் சொன்னால் நானும் சிரிக்க மாட்டேனா?'' என்றபடி ஜனார்த்தனம் அங்கே வந்தார்.

''என்ன பிரசாத்.. உன் டாடிகிட்ட சொல்லிவிடவா?''

''வேண்டாம்மா.. ப்ளீஸ்...''

''இல்லை... சொல்லுவேன்... காய்கறி விலையெல்லாம் அதிகமாக இருக்கிறது.. எந்தக் காயின் பெயரையும் சொல்லவே பயமாக இருக்கிறது. உன் டாடியிடம் விசயத்தைச் சொன்னால்.. ஊரிலிருக்கிற காய்கறி பெயரையெல்லாம் சொல்லித் திட்டுவார்.. அப்படி யாவது காய்கறிகளின் பெயரைக் கேட்கலாம்... ஒரு மணி நேரம்... இரண்டு மணி நேரம் கூட இல்லை... விடிய விடியத் திட்டுவார்.. இன்றைக்கு ஏகாதசி ஆகிவிடும்.. சொல்லவா?''

அதற்குள் ஜனார்த்தனம் அவள் அருகே உட்கார்ந்து விட்டார்.

''என்னடி...''

''இல்லைங்க.. பிரசாத்தின் காலேஜில் ஒரு கலாட்டா நடந்ததாம்... அதைச் சொன்னான்.. சிரித்துக் கொண்டிருந்தோம்.''

''காலேஜ்ன்னா... கலாட்டா நடக்கத்தான் செய்யும் அதற்கா இவ்வளவு சிரிப்பு?''

''ஆமாம்...'' என்றபடி ராதா எழுந்து போய்விட்டாள்.

'அவ்வளவுதானா..?' நம்பாமல் அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தார் ஜனார்த்தனம்.

''அப்புறம் பிரசாத்... உன் படிப்பெல்லாம் எப்படி போய்கிட்டிருக்கு...''

''ஸோ.. குட்.. டாடி...''

பிரசாத்தும் நழுவிவிட்டான். ஜனார்த்தனத்தின் மனதில் சன்னமாய் பொறாமை எழுந்தது. அன்னையிடம்



காட்டும் நெருக்கத்தை தன்னிடமும் மகன் காட்ட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு அவர் நெஞ்சில் எழுந்தது... இயல்பாக அவன் தன்னிடம் பேச யோசித்து மரியாதை காட்டுவது.. அவருக்கு என்னவோ போல் இருந்தது... அவர் எழுந்து மனைவியைத் தேடிப் போனார்.

அவள் சப்பாத்திக்கு மாவைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

''ராதா...''

''ம்ம்...''

''அவன் என்னடி சொன்னான்...''

''நான்தான் ஒன்றுமில்லைன்னு சொன்னேனில்ல...''

''ஊஹூம்... ஏதோ இருக்கிறது...''

''ஆமாம் புதையல் இருக்கிறது... வேலையைக் கெடுக்காமல் எழுந்து போங்க...''

ராதா எரிந்து விழுந்து விட்டு வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.. ஜனார்த்தனம்... முணுமுணுத்துக் கொண்டே வாசல் பக்கம் சென்றார்.

# 9



பிரசாத் ராபர்ட்டின் வீட்டிற்குப் போன போது ராபர்ட் வீட்டில் இல்லை. அலெக்ஸ் மட்டும் இருந்தான்.

''ராபர்ட் எங்கேடா..''

''சீனியரைப் பார்க்கப் போயிருக்கிறான்...''

''இவன் ஏண்டா.. அங்கே போகணும்..''

''படிப்பாளி... வேறு எதற்குப் போவான்? பாடத்தில் சந்தேகம் கேட்கப் போயிருக்கிறான்...''

''உனக்குச் சந்தேகம் வரவில்லையா?''

''நான் தெளிவான ஆள்...''

''அதுதான் தெரியுமே.. இப்ப எங்கே கிளம்பிக்கிட்டு இருக்கிற?''

''உஷ்... ராபர்ட்டிடம் சொல்லிவிடாதே...''

அலெக்ஸ் வாயில் விரலை வைத்து எச்சரித்தான்.. பிரசாத் மர்மப்படம் பார்க்கும் பாவனையில் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.

''என்னடா..?''

''நான் இப்போது முக்கியமான ஒரு இடத்திறகு போகப் போகிறேன்.''

''எங்கேடா..''

''கூடவா.. தெரியும்.. அதுவரை விசயம் சஸ்பென்ஸ்...''

அலெக்ஸின் பைக்கில் அவனுக்கு பின்னால் பிரசாத் தொற்றிக் கொண்டான்.

'எங்கே கூப்பிட்டுக் கொண்டு போகிறான்..' எதிர் பார்ப்புடன் அலெக்ஸ் வண்டியை நிறுத்தியவுடன் இறங்கி அந்தக் கடையைப் பார்த்தவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

அது நாய்கள் விற்கும் கடை... பிரசாத் அலெக்ஸை முறைத்தான்.



''ஏண்டா.. இங்கே வருவதற்கா அவ்வளவு பில்ட் அப் கொடுத்தாய்...''

''இது என் நீண்ட நாள் கனவு பிரசாத்...''

''நாய் வாங்கப் போவதை ராபர்ட்டிடம் சொல்லிவிட் டாயா?''

''மெதுவாய் சொல்லிக் கொள்ளலாம். இப்போதே சொல்லணும்னு ஒன்றும் கட்டாயமில்லை...''

''டேய்.. அவனும் நீயும் ஒரே வீட்டில் இருக்கிறீங் கடா..''

''ஸோ வாட்..? ஆனால் எனக்குப் பசித்தால்தானே நான் சாப்பிட முடியும்...''

''இப்போது என்னதான் செய்யப் போகிறாய்...''

''எனக்குப் பிடித்த நாயை வாங்கப் போகிறேன்.''

''வாங்கி..''

''வளர்க்கப் போகிறேன்..''

''ராபர்ட்டுக்குத் தெரியாமல் எப்படி வளர்ப்பாய்..?''

''தெரியும்போது தானாய் தெரியட்டும்..''

அலெக்ஸ்.. புஸுபுஸுவென்று வெள்ளை முடியுடன் இருந்த நாயை வாங்கிக் கொண்டு வந்தபோது பிரசாத் துக்கும் அதன்மேல் பிரியம் வந்தது... அவனுக்கும் நாய் வளர்ப்பதில் ஆர்வம் உண்டு.. ஆனால் அவனுடைய அம்மா ராதாவிற்கு நாயைக் கண்டாலே பயம்...

நாய் வளர்ப்பை... தாய்க்காக தள்ளிப்போட்டுக் கொண்டு வரும் பிரசாத்.. அலெக்ஸ் காண்பித்த நாயின் 'லொள்... லொள்..' என்ற குரைப்பினால் வசீகரிக்கப் பட்டான்.

''ஹௌ ஸ்வீட்...''

''உனக்கும் பிடித்திருக்கிறதா?''

''எனக்கு எப்போதுமே பிடிக்கும்... அம்மாவுக்குத்தான் பிடிக்காது...''

''ராபர்ட்டுக்கு பிடிக்காமலிருப்பது போலவா?''

''யெஸ்... இதை எப்படி அவன் பார்வையிலிருந்து மறைக்கப் போகிறாய்?''

''பாரேன்..''

சின்னதான அந்த நாய்குட்டி.. அலெக்ஸின் இதமான அணைப்பில் அமைதியாக கூட வந்தது.. வீடு வந்ததும்.. அவசரமாய் இறங்கி மூடியிருந்த வாசல் கதவைப் பார்த்த அலெக்ஸ்... நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

''அப்பாடா.. அவன் இன்னும் வரவில்லை.''

உள்ளே போனதும் தயாராய் இருந்த மரப்பெட்டியை எடுத்து.. நாயை உள்ளே விட்டான்... சமையலறைக்குப் போய் சிறு கிண்ணத்தில் பால் கொண்டு வந்து வைத்தான்.. அது தன் சின்ன வாயில் சப்பிக் குடித்தது.

சற்று நேரம் பிரசாத்தும்.. அலெக்ஸும் நாய்குட்டியுடன் விளையாடி முடித்தார்கள்.. வாசலில் பைக் சத்தம் கேட்டது.

அலெக்ஸ் பாய்ந்து நாயைத் தூக்கி மரப்பெட்டியில் வைத்து மறைத்தான்.

''அலெக்ஸ்... வேர் ஆர் யு...'' என்றபடி உள்ளே வந்த ராபர்ட் திருதிருவென விழித்த பிரசாத்தைப் பார்த்ததும் சந்தேகமாய்,

''என்னடா...?'' என்று வினவினான்.

''ஒன்றுமில்லை...''



''ஒன்றுமில்லாததற்கு நீ இப்படி விழிக்க மாட்டாயே..''

அலெக்ஸ் பிரசாத்தை விழிகளால் எச்சரித்தபடி,

''ஏன் அவனைத் தூண்டித் துருவுகிறாய் ராபர்ட்?'' என்றான்.

''காரணமாகத்தான்.. நான் இல்லாதபோது இங்கே ஏதோ வேலை செய்திருக்கீங்க... அது என்ன?''

''ஏன் எப்போதுமே என்னைச் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறாய் ராபர்ட்?''

''உன்னை நம்ப முடியாதுடா..''

''கொஞ்சமாவது நம்பிப் பழகு.. இன்னும் மிச்சம் ஒன்றரை வருசம் நீயும் நானும் ஒரே வீட்டில் குப்பை கொட்டியாகணுமே..''

''அடச்சீ.. பிரண்ட் போல பேசுடா...''

''எதிரி போல் நீதான் பார்க்கிறாய்...''

''நீ செய்து வைக்கும் வேலைகள் அப்படி...''

''அப்படி நான் என்ன செய்து விட்டேன் ராபர்ட்...''

அலெக்ஸ் அறியாப்பிள்ளை போல் கண்களைக் கொட்ட.. சன்னமாய் நாயின் குரைப்பு ஒலி கேட்டது... ராபர்ட்டின் காதுகள் விடைத்துக் கொண்டன.

''ஏதோ சத்தம் கேட்டது போல் இருக்கிறதே...''

''இல்லையே... எனக்கு எதுவும் கேட்கவில்லை...''

''பிரசாத் உனக்கு கேட்கிறதா?''

பிரசாத் தர்ம சங்கடமடைந்தான்.. ராபர்ட் அவன் மதிக்கும் நண்பன்... அவனை மதிக்கும் நண்பன்.. அவனிடம் எப்படிப் பொய் சொல்வது...?

எனவே உண்மையைச் சொல்லி விட எண்ணி வாய் திறந்தான்.

''பிரசாத்... உன் அம்மா வரச்சொன்னாங்கன்னு அப்போதே வீட்டுக்கு கிளம்பினாயே.. இன்னுமா போக வில்லை...''

''அலெக்ஸ்.. ஏன் பிரசாத்தை பேச விடாமல் தடுக்கிறாய்?''

''யார் தடுப்பது..? உனக்கு வேலையிருக்கிறது.. அவனை அவனுடைய அம்மா... போன் மேல் போன் போட்டு வரச் சொல்கிறாங்க.. அதைத்தான் நான் சொன்னேன். வேறு ஒன்றுமில்லை..''

''எனக்கென்ன வேலை இருக்கிறது...?''

''உன் புக் ஷெல்ப் சரிந்து கிடக்கிறது... இங்க் பாட்டில் வேறு கொட்டிக் கிடக்கிறது...''

''ஐயையோ.. என் கால்குலேசன் நோட்டுகள் அங்கே இருந்ததே...''

ராபர்ட் பதறி உள்ளே போக.. அலெக்ஸ் பிரசாத்தை கிளப்பினான்.

''கிளம்புடா.. உண்மை விளம்பி.. நீயிருந்தால் அவனிடம் என்னை இப்போதே மாட்டி வைத்து விடுவாய்.''

''அவனிடம் எப்படிடா பொய் சொல்வது?''

''அதை நான் சொல்லிக் கொள்ளுகிறேன். நீ போய் விட்டு வா...''

ராபர்ட் மீண்டும் வாசலுக்கு வந்த போது பிரசாத் வீட்டுக்கு கிளம்பி போய் விட்டிருந்தான்.

''என் புக் ஷெல்ப் ஒழுங்காகத்தானே இருக்கிறது...?''



''பார்த்தாயா.. அதற்கு நீ எனக்கு தேங்க்ஸ் சொல்ல வேண்டாமா?''

''உனக்கு எதற்குடா தேங்க்ஸ் சொல்ல வேண்டும்?''

''நான்தான் உன் ஷெல்பை சரி பண்ணி வைத்தேன்...''

''பிரசாத் எங்கே..?''

''அவன் வீட்டுக்கு அவன் போய் விட்டான்... நீ வா... நம் வீட்டிற்குள் போகலாம்..''

''இன்றைக்கு என்னவோ நீ சரியில்லை அலெக்ஸ்...''

''அப்போ.. இத்தனை நாள் சரியாக இருந்தேன் என்கிறாயா?''

''அப்படிப்பட்ட ஓர் வார்த்தை என் வாயிலிருந்து வருமாடா?''

''அதுதானே பார்த்தேன்...''

''எப்போதும் சரியில்லாத நீ.. இன்றைக்கு அதிகமா சரியில்லை...''

அலெக்ஸ் கடுப்பாகிப் போனான்.

''ஏண்டா... எப்போது பார்த்தாலும் என்னை சந்தேகப்பட்டுக் கொண்டே இருக்கிறாய்..?''

அவன் குரல் உயர்த்திப் பேச.. ராபர்ட் அவசரமாய் அக்கம் பக்கம் பார்த்தான்.

''அடச்சீ... வீட்டுக்குள் வாடா... எப்போது பார்த்தாலும் வில்லங்கமாகத்தான் பேசுவாயா? உன் கூட குடித்தனம் பண்ணுக்கிறேன் பாரு... என்னைச் சொல்லணும்...''

''இப்போது நீ தான் வில்லங்கமாகப் பேசுகிறாய்..''

''உன்னோடு சேர்ந்து விட்டேனில்லையா? உன்னைப் போல் நானும் பேசித் தொலைக்கிறேன்...''

ராபர்ட் இரவு தூங்கிக் கொண்டிருந்த போது.. அவனது கைகளில் புஸுபுஸுவென்ற முடி பட்டது.. பயந்து போய் விழித்துக் கொண்ட ராபர்ட் அலறி எழுந்து விளக்கைப் போட்டான்.

அதற்குள் ராபர்ட்டின் கைகளின் அருகே சயனித் திருந்த நாய் குட்டியைத் தூக்கி மரப்பெட்டிக்குள் வைத்து விட்ட அலெக்ஸ்...

''என்னடா..'' என்று கண்ணைக் கசக்கினான்.

''அலெக்ஸ்.. ஒரு பயங்கரக் கனவுடா...''

''நீ கண்டால் அது பயங்கரக் கனவாகத்தான் இருக் கும்...''

''ஏன்... அதை இப்படியும் சொல்லலாம்.. உன் கூட இருந்தால் பயங்கரக் கனவுதான் வரும்..''

''இதைச் சொல்லத்தான் இந்த நடுநிசியில் என்னை எழுப்பினாயா?''

''டேய்... புஸு... புஸுவென்ற முடியுடன்.. நாலு கைகள் இருக்கும் ராட்சசன் என் பக்கத்தில் நிற்பது போல் கனவு கண்டேன்டா...''

''அது நாலு கையாக இருக்காது ராபர்ட்... நாலு காலாக இருக்கும்...''

''என்னது...''

ராபர்ட் புரியாமல் விழிக்க அலெக்ஸ் சுதாரித்துக் கொண்டான்.

''கனவில் கை எது... கால் எது என்று தெரியுமாடா... பேசாமல் படுத்துத் தூங்கு.. எனக்குத் தூக்கம் வருகிறது... ஹாவ்..''



கொட்டாவி விட்டபடி அலெக்ஸ் அவன் ரூமிற்கு போய் விட.. ராபர்ட்டினால் நிம்மதியாக படுத்துத் தூங்க முடியவில்லை... அடுத்த அறைக்குப் போய் அலெக்ஸை எழுப்பினான்.

''என்னடா..'' அலெக்ஸின் கண்கள் நாய்குட்டி இருந்த மரப்பெட்டியைப் பார்த்தது.. அது முன்னங்கால்களைத் தூக்கி வெளியில் போட்டு குதிக்க முயற்சி பண்ணிக் கொண்டிருந்தது.

''பேசாமல் அடங்கி படுக்க மாட்ட...'' என்று நாய் குட்டியைப் பார்த்து அலெக்ஸ் சத்தம் போட்டான்.

''அடங்கி எப்படிடா படுப்பது..? கெட்ட கெட்ட கனவா வருதே...''

''உன்னை யாருடா சொன்னது?''

''என்கிட்ட சொல்லாமல் வேறு யாருகிட்ட சொன்னே...''

ராபர்ட் இன்னும் பயந்து விட்டான்... அலெக்ஸின் அதட்டல் கேட்ட நாய்குட்டி.. 'மாட்டேன்' என்பது போல் தலையை ஆட்டியது. அலெக்ஸ் படபடப்பாகி விட்டான்.

''என்னது.. மாட்டேன் என்கிறாயா? எழுந்து வந்தால் அடித்து விடுவேன்..''

''டேய் அலெக்ஸ்.. எதற்குடா.. என்னுடன் சண் டைக்கு வருகிறாய்?''

''உன் கூட நான் எப்போதுடா சண்டைக்கு வந்தேன்?''

''இப்போது அடித்து விடுவேன் என்றாயே..''

''ச்ச்ச்.. அது உன்னையில்லைடா..''

ராபர்ட் அலெக்ஸிற்கு என்னவாகி விட்டது என்ற கவலைக்குள்ளானான். அதே நேரத்தில் அலெக்ஸ்

சும்மா இருக்கமாட்டாமல் 'ச்ச்..' என்றதில் நாய் குட்டி உற்சாகமாகி வெளியே தாவத் தயாராகிவிட்டது.

''சொன்னால் கேட்கமாட்டாயா?''

''நீ என்னடா சொன்னாய்?''

''உன்னைச் சொல்லவில்லைடா..''

அலெக்ஸ் மரப்பெட்டியைப் பார்த்து முறைக்க.. நாய்குட்டி அவனது கோபத்தை புரிந்து கொண்டு உள்ளே தலையை இழுத்துக் கொண்டது.

ராபர்ட் மரப்பெட்டி இருக்கும் திசையை பார்த்துக் கொண்டிருந்த அலெக்ஸை பயத்தோடும்.. கவலை யோடும் பார்த்தான்.

பயங்கரக் கனவு வருகிறது என்ற பயத்துடன் இவனருகே படுக்க வந்தால்.. இவன் செய்கை அதை விட பயத்தைக் கொடுக்கிறதே...

அலெக்ஸின் அருகே படுத்துத் தூங்கும் எண்ணத்தைக் கை விட்டவனாய் அவனது அறையை விட்டு வெளியே வந்தான்.

''திரும்பவும் வம்பு பண்ணுகிறாயா?'' என்று அலெக்ஸ்.. வெளியே வர முயன்ற நாயைப் பார்த்துக் கத்திக் கொண்டிருக்க.. ராபர்ட் அவனது அறைக்கு ஓடி கட்டிலில் விழுந்து போர்வையால் முகத்தை மூடிக் கொண்டான்.

''ஏன்லே... ஏன் ஒரு மாதிரியாக இருக்கிற?''

இரவெல்லாம் தூக்கமில்லாமல் இருந்த ராபர்ட்டின் முகம் வீங்கி... கண்கள் சிவந்திருப்பதைப் பார்த்த அஜீத் வினவினான்.

''ஒன்றும் சரியில்லை அஜீத்.''



''என்னலே.. இது வாழ்வே மாயம் போல பிதற்றுகிறான்..''

''அவன் நைட் கனவு வருதுன்னு தூங்காமல் இருந்தான் அஜீத்.''

''இது ஒரு மேட்டராலே... அது கழுதை.. கனவு தானே.. வந்தால் வந்து விட்டுப் போகிறது..''

''அது கழுதைக் கனவு இல்லை அஜீத்.. ராட்சஸக் கனவு...''

''ஏன்லே.. உன்னைப் பெரிய படிப்பாளி.. அறிவாளின்னு நினைத்துக்கிட்டு இருக்கேன்... கடைசியில் நீ இவ்வளவு பெரிய பயந்தாங்குளியா?''

''உனக்கென்ன.. நீ வெளியில் இருக்கிறாய்.. தைரியமாய் பேசுகிறாய்... இவன் கூட இருந்து பார்த்தால் இல்ல தெரியும்...''

''ஏன்.. அலெக்ஸ் என்ன பண்ணினான்?''

''இவன் யார் கூடப் பேசுகிறான்னே தெரியவில்லைடா... சுவரைப் பார்த்துப் பேசுகிறான்.. மரப்பெட்டியைப் பார்த்துப் பேசுகிறான்...''

''என்னலே.. அலெக்ஸ்.. என்ன ஆச்சு உனக்கு?''

''அஜீத்... மரப்பெட்டியைப் பார்த்து பேசினேன் கிறதை நான் ஒத்துக் கொள்கிறேன்.. சுவரைப் பார்த்தெல்லாம் பேசவில்லை..''

அஜீத்... அலெக்ஸை விசித்திரமாகப் பார்த்தான்.

''ஏன்லே.. மரப்பெட்டியுடன் உனக்கு என்ன பேச்சு வார்த்தை வேண்டி இருக்கிறது...?''

''அது... பேசாமல் அடங்காது அஜீத்...''

அஜீத் ராபர்ட்டைப் பார்த்தான். ராபர்ட்டின் நிலை புரிந்தது.

''பாவம்தான் நீ... எப்போதிருந்து இவன் மரப்பெட்டியுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறான்?''

''நேற்று நைட்டிலிருந்துதான் அஜீத்...''

''நேற்று சாயந்திரம் நல்லாத்தானே இருந்தான்..''

''ம்ம்... ஒரு குறையும் இல்லை.. சாயங்காலம் வழக்கம்போல் பினாத்தினான்.. நடுராத்திரி.. நான் கனவு கண்டு எழுந்த பின்னால்தான் இவன் மரப்பெட்டியைப் பார்த்து பேச ஆரம்பித்தான்.. அஜீத்... அஜீத்...''

''என்னலே...''

''எங்கள் வீட்டில் எதுவும் இருக்குமோ..''

ராபர்ட் பயத்துடன் வினவிக் கொண்டிருக்கும் போது அலெக்ஸ் பதில் கூறினான்.

''அதுதான் இருக்கிறதே...''

ராபர்ட்டும் அஜீத்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''நான் சொன்னேனா இல்லையா?'' ராபர்ட் பயந்தான்.

''சேச்சே... ஆண்பிள்ளை பயப்படக்கூடாதுலே...''

''அது எப்படிடா பயப்படாமல் இருக்க முடியும்? பசியைப் போல பயமும்.. ஆண்களுக்கும்.. பெண்களுக்கும் பொதுவானது...''

''எதுக்கும் ஒரு நல்ல டாக்டர்கிட்ட காண்பித்து பார்க்கலாமா?''

அலெக்ஸை பார்த்தவாறு அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது அலெக்ஸ் ஊடே பேசினான்.

''யாரைக் காண்பிக்கப் போகிறீர்கள்...?''

''அது ஒன்றுமில்லை அலெக்ஸ்.. நீ பயப்படாதே..''



''நான் எதற்கு பயப்படப் போகிறேன்..?''

''அதுதானே... நீதான் என்னை பயப்பட வைத்துக் கொண்டிருக்கிறாயே.. நீ ஏன் பயப்படப் போகிறாய்?''

''என்னடா முணுமுணுக்கிறாய்..?''

''நத்திங்...''

''சரி.. நீ அஜீத்துடன் பேசிக் கொண்டிருந்து விட்டு மெதுவாக வா...''

''நீ எங்கேடா யாரோ அழைப்பது போல் ஓடுகிறாய்...''

''என்னை நம் வீட்டிலிருக்கும் மரப்பெட்டி அழைக்கிறது...''

# 10



அலெக்ஸ் விரைவாக வீட்டை நோக்கி ஓட.. ராபர்ட் பயத்துடன் அமர்ந்துவிட்டான்.. அஜீத்திற்கும்.. அலெக்ஸின் நடவடிக்கை பிடிபடவில்லை.

''இவன் ஒரு மார்க்கமாத்தான் இருக்கிறான் ராபர்ட். ஆனால் என்ன மார்க்கமென்று தான் பிடிபடவில்லை...''

''விடிய விடிய பேசிக் கொண்டிருக்கிறான் அஜீத்... எனக்கு எப்படி இருந்திருக்கும் நீயே சொல்லு...''

''புரியுது... புரியுது.. இதுக்கு ஒரு வழி பண்ணலாம் பொறுமையா இரு...''

அப்போது தூரத்தில் விசில் சத்தம் கேட்டது.

''வெள்ளைக்காரியும்.. நம்ம பயபுள்ளயும் வருகிறாங்க போல..'' என்றான் அஜீத்.

ராபர்ட் திரும்பிப் பார்த்தான். சாரா யாரோ ஒரு பெண் ணுடன் பேசிக் கொண்டே வர... ஆனந்த் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

''முதல் வருசம் ஆரம்பித்த டியுட்டி இது.. வருசம் மூன்றாகிப் போச்சு... விடாமல் செய்கிறான் பார்லே... இவன் போன ஜென்மத்தில் விக்கிரமாதித்தனாகப் பிறந்திருப்பானோ...''

''எதனால் அப்படிச் சொல்கிறாய் அஜீத்?''

''சற்றும் மனம் தளராமல் வேதாளத்தை பாலோ பண்ணிக் கொண்டிருக்கிறானே...''

அந்த நேரம் அவனைக் கடந்த... சாரா.. 'வேதாளம்' என்ற வார்த்தையைக் கேட்டதும் சுட்டெரிப்பது போல் அவனைப் பார்த்தாள்.

''அஜீத்... கன்ட்ரோல் யுவர் செல்ப்...'' என்றாள்.

அஜீத் குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டே...

''கன்ட்ரோல் ஆவாயா.. மாட்டாயா?'' என்றான். பின் தலை நிமிர்ந்து சாராவைப் பார்த்தான்.

''ஊஹூம்... கன்ட்ரோல் ஆகாதாம்..''. என்று சலிப்பாய் கூறினான்.

சாரா பல்லைக் கடிக்க.. அவள் அருகிலிருந்த பெண் 'களுக்' என்று சிரித்தாள். சாரா அவளை முறைத்தாள்.

அஜீத் அந்தப் புதிய பெண்ணை வியப்பாகப் பார்த் தான். கொடி போன்ற உடலுடன்.. உயரமாய் அழகாய்.. மென்மையாய் இருந்தாள் அவள்.

அவர்கள் கடந்து சென்று விட்டனர்.. அந்தப் பெண் ணின் மீதிருந்த பார்வையை அகற்றாமல்,



''யாருலே அந்தப் பொண்ணு?'' என்றான் அஜீத்.

''எனக்கு எப்படித் தெரியும்.. பாதுகாவலன் பணி முடித்துத் திரும்பி வரும் ஆனந்திடம் கேட்டால் அவன் சொல்லுவான்...''

''அவள் பெயர் பவித்ரா... சாராவிற்கு உறவுக்காரப் பெண்ணாம்..பெங்களூரில் படித்துக் கொண்டிருந் தாளாம்.. அவள் அப்பா.. வெளிநாட்டில் ஏதோ புரொ ஜெக்ட் செய்யப் போனதால்... அவளது அம்மாவும் கூடப் போய் விட... வேண்டி வந்ததாம்.. ஒரே மகளாம்.. படிப்பும் கெடக்கூடாது.. மகள் தனிமையாகவும் உணரக் கூடாது என்பதால்.. இங்கே படிப்பை மாற்றிக் கொண்டு.. சாராவுடன் ஹாஸ்டலில் தங்க வைத்துவிட்டு... வெளி நாட்டிற்கு பறந்து விட்டார்கள்...'' என்று விவரம் சொன் னான் ஆனந்த்.

''இது என்னலே விந்தையாக இருக்கிறது? பருந்தும்.. புறாவும் உறவா?''

''யாரைப் பருந்து என்கிறாய் அஜீத்...?''

''தெரியாதது போல் கேட்கிறாயே.. வெள்ளைக் காரியைத்தான் சொல்கிறேன்.''

''அவள் என் ஆள் அஜீத்... அப்படிச் சொல்லாதே...''

''இது வேறயாலே... ஏன்லே.. உனக்கு ரோசம்.. கீசம் கிடையாதா?''

''காதல் வந்துவிட்டால் அதையெல்லாம் சொல்லக் கூடாது.''

''அவளையாலே காதலிக்கிறாய்?''

அஜீத் அனந்தை ஒரு பரிதாபத்துடன் பார்த்துவிட்டுக் கேட்டான்.

''ஆமாம்...''

''விதி வலியது.. நடத்து.. நடத்து...''

ராபர்ட் அன்று இரவு அவனது அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த போது... நாய்க் குட்டி அவனுக்கு முன்னால் வந்து உட்கார்ந்து அவனைப் பார்த்து தலையை ஆட்டியது.

படித்துக் கொண்டே நிமிர்ந்து நாய்க்குட்டியை உணர் வில்லாமல் பார்த்து விட்டு மீண்டும் புத்தகத்தில் புதைந்த ராபர்ட்டுக்கு அது உறைத்தது.

'என் முன்னால் எதுவோ உட்கார்ந்து இருக்கிறதே...'

அவன் சட்டென்று நிமிர்வதற்குள் நாய்குட்டி... அதை அழைத்த அலெக்ஸிடம் ஓடி விட்டது.. அதை மரப் பெட்டியில் மறைத்துவிட்டு வந்த அலெக்ஸ்... பதறி எழுந்த ராபர்ட்டின் அருகே வந்து,

''என்ன ராபர்ட்..?'' என்றான்.

''எதுவோ என் முன்னால் இருந்து ஓடியதே...''

''அது ஒன்றுமில்லை... உனக்கு ஏதோ பிரமை..''

ராபர்ட் பயந்து போய் மீண்டும் அஜீத்திடம் முறையிட் டான்... இந்த முறை ராபர்ட்டின் வீட்டிற்கே வந்து விட்ட அஜீத்.. வீட்டை சோதனை போட்டான்.. மரப்பெட்டிக் குள் இருந்து 'லொள்.. லொள்..' என்று சத்தம் வரவும்.. பெட்டியைத் திறந்து பார்த்தான்.

நாய்குட்டி பாசத்துடன் அவன் மேல் தாவியது.

''இது ஏதுலே.. நாய்குட்டி?''

''நாய் குட்டியா? என் வீட்டிலா..?''

''அப்ப இது இருந்தது உனக்குத் தெரியாதா?''



''தெரியாதுடா..''

''அப்படிப் போடு... இப்ப இல்ல.. உன் நாலு கை ராட்சஸக் கனவுக்கு அர்த்தம் விளங்குது...''

''இவன் கூட.. அது காலா.. இல்லை கையான்னு கேட்டான்...''

''ஏன் கேட்கமாட்டான்? இந்த நாலு கால் பிராணியை வீட்டுக்குள் கொண்டு வந்து மறைத்து வைத்திருப்பது இவன்தானே...''

''மரப்பெட்டிக்குள் வைத்திருக்கிறான்..''

''அதனால்தான் மரப்பெட்டியைப் பார்த்து பேசியிருக் கிறான்..''

''நான் என்னவோ... ஏதோன்னு பயந்து தூங்கவில்லை அஜீத்...''

''ஏய்.. இங்கே.. வாலே... இது என்னலே..''

''என்ன அஜீத்... நீ சின்னப்புள்ளைத் தனமா கேட்கிற?''

''எனக்கே அல்வாவா? டேய்... நான் திருநெல்வேலிச் சீமைதாண்டா.''

''இது நாய் குட்டி அஜீத்...''

''இது எப்படி இங்கே வந்தது...''

''தானாய் வரவில்லை...''

''அது எங்களுக்கும் தெரியும்..''

''நான்தான் கொண்டு வந்தேன்..''

''கொண்டு வந்ததை இவனிடம் சொன்னாயா?''

''மெதுவாய் சொல்லிக் கொள்ளலாம் என்று விட்டு விட்டேன்...''

''இப்போது தெரியுதுலே.. ஏன் ராதா.. உன்னைப் பார்த்தாலே டென்சன் ஆகிறான் என்று...''

''ஒரு நாய்குட்டி வளர்க்கக் கூட எனக்கு உரிமையில்லையா?''

''இங்கே பாருலே.. உரிமைக்குரல் எழுப்புறான்... உன்னை யாரு நாய்குட்டி வளர்க்க வேணாம்ன்னு சொன்னது? அதை ஏன்லே பேய் குட்டியைப் போல மரப்பெட்டிக்குள் மறைத்து வைத்துவிட்டு அது கூட பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டு இருந்த...?''

''அதைக் கூட விட்டுவிடலாம் அஜீத்... என் முன்னால் உட்கார்ந்து இருந்து விட்டு நாய்குட்டி ஓடி விட்டது.. என்னன்னு இவன்கிட்ட கேட்டால் அது உன் பிரமைன்னு சொல்லிவிட்டான் பாரு.. அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை...''

அஜீத் வாய் விட்டுச் சிரித்தான். பின் நாய்குட்டியை கையில் எடுத்துப் பார்த்து ரசித்தான்.

''ம்ம்.. நீ தான் அந்த நாலு கை ராட்சஸனா...?''

''என்ன அஜீத்.. நீயும் அந்த நாயைக் கொஞ்சுகிற...?''

''விடு ராபர்ட்... எத்தனையோ விசயங்களில் நீ அலெக்ஸ் கூட அனுசரித்துப் போகிறாய்.. இதிலும் அப்படியே போய்விடு... என்ன இருந்தாலும் அவன் உன் பிரண்ட்...''

''அதுதான் எப்படி நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை...''

அலெக்ஸ் முறைக்க.. அஜீத் மீண்டும் சிரித்தான்.

''என்னவோ.. நடந்தது நடந்து விட்டது... இவன் உன் பிரண்ட் ஆகணும்னு இறைவன் விதிச்சிருக்கார்... மனதை தேற்றிக் கொள்...''



''ஏண்டா... விட்டால் இன்றைக்கு பூராவும் இரண்டு பேரும் என்னை வைத்து ஓட்டுவிங்களாடா..'' அலெக்ஸ் கொதித்தான்.

''ஏய்... அடங்குலே.. வீட்டில் நாய் இருக்குன்னு சொல்லாமல்.. இவனை பேய் இருக்குதோன்னு மிரள வைத்தாயே.. உன்னை ஓட்டினால்தான் என்ன..?'' அஜீத் வாயில் ஒரு விரலை வைத்துக் காட்டினான்.

ஒரு வழியாய் நாய் குட்டி மரப்பெட்டியை விட்டு வெளியில் வந்துவிட்டது.

விடுதலை.. விடுதலை... விடுதலை... என்ற உணர்வோடு அது வீர நடைபோட.. ராபர்ட் கவலையுடன்...

''இது வீட்டுக்குள் மூச்சா போய் விட்டால் என்னடா பண்ணுவது?'' என்று கேட்டான்.

''அது வளர்க்கிறவன் பாடு.. உனக்கென்ன வந்தது...''

அஜீத் ஒரு வழியாய் வழக்கை தீர்த்து வைத்துவிட்டு போய்விட்டான். அலெக்ஸ் நாய் குட்டிக்கு 'டாமி..' என்று பெயர் வைத்தான். அதற்கு பயிற்சிகள் கொடுத்தான்.. பிரசாத் மாலை வேளைகளில் வந்தால் நண்பர்களுடன் பேசுவதை மறந்து விட்டு டாமியின் செயல்பாடுகளை ரசிக்க ஆரம்பித்தான்.

''எப்படிடா.. இது நீ கூப்பிட்டவுடன் ஓடி வருது?''

''எப்படிடா.. இது பந்தை நீ விட்டெறிந்தால் எடுத்துக் கொண்டு வந்து கொடுக்குது...?''

''எப்படிடா.. இது பின்னங்கால்களில் நின்று கொண்டு.. முன்னங்காலை தூக்கி சல்யூட் அடிக்குது..?''

''எப்படிடா.. இது டான்ஸ் ஆடுது..?''

பிரசாத் வியக்க.. அலெக்ஸ் விளக்க.. வீட்டில் நாயின் நர்த்தனம் நடந்து கொண்டிருக்கையில் பொறுக்கமாட்டாமல் ராபர்ட் பொங்கி வெடித்தான்.

''இது வீடா.. இல்லை சர்க்கஸா...?''

''உனக்குப் பிடிக்கலைன்னா... கண்ணை மூடிக்க..''

அலெக்ஸும்.. நாயும் ராபர்ட்டின் படிப்பைக் கெடுத்துக் கொண்டு வீட்டில் கொட்டமடித்துக் கொண்டிருந்த போது.. அலெக்ஸின் அம்மாவிடமிருந்து.. நாயை யாருக்காவது கொடுத்து விடும்படி ஆணை வந்தது...

''அலெக்ஸ்.. நீ படிக்கப் போயிருக்கிறாய்.. நாய் வளர்ப்பில் கவனம் செலுத்தினால்.. உன் படிப்பு கெட்டு விடும்...''

''நோ மம்மி.. ஐ லைக் இட்...''

''ஊஹூம்.. அதைக் கொண்டு போய் விட்டு விட்டு வந்து விடு..''

''மம்மி ப்ளீஸ்..''

''சொன்னதைச் செய்...''

அலெக்ஸ் போனில் ஒலித்த அன்னையின் ஆணையை மீற முடியாமல் நாய்குட்டியை தூக்கிக் கொண்டு... ராபர்ட்டிடம் கேட்டான்.

''இப்ப உனக்குத் திருப்தியாடா?''

நாயை விட்டு விட்டு வந்தவன்.. அதைப் பிரிந்த துக்கம் தாளாமல்.. கடலோரம் அமர்ந்திருக்க... பிரசாத் அவனைத் தேடிச் சென்று சமாதானப்படுத்தினான்.

''டேக் இட் ஈஸி அலெக்ஸ்... உலகத்தில் எல்லா அம்மாக்களின் சிந்தனையும் எப்படி ஒன்று போல் இருக்கிறதுன்னு தெரியவில்லை... ஏன் இந்த அம்மாக்களுக்கு எல்லாம் நாயைக் கண்டால் பிடிக்க மாட்டேன் என்கிறது..?''



''அதுக்கு சைக்காலஜிகலா இருக்கிற காரணம் ஒன்று தான்... சுத்தம் பார்ப்பது.. வீட்டின் சுத்தத்தை பெண்கள் தானே கவனித்துக் கொள்கிறாங்க.. அதனால் அசுத்தப் படுத்தும் பிராணிகளைக் கண்டால் அவங்களுக்கு ஆவதில்லை...''

நாயை மறந்து இருவரும் பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டுக்கு கிளம்பி வந்தார்கள்.

''வீடு வெறிச்சென்று இருக்கிறதுடா..'' என்றான் அலெக்ஸ்.

''கொஞ்ச நாள் அப்படித்தான் இருக்கும். போகப் போகச் சரியாகிவிடும்.''

''டாமி இல்லாத வீடு... ஒரு வீடா?''

''ஊரில் இருக்கிற எல்லா வீடுகளிலும்.. வீட்டுக்கு ஒரு நாய் வளர்க்கிறார்களா என்ன? அவையெல்லாம் வீடாக இல்லையா? விட்டுத் தள்ளு...''

இருவரும் வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது.. எங்கிருந்தோ ''லொள்... லொள்..'' என்ற சத்தம் கேட்டது.

அலெக்ஸும்.. பிரசாத்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''டாமி குறைப்பது போல் கேட்கிறதே... பிரமையா?''

''எனக்கும் கேட்டதே.. அது.. எப்படி இரண்டு பேருக்கும் பிரமை வரும்?''

''அது தானே...''

அலெக்ஸ் வீட்டிற்குள் தேடினான். அவன் முதன் முதலில் டாமியை ஒளித்து வைத்திருந்த மரப்பெட்டி அவன் அறையில் இருந்தது. அதற்குள் இருந்துதான்

டாமியின் குரைப்புச் சத்தம் கேட்டது... அலெக்ஸ் அதைத் திறந்து பார்க்க.. டாமி ஆவலாய் அவன்மேல் தாவியது.

''ஏய்.. டாமி.. இது எப்படி இங்கு வந்தது..''

''தானாய் வந்து விட்டதோ..''என்றான் பிரசாத்.

''இருக்காதுடா.. இதை வாங்கிய கடையில்தான் கொடுத்து விட்டு வந்தேன். அவர்கள் வெளியே விட மாட்டார்கள்...''

''ஏண்டா.. இரண்டு பேரும் குழப்பிக்கறீங்க.. நான்தான் போய் வாங்கிக் கொண்டு வந்தேன்..'' என்றான் ராபர்ட்.

''நீயா..'' அலெக்ஸ் விழிகள் தெறித்து விடும் போல் வியப்புடன் கண்கள் விரிய ராபர்ட்டைப் பார்த்துக் கேட்டான்.

''நான்தான்..''

''ஏண்டா..?''

''அறிவு கெட்டவனே.. அதுவே சின்ன நாய்குட்டி.. அதைக் கொண்டு வந்து வீட்டில் வைத்து வளர்த்து விட்டு திரும்பவும் கடையிலேயே கொண்டு போய் விட்டு விட்டாயே? உனக்கு மனச்சாட்சியே இல்லையா?''

''உனக்கு நாய் வளர்க்கவே பிடிக்காதே ராபர்ட்..''

''வளர்த்த நாயை கொண்டு போய் விடுவதும் பிடிக்காது...''

''அம்மா கேட்டால்..''

''நாயை நான் வளர்க்கவில்லை... ராபர்ட் வளர்க்கிறான்னு சொல்லு..''



விசயத்தைக் கேள்விப்பட்ட அஜீத்...

''ஈரமனசுக்காரன்லே.. நீ..'' என்று ராபர்ட்டைப் பார்த்துக் கூறினான்.

''கடைசியில் டாமியும் உங்கள் பேமிலியில் ஒரு மெம்பர் ஆகிவிட்டது... போல...'' ஸ்ரீதரன் வினவினான்.

''அதையேன் கேட்கிற.. திரும்பி வந்த பின்.. அது ஆடுகிற ஆட்டம் இருக்கே.. அப்பப்பா... அதற்கு ஐந்தறிவுதான்னு நாமதான் சொல்கிறோம்...''

''ஏன்னா.. நாம மனுசப் பிறவிகளாச்சே.. நம்மளை மிஞ்சி.. யாருக்கும் அறிவு இருந்தால் ஏற்றுக்க மாட்டோமே.. இந்தா.. நம்ம ராதாவே இருக்கிறான்... பெண் பிள்ளைகளை விட நாம் உயர்த்தின்னு சொன்னால் ஏற்றுக்குவானா..?''

அலெக்ஸ் நியாயம் பேச.. ராதாகிருஷ்ணன் கண் சிவந்தான்.

''ஏண்டா.. டேய்.. என்னையே ஏண்டா.. ஏரு கட்டி இழுக்கறே.. நான் உன் வம்பு தும்புக்கு வருகிறேனா?''

''அது சரிடா ராதா.. வம்புன்னால் புரிகிறது.. அது என்ன தும்பு?''

''அதை ஏன்லே அவனைப் போய் கேட்கிற.. அதோ இருக்கிற மாதர் குல மாணிக்கங்கள் கிட்டப் போய் கேட்டுட்டு வாலே...''

''ஏன் அஜீத்... இவன் பேசுவதற்கு அவங்களுக்கு விளக்கம் தெரியுமா?''

''இவன்தான்.. அவங்களின் மனச்சாட்சி ஆயிற்றே...''

ராதாகிருஷ்ணன் மூக்கு விடைக்க செய்வதறியாத கோபத்துடன் அவர்களைப் பார்த்தான்.



# 11

சதீஷ் தனியாக உட்கார்ந்திருக்க.. பிரசாத் அவனருகே தன் அப்பாச்சியை கொண்டு போய் நிறுத்தினான்.

''ஏண்டா தனியாக உட்கார்ந்திருக்க..?''

''மனசே சரியில்லை பிரசாத்..''

''ஏன்.. உன் மனசுக்கு என்ன ஆச்சு..?''

''வந்தனாவும் நானும் பிரண்ட்லியாகத்தான் பழகு கிறோம் பிரசாத்.''

''ஆமாம்.. அதற்கு என்ன?''

''பட்.. நம்ம கிளாஸ் லேடிஸ்.. அதைத் தப்பா பேசு கிறாங்களாம்.''

''உனக்கு இதை யார் சொன்னது?''

''வந்தனா தான் சொன்னாள்...''

''இதைப் போய் வேலை மெனக்கெட்டு உன்னிடம் வந்து சொல்லியிருக்கிறாள் பார்... அவளை என்ன சொல்வது..?''

''ஒன்றும் சொல்லாதே.. அவளே பாவம் அழுது கொண்டு இருக்கிறாள்...''

''அழுதால் பாவமென்று சொல்லிவிடுவதா..''

அப்போது அங்கு அஜீத்தும் மற்ற நண்பர்களும் வந்து சேர்ந்தனர்.

''என்னலே.. பிரசாத்.. மரத்தடியில் மாநாடு போட்டுக் கொண்டு இருக்கீங்க போல இருக்கே.. என்ன விசயம்?



யாரை பாவம் பார்த்துக் கொண்டு இருக்கிறான்.. நம்ம சதீஷ்?''

''வேறு யாரைப் பாவம் பார்ப்பான்.. அந்த வந்தனா பாவமாம்...''

''எதற்கு.. நம்ம பயல் இப்படி ரத்தக் கண்ணீர் வடிக் கிறான்?''

''அதை நீயே கேளு..''

விசயத்தைக் கேட்ட அஜீத் சுள் கொட்டினான்.

''ஏன்லே.. வாழ்க்கையில் கவலைப்பட ஆயிரம் விசய மிருக்கு.. நீ இதுக்குப் போய் கவலைப்படறியாக்கும்.. வெளியே சொல்லிவிடாதே...''

''இல்லை அஜீத்.. நானும் வந்தனாவும் வெறும் பிரண்ட்ஸ்தான்...''

''இதை என்னாலேயே நம்ப முடியவில்லை... பெண்கள் எப்படிலே நம்புவார்கள்?''

சதீஷின் முகம் கருக்க... பிரசாத் அவனுக்காக பரிந்து பேசினான்.

''இல்லை அஜீத்... இவர்கள் வெறும் பிரண்ட்ஸ்தான்.''

''ஏன்லே... இவனுக்கு பிரண்ட்ஸுன்னு நாம இருக்கோ மில்ல.. அப்புறம் ஏன் இவன் வந்தனாகிட்ட நட்புக்கரம் நீட்டுகிறான்? எல்லாம் ஒன்றும் ஒன்றும்.. இரண்டுங்கிற கணக்குத்தான்லே...''

''தப்புக் கணக்கு போடாதே அஜீத்... நாம் கோ-எஜூ கேசனில் படிக்கிறோம். பழகுகிற பழக்கத்தில் ஆண்.. பெண்.. வித்தியாசம் பார்த்துப் பழக முடியுமா? இல்லை... ஆண்கள்.. ஆணகளோடு தான் பழக வேண்டும். பெண்கள்.. பெண்களோடு தான் பழக வேண்டும்ன்னு

திவ்யா மெதுவாக அழைத்தாள்...

''வந்தனா...''

பதில் இல்லை... மீண்டும் பலமாக அழைத்தாள்.

''வந்தனா...''

''ம்ம்... என்ன...'' வந்தனா யாரோ அவளைப் பிடித்து உலுக்கியது போல் அதிர்ந்து விழித்தாள்.

''என்னடி... உனக்கு என்ன ஆச்சு...?''

''ஒன்றுமில்லையே...''

''ஊஹும்.. ஏதோ சரியில்லை.. சதீஷுடன் சண்டையா?''

''இல்லையே...''

''அப்புறம் ஏன் அவன் உன்னோடு பேசாமல் போனான்.''

வந்தனா ஏற்கனவே நொந்து போய் இருந்தாள். இப் போது திவ்யா கேள்விக்கு மேல் கேள்வியாய் கேட்கவும்.. வெடித்து விட்டாள்.

''இதுதான் உனக்கு வேலையா? ஏண்டி.. நான் என்ன செய்கிறேன் என்று வேவு பார்த்துக் கொண்டே அலை கிறீங்க. அவன் எவளோடு பேசினால் உனக்கென்ன.. பேசாவிட்டால் உனக்கென்ன? உன் வேலை எதுவோ.. அதைப் பார்த்துக் கொண்டு போக மாட்டாயா?''

''இப்ப நான் என்ன சொல்லி விட்டேன்னு இப்படிப் பதட்டப்படுகிறாய்?''

''நீ ஒன்றுமே சொல்லவில்லையா?''

''நான் இயல்பாகத்தானேடி கேட்டேன்.''

''இயல்பு.. இயல்பு.. இயல்பு.. இந்த இயல்பு என்ற வார்த்தையைக் கண்டுபிடித்தவனை நாடு கடத்தனும்.''



''ஏண்டி.. எப்போதும் உன்னோடு நன்றாகப் பேசிக் கொண்டிருக்கிறவன்.. இப்போது முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறானேன்னு விசாரிக்க வந்தால் இப்படிக் கோபித்துக் கொள்கிறாயே...''

''உன்னால்தாண்டி... அவன் என்னோடு பேசாமல் போய் விட்டான். உன்னால்தான்.. இப்போது திருப்தி தானே... போ.. போய் நீயாவது சந்தோசமாக இரு...''

''வந்தனா...''

வந்தனாவின் கண்களில் நீர் வழிந்தது. அவள் புத் தகங்களை அள்ளிக் கொண்டு வகுப்பறையை விட்டு வெளியே போய் விட்டாள். அன்று முழுவதும் அவள் வகுப்பிற்கு வரவில்லை.

இது எதையும் அறியாத நண்பர்கள் வட்டாரம். வழக்கம் போல் கலகலத்துக் கொண்டிருந்தது.

''வாலே.. சதீஷ்.. ஏன் ஒரு மார்க்கமாக இருக்கிறாய். உடம்பு எதுவும் சரியில்லையா?'' அஜீத் ஆதரவாய் வினவினான்.

''ச்ச.. நைட் சரியான தூக்கமில்லை அஜீத்..'' என்ற வாறு ஆனந்தின் அருகில் அமர்ந்தான் சதீஷ்.

''டேய்.. அதிகம் படிக்காதேடா. அப்புறம் இப்படித் தான். தலை கலைந்து கண் சிவந்து.. கந்தல் கோலமாய் காலேஜுக்கு வருவாய்..'' ஆனந்த் சதீஷின் தோள்மேல் கை போட்டுக் கொண்டான்.

''ஆமாலே படிக்காதே.. இவனைப் போல் விசிலடித்து வெள்ளைக்காரியைப் பிடி. லே.. உருப்படுகிறவனையும் ஏன்லே கெடுக்கிற...''

''தல.. நான் விசிலடித்தாலும் காரியத்தில் கண்ணாக இருப்பேனில்ல. சாராவே அசந்து போகிற அளவுக்கு மார்க்கை அள்ளிக் காண்பித்து விட்டேனில்ல.''

''ஆக.. உன்னைப் பெற்று வளர்த்து.. படிக்க வைக்கிற அப்பா.. அம்மாவை சந்தோசப்படுத்த நீ மார்க் வாங்கவில்லை. பொம்பளப் புள்ளைய திரும்பிப் பார்க்க வைக்கிறதுக்காக மார்க் வாங்கியிருக்கிற.''

''அதில் உனக்கென்னடா ராதா வருத்தம் வந்து வரிசை கட்டி நிற்குது.''

''வேண்டாம்டா... சும்மா.. அந்தப் பெண்ணைச் சீண்டிப் பார்க்காதே...''

''இந்தா பாரு. முதல் வருசம் ஆரம்பித்தது. மூன்று வருசமாக பூவாகி காயாகி.. கனிந்து வந்திருக்கிறது. நீ வேறு யாராவது நல்லவன் பட்டம் கொடுப்பாங்களான்னு தேடிப் போய் விசாரி.. இவளை விட்டு விடு.''

''என்னமோ பரிசம் போட்டவன் மாதிரிப் பேசறே... மூன்று வருஷம் என்ன.. முப்பது வருஷம்.. நீ அவள் பின்னால் விசிலடித்துக் கொண்டே சுற்றினாலும்.. அந்தப் பொண்ணு உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்காது.''

''பேசாமல் போய் விடு... உன்கிட்ட நான் ஜோசியம் கேட்டேனா.''

''நீ கேட்காவிட்டாலும் சொல்வது என் கடமைடா.. நண்பன் ஆச்சே.''

''நண்பனா.. யார் நீயா?... ஹா... ஹா... அலெக்ஸ்... இதைக் கேட்டாயா?''

அலெக்ஸ் உடனே சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு பாடினான்.

''யாராரோ.. நண்பன் என்று..

ஏமாந்த உள்ளம் உண்டு..



பூவென்று முள்ளைக் கண்டு..

புரியாமல் நின்றேன் இன்று..

பால்போலக் கள்ளும் உண்டு...

நிறத்தாலே ரெண்டும் ஒன்று...''

''டேய் கண்ணழகா.. பாட்டாலே அடிக்கிறாயா.. நீ ஒரு நாள் எங்க ஏரியா பக்கம் வாடி. அன்றைக்கு இருக்கு உனக்கு விருந்து.''

''போடா டேய்.. நீயும் என்னைக் கண்டதிலிருந்து விருந்து ஆக்கிப் போடுகிறேன்னு சொல்லிக் கொண்டு தான் இருக்கிறாய்.. ஒரு சுடு தண்ணிகூட வைத்துக் கொடுக்க மாட்டேன் என்கிறாய்.. நீயாவது.. எனக்கு விருந்து கொடுப்பதாவது.. நடக்கிறதைப் பேசுடா...''

''உன் கூட மனுசன் பேசுவானா...?''

''பேசாதே...''

ராதாகிருஷ்ணன் கோபமாய் பையைத் தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டு போய் விட்டான்.

''ஏன்லே... அவன் கூட வம்பைக் கட்டி இழுக்கறே...''

''விடு அஜித்.. அவனே இங்கிருந்து தப்பித்து... பெண்கள் கூடப் போய் உட்கார்ந்து கதை பேசக் காரணம் தேடிக் கொண்டிருந்தான். நான் கொடுத்து விட்டேன். அதைப் பாராட்டுவியா.. அதை விட்டுவிட்டு என் மேல் குற்றப் பத்திரிகை வாசிக்கிறாயே...''

''நீ திருந்த மாட்டேலே...''

''அதனால யாருக்கு என்ன கஷ்டம்..? சொல்லு.''

''உன்னைக் கட்டி எப்படித்தான் ராபர்ட் மேய்க்கிறானோ... நீ ஏன்லே சதீஷ்... உம்முன்னு முகத்தை வைத்துக்கிட்டு இருக்கே.''

''அதான்.. படிப்பாளி.. நைட்டெல்லாம் படித்தேன்னு சொன்னானே...''

''அப்படியா.. வாங்கலே.. கிளாஸுக்குப் போகலாம்.''

''என்னதான் பேச்சு பேச்சாக இருந்தாலும் அதை மறக்க மாட்டேன் என்கிறாயே.. தல...''

''அதுக்குத்தான் நம்மைப் பெத்த மகராசங்க நம்மை காலேஜுக்கு அனுப்பி வைத்திருக்கிறாங்கலே. எழுந்திரு.''

அவர்கள் கூட்டமாய் வகுப்பறைக்குள் நுழைய.. சாரா முணுமுணுத்தாள்.

''அப்படியே.. கோவில் மாடுகள்.. கூட்டமாய் வருவது போலவே இருக்கிறது.''

''அப்படியா.. என்னைப் பார்த்தால் கோவில் காளை போலவே இருக்கிறதா?''

சாராவைக் கடந்து போன ஆனந்த் நின்று அவளிடம் வினவினான்.

''நான் உன்னை ஒன்றும் சொல்லவில்லை ஆனந்த். வம்பிழுக்காதே...''

''என்னை நீ என்ன வேண்டுமானாலும் சொல். அதற்கு உனக்கு உரிமை இருக்கிறது. மற்றவர்களைச் சொல்லாதே... அதற்கு உனக்கு உரிமை இல்லை...''

''ஐயோ.. இவன் தொல்லை தாங்கலையே...''

சாரா தலை மேல் கை வைத்துக் கொண்டாள். எல்லோரும் அவரவர் இடத்தில் அமர்ந்தபோது சதீஷ் வந்தனாவின் இடத்தைப் பார்த்தான். அவளைக் காணவில்லை. அவன் நெஞ்சில் கேள்வி எழுந்தது.



# 14



'வந்தனா காலையில் வந்திருந்தாளே..'

சதீஷின் கவனம் பாடத்தில் இல்லை.. அன்று முழுவதும் அப்படியே இருந்தவன்.. மாலையில் வகுப்புகள் முடிந்து.. கிளாஸை விட்டு வெளியேறும்போது சுஜாதா அவனை அழைத்தாள்.

''சதீஷ்...''

''என்ன?''

''வந்தனா காலையில் கிளாஸிற்கு வந்தவுடன் போய் விட்டாள்.''

''உடம்பு சரியில்லையோ.. என்னவோ.''

''இல்லை.. அவளது மனம்தான் சரியில்லை போல் இருக்கிறது.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''அவள் என்னைக் குற்றம் சொல்கிறாள் சதீஷ்.''

சதீஷிற்கு தூக்கி வாரிப் போட்டது.

''உன்னைக் குற்றம் சொல்கிறாளா..? என்னவென்று சொன்னாள்?''

''என்னை என்றால் என்னை மட்டும் இல்லை... எங்களை எல்லாம் சேர்த்துத்தான் குற்றம் சொல்கிறாள். எங்களால் தான் நீ அவளுடன் பேசவில்லையாம்.. என்ன ஆச்சு சதீஷ்.''

சதீஷிற்கு வந்தனாவின் கோபம் புரிந்தது.

''நத்திங் சுஜாதா.''

''அவள் அழுது கொண்டு ஹாஸ்டலுக்குப் போய் விட்டாள்.''

''அப்படியா...?''

''என்ன சதீஷ் இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாய்?''

''வேறு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''நீயும் அவளும் பிரண்ட்ஸ் ஆச்சே...''

''இப்போ... எதிரிகள்.. போதுமா.''

சதீஷ் வேகமாகப் போய் விட்டான். அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த சுஜாதாவின் அருகே வந்த பவித்ரா.

''என்னவாம்..'' என்றாள்.

''அவனுக்கும்.. வந்தனாவுக்கும் சண்டை போல.''

''அதில் நீ ஏன் இன்வால்வ் ஆகிறாய்?''

பவித்ராவின் கேள்வியில் முகம் மாறின சுஜாதாவை ஆர்வமாய் பார்த்த சாரா..

''இவள் கிடக்கிறாள் சுஜாதா இவள் நம்மோடு ஒத்துப் போகாத கேஸ்... அந்த அஜீத்திடம் போய் பேசுபவள் எப்படி இருப்பாள்? நீ சொல்லு. அவர்களுக்குள் சண்டையா..'' என்று கேட்டாள்.

''ஆமாம்டி. சதீஷ்தான் வந்தனாவை இக்னோர் பண்ணுகிறான்.''

''எதுக்காம்...?''

''யாருக்குத் தெரியும்...''

''நீ விசாரிக்கவில்லையா?''



''விசாரிக்காமல் இருப்பேனா... அவள் என்னடாவென்றால்.. நம்மால்தான் சதீஷ் அவளுடன் பேச மாட்டேன் என்கிறான் என்று சொல்லுகிறாள். இவன் என்னடாவென்றால் அவளும் இவனும் எதிரிகள் என்கிறான்.''

''சம்திங் இன்ட்ரெஸ்டிங்.. அப்புறம்.''

''என்னவென்று தெரியவில்லை. இரண்டும் முறைத்துக் கொண்டு இருக்கிறதுகள். அவள் அழுகிறாள். இவனிடம் சொன்னால்.. அவள் அழுவதை ஏன் என்னிடம் சொல்கிறாய் என்கிறான்.''

''பொறு.. பொறு.. முதலில் இருந்து சொல்லு.''

சுஜாதா சொல்வதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சாராவைப் பார்த்து பவித்ராவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

'பாடத்தைக் கூட இவள் இப்படிக் கவனிக்க மாட்டாள்.'

வகுப்பறையை விட்டுச் சலிப்புடன் வெளியே வந்தாள் பவித்ரா. பெங்களூரில் பிறந்து வளர்ந்தவளுக்கு திருப்பரங்குன்றம் போரடித்தது.

'டாடியும்.. மம்மியும் இந்நேரம் என்னை நினைப்பாங்களா..' என்று நினைத்தபடி ஹாஸ்டலுக்குப் போகும் பாதையில் நடந்து கொண்டிருந்தவள் எதிரே வந்த அஜீத்தைக் கண்டதும் உற்சாகத்துடன் நின்று விட்டாள்.

''ஹாய்...''

''ஏம்மா.. திடீர்னு பார்த்தால் ஹாய் சொல்லிக்கலாம்.. நீங்களும் நானும் ஒரே கிளாஸில்தான் இவ்வளவு நேரமும் உட்கார்ந்திருந்தோம். இப்பத்தான் கிளாஸ் முடிந்து வெளியே வந்திருக்கிறோம். இப்போது போய் ஹாய் சொல்லுகிறீங்களே...''

சதீஷிற்கு வந்தனாவின் கோபம் புரிந்தது.

''நத்திங் சுஜாதா.''

''அவள் அழுது கொண்டு ஹாஸ்டலுக்குப் போய் விட்டாள்.''

''அப்படியா...?''

''என்ன சதீஷ் இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாய்?''

''வேறு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''நீயும் அவளும் பிரண்ட்ஸ் ஆச்சே...''

''இப்போ... எதிரிகள்.. போதுமா.''

சதீஷ் வேகமாகப் போய் விட்டான். அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த சுஜாதாவின் அருகே வந்த பவித்ரா.

''என்னவாம்..'' என்றாள்.

''அவனுக்கும்.. வந்தனாவுக்கும் சண்டை போல.''

''அதில் நீ ஏன் இன்வால்வ் ஆகிறாய்?''

பவித்ராவின் கேள்வியில் முகம் மாறின சுஜாதாவை ஆர்வமாய் பார்த்த சாரா..

''இவள் கிடக்கிறாள் சுஜாதா இவள் நம்மோடு ஒத்துப் போகாத கேஸ்... அந்த அஜீத்திடம் போய் பேசுபவள் எப்படி இருப்பாள்? நீ சொல்லு. அவர்களுக்குள் சண்டையா..'' என்று கேட்டாள்.

''ஆமாம்டி. சதீஷ்தான் வந்தனாவை இக்னோர் பண்ணுகிறான்.''

''எதுக்காம்...?''

''யாருக்குத் தெரியும்...''

''நீ விசாரிக்கவில்லையா?''



''விசாரிக்காமல் இருப்பேனா... அவள் என்னடாவென்றால்.. நம்மால்தான் சதீஷ் அவளுடன் பேச மாட்டேன் என்கிறான் என்று சொல்லுகிறாள். இவன் என்னடாவென்றால் அவளும் இவனும் எதிரிகள் என்கிறான்.''

''சம்திங் இன்ட்ரெஸ்டிங்.. அப்புறம்.''

''என்னவென்று தெரியவில்லை. இரண்டும் முறைத்துக் கொண்டு இருக்கிறதுகள். அவள் அழுகிறாள். இவனிடம் சொன்னால்.. அவள் அழுவதை ஏன் என்னிடம் சொல்கிறாய் என்கிறான்.''

''பொறு.. பொறு.. முதலில் இருந்து சொல்லு.''

சுஜாதா சொல்வதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சாராவைப் பார்த்து பவித்ராவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

'பாடத்தைக் கூட இவள் இப்படிக் கவனிக்க மாட்டாள்.'

வகுப்பறையை விட்டுச் சலிப்புடன் வெளியே வந்தாள் பவித்ரா. பெங்களூரில் பிறந்து வளர்ந்தவளுக்கு திருப்பரங்குன்றம் போரடித்தது.

'டாடியும்.. மம்மியும் இந்நேரம் என்னை நினைப்பாங்களா..' என்று நினைத்தபடி ஹாஸ்டலுக்குப் போகும் பாதையில் நடந்து கொண்டிருந்தவள் எதிரே வந்த அஜீத்தைக் கண்டதும் உற்சாகத்துடன் நின்று விட்டாள்.

''ஹாய்...''

''ஏம்மா.. திடீர்ன்னு பார்த்தால் ஹாய் சொல்லிக்கலாம்.. நீங்களும் நானும் ஒரே கிளாஸில்தான் இவ்வளவு நேரமும் உட்கார்ந்திருந்தோம். இப்பத்தான் கிளாஸ் முடிந்து வெளியே வந்திருக்கிறோம். இப்போது போய் ஹாய் சொல்லுகிறீங்களே...''

''இப்பத்தானே தனியாப் பேசுகிறோம்.''

''தனியாப் பேசுகிறோமோ..''

அஜீத் சுற்று முற்றும் பார்த்தான்... மைதானத்தில் அவனது நண்பர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். சாலையோர மரத்தடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சுகளில் மாணவ.. மாணவிகள் அமர்ந்திருந்தனர்.

''இதுவா தனியாகப் பேசுவது?''

''ஆமாம்.''

''உங்கள் ஊரில் வேண்டுமானால் இது தனிமையில் பேசுவதாக இருக்கலாம். எங்கள் ஊரில் இது காலேஜிற்குள் பேசுவது...''

''எப்படியோ இருக்கட்டும். எனக்குக் கால் வலிக்கிறது...''

பெண்களிடம் அதிகம் பேசியிராத அஜீத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை.

'இதை ஏன் இவள் என்னிடம் சொல்கிறாள்.' என்று நினைத்தவன் விசித்திரமாக அவளைப் பார்த்தான்.

''கால் வலித்தால் டாக்டரிடம் போங்க...''

''நீங்களும் கூட வருகிறீர்களா?''

''எங்கே...?''

''டாக்டரிடம்தான்...''

அஜீத் உதட்டைக் கடித்தபடி அவளை ஊன்றிப் பார்த்தான்.. அவள் முகத்தில் குறும்பு கொப்பளித்தது.

'இவள் என்ன.. என்னுடன் விளையாடிப் பார்க்கிறாளா?'

''ஏன்.. உங்கள் ரிலேடிவ் கம் பிரண்ட்.. சாரா எங்கே?''

''அவள் குரூப் டிஸ்கஸனில் இருக்கிறாள்.''

''மற்ற கோழிகள்.. ஸாரி.. தோழிகள் எல்லாம் இருப்பார்களே..''



''இப்ப கோழிகள்ன்னு யாரைச் சொன்னீங்க..''

''அதற்குத்தான் ஸாரி சொல்லி விட்டேனே...''

''ஸாரி சொன்னால் சரியாப் போச்சா.''

''இந்த விளையாட்டிற்கு நான் வரவில்லை... ஆளை விடுங்கள்.''

''அது எப்படி விட முடியும்?''

''இப்ப என்னதான் வேண்டும் உங்களுக்கு?''

''அப்படி வாங்க வழிக்கு. என் கால் வலி போக டாக்டரிடம் தான் துணைக்கு வர மாட்டீங்க. அந்த பெஞ்சில் உட்கார்ந்து பேசுவதற்காகவாவது வருவீங்களா... இல்லையா...''

'இதைச் சொல்லத்தான் இப்படி கிடுக்கிப் பிடி போட்டாளா... இந்தப் பெண்கள் எதை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறார்கள்ன்னு ஒரு மண்ணும் விளங்க மாட்டேங்குது.. ராதாவிடம் கேட்கணும்.'

அஜீத் மெதுவாக நடந்து மரத்தடியில் இருந்த பெஞ்சில் அமர்ந்தான். அருகில் அமர்ந்த பவித்ரா. அஜீத்தின் முகத்தையே பார்த்தாள். அஜீத் சங்கடத்திற்கு உள்ளானான்.

'இது என்னலே.. இந்தப் பொண்ணு இப்படிப் பார்க்குது..' அவன் அவளைப் பார்க்காமல் மைதானத்தில் விளையாடும் நண்பர்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

''நீங்கள் என்னவோ பெரிய வீரன்னு பில்ட் அப் கொடுக்கிறாங்க.. நீங்க என்னன்னா.. ஒரு பெண் கூட உட்கார்ந்து பேச இவ்வளவு பயப்படுறீங்க.''

''பயமா.. எனக்கா உங்களிடம் பேச எனக்கு என்ன பயம்?''

''பின்னே ஏன்... என் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டேன்கறீங்க.''

''உங்க முகத்தில் என்னம்மா இருக்கிறது?''

அஜீத் அசுவாரஸ்யமாய் சொல்லியபடி மரத்தை அண்ணாந்து பார்த்தான்.

'அவள் முகத்தில் எதுவுமில்லையா. பொய் சொல்லாதே..' அவனது மனம் அவனைக் கிண்டல் பண்ணியது.

''என்ன அஜீத் இது.. இப்படிச் சொல்லி விட்டீங்க. என் முகத்தில் இரண்டு கண்கள். ஒரு மூக்கு.. வாய்.. இவ்வளவும் இருக்கிறதே. இது எதுவுமே இல்லையென்று சொல்லி விட்டீர்களே.''

அஜீத் அவளை நேராகப் பார்த்தான். அவளது அகன்ற விழிகளின் பளபளப்பை ரசித்தபடி கேட்டான்.

''ஏன்.. என்கூடப் பழகணும்னு பிரியப்படறீங்க?''

அவனது நேரடியான கேள்வி அவளைத் தாக்கியது. அவளுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. எந்தத் திரை மறைவும் இல்லாமல்.. எந்தப் போர்வையின் பின்னும் மறைந்து கொள்ளாமல் பேசுகிறான்.

சாரா இவனைப் புரிந்து கொள்ளவில்லை என்று பவித்ரா நினைத்தாள்.

''ஏனென்றால்.. எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது...''

அஜீத்தின் மனதில் தென்றல் அடித்தது. இவள் இயல்பாகக் கூறினாலும் உண்மையாகக் கூறுகிறாள். இவளது பிரியத்தை இனம் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எந்தவித ஆராய்ச்சியும் இன்றி அவளது பிரியத்தை ஏற்றுக் கொள்வதே அவளது பிரியத்திற்கு அவன் செலுத்தும் மரியாதையாக இருக்க முடியும் என்று அவன் நினைத்தான்.

அவளைப் பார்த்து மென்மையாக புன்னகைத்த அஜீத்...



''அப்பா.. அம்மா என்ன செய்கிறாங்க?'' என்று வினவினான்.

அவளைப் பற்றி அறிந்து கொள்ள அவன் விரும்பியதும்.. அவளது மனம் துள்ளியது.

''அப்பா சாப்ட்வேர் என்ஜினீயர்.. அம்மா ஹவுஸ் வொய்ப்.'' என்று குதூகலத்துடன் பதில் சொன்னாள்.

''கூடப் பிறந்தவங்க...?''

''நத்திங்... நான் ஒருத்திதான்.''

ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்ததினால் அவள் பிரியத்தைத் தேடுவது புரிய.. அஜீத் அவள் புறம் திரும்பி அமர்ந்தான்.

''உங்ககூடப் பிறந்தவங்க எத்தனை பேர்.''

''அக்காவுக்குக் கல்யாணம் ஆகி விட்டது. தம்பி படிக்கிறான்.''

''ஈஸிட்..? அப்பா.. அம்மா என்ன செய்கிறாங்க?''

''அப்பா மினிஸ்டர் அம்மா இல்லத்தரசி.''

''அரசியல் பின்புலம் உள்ளவர்.''

''அதனால் என்ன?''

''இல்லை.. இயல்பாகவே உங்களிடம் இருக்கும் ஆக்டிவ்னெஸ்ஸிற்கு இதுவும் ஒரு காரணமா?''

''எனக்குக் காரணமும் தெரியாது. அரசியலும் தெரியாது.''

''உங்க அத்தை கூட மினிஸ்டர்.. இருந்தும் உங்களுக்கு அரசியல் தெரியாதா?''

''ஊஹூம்... தெரியாது.. எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை.''

''உங்கள் ஊர் கடலுக்குப் பக்கத்தில் இருக்குது இல்லையா..?''

''உங்க முகத்தில் என்னம்மா இருக்கிறது?''

அஜீத் அசுவாரஸ்யமாய் சொல்லியபடி மரத்தை அண்ணாந்து பார்த்தான்.

'அவள் முகத்தில் எதுவுமில்லையா. பொய் சொல்லாதே..' அவனது மனம் அவனைக் கிண்டல் பண்ணியது.

''என்ன அஜீத் இது.. இப்படிச் சொல்லி விட்டிங்க. என் முகத்தில் இரண்டு கண்கள். ஒரு மூக்கு.. வாய்.. இவ்வளவும் இருக்கிறதே. இது எதுவுமே இல்லையென்று சொல்லி விட்டீர்களே.''

அஜீத் அவளை நேராகப் பார்த்தான். அவளது அகன்ற விழிகளின் பளபளப்பை ரசித்தபடி கேட்டான்.

''ஏன்.. என்கூடப் பழகணும்னு பிரியப்படறீங்க?''

அவனது நேரடியான கேள்வி அவளைத் தாக்கியது. அவளுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. எந்தத் திரை மறைவும் இல்லாமல்.. எந்தப் போர்வையின் பின்னும் மறைந்து கொள்ளாமல் பேசுகிறான்.

சாரா இவனைப் புரிந்து கொள்ளவில்லை என்று பவித்ரா நினைத்தாள்.

''ஏனென்றால்.. எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது...''

அஜீத்தின் மனதில் தென்றல் அடித்தது. இவள் இயல்பாகக் கூறினாலும் உண்மையாகக் கூறுகிறாள். இவளது பிரியத்தை இனம் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எந்தவித ஆராய்ச்சியும் இன்றி அவளது பிரியத்தை ஏற்றுக் கொள்வதே அவளது பிரியத்திற்கு அவன் செலுத்தும் மரியாதையாக இருக்க முடியும் என்று அவன் நினைத்தான்.

அவளைப் பார்த்து மென்மையாக புன்னகைத்த அஜீத்...



''அப்பா.. அம்மா என்ன செய்கிறாங்க?'' என்று வினவினான்.

அவளைப் பற்றி அறிந்து கொள்ள அவன் விரும்பியதும்.. அவளது மனம் துள்ளியது.

''அப்பா சாப்ட்வேர் என்ஜினீயர்.. அம்மா ஹவுஸ் வொய்ப்.'' என்று குதூகலத்துடன் பதில் சொன்னாள்.

''கூடப் பிறந்தவங்க...?''

''நத்திங்... நான் ஒருத்திதான்.''

ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்ததினால் அவள் பிரியத்தைத் தேடுவது புரிய.. அஜீத் அவள் புறம் திரும்பி அமர்ந்தான்.

''உங்ககூடப் பிறந்தவங்க எத்தனை பேர்.''

''அக்காவுக்குக் கல்யாணம் ஆகி விட்டது. தம்பி படிக்கிறான்.''

''ஈஸிட்..? அப்பா.. அம்மா என்ன செய்கிறாங்க?''

''அப்பா மினிஸ்டர் அம்மா இல்லத்தரசி.''

''அரசியல் பின்புலம் உள்ளவர்.''

''அதனால் என்ன?''

''இல்லை.. இயல்பாகவே உங்களிடம் இருக்கும் ஆக்டிவ்னெஸ்ஸிற்கு இதுவும் ஒரு காரணமா?''

''எனக்குக் காரணமும் தெரியாது. அரசியலும் தெரியாது.''

''உங்க அத்தை கூட மினிஸ்டர்.. இருந்தும் உங்களுக்கு அரசியல் தெரியாதா?''

''ஊஹூம்... தெரியாது.. எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை.''

''உங்கள் ஊர் கடலுக்குப் பக்கத்தில் இருக்குது இல்லையா..?''

''ஆமாம்...''

''என்னை ஒரு நாள் உங்கள் ஊருக்குக் கூப்பிட்டுப் போவீர்களா?''

அஜீத்... ஒரு கணம்.. மணப் பெண்ணின் கோலத்தில் இருக்கும் பவித்ராவின் கையைப் பிடித்து அவனது வீட்டிற்குள் அழைத்துப் போவது போல் கற்பனை செய்து பார்த்தான். மறுகணம் மனதிற்குள் தன்னைக் கடிந்து கொண்டபடி,

''கூப்பிட்டுக் கொண்டு போய் விட்டால் போகுது..'' என்று சொன்னான்.

''தேங்க்ஸ்.. எனக்கு இந்த மதுரையை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசை. சுற்றிக் காட்டுவீர்களா?''

''ஏன்.. சண்டேயானால்.. லேடீஸ் ஹாஸ்டலில் இருந்து உலா போய் விடுவாங்களே.. அவர்களுடன் நகர்வலம் வரலாமே...''

''நான் உங்களைக் கேட்டேன்.''

அஜீத் அவள் கண்களுக்குள் பார்த்தான். பின்னர்.

''சரி...'' என்றான்.

''தேங்க்யூ.. தேங்க்யூ..''

அவள் பரவசப்பட்டுப் போனாள்.

''எப்போப் போகலாம்.''

''நீங்கள் எப்போது போகலாம்ன்னு சொல்கிறீங்களோ.. அப்போது போகலாம்.''

''இந்த சன்டே?''

''ம்ம்ம்...''

தூரத்தில் மைதானத்திலிருந்து ஆர்ப்பரிக்கும் சத்தம் கேட்டது. அஜீத் திரும்பி அவர்களைப் பார்த்தான்.



''ஸாரி.. உங்க பிரண்ட்ஸ்ங்க.. கிட்டப் போக விடாமல் உட்கார வைத்து விட்டேன்.''

''பரவாயில்லை.''

அஜீத் பெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கொண்டு கூறிய போது.. கிளாஸ் ரூமை விட்டு சாரா வெளியே வருவதைப் பார்த்தான். இவர்களைக் கண்டதும் அவள் முகம் மாறுவது தெரிந்தது.

''சாரா.. பவித்ராவுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது அஜீத் மாதிரி இருக்கிறதே...'' என்றாள் சுஜாதா.

''அவனேதான்...''

''என்னடி இது.. உலகமகா அதிசயமாய் இருக்கு? பெண் வாடையே ஆகாதவன்.. இப்ப பிடித்து வைத்த பிள்ளையார் போல இவள் பக்கத்தில் அடங்கி உட்கார்ந்திருக்கிறானே...''

''நானும் அதைத்தான் யோசித்துக்கிட்டிருக்கிறேன்.''

''பவித்ராவிற்கு கொஞ்சம் கூட பயமே இல்லைடி...''

''அதுதான் நமக்கு நல்லது.''

''நீ என்னடி சொல்கிறாய்?''

''பெண்களை டீஸ் பண்ணும் இவனை டீஸ் பண்ண இதுதான் சரியான வழி. சுஜி... பவித்ராவிற்கு எங்கள் சொந்தத்திலேயே மாப்பிள்ளை ரெடியாக இருக்கிறான். யு.எஸ்.ஏ.வில் சாப்ட்வேர் இன்ஜினியர். இவள் படிப்பு முடிவதற்காக காத்திருக்கிறான். ஒவ்வொரு வருடமும் இவளது பிறந்த நாளுக்கு அவனிடமிருந்து கிப்ட் வரும்... அஜீத் எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விடுகிறான். எனக்கு இதுதான் வேண்டும்.. பெண்களை மதிக்காத இவன்.. ஒரு பெண்ணிற்காக ஏங்கி அழ வேண்டும். அதை நான் பார்க்க வேண்டும்.''

அவர்கள் மரத்தடியை நெருங்கினார்கள். அஜீத் அவர்களைப் பார்த்தும் பாராதவன் போல் பவித்ராவுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

''பவித்ரா... இங்கே என்ன செய்கிறாய்?''

''தெரியவில்லையா.. அஜீத்துடன் பேசிக் கொண்டிருக் கிறேன்.''

''தேவையில்லாமல் யாரோடும் பேசாதே.''

''இது யாரோ இல்லை.. அஜீத்.. நம் கிளாஸ் மேட்.''

பவித்ரா கூறியதும் அஜீத் கிண்டலாக சாராவிடம் கை நீட்டினான்.

''ஹலோ.. கிளாட் டு மீட் யு?''

''அஜீத்.. என்ன இது விளையாட்டு.''

''இது என்ன பிளேகிரவுண்டா.. உன்னோடு நான் விளையாட?''

''பவித்ராவிற்கு உன்னைப் பற்றி ஒன்றும் தெரிய வில்லை.''

''நீ தெரிய வைக்க வேண்டியது தானே.''

''உனக்கு கொழுப்பு அஜீத்.''

''அதை நீ சொல்கிறாயா...?''

''ஒரு நாள் இல்லா விட்டால் ஒரு நாள்.. நீ இதற் கெல்லாம் படத்தான் போகிறாய்.''

''அந்தத் திருநாள் எப்பம்மா வரும். எனக்கும் ஆவ லாய் இருக்கிறது.''

''எப்போதும் வாழ்க்கை இப்படியே ஓடி விடாது அஜீத்.''

''அப்படியா?''



''எனக்கும் ஒரு காலம் வரும்.''

''வரட்டும்...''

''அப்போது நான் பேசிக் கொள்கிறேன்.''

''அப்புறம் எதற்கும்மா... இப்போதே எனர்ஜியை வேஸ்ட் பண்ணுகிறாய்? ஏம்மா சுஜாதா நீயாவது உன் பிரண்டிற்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?''

''நான் சொன்னேன் அஜீத்...''

''என்ன சொன்னாய்.''

''அங்கே அஜீத் உட்கார்ந்திருக்கிறான். நாம் வேறு பக்கம் போய் விடலாம்ன்னுதான்.''

''ஹா.. ஹா..''

அஜீத் எழுந்து மைதானத்தை நோக்கிச் செல்ல... பவித்ரா அவன் பெயர் சொல்லி அழைத்தாள். திரும்பிப் பார்த்தான்.

''நினைவிருக்கட்டும்.. சன்டே...''

# 15



மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள்.. அஜீத் வந்ததையும்.. பவித்ராவுடன் அமர்ந்து பேச ஆரம்பித்ததையும் கவனித்துக் கொண்டே விளையாடிக் கொண்டிருந்தனர்.

''என்னடா மச்சான்.. அஜீத் கவிழ்ந்திட்டான் போலே..'' என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்து பந்தை வீசி னான் ஸ்ரீதரன்.

''அதை எப்படிடா.. அவ்வளவு நிச்சயமாய் சொல்ல முடியும்'' என்றவாறு பந்தை ஓங்கி அடித்தான் பிரசாத்.

''எதுவும் இல்லாமலா.. இரண்டு பேரும் மரத்தடியில் மாநாடு போடுகிறார்கள்'' என்றபடி பந்தைத் தூக்கி வீசி எறிந்தான் அலெக்ஸ்.

''ஏன்டா.. ஒரு பொம்பளப் புள்ள கூட ஒருத்தன் உட்கார்ந்து பேசினா.. அதை தப்பாவே அர்த்தம் பண்ணிக்குவியா...? அது பெங்களூர்ல படிச்ச புள்ள.. நம்ம ஊர் பழக்கம் தெரியாமல் இருக்கும். உடனே சுத்தி விட்டிருவீங்களே.. விளையாட்டைக் கவனிங்கடா..'' என்று எரிந்து விழுந்தான் ராதா.

''ஏன்டா.. அவனைச் சொன்னால் இவனுக்கு இங்கே பொங்குது'' ஸ்ரீதரன் புருவத்தை உயர்த்தினான்.

''இது அஜீத்தின் மேல் இருக்கும் கரிசனம் மாதிரித் தெரியலையே.. காண்டு மாதிரித் தெரிகிறதே...'' அலெக்ஸ் சந்தேகமாய் பார்த்தான்.

''டேய் கண்ணழகா.. லந்தா பண்ணுகிறாய்?''

''ஆமாம்.. இப்ப என்னங்கிற?''

''எனக்கென்னத்துக்குடா அவன் மேல் காண்டு வரப் போகுது?''

''உன் பாஷையில் சொல்லவா. பொம்பளப் புள்ள கூட உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறானில்லையா? அதுதான்...''

''அந்தப் புள்ளக்கி அறிவு இருக்கும்ல. அப்புறம் நான் என்னத்துக்கு கவலைப்படனும்?''

''பாருடா இவனை... இவன் கூட கேர்ள்ஸ் பேசினால் அவங்க அறிவானவங்களாம்.. அஜீத்கூடப் பேசினால் அவங்களுக்கு அறிவில்லையாம்.''



''டேய்.. கண்ணழகா.. நீ திரும்பத் திரும்ப என்கிட்டயே வம்புக்கு வருகிற எல்லாத்துக்கும் சேர்த்து வைத்து ஒரு நாள் மாத்து வாங்கப் போகிற.. பார்த்துக்க...''

பிரசாத் விளையாட்டை நிறுத்தி விட்டு ராதாகிருஷ்ணனை பார்த்துக் கேட்டான்.

''ஏன்டா ராதா... நீயும் ஒரு நாள்.. ஒரு நாள்ன்னு சொல்லி... எங்களை ஏமாத்திக்கிட்டே போகிறாயே. இது உனக்கே நல்லா இருக்கா? எந்த நாள் என்பதை சரியாகச் சொல்லு.''

''டேய் பிரசாத்.. எத்தனை நாளாக இப்படி ஒரு ஆசையை மனதில் வைத்துக் கொண்டு இருந்தேடா.''

''இல்லடா அலெக்ஸ். இவன் விருந்து வைக்கப் போகிறேன். விருந்து வைக்கப் போகிறேன்னு சொல்லிக்கிட்டு இருக்கிறானே... உனக்கு இவன் விருந்து வைக்கும் வைபோகத்தைப் பார்க்க எனக்கும் ஆசையாக இருக்காதா?''

அப்போது அஜீத் எழுந்து அவர்களை நோக்கி வருவதைப் பார்த்த ஆனந்த்,

''டேய் அஜீத் வருகிறான்டா..'' என்றான்.

''என்னலே.. விளையாடி முடிச்சிட்டீங்களா?''

''என்ன தல... பேச்சு வார்த்தை முடிந்து விட்டதா?''

''அதைப் பார்த்தாயா.. விளையாடினாயா?''

''இரண்டும் தான் அஜீத்.''

''என்னவோ.. போடா.. ஒன்றும் விளங்கவில்லை.''

''என்னாச்சுடா.''

''பிரசாத்து... அவ என்னமோ இழையறாலே.. அவளோட தோழிக்காரி என்னவோ.. நான் அவளைப் பிடித்து உட்கார வைத்திருப்பதைப் போல என்கிட்ட வந்து முறைக்கிறாலே.. இது எனக்குத் தேவையாலே.''

''தேவையில்லைன்னா அப்போதே எழுந்து வர வேண்டியதுதானே.''

''குட் கொஸ்டின் பிரசாத்.''

''ஆமாம்லே.. அவன் புத்திசாலித்தனத்தை மெச்சி.. நீயும் அவனுக்கு எடுத்துக் கொடு. பிரசாத்துக்கண்ணா.. முதன் முதலா என்னைப் பார்த்து ஒரு கோழி மிரளாமல் கிட்ட வந்து பேசுது.. பதிலுக்கு பேசிப் பார்க்கலைன்னா எனக்குத் தூக்கம் வருமா.. சொல்லுலே...''

எல்லோரும்.. ''ஓ...'' என்று கத்தினார்கள்.

'''ஓ' போட்டு முடிச்சாச்சா.. வாங்கலே.. வீட்டைப் பார்க்கப் போகலாம்.''

''எங்களுக்கு வீடிருக்கு.. உனக்கு?''

''இதென்னாலே கேள்வி... ஹாஸ்டல் இருக்கு.''

டவலால் முக வியர்வையைத் துடைத்தபடி பிரசாத் அஜீத்தைத் திரும்பிப் பார்த்து,

''அஜீத்.. இந்த சன்டே பிலிம் போகலாமா?'' என்று கேட்டான்.

''இந்த சன்டேயா?'' என்று யோசித்தான் அஜீத். அவன் மனதில் பவித்ராவின் முகம் எழுந்தது.

'சன்டேயை நினைவில் வைத்திருக்கச் சொன்னாளே.'

''இந்த சன்டே வேண்டாம் பிரசாத். எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது.''

''அப்படியா.''

பிரசாத் அவனது அப்பாச்சியை ஸ்டார்ட் பண்ணிப் பறந்து விட்டான். அலெக்ஸ் ராதாகிருஷ்ணனுடன் வாய் வளர்த்துக் கொண்டிருக்க.. அஜீத் அப்போதுதான் சதீஷ்



தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்தான். அருகே சென்றான்.

''என்னலே சதீஷ்... தனியா உட்கார்ந்திருக்கிற...''

''மனது சரியில்லை அஜீத்.''

''என்னலே.''

அஜீத் ஆதரவாய் சதீஷின் அருகே அமர்ந்து அவன் தோள் மேல் கை போட்டான்.

''இந்த வந்தனா இருக்காளில்லையா.''

''அவள்தான் இன்றைக்கு கிளாஸில் இல்லையே.''

''ச்சு... கேலி பேசும் மூடில் நானில்லை அஜீத்.''

''சரி. சரி.. சொல்லுலே.''

''வந்தனா நேற்று என்னிடம் போனில் பேசினாள்.''

''அவள் தினசரி உன்னிடம் போனில் பேசுகிறவள் தானே.''

''நேற்று அவள் பேசிய விதமே வேறு.''

''என்னலே சொல்கிறாய்?''

''அஜீத்... அவள் என்னைக் காதலிக்கிறாளாம்.''

''அப்படிப் போடுலே அரிவாளை... இதைத்தான் நான் அன்றைக்கே சொன்னேன். நீ கேட்க மாட்டேன்னு சொன்னே... நட்பு.. அது.. இதுன்னு கதை விட்ட.. இப்ப பூனைக்குட்டி வெளியில் வந்து விட்டது.''

''அஜீத்.. இப்போதும் சொல்கிறேன். நான் அவளிடம் நட்பாகத்தான் பழகினேன்.''

''நீ பழகினாய்.. சரி.. அவள் எப்படிப் பழகினாள்.''

''நானும் உன்னிடம் ஒன்று கேட்கிறேன்.''

''கேளுலே...''

''நீயும்... அந்தப் பவித்ராவும் இந்நேரம் வரை உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தீர்களே... அது மட்டும் நட்பா?''

''நான் நட்புன்னு உன்கிட்ட சொன்னேனா?''

''பின்னே... நீ காதலிக்கிறாயா?''

''காதல்னும் உன்கிட்ட சொல்லவில்லையே.''

''பின்னே.. அதை.. என்னவென்று சொல்வாய்.''

''எதுவுமே சொல்ல மாட்டேன். அந்தப் பெண் சிட்டியில் பிறந்து வளர்ந்தது... நம்மைப் போன்ற நேட்டிவிட்டியுடன் கூடிய ஆண்களை முதன் முதலாய் பார்க்குது.. என்னிடம் ஏதோ ஒரு காரணத்தினால் இம்ப்ரெஸ் ஆகியிருக்கு. இப்போதைக்கு அதோட பிரியத்தை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அதை நட்புன்னும் நான் சொல்லலை... காதல்னும் எதிர்பார்க்கலை. பழகப் போகிறேன்.. நட்பாக இருந்தாலும் சரி... காதலாக மலர்ந்தாலும் சரி. என்னைப் பொறுத்தவரை எனக்கு இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கோட்பாடு இல்லையே...''

''நான் தப்புச் செய்து விட்டேனோ.''

''ஒரு வகையில் அப்படித்தான். ஒரு பெண்ணோடு பழகும் வாய்ப்புக் கிடைத்ததும் பழக ஆசைப்பட்டாய். அந்தப் பழக்கத்திற்கு ஒரு மரியாதை கிடைக்க வேண்டும் என்பதற்காக 'நட்பு' என்கிற வேலியைப் போட்டுக் கொண்டாய். இப்ப வந்தனா வேலியைத் தாண்டும் வெள்ளாடாகி விட்டாள். நீ பயப்படுகிறாய். இதுதான் விசயம்லே.''

அஜீத் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். ஆனால் இந்த அறிவுரையை முதலிலேயே கேட்டிருக்க வேண்டிய சதீஷ் காலம் கடந்து கேட்டுக் கொண்டிருக்கிறான்.



# 16



'டீன் ஏஜ்' என்று சொல்லப்படும் பருவம் பதின் மூன்று வயதில் ஆரம்பித்து பத்தொன்பது வயது வரை இருக்கும் பருவம்... இதைப் பெரியவர்கள் இரண்டும் கெட்டான் வயது என்பார்கள்.. சிறியவர்கள் 'யூத் பீரியட்' என்பார்கள். எல்லா மனிதர்களும் கடந்து வரும் இப் பருவம் வரையறுக்க முடியாத பருவமாகும்... ஆணுக்கு பெண் மீதும்.. பெண்ணுக்கு ஆண் மீதும் ஓர் இனம் புரியாத ஈர்ப்பு தோன்றுவது இப்பருவத்தில்தான். இப் பருவத்தில்தான் அவர்கள் மனதில் காதல் தோன்றும். அதைப் பெரியவர்களிடம் இளையவர்கள் சொல்லும் போது பெரியவர்கள் பயப்படுவார்கள். காரணம்.. அவை 'இனக்கவர்ச்சி' ஆக இருக்கக்கூடும் என்று அவர்கள் நினைப்பதுதான்.

ஒரு வகையில் அது உண்மையும் கூட... எந்த வகையான புரிதலும் இல்லாமல்.. வெளித் தோற்றத்தை வைத்தே மயங்கிவிடும் இளையவர்கள்.. யாரையாவது மிகவும் பிடித்துப் போய் விட்டால் அதற்கு காதலென்று பெயர் வைத்து விடுவார்கள்.

வந்தனாவின் நிலையும் அப்படித்தான். பதினெட்டு வயது கூட முடியாத பருவத்தில் கல்லூரியில் அடியெடுத்து வைத்தவள். சதீஷ் கூடப் பழகினாள். அவன் மேல் அவளுக்குள் ஓர் ஈர்ப்பு தோன்றி விட்டது. பத்தொன்பதாவது வயதில் அவன் மேலிருந்த ஈடுபாட்

டிற்கு 'காதல்' என்ற பெயரை வைத்து விட்டாள். இருபது வயதில் அவன் காதலைச் சொன்னபோது.. சதீஷ் விலகிச் சென்றான்.

''இப்போது நான் என்ன செய்ய அஜீத்..?'' சதீஷ் யோசனையுடன் அஜீத்திடம் வினவினான்.

''உன் மனம் சொல்வதைச் செய்லே.''

''என் மனம் சொல்வதையா.. புரியவில்லையே.''

''இதில் புரியாமலிருக்க என்ன இருக்கிறது?''

''மனம் போன போக்கில் வந்தனா போய்க் கொண்டிருக் கிறாள். என்னையும் அது போல் செய்யச் சொல்கிறாயா?''

''அவள் மனம் போன அதே திசையில் உன் மனமும் போனால்.. இருவரும் காதலிக்கலாம்லே. அதில் தப்பில்லை.''

''இல்லை அஜீத்.. என் மனதில் அவள் ஒரு தோழி என்ற நிலையில்தான் இருக்கிறாள். அதில் எந்த மாற்றமும் இல்லை...''

''அப்போ.. இதை அவளிடம் தெளிவாய் சொல்லிவிடு...''

''சொல்லிவிட்டேன்...''

''நான் தெளிவாய் சொல்லச் சொன்னேன்.''

''எப்படித் தெளிவாய் சொல்ல..? அவள்.. அவளைப் பற்றிய நினைவோடு மட்டும்தான் பேசுகிறாள்... அவ ளுடைய நிலையை.. அவளுடைய காதலை எனக்குப் புரிய வைக்க முயற்சி செய்கிறாளே தவிர.. என் மன நிலையை... என் மனதை புரிந்து கொள்ள மறுக்கிறாள்.''

''அவள் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறாள்.''

''ஆமாண்டா.. எதற்கெடுத்தாலும் அழுது தொலைக் கிறாள். இன்றைக்கு காலையில் கிளாஸ் ரூமிற்கு வந் திருக்கிறாள்.''



''இல்லையே... கிளாஸ் ரூமில் அவளை நான் பார்க்க வில்லையே... அவள் லீவுன்னு இல்லை நினைத்தேன்.''

''லீவெல்லாம் இல்லைடா. காலையில் வந்தவளிடம் இந்த திவ்யா போய் வெறுப்பேற்றி இருக்கிறாள்.''

''என்ன சொன்னாளாம்.''

''சதீஷும் நீயும் சண்டையான்னு கேட்டிருக்கிறாள்.''

''இதுகளுக்கு இதுதான் பொழைப்பாலே.''

''எனக்கும் அந்தக் கோபம்தான்.''

''அதற்கு வந்தனா என்ன சொன்னாளாம்.''

''உங்களால்தான் சதீஷ் என்கூட பேச மாட்டேன் என் கிறான்னு சொல்லி அழுது கொண்டே கிளாஸ் ரூமை விட்டுப் போய் விட்டாளாம்.''

''அவள் அழுததில் குற்றம் சொல்ல முடியாது. மனம் கஷ்டப்பட்டிருக்கலாம். ஆனால் திவ்யாவின் மேல் ஏன் பழி போடுகிறாள்? திவ்யா சொல்லியா நீ வந்தனாவை தவிர்க்கிறாய்? வந்தனா காதல் சொன்னதால்தானே நீ அவளிடம் பேசாமல் விலகிப் போகிறாய்?''

''அது அவளின் மர மண்டையில் உறைத்தால்தானே.''

''திவ்யா கோபமாய் பேசினாளா?''

''இல்லை. அவளுக்கும் வந்தனா அழுது கொண்டே போனாளேன்னு வருத்தம்தான். பட் என் வாயைக் கிளறி விஷயத்தைக் கறக்கப் பார்க்கிறாள்.''

''அவள் குணம் அது. விடுலே.''

''எனக்கு நிம்மதியே போச்சு அஜீத்.. படிப்பில் மனம் போக மாட்டேன் என்கிறது... இவள் வேறு கிளாஸை அட்டெண்ட் பண்ணாமல் ஹாஸ்டலே கதின்னு கிடக்

கிறாள். அவள் படிப்பு பாழாகி விட்டால் அது என்னால் தானோன்னு என் மனம் உறுத்தும்.''

''அப்போ.. அவ கூடப் பேசு.''

''ச்சு.. இனி என்னால் அது முடியாது.. அவள் மனதில் கள்ளம் வந்து விட்டது. இனி இயல்பாய் அவளுடன் பேசிப் பழக என்னால் முடியாது.''

''இது உன் மனதில் இருக்கும் கள்ளம்லே.''

''என்னடா சொல்கிறாய்? என் மனதில் கல்மிஷம் இல்லை அஜீத்.''

''உனக்குப் பயம்லே... இதுவரை பிரண்டாக இருந்தவள் கிட்ட இனிமேலும் அப்படியே பழக முடியுமாங்கிற பயம். எங்கே அவள் மேல் உனக்கு காதல் வந்து விடுமோங்கிற பயம். அச்சம் நரகம்லே. அச்சத்தை உடை.''

''எப்படிடா?''

''பேசுலே... அவளுடன் பேசு... உன்னைப் புரிய வை. இது நாள் வரைக்கும் ஒன்றாய் பழகியவர்கள் இன்றைக்கு பிரிந்து நின்றால் சுற்றி இருப்பவர்களின் கவனத்தில் அது படத்தான் செய்யும்... கேள்வி கேட்கத்தான் செய்வார்கள்... அதை முதலில் அவாய்ட் பண்ணு... நான் இப்படித்தான் இருப்பேன்... எனக்குக் காதல் சரி வராதுன்னு எடுத்துச் சொல்லு...''

அஜீத் போய் விட்டான். சதீஷ் யோசனையாக அமர்ந்திருந்தான். செல்போனை எடுத்து வந்தனாவின் நம்பர்கள் அழுத்தினான். ரிங் போன மறு நொடியே அவளது பரவசமான குரல் கேட்டது.

''சதீஷ்..'' அவளின் குரலில் இருந்த துடிப்பு சதீஷை பாதித்தது.



''வந்தனா.. நான் உன்கூடப் பேச வேண்டும். ஹாஸ்டலை விட்டு வெளியே வா.''

''நீ எங்கேயிருக்கிறாய்...''

''காலேஜ் காம்பவுண்டிற்குள்தான் இருக்கிறேன். நாம் வழக்கமாய் சந்திக்கும் மரத்தடியில்தான் காத்திருக்கிறேன்.''

அடுத்த ஆறாவது நிமிடத்தில் வந்தனா மரத்தடிக்கு வந்து விட்டாள். அவள் முகம் அழுது அழுது வீங்கியிருந்தது. கண்கள் சிவந்திருந்தன.

''அழுதாயா..''

வந்தனா பதில் சொல்லவில்லை. அவள் கண்கள் மீண்டும் கலங்கின.

''திரும்பவும் அழ ஆரம்பித்து விடாதே... காலையில் கிளாஸிற்கு வந்தவள் ஏன் கிளாஸை அட்டெண்ட் பண்ணாமல் திரும்பிப் போனாய்?''

''நீ ஏன் என்னிடம் பேசாமல் போனாய்..?''

''நான் பேசாவிட்டால்.. நீ படிக்க மாட்டாயா? இதற்குத்தான் உன் அப்பா.. அம்மா இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களா?''

''சதீஷ்.. நீ ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?''

''நீதான் என்னைப் பாடாய் படுத்துகிறாய்?''

''நான் உன்னைக் காதலிக்கக் கூடாதா...?''

''இதோ பார்... இதற்கு பதில் சொல்ல எனக்குத் தெரியாது. ஆனால் நான் உன்னைக் காதலிக்க முடியாது. அதை முதலில் நீ புரிந்து கொள்.''

''ஏன்..?''

''ஏன்னா.. என் மனதில் உன் மேல் பாசம் தான் வருகிறது. காதல் வரவில்லை. வலுக்கட்டாயமாக உன்னைக்

காதலிக்க என்னால் முடியவில்லை. இத்தனை நாளும் நான் மற்ற பிரண்ட்ஸ்களுடன் எப்படிப் பழகினேனோ.. அப்படித்தான் உன்னோடும் பழகினேன். திடீர்னு 'காதலி' என்று சொன்னால் என்னால் எப்படி உன்னைக் காதலிக்க முடியும்?''

''ஏன் சதீஷ்.. என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?''

''உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் வந்தனா. அது உனக்கும் தெரியும். உன் மேல் பாசமும்.. அக்கறையும் இருப்பதால்தான்.. நான் உன் எதிர்காலம் பாழாகி விடக் கூடாதென்று கவலைப்படுகிறேன். காதல் என்பது வேறு வந்தனா. அது மனதில் எழும் கிளர்ச்சி... மன்னித்து விடு. உன்னைப் பார்த்தால் எனக்குள் அந்தக் கிளர்ச்சி தோன்றவில்லை.''

''சதீஷ்...''

''வாழ்வில் காதலும்... கல்யாணமும் ஓர் முறைதான் என்ற கொள்கை உடையவன் நான். அதை பலவந்தமாக எனக்குள் உருவாக்க என்னால் முடியவில்லை. உன்னைத் தோழியாகவே நினைத்துப் பழகி விட்டேன். காதலியாக நினைக்க என்னால் ஒரு நாளும் முடியாது...''

சதீஷ் ஆழமான குரலில் இதைச் சொன்னான். கேட்டுக் கொண்டிருந்த வந்தனாவின் இதயம் வலித்தது. அவள் நீர் வடியும் விழிகளை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.



# 17

அவர்கள் அமர்ந்திருந்த மரத்தடியில் இருந்த பெஞ்சின் மேல் மலர்கள் உதிர்ந்து விழுந்து கொண்டிருந்தன...



மரத்தில் இருந்த குயில் ஒன்று தீனமாய் கூவியது. வந்தனாவின் மனம் காதல் தோல்வியில் கசிந்து உருகியது. உதிர்ந்து கிடந்த மலர்களைப் பார்த்தாள். அவள் மனம் அங்கே கேட்பாரில்லாமல் கிடப்பது போல் அவளுக்குத் தோன்றியது. ஒரு மலரை எடுத்துக் கையில் வைத்துப் பார்த்தாள்.

''ஏன் அந்தப் பூவை அப்படிப் பார்க்கிறாய் வந்தனா?''

''சதீஷ்... பூ மலர்ந்தால்.. ஒன்று தெய்வத்திற்கு மாலையாக வேண்டும். இல்லையென்றால் பெண்களின் தலையில் பூச்சரமாக வேண்டும். இது எதுவும் இல்லாமல் இப்படி உதிர்ந்து போய் கிடக்கிறதே... இது மலர்ந்ததற்கு அர்த்தம் ஏதாவது இருக்கிறதா?''

சதீஷ் விசனப்பட்டான். அவளின் துயர் அவன் மனதை என்னவோ செய்தது. மனதைத் துக்கம் சூழ்ந்து பிசைய கரகரத்த குரலில் கூறினான்.

''நீ விரக்தியில் பேசுகிறாய். என் நிலையைப் புரிந்து கொள்ள மறுக்கிறாய்... வந்தனா.. நீ மிகவும் அழகான பெண்... என்னை விட நன்றாகப் படிப்பவள். உன் குணத்தில் குற்றம் குறை ஏதும் இல்லை. இத்தனை இருந்தும் என் மனதில் உன் மேல் ஏன் காதல் வரவில்லையென்று யோசித்துப் பார்த்தாயா?''

''யோசித்துப் பார்த்தும் விட்டேன். உன்னிடம் கேட்டும் விட்டேன்.''

''நீ நாம் பழக ஆரம்பித்தவுடனே உன் காதலைச் சொல்லியிருக்க வேண்டும். நீ சொல்லாமல் விட்டு விட்டாய். நீ ஒரு வேளை உன் காதலைச் சொல்லியிருந்தால்... உன் அழகு என்னைப் பாதித்திருக்கும். நீ என் காதலியாக மனதில் பதிந்திருப்பாய். இப்போது ஓர்

தோழியாக மனதில் பதிந்து விட்டாய்.. அது மாறாது.. உன் மேல் பரிவுதான் வருகிறது.. காதல் வரவில்லை.''

''இனிமேல் வராதா..?''

''எப்படி வரும்..? உன்னிடம் சொல்வதற்கு என்ன.. அதோ.. விறகுக்காக சுள்ளி பொறுக்கிக் கொண்டிருக்கிறாளே.. அழுக்குத் தாவணியுடன்.. இருக்கும் ஏழைப் பெண். அவளைக் கூட ஆர்வமாய் பார்க்கத் தோன்றுகிறது. உன் மேல் அப்படியொரு ஆர்வம் வரவில்லை. வாழ்க்கையில் என்னை ரிஸ்க் எடுக்க வைக்காதே.''

''இதைச் சொல்லத்தான் என்னை வரச் சொன்னாயா?''

''ஆமாம்.''

''உன்னை மறந்து விடச் சொல்கிறாயா?''

''நான் உன்னை மறந்து விட்டேனா.. இல்லை என்னால் உன்னை மறக்க முடியுமா?.. உன் அழுகையும்.. கண்ணீரும் துயரமும்.. என்னைப் பாதிக்கப் போய்த்தானே நான் காலேஜ் முடிந்ததும் வீட்டிற்குப் போகாமல் உன்கூட உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்... என்னால் உன்னை விட்டுக் கொடுக்க முடியாது வந்தனா.. ஒரு காதலியாக இல்லாமல் தோழியாக என் வாழ்வின் இறுதி வரை நீ என் கூட வரலாம்...''

''எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.''

''நான் கேட்பதற்கு முதலில் பதில் சொல்... உன் பிரண்ட்ஸ்கள் நம் நட்பைப் பற்றித் தவறாகப் பேசுகிறார்கள்ன்னு நீதானே சொன்னாய்...''

''ஆமாம்.''

''என்னவென்று நினைப்பதாகச் சொல்லிச் சங்கடப்பட்டாய்?''



''நாம் காதலிக்கிறோம்ன்னு நினைத்தார்கள்.''

வந்தனாவின் குரல் தடுமாற்றத்துடன் வந்தது.

''பார்த்தாயா.. இதைச் சொல்லும் போதே எவ்வளவு தடுமாறுகிறாய்? ஏன்?''

''அப்போது நான் உன்னைக் காதலிக்கவில்லை சதீஷ். அதனால் அவர்கள் சந்தேகப்பட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.''

''இப்போது அதையே உண்மையாக்கப் பார்க்கிறாய்.. என்னால் மட்டும் இதைத் தாங்கிக் கொள்ள முடியுமா? மற்றவர்களுக்காக நாம் வாழவில்லை.. ஆனால் மற்றவர்கள் முன்னால் தலை நிமிர்ந்து நின்ற நாம் இனி தலை குனிவோம். நாங்கள் என்ன இல்லாததையா சொன்னோம் என்று அவர்கள் கேட்பார்கள்.''

வந்தனா மௌனமாக இருந்தாள்.

''ஓகே அவர்கள் கேட்டால் கேட்டு விட்டுப் போகட்டும். நம் விசயத்தில் தலையிட அவர்கள் யார் என்று போய் விடலாம். ஆனால் மனதில் உன் மேல் காதல் இல்லாமல் வெளியில் உன் மனம் வருத்தப்படக் கூடாது என்பதற்காக நான் நடிக்க வேண்டி இருக்கும்... அதுவும் உனக்குச் செய்யும் கொடுமைதான் அது பரவாயில்லையா.''

வந்தனாவின் முகத்தில் யோசனை வந்தது...

''நாம் நான்காவது வருடம் வந்து விட்டோம். இன்னும் ஒன்றரை வருடம் தான்... நாம் படிப்பு முடிந்து வேலைக்குப் போய் விடுவோம்... இந்த இடைபட்ட நாட்களில் உண்மையிலேயே எனக்கு வேறு ஒரு பெண்ணின் மேல் காதல் வரலாம். அந்தக் காதலைக் கொன்று விட்டு... பொய்யாய் உன்னுடன் வாழ வேண்டும். வாழலாமா..? அப்படி ஒரு வாழ்க்கையை நீயும் நானும் வாழலாமா?''

வந்தனா அதிர்ந்து நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

''சம்மதமென்றால் சொல்லு.. நானும் உன்னிடம் ஐ லவ் யூ சொல்லுகிறேன். ஆனால் ஒன்று. அது என் மனதில் இருந்து வராது. உதட்டிலிருந்துதான் வரும்... நாம் காதலிக்கலாம்.. உன்னிடமிருக்கும் காதலைப் போல் என் காதல் உண்மையானதாக இருக்காது... என்ன.. காதல் செய்யலாமா?''

வந்தனா தவித்தாள். அவளது தவிப்பு அவள் விழிகளில் தெரிந்தது. சதீஷ் அவளது தவிப்புக் கண்டு மனம் இளகினான். அவளுக்காக இரங்கினான்.

''வந்தனா.. இப்போதும் சொல்கிறேன்.. உனக்காக நான் எதையும் செய்வேன்.. என்னால் உன் கண்களில் இருந்து கண்ணீர் வருவதைப் பார்க்க முடியாது... உன் துயரத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாது. என் கண் முன் நீ துன்பப்பட நான் விட மாட்டேன். சொல்லு.. நீ எது சொன்னாலும் நான் அதற்கு கட்டுப்படுகிறேன்.''

வந்தனா எழுந்து கொண்டாள். சதீஷை நோக்கி கரம் நீட்டினாள். அவளது கையைப் பிடித்துக் கொண்டு எழுந்த சதீஷிடம்..

''தேங்க்ஸ்..'' என்றாள்.

''எதற்கு...''

''எனக்காக இவ்வளவு தூரம் யோசிக்கிறாயே... அதற்கு... நான் நாளைக் காலை என் முடிவைச் சொல்லுகிறேன் சதீஷ்.''

விறுவிறுவென அவனைத் திரும்பிப் பார்க்காமல் ஹாஸ்டலை நோக்கி நடந்து விட்டாள் அவள்.

சதீஷ் ஒரு பெருமூச்சுடன் வண்டியை எடுத்தான். அவன் மனம் கொஞ்சம் அமைதியை அடைந்திருந்தது.



மறுநாள் காலையில் அவர்களது வழக்கமான மரத்தடியில் சதீஷ் முதலில் வந்து காத்திருந்தான்.

''ரொம்ப நேரமாக எனக்காகக் காத்திருக்கிறாயா?'' என்ற வந்தனாவின் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தான்.

குளித்துப் புத்துணர்வுடன் அன்று பூத்த புது மலர் போல் அழகாக... பளிச்சென்று இருந்தாள்... முகத்தில் முதல் நாளைய குழப்பமோ.. வருத்தமோ தென்படவில்லை. தெளிவாக இருந்தாள்... அவன் அருகில் அமர்ந்தாள்...

''நன்றாகத் தூங்கினாயா வந்தனா...''

''ம்ம்... தூங்கியது என்னவோ நடுநிசிக்கு மேல் தான். ஆனால் நன்றாகத் தூங்கினேன் சதீஷ். தேங்க்ஸ் பார் ஆல்.. உன்னை எனக்கு உணர்த்தினாய்.''

இப்போது சதீஷ் மௌனமானான்.

''நான் யோசித்தேன் சதீஷ். எனக்கு உன் மேல் எதனால் காதல் வந்தது? நீ என் மீது காட்டும் அன்பு.. அக்கறை.. பாசம்.. இது எல்லாமே.. நாம் காதலிக்க ஆரம்பித்தால் மறைந்து போய் விடுமென்றால் அந்தக் காதலில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா.. சொல்லு...''

சதீஷ் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

''பொய்யாய் என்னை நீ காதலிப்பதைவிட.. உண்மை சொல்லி நாம் நண்பர்களாகவே இருந்து விடுவது பெட்டர்.. நீ சொல்வது போல்.. வாழ்வில் நாம் கல்யாணம் என்ற ஒன்றில் ஓர் முறைதான் நுழைய முடியும். அது கடைசி வரை நிலைக்க வேண்டும். பொய்யான வாழ்க்கை வாழ்வது என்னால் முடியாத விஷயம்.''

சதீஷின் முகத்தில் புன்னகை வந்தது...

''காதல் என்பது என்ன சதீஷ்? அதீதமான அன்பு... அது எனக்கு உன் மேல் இருக்கிறது... நட்பு என்பது

என்ன.. நண்பருக்காக உயிரையும் கொடுப்பது... நீ உன் உயிரினும் மேலான வாழ்க்கையை எனக்காக விட்டுக் கொடுக்கிறேன் என்கிறாய்.. எனக்கு இது போதும். இதைத் தாண்டி ஓர் நிறைவை உன் காதல் எனக்குக் கொடுத்து விடாது. நாம் நண்பர்களாக இருப்போம். கடைசி வரை..''

வந்தனாவும் சதீஷும் கலகலப்பாய் பேசிக் கொண்டிருப்பதை வியப்புடன் பார்த்தவாறு அஜிதாவும் திவ்யாவும் அவர்களைத் தாண்டிச் சென்றனர்.

அஜீத் ஹாஸ்டலை விட்டுத் தன் வண்டியை வெளியில் எடுத்தான்....

''அவுட்டிங்கா... அஜீத்....'' கர்ணன் வினவினான்...

''ஆமாம்லே.....''

''நானும் ஜாயின் பண்ணிக்கவா?''

''வேறு ஒரு ஆள் காத்திருக்குதே....''

''யாருடா அது?''

''பவித்ரா.....''

''என்னது...''

கர்ணன் ஆவென்று வாய் பிளந்து நிற்க.. அஜீத் வண்டியை ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.... தூரத்தில் பவித்ரா நிற்பது தெரிந்தது.... அவளருகில் சென்று வண்டியை நிறுத்தினான்.

பவித்ரா கருநீல நிறத்தில் வெள்ளைக் கற்கள் பதித்த சல்வார் அணிந்திருந்தாள். அவளது சிவந்த நிறத்திற்கு அந்த நிறம் மிகப்பொருத்தமாக இருந்தது. காதுகளிலும்... கழுத்திலும்... கைகளிலும்... வெள்ளைக் கற்கள் பதித்த நகைகளை அணிந்திருந்தாள். சாராவைப் போல் லிப்ஸ்டிக் தீட்டாத இதழ்கள். ஒளிவீசும் கண்கள்..



வட்டமுகம்.. நெற்றியில் சின்னக்கல் பதித்த ஸ்டிக்கர் என்று அளவான ஒப்பனையோடு அழகாக இருந்தாள்...

''தேங்க்ஸ்... சொன்னபடி வந்து விட்டீங்க...''

''நான் சொல்லமாட்டேன்... சொன்னால் செய்யாமல் இருக்கமாட்டேன்...''

''அப்படியே தமிழ் ஹீரோக்கள் போலவே பேசுகிறீங்களே....''

''என்னைப் போல் அவர்கள் பேசுகிறார்கள்...''

''ஊஹீம்...?'' என்று மெச்சுதலாய் புன்னகைத்தவள் அவன் வண்டியின் மீது பார்வையை ஓட்டினாள்.

''பல்ஸரா....?''

''ஆமாம்....''

பவித்ரா அவன் பின்னால் ஏறிக்கொள்ள வண்டியை ஸ்டார்ட் செய்த அஜித்.... ''எங்கே போகலாம்?'' என்று வினவினான்.

''யுவர் சாய்ஸ்..... எனக்கு இந்த ஊரைப் பற்றி ஒன்றும் தெரியாது....''

''ஓகே... திருப்பரங்குன்றம் கோவிலில் இருந்து ஆரம்பிக்கலாம்....''

''சரி...''

திருப்பரங்குன்றம் கோவில் வாசலில் போய் இறங்கினார்கள்...

''இது ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் முருகன் கோவில்.. இங்குதான் அவர் தெய்வானையை திருமணம் செய்து கொண்டாராம்.. தெய்வானை தேவேந்திரனின் மகள்....''

அஜீத் சொல்லிக் கொண்டே கோவில் படியேற... சிரத்தையாய் கேட்டபடி பவித்ரா அவனுடன் சென்றாள். முதலில் விநாயகரை வணங்கி விட்டுச் சென்றார்கள்.

முருகனை தரிசனம் செய்தபின் அவனது தாய் தந்தையரான மீனாட்சி சொக்கநாதரை தரிசனம் செய்ய மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றனர்... ஆயிரம் கால் மண்டபத்தைப் பார்த்த பவித்ரா

''வாவ்... பெண்டாஸ்டிக்....'' என்றாள்.

''இதுதான் பொற்றாமரைக் குளம்.. பொன் தாமரைக் குளம் என்று அர்த்தம்.... நக்கீரர் மீது கோபம் வந்து இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டாராம்.... நக்கீரை வெப்ப நோய் தாக்கி விட்டதாம்... இந்தக் கோவிலில்... இந்தக் குளத்தில் மூழ்கி எழுந்த உடனே அவரது நோய் மறைந்து விட்டதாம்....''

''இன்ட்ரெஸ்டிங்...''

''இந்த ஊரை ஆண்டதே இறைவனும்... இறைவியும் தான் என்றால் இந்த ஊரின் அற்புதம் உனக்குப் புரியும்.... இறைவனின் திருவிளையாடல்கள் பல இந்த ஊரில் நடந்ததுதான்... நீ 'திருவிளையாடல்' என்ற பழைய படத்தைப் பார்த்தால் இந்த ஊரின் அருமை புரியும்....''

..... பெரிய அளவில் இருந்த விநாயகரை வணங்கி முடித்த பின் மீனாட்சி சொக்கநாதரை வழிபட்டனர்... தொன்மையான பழைய சொக்கநாதர் கோவிலுக்கு பவித்ராவை அழைத்துச் சென்றான் அஜீத்... அங்கும் அபிஷேக ஆராதனை முடிந்து வெளியே வந்தவுடன் பவித்ரா கேட்டாள்.



''காலையில் கிளம்பியதில் இருந்து கோவில்களுக்கே கூட்டிக் கொண்டு போகிறீங்களே...''

''இது 'கோவில் நகரம்' பவித்ரா... தெருவுக்கு ஒரு கோவில் இருக்கும் ஊர் மதுரை.. இங்கே நடக்கும் சித்திரைத் திருவிழா ரொம்ப பேமஸ்.... அதேபோல் இந்த ஊருக்கு 'கோவில் நகரம்' என்ற பெயருடன் கூட 'தூங்கா நகரம்' என்ற பெயரும் உண்டு....''

''ஏன்.....? இங்கே யாரும் தூங்க மாட்டார்களா?''

''ஒருவகையில் அப்படித்தான் பவித்ரா.... இந்த ஊரில் விடிய விடிய ஜன நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும்... இரவு நேர இட்லிக் கடைகள் இயங்கிக் கொண்டே இருக்கும்....''

''ஈஸிட்.... நீங்க சொல்லச் சொல்ல எனக்கு இந்த ஊரை நைட் பூராவும் சுற்றிப் பார்க்கனும்னு ஆசையாய் இருக்கிறது.. நெக்ஸ்ட்வீக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறீங்களா....''

''எதுக்கும்மா.... இந்த விசப்பரிட்சை? பாத்ரூம் சுவரில் நம்மைப்பற்றி நாவல் எழுதிப் போடட்டும்கிற நல்ல எண்ணமா? பேசாமல் வா... இப்போது உன் கூட நகர் உலா வருவதற்கே... இந்நேரம் ஹாஸ்டல் முழுக்க பட்டிமன்றம் நடந்து கொண்டிருக்கும்... இந்த லட்சணத்தில் நைட் நேரத்தில் நகர்வலம் வரணுமாம்....''

பவித்ராவுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே அஜீத்தின் இயல்பான வழக்கம் வந்து விட அவன் அவளை 'வா....போ'வென்று அழைத்துப் பேச ஆரம்பித்திருந்தான்.... அதை உணர்ந்த பவித்ராவின் இதழ்களில் புன்னகை தோன்றியது...

'எதற்குச் சிரிக்கிறாய்?''

''சும்மா....''

''சும்மா... சும்மா சிரிக்காதே.... இது மதுரை...''

''பயமுறுத்துகிறீங்களா?''

''உண்மையைச் சொன்னேன்....''

திருமலை நாயக்கர் மஹாலை பார்த்து முடித்ததும்.... பசி வந்து விட அங்கிருந்த ஹோட்டலில் நுழைந் தார்கள்.

'ஆமாம்... பயமேயில்லாமல் என் கூட ஊர் சுற்று கிறாயே.... இது எப்படி?''

''ஏன்.... எதற்குப் பயப்பட வேண்டும்?''

''நீ வயதுப் பெண்... நான் வயதுப் பையன்...''

''ஸோ...வாட்....?''

''இல்லை பெரியவர்கள் ஒரு பழமொழி சொல் வார்கள்...''

''என்னவென்று....?''

''பஞ்சையும்... நெருப்பையும் பக்கத்தில் வைக்கக் கூடாதாம்....''

''வைத்தால் பற்றிக் கொள்ளுமாக்கும்... என்னே அறிவு....'' கலகலவென்று சிரித்தவளை.. கண்ணோடு கண் பார்த்தான் அஜீத் ...பின் ஆழ்ந்த குரலில் நிதான மாகக் கேட்டான்.

''உண்மையாகவே உனக்குப் பயமாக இல்லையா?''

''இல்லை அஜீத்.... நீங்கள் முதன் முதலில் என்னைக் கூப்பிட்டுக் கொண்டு போய் காட்டின இடங்கள் எல்லாமே கோவில்கள்... நீங்கள் பேசியதெல்லாம்



தெய்வத்தின் திருவிளையாடல் புராணங்கள்.... நீங்கள் கெட்டவராக இருக்க முடியாது...''

அஜித்தின் முகத்தில் இளநகை அரும்பியது... 'இவள் புத்திசாலி... ஆண்களை எடைபோட்டே பழகுகிறாள்' என்று தோன்றியது.

''பட் ஒன்திங் அஜீத்...''

''என்ன....?''

''நான் பஞ்சுபோல் மென்மையானவளோ இல் லையோ.. எனக்குத் தெரியாது. நீங்கள் நெருப்பைப் போல் கோபமானவர்... வீரமானவர்...''

''ஹா...ஹா...''

அவர்கள் ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும் பவித்ரா கேட்டாள்.

''அடுத்து எங்கே போகிறோம்...''

''சிவபெருமானைப் பார்த்துவிட்டோம் இல்லையா.. இனி அவருடைய மைத்துனரைப் பார்க்க வேண்டாமா?''

பவித்ரா விழித்தாள்.

''உனக்கு புராணம் தெரியாது இல்லையா... நாம் இப்போது பெருமாளை சேவிக்கப் போகிறோம்....''

தூரத்தில் பச்சைப் பேசேலென்ற மரக்கூட்டங்களின் மத்தியில் அழகர் கோவில் தெரிந்தது.

# 19



''அங்கே பார்த்தாயா பவித்ரா... கோவிலின் கோபுரம் தெரிகிறதா? அங்கே கொலுவிருப்பது... அழகர்...

கள்ளழகர்.. எங்களது நாராயணப் பெருமாள். வெங்கடா ஜலபதி கடவுள்... சித்திரைத் திருவிழாவில் இவர் மீனாட்சி கல்யாணத்திற்கு சீர்கொண்டு வருவது சிறப்பாகக் கொண்டாடப்படும்....''

''இவர் ஏன் சீர் கொண்டு வர வேண்டும்?''

''இவர்தானே மீனாட்சியம்மனின் அண்ணன்... இவர் ஆற்றில் இறங்கி வருவதை.. அழகர் ஆற்றில் இறங்கும் விழாவாக சிறப்பாகக் கொண்டாடுவார்கள்... அப்போது வைகை ஆற்றில் எள் போட்டால் விழக்கூட இடமிருக் காது....''

''அஜித்.. அஜித்...''

''அழகர் ஆற்றில் இறங்கும்போது கூட்டிக் கொண்டு வந்து காண்பியுங்கள்.. இதைத்தானே சொல்லப் போகிறாய்?''

''அட.. ஆமாம்... எப்படிக் கண்டுபிடித்தீர்கள்...''

''இதற்கு போய் குறி கேட்டு விட்டா வரவேண்டும்... உன்னிடம் தான் வாயைத் திறந்து எந்த வரலாறையும் பேச முடியவில்லையே.. எதைச் சொன்னாலும்..' என்னைக் கூப்பிட்டு கொண்டு போ' தானே.... நல்லவேளை... இமயமலையைப் பற்றி நான் வாய் திறக்கவில்லை... திறந்திருந்தால் எவரெஸ்டிற்கு என்னைக் கூப்பிட்டுக் கொண்டு போன்னு சொல்லியிருப்பாய்...''

விநாயகரை வணங்கி விட்டு உள்ளே சென்றார்கள்... திவ்யமாய் தரிசனம் தந்த அழகர் பெருமாளை வணங் கிய பின்.. மலைப்பாதையில் வண்டியை ஓட்டினான் அஜீத்.

''வாவ்.... நீரோடை வருகிறதே... மேலே அருவி இருக்கிறதா?''



''ஆமாம்... அது சுனை....''

''அப்படியென்றால்.....''

''வா... காட்டுகிறேன்.. முதலில் கீழே இறங்கு... இதுதான் பழமுதிர்சோலை... முருகனின் ஆறு படை வீடுகளில் இதுவும் ஓர் படைவீடு... இங்கேதான் முருகன் வள்ளியை காதலித்து காதல் திருமணம் செய்து கொண்டார்....''

''இதென்ன அஜித்... அங்கேயும் தெய்வானையைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்னு சொன்னீங்க.. இங்கேயும் வள்ளியைக் கல்யாணம் பண்ணிக் கொண் டார்னு சொல்றீங்க...''

''முருகன் இரண்டு கல்யாணம் பண்ணிக் கொண் டால் சொல்ல மாட்டேனா? வள்ளி, தெய்வானை இரண்டு பேரும் முருகனின் தேவிகள்.. இதில் பாரு பவித்ரா... திருப்பரங்குன்றத்தில் இருந்து பழமுதிர் சோலை ஒன்றும் தூரமில்லை.... பக்கம்தான்... சில கிலோ மீட்டர்களுக்குள்ளேயே முருகன் இன்னொரு தேவியைத் தேடிக்கொண்டார் பார்த்தாயா....''

''உங்களுடைய ஆண் புத்தி எதைக் கண்டு பரவசப் படும்... சாமியைக் கும்பிடுங்கள்....''

வள்ளி தேவியுடன் முருகனை வணங்கி விட்டு வெளியே வந்தபோது அவர்கள் இருவரும் மனத்தால் நெருங்கியிருந்தனர்.

''தம்பியின் காதல் கல்யாணத்திற்கு விநாயகப் பெரு மான் ஹெல்ப் பண்ணினாராம்.....''

''அருமையான அண்ணன்..''

மலை மீது ஏறி தீர்த்தத்தை தரிசனம் செய்து விட்டு.... மலையிறங்கும் போது பவித்ராவின் மனம் நிறைந் திருந்தது..

''ஸோ நைஸ் டே.... இந்த நாளை... எப்போதும் மறக்க மாட்டேன் அஜித்...''

''ஈவினிங் ஆகிவிட்டது பவித்ரா... வெயில் இறங்கு முன் ஹாஸ்டலுக்கு போய் விட வேண்டும்...''

''ஏன் உன்னை எதுவும் சொல்லிவிடுவார்களா....?''

''என்னை ஏன் சொல்லப் போகிறார்கள்? இது ஆண் களுக்கான உலகம்... உன்னைத்தான் சொல்லுவார்கள்....''

''எவ்வளவு ஆணவம்?''

''உண்மையைச் சொன்னால் ஆணவமா?''

மதுரை செல்லும் சாலையில் பல்ஸர் திரும்பியது... எதிர்காற்று முகத்தில் மோதி பவித்ரா வாய்விட்டு பாட ஆரம்பித்தாள்.

''தென்றல் வந்து என்னைத்தொடும்- ஆஹா

சத்தமின்றி முத்தம் தரும்..

பகலே போய் விடு......''

அஜீத் ஆச்சரியப்பட்டான்.. பெங்களூரில் இருந்து வந் திருக்கிறாள்... அழகாய் சல்வார் அணிந்து.. அடக்கமாய் சாமி கும்பிட்டு... இயல்பாய் பழகி.. இதமாய் பழைய பாடலைப் பாடுகிறாளே.... இவள் எங்கிருந்து வந்தாள்....? எனக்கென வந்தாளோ?

''உனக்கு பழைய பாடல்கள் கூடப் பாடத் தெரியுமா?''

''இந்தப் பாட்டை ஒருதரம் டிவியில் பார்த்தேன்... பிடித்திருந்தது. பர்ஸ்ட் மூன்று வரிகள் மட்டும்தான் தெரியும்...''



''அதையே வைத்து ஓட்டுகிறாய் போல....''

''நானும் கேட்க வேண்டும்... கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு இருந்தேன் அஜீத்...''

''நீ நினைத்ததை கேட்டு முடிப்பவள் ஆயிற்றே.. கேள்....''

''நீங்கள் எல்லோரும்....''

''நாங்கள்ன்னா யார்....?''

''அதுதான் பாய்ஸ்... சேவல் பண்ணை....''

''சேவல் பண்ணையா?''

''நீங்க மட்டும் கேர்ள்ஸை கோழிப்பண்ணைன்னு சொல்லலாமா?''

''பதிலுக்குப் பதிலா....ம்ம்... போட்டுத் தாக்கு....''

''நீங்கள் மட்டும் எப்படி இவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறீர்கள்?''

''அது உனக்குப் பொறுக்கவில்லையா...?''

''அப்படியில்லை அஜீத்... நீங்களும் சண்டைபோட் டுக் கொள்கிறீர்கள் உங்களுக்குள் ஒருவரை ஒருவர் காலைவாரிக் கொள்கிறீர்கள்... ஆனாலும் ஒற்றுமையாகி விடுகிறீர்கள்... அது எப்படி....''

''நாங்கள் பிரண்ட்ஸுக்குள் ஈகோ பார்க்க மாட் டோம்...''

''ஓ... அப்படி ஒன்னு இருக்குதில்ல.... நாங்கள் சின்னதாய் ஓர் வார்த்தை மாறிப்பேசி விட்டால் கூட வருடக் கணக்கில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள மாட்டோம்... நீங்கள் அடித்து உருண் டாலும் ஒன்று சேர்ந்து கொள்ளுகிறீர்கள்....''

''ஹா....ஹா...''

''என்ன ஓர் சிரிப்பு... இப்போது எதை நினைத்து சிரிக்கிறீங்க....''

''நாங்கள் எது நடந்தாலும் டேக் இட் ஈஸி பாலிஸியில் போய்விடுவோம். இப்படித்தான் தீபாவளிச் சமயத்தில் எங்கள் ரூமில் கர்ணன் வந்து அணுகுண்டை வெடித்து விட்டுப் போய்விட்டான்...''

''ரூமிற்குள்ளா....''

''அட... ஆமாம்கிறேன்... நான் படுத்து தூங்கிக் கொண்டிருந்தேன்.. சுனில் படித்துக் கொண்டிருந்தான்... அபிஷேக் போன் பேசிக் கொண்டிருந்தான்.. அப்போது கர்ணன் வந்து ரூமிற்குள் அணுகுண்டை வைத்து விட்டு ஓடி விட்டான்...''

''ஐயையோ....''

''சுனில் அதைக் கவனித்து விட்டு எல்லோரிடமும் சொல்ல வாய் திறப்பதற்குள் வெடி வெடித்துவிட்டது....''

''அப்புறம்...?''

''அப்புறம்... ரூமெல்லாம் ஒரே புகை மண்டலம் தான்....''

''நீங்கள் கர்ணனை திட்டவில்லையா....?''

''ஊஹூம்.. நாங்களும் அவன் ரூமிற்குள் ஓர் அணு குண்டைவீசி விட்டு வந்தோம்....''

பவித்ரா சிரித்தாள்...

''ம்ம்.. பாய்ஸின் உலகமே வேறு..''

''ஆமாம்.. நாங்கள் ஒருவரையொருவர் லந்து அடித் துக் கொள்வோம்.. ஆனால் அதையெல்லாம் சீரியஸாக



எடுத்துக் கொள்ளமாட்டோம்.. இப்படித்தான்.. காலே ஜில் ஜாயின் பண்ணிய சமயத்தில் ராகிங் அதிகமாக இருந்தது.. அதிலும் ஹாஸ்டலில் நேரம் கெட்ட நேரத் தில் சீனியர்கள் ரூம் கதவைத் தட்டி வம்பிழுப்பார்கள்....''

''அது கொடுமை அஜித்....''

பவித்ராவின் மனக்கண்ணில் நாவரசின் முகம் தோன் றியது...

''கொடுமைதான்.. ஆனால் இதை யார் நிறுத்துவது.... எத்தனை சட்டங்கள் போட்டாலும்.. இது அடங்கவே மாட்டேன் என்கிறதே.....''

# 20



''நீங்கள் ராகிங் பண்ணுவீர்களா?''

''கலாட்டா பண்ணுவோம்...''

''அதுதானே... அதைச் செய்யாவிட்டால்.... நீங்கள் எப்படி நிம்மதியாய் உறங்க முடியும்? அது உங்கள் பிறவிக்குணம் ஆயிற்றே.. அதுசரி.. எதையோ சொல்ல வந்தீர்கள்.. பாதியில் நிறுத்திவிட்டு வேறு கதைக்கு போய் விட்டீர்கள்...''

''போனது நானா... நீயா....?''

''ஓகே... நான்தான்.. நீங்கள் சொல்லுங்கள்.''

''ஒரு நாள் லேட்டாகப் படுத்துத் தூங்கினோம்....''

''படித்துக் கொண்டிருந்தீர்களா...''

''அதை எக்ஸாம் சமயத்தில் மட்டும்தான் செய்வோம்.''

''வேறு எதனால் லேட் ஆனது?''

''அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்...''

''அதுதானே பார்த்தேன்...''

''விடியற்காலையில் யாரோ 'டமடம' வென்று கதவைத் தட்டினார்கள்... பசங்கள் யாரோ சீனியர்ஸ்தான் ராகிங் பண்ண கதவைத் தட்டுகிறார்கள்ன்னு நினைத்து விட்டாங்க....''

''நீங்க என்ன செய்தீங்க...''

''எவன் கதவைத் தட்டுறதுன்னு பாரு கர்ணா... அவன் செவுளை பிய்த்து விடுவோம்ன்னேன்...''

''அதுதானே... பார்த்தேன்..''

''கர்ணன் கோபமாய் போய் கதவைத் திறந்தான்...''

''சீனியர்ஸ்தானே நின்று கொண்டிருந்தாங்க...?''

''அதுதான் இல்லை.. நம்ம ராதா நின்று கொண்டிருந்தான்....''

''யார்.. நம்ம கிளாஸ் மேட் ராதாகிருஷ்ணனா?''

''அவனேதான்....''

''என்னவாம்...?''

''சொன்னால் சிரிப்பாய்....''

''நீங்கள் சொல்லுங்கள்... சிரிப்பு வருகிறதான்னு பார்க்கிறேன்...''

''கர்ணன் கதவைத் திறந்ததும் ராதா அக்கறையாய்... டேய்.. இன்றைக்கு ஸ்பெசல் பிரியாணிடா... செம சூப்பர் டேஸ்ட்.. சாப்பிட வரவில்லையான்னு கேட்டான்....''



''இதை நான் எதிர்பார்க்கவேயில்லை அஜித்...''

பவித்ரா சிரித்தாள்...

''கர்ணனுக்கு கோபம் வந்து விட்டது... சீனியர்ன்னு நினைத்து பயந்தது டென்சனா மாற... 'டேய்.. இதைச் சொல்லத்தான் கதவை இந்தத் தட்டு தட்டினாயா... எங்களுக்கு கொட்டிக்கத் தெரியாதா.. நீ கொட்டிக்கிட்ட இல்லை.... அத்தோடு போக வேண்டியதுதானே... ஏன்டா எங்க உயிரை எடுக்கறே'ன்னு சத்தம் போட்டு விட்டான்...''

''டென்சன்...''

''அதேதான்....''

''ஆனாலும் நீங்க ராதாவை நிறைய வம்புக்கு இழுக்கிறீர்கள்.''

''யார் இப்படிச் சொன்னது?''

''சாரா....''

''அவன் பெண்களிடம் தன்மையாகப் பழகுவான்...''

''நீங்கள் முள்ளாய் குத்துவீர்கள்...''

''அது என் சுபாவம்.. ஆனால் ராதாவை ஒட்டுவது எங்கள் சொந்த விஷயம்.. சாரா யார் இதை கமெண்ட் பண்ண...? நாங்கள் பிரண்ட்ஸ்.. இன்றைக்கு அடித்துக் கொள்வோம்... நாளைக்கு கூடிக்கொள்வோம்.. உன் பிரண்டிடம்... தேவையில்லாமல் என்னிடம் மோத வேண்டாமென்று சொல்லு...''

''அடடா.. இப்போது என்ன ஆகிவிட்டதுன்னு போர் முரசு கொட்டுகிறீர்கள்.. ராதா உங்கள் பிரண்ட்தான் யார் இல்லையென்றது..''

''ராதாவிடம் அலெக்ஸும்... கர்ணனும் நிறைய சீண்டி வம்பு இழுப்பார்கள.. இப்படித்தான் போன வாரம்... நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது.. ராதாவை எங்கேலே காணோம்ன்னு கேட்டேன்... கர்ணன் உடனே அவனுக்கு போன் போட்டான்.. அவனும் .. டேய் கூப்பிட்டியாடான்னு கேட்டுக்கிட்டே வந்து விட் டான்...''

''ம்ம்... அப்புறம்...''

''கதையா சொல்கிறேன்...? இவ்வளவு உற்சாகமாய் கேட்கிறாய்?''

''எனக்கு கேட்க இன்ட்ரெஸ்டிங்காய் இருக்கிறதே...''

''கர்ணன் என்ன சொன்னான் தெரியுமா?..''

''என்னவாம்?''

''ராங்காய் உன் நம்பரை அழுத்தி விட்டேன் போல.... ஒரு கால் வந்து விடக் கூடாதே... உடனே என்னையாடா கூப்பிட்டிங்கன்னு தாவிக்கிட்டு வந்துவிடுவியேன்னு கலாட்டா பண்ணினான்...''

''என்னவோ நடத்துங்க..''

''குறைபட்டுக் கொள்வது போல் இருக்கிறது...''

''ஆமாம்.. ஹாஸ்டல் வந்து விட்டதே...''

''அது ஓர் குறையா?''

''பின்னே இல்லையா....?''

பவித்ரா இறங்கிக் கொண்டே சொல்ல.... அஜித் பதில் சொல்லாமல் அவள் முகத்தையே பார்த்தான்... அவள் முகத்தில் உண்மை தெரிந்தது.

'ஏன்... என்மீது இவ்வளவு பிரியம் வைக்கிறாய்..?' என்று மனதிற்குள் கேட்டுக் கொண்டவன்...தலையை



ஆட்டி விடைபெற்றுக் கொண்டு வண்டியை கிளப்பப் போனான்.

''அஜித்...''

''என்ன பவித்ரா....''

''அடுத்த வாரமும் என்னை அவுட்டிங் கூப்பிட்டுக் கொண்டு போவீர்களா...?''

அவள் விழிகளில் ஏக்கம் வெளிப்படையாகத் தெரிந் தது...

''பார்க்கலாம்....''

அதற்கு மேல் அங்கே தாமதித்தால் அவள் பேச்சை வளர்ப்பாள் என்று தோன்ற... அஜீத்.. வண்டியின் வேகத்தைக் கூட்டினான்... ஆண்கள் ஹாஸ்டல் வாச லில் பேசிக் கொண்டிருந்த கர்ணனும்.. ஸ்ரீதரனும் திரும்பிப் பார்த்தனர். அஜீத் அவர்களருகில் சென்று வண்டியை நிறுத்தினான்..

''என்ன மச்சி... இன்னைக்கு செமஜாலியாய் ஊர் சுற்றினாயா...'' கிண்டலாக வினவினான் கர்ணன்.

''இருக்காதா.. கூடப் போனது பெங்களூர் பைங்கிளி யாச்சே...'' ஸ்ரீதரன் தன் பங்குக்கு கூறினான்.

''பேசுங்கலே... இன்றைக்கு உங்களுக்கு சான்ஸ் கிடைச்சிருக்கில்ல.. ஓட்டுங்க....'' என்றபடி வண்டியை நிறுத்தி பூட்டிவிட்டு அவர்களின் அருகில் வந்தான் அஜித்...

''பவித்ரா என்ன சொல்லுது...''

''அடுத்த வாரமும் அவளை அவுட்டிங் கூட்டிக் கொண்டு போகச் சொல்லுது...''

''இதைப்பாருடா.. அதுக்கு நீ என்ன சொன்னாய்....?''

''பார்க்கலாம்னேன்....''

''ஏண்டா அப்படிச் சொன்னாய்?''

''இல்லையே.. அவள் என்னிடம் அதிகம் பிரியம் காட்டுவது போல என் மனதிற்கு படுது.. கொஞ்சம் தள்ளி நிற்கணும்....''

''அதுதான் எதுக்குங்கிறேன்...''

''உனக்குத் தெரியாது கர்ணா... நான் பெண்களிடம் அதிகம் நெருங்கி பழகியதில்லை...''

''சான்ஸ் கிடைக்கவில்லை.. அதனால் நீ பழகவில்லை... இப்ப சான்ஸ் கிடைத்திருக்கு... புகுந்து விளையாடுவாயா.. அதை விட்டுவிட்டு கதை சொல்லிக்கிட்டு நிற்கிற.....''

''அதுதானே.. இவனைப் போல் பெண்ணோட அப்பாவுக்கு வாக்குக் கொடுத்து விட்டு அவளோட கிளிப்பைப் பத்திரம் பண்ணி வைத்துக் கொண்டா நீ இருக்கிறாய்...'' ஸ்ரீதரன் விளையாட்டாய் கூறினான். ஆனால் அது கர்ணனின் இதயத்தில் முள்ளாகத் தைத்தது.



## 21

கர்ணனின் மனதில் சில மாதங்களுக்கு முன்னர் காதல் துளிர்த்தது. ஆர்த்தியைப் பார்த்தால் அவன் மனம் முழுவதும் யாரோ மயிலிறகால் வருடுவது போல் உணர்ந்தான்...



''ஏன்லே... ஏன் இவன் கொஞ்ச நாளாய் எதையோ பறிகொடுத்தவன் போல் இருக்கிறான்....''

மரத்தடி மாநாட்டில் அஜீத் வினவ.. அலெக்ஸ் பதில் கொடுத்தான்..

''நீ சொல்வது சரிதான் தல... அவன் இதயத்தை பறிகொடுத்துவிட்டானாம்...''

''இங்கே பாருலே... யாருலே... உன் உள்ளம் கவர்ந்த கள்வி....''

''அதுதான்.. ஒரு பெண்ணைப் பார்த்து ஏன் இவள் இப்படி ஈர்குச்சி போல் இளைத்திருக்கிறாள்ன்னு நீ கேட்டு வைத்தாயே.... அவள்தான்....''

''ஆர்த்தியையா... இவன் சைட் அடிக்கிறான்...?''

அஜீத் ஆச்சர்யமாய் வினவ... அது நேரம்வரை அமைதியாக இருந்த கர்ணன் ஆட்சேபனைக் குரல் எழுப்பினான்.

''அது சைட் இல்லை அஜீத்...''

''வேறு என்னலே...''

''தெய்வீக பந்தம்....''

''இவன் என்னலே சொல்கிறான்?''

''புரியவில்லையா அஜீத்... அது காதலாம்...''

''அப்படியா ஸ்ரீதரா... ம்ம்.. இது எத்தனை நாளாய் ஓடுது...''

''கொஞ்ச நாளாகவே ஓடுது மச்சான்...''

''இவன் அவளைக் காதலிக்கிறான்னு எப்படிலே கண்டு பிடிச்சிங்க..'' அஜீத் வினவவும்.. அலெக்ஸ் உற்சாகமாகி விவரித்தான்.

''அஜித் இவன் அலமாரியை குடைந்து பார்த்தால் உள்ளே என்ன இருக்கும் சொல்லு...''

''என்ன... புத்தகங்கள்... டிரஸ்... பேனா... வாட்ச்... செல்போன்.. மணிபார்ஸ்.. எக்ஸெட்ரா... எக்ஸெட்ராதான்...''

''அதோடு.. ஒரு டிபன்பாக்ஸ்... ஸ்பூன்.. லேடீஸ் கர்சீப்... காய்ந்து போன மல்லிகைச் சரம்.. ஒரு உடைந்த வளையல் துண்டு.. இன்னும்...''

''ஏய்.. ஏய்.. நிறுத்துலே....'' என்று அலெக்ஸை அடக்கிய அஜீத் கர்ணன் பக்கம் திரும்பி வியப்புடன் கேட்டான்.

''என்னலே... குப்பைத் தொட்டியில் போடவேண்டிய ஐட்டத்தையெல்லாம் பீரோவில் வைத்திருக்கிற... எதுக் குலே...''

''அஜித்.... அது வந்து...''

''அதுதான் வந்துவிட்டாயே.... சொல்லு...''

''அதெல்லாம்... என் காதலின் நினைவுச் சின்னங்கள்...''

''ஏன்லே... அவள் தலையில் வைத்து காய்ந்து போன பூவா உனக்கு காதலின் நினைவுச் சின்னம்....?''

''அப்படிச் சொல்லாதேடா... நான் அவளை ஸின்ஸிய ராய் காதலிக்கிறேன்...''

''காதலில் ஸின்ஸியர்... மட்டும்தான்லே இருக்கும்...''

அஜித் கூறியதை அலெக்ஸ் வன்மையாக எதிர்த் தான்.

''தெரியாமல் பேசாதே அஜித்...''

''உன்னிடம் பேசுவதற்காக நான் எந்தப் பெண்ணை யாவது காதல் பண்ணி விட்டா வந்து பேச முடியும்?''



''இதோ பார் அஜீத்.. காதலில் டைம் பாஸ் காதலும் உண்டு....''

''காதலோட வெரைட்டிகளை பிட்டுப்பிட்டு வைக்கிற தில் நீ மன்னன்லே....''

''அவன் கதையைக் கேட்டால்... அவன் ஸின்ஸியர் தான்னு எனக்குத் தோணுது....''

''நீ சொன்னால் சரியாத்தான் இருக்கும்லே....''

கர்ணன் ஆர்த்தியிடம் பேச முயன்றான்... வகுப்புத் தோழன் என்பதால் சகஜமாய் பேசியவள்...அவன் காதலைச் சொன்னதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

கர்ணன் விடாமல் அவளைப் பின் தொடர்ந்தான்.

''எங்கேலே... இந்த கர்ணனை ஹாஸ்டல் பக்கம் காணோம்...'' அஜித் ஸ்ரீதரனிடம் கேட்டான்.

''அவன்தான் தினமும் ஆர்த்தி பின்னாலேயே போய் விடுகிறானே....''

''மதுரைத் தமிழச்சியை மடக்கப் பார்க்கிறானா..''

ஆனால் கர்ணனால்... ஆர்த்தியை மடக்க முடிய வில்லை... மாறாக.. வெட்டறிவாளும்... வேல்கம்பு மாக... அவளது சொந்தக்காரர்கள் கர்ணனை மடக்கினர்.

''யாருடா.. நீ.. எங்க புள்ளய தொடுத்துக்கிட்டு வாரவன்....''

''நான் ஆர்த்தியோட கிளாஸ் மேட்....''

''எந்த மரம் மட்டையாய் இருந்தாலும் அது காலேஜு க்குள்ள... நீ யாருடா.. வீடு வரை வந்து நிறகிறவன்...''

''இல்லைங்க... அது வந்து...''

''மாப்பிள்ளை... இது மதுரை மண்ணுடி.... உன் ஆட்டத்தையெல்லாம் நீ இங்கே காட்டக் கூடாது... ஒழுங்காய் படித்து விட்டு வீடு போய் சேருகிற வழியைப் பாரு...''

கர்ணன் ஹாஸ்டலுக்குப் போய் சேரும் வழியைப் பார்த்துப் போய் சேர்ந்தான்... கண் சிவக்க.. கலைந்த தலைமுடியுடன் வெறித்துக் கொண்டு இருந்தவனைப் பார்த்த அஜித் கவலைக்குள்ளானான்.

''ஏன்லே... என்னலே ஆச்சு...''

கர்ணன் விவரம் கூறினான்.. அஜித்துக்கு கோபம் வந்துவிட்டது...

''இதுக்குப் போயா... இப்படி அரட்டி பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிற... அவங்க...யாரு... எவன்னு என்னிடம் காட்டு.. என்னன்னு கேட்கிறேன்...''

ஆவேசமாய் கிளம்பியவனை ஸ்ரீதரன் அடக்கினான்.

''அஜித் வேண்டாம்... இது வேறு ஊர்.. நாம் படிக்க வந்திருக்கிறோம் நம்ம ஆள் மேலயும் தவறு இருக்கிறது.. அவங்க வீட்டுப் பெண்ணை பாலோ பண்ணிப் போயிருக்கிறான்... யார்தான் சும்மா இருப்பாங்க.... நீயே சொல்லு.....''

''ஏன்லே.... இவன் என்ன ரௌடியா?''

''காதல் பண்ணினால் ரௌடி போலத்தானே பெண்ணைப் பெற்றவர்கள் பார்ப்பார்கள். அவர்களையும் நாம் குற்றம் சொல்ல முடியாதுடா..''

''அதற்காக.. இவனை எப்படி அவங்க மிரட்டலாம்?''

அஜித்திற்கு தாங்க முடியவில்லை... மறுநாள் ஆர்த்தியிடம் நேராக சென்று மோதினான்.



''இங்கே பாரும்மா.. இது காலேஜ்...''

''ஏன்.. எனக்கு அது தெரியாதா?''

''தெரிந்தது போலா நடந்து கொள்கிறாய்?''

''இப்போ நான் என்ன பண்ணிவிட்டேன்னு என்னுடன் நீ சண்டைக்கு வருகிறாய்...?''

''உன்னை கர்ணன் காதலித்தால் ஒன்று பிடித்திருக்குன்னு சொல்லு.. இல்லை பிடிக்கவில்லைன்னு சொல்லு.. அதை விட்டுவிட்டு ஓரக் கண்ணால் அவனைப் பார்ப்பது.. அவன் பின்னாடியே வருகிறானான்னு லுக்விட்டுக் கொண்டே முன்னால் நடப்பதுன்னு அத்தனை வேலைகளையும் நீ பண்ணிவிட்டு... அவனை உன் வீட்டில் மாட்டி விட்டு விட்டாயே... இது உனக்கே நல்லா இருக்கா..?''

''அஜீத்...''

''உன் வீட்டில் இருக்கிறவங்க அவனை மிரட்டினாங்களாமே... அவன் உன் வீட்டுப் பக்கம் வருவதை நிறுத்திவிடுவான். நீ காலேஜ் வருவதை நிறுத்த முடியுமா?.. என்னடா... இவன் மிரட்டுகிறான்னு பார்க்காதே.. உனக்கு அவனைப் பிடிக்கவில்லையென்றால்.... இத்தனை நாள்களாய் ஏன் அவனை என்கரேஜ் பண்ணினாய்... உனக்கு அவன் உன்னைப் பார்க்க வேண்டும்.. உன் பின்னால் சுற்றவேண்டும்... உன்னைக் காதலிக்க வேண்டும்.... அதை நீ பெருமையாய் மற்றவர்களிடம் சொல்லிக்கொள்ள வேண்டும். அதே.. அவன் காதலில் தீவிரமாகி உன் பின்னால் வீடு வரை வந்துவிட்டால்... உன் வீட்டில் அவனைப் போட்டுக் கொடுத்து விட்டு..

நீ மட்டும் நல்ல பெண்ணாகிக் கொள்ள வேண்டும்... எப்படிப் பட்ட சுயநலக்காரி நீ.. உன் தலையில் வைத்து வாடி விழுந்த பூவை வைத்துக்கொண்டு பூஜை பண்ணு கிறானே... அந்த மடையன்.. அவனைச் சொல்ல வேண்டும்.. அப்போதே அவனிடம் தலைப்பாடாய் அடித்துக்கொண்டேன்...லே இந்தக் காதல் எல்லாம் வேண் டாம்லே.. அதன் மதிப்பு.. நீ காதலிப்பவருக்குத் தெரி யாதுன்னு... அவன் கேட்கவில்லை.... இப்போது அனு பவிக்கிறான்....''

அஜீத் பேசிய பேச்சில் ஆர்த்தியின் முகத்தில் ஈயாட வில்லை.

# 22



அஜீத் பேசப்பேச... மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொண்ட ஆர்த்தி எழுந்து போய்விட்டாள்.. அடுத்த இரண்டு நாள்கள் அவள் காலேஜிற்கு வரவில்லை.. மூன்றாம் நாள் மாலை... ஆர்த்தியின் தந்தை கர்ணனை தேடி வந்தார்...

''நான் ஆர்த்தியின் அப்பா..''

''வாங்க அங்கிள்.. என்ன விசயம்...?''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்...''

காலேஜ் கேண்டினுக்கு அழைத்துப் போனான். கூட்டமில்லாத கேண்டினில்.. காபித் தம்ளர்களை



டேபிளில் வைத்துவிட்டு இருவரும் பேச ஆரம்பித் தார்கள்.

''எனக்கு மூன்று மகள்கள் தம்பி..''

இதை எதற்காக தன்னிடம் வந்து சொல்கிறார் என்று புரியாமல் தலையாட்டினான் கர்ணன்.

''ஆர்த்தி என் மூன்றாவது மகள்...கடைசிப் பெண்... முதல் இரண்டு பெண்களையும் படிக்க வைக்கனும்னு ஆசைப்பட்டேன்.. அவர்கள் மண்டையில் படிப்பு ஏறவில்லை. கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட் டேன்.. தெய்வத்திற்கு என் மேல் கொஞ்ச நஞ்சமிருந்த கருணையினால் ஆர்த்தி நன்றாகப் படிக்க ஆரம்பித் தாள்... இன்றைக்கு டாக்டருக்கு படித்துக் கொண்டிருக் கிறாள். எங்கள் குடும்பத்திற்கே அவளால் பெருமை தம்பி.. அவளால்தான் நான் தலைநிமிர்ந்து நின்றேன்...''

அவர் பேச்சை நிறுத்தி விட்டு கர்ணனின் முகத் தையே கூர்ந்து பார்த்தார்... கர்ணன் சங்கடத்திற்கு உள்ளானான்... பார்வையை திருப்பிக் கொண்டான்.

''ஆர்த்தி இரண்டு நாள்களாக காலேஜுக்கு வரவில் லையே.. ஏனென்று தெரியுமா தம்பி...''

''ஏன்...?''

''அவளுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது தம்பி... வெறும் காய்ச்சல் இல்லை. ஜன்னி காய்ச்சல்.. காய்ச்ச லில் அவள் மனதில் இருப்பது எல்லாம் வெளியில் வந்து விட்டது.. அவள் மனதிலிருப்பது எது தெரியுமா?''

''எது...?''

''நீங்கள்தான் தம்பி... நீங்கள்தான்...''

கர்ணன் ஆனந்தத் திகைப்பில் ஆழ்ந்து போக.. அவர் சட்டென்று கர்ணனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன் தம்பி... ஆர்த்தியின் மூலமாகத்தான் நான் என் கனவை நிறை வேற்றிக் கொள்ள வேண்டும். . அவள் டாக்டராக வேண டும்.. அதை என் கண் குளிர நான் பார்க்க வேண்டும் அது உங்கள் கையில்தான் இருக்கிறது.''

கர்ணன் திக்பிரமையடித்துப்போய் உட்கார்ந்து விட்டான்.. அவனது கனவுகள் கலகலத்துப் போய் விட்டது..

ஆர்த்தி என்பவள் தனி மனுஷி அல்ல....... அவள் தான் அவளுடைய குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரம்.. என்பது புரிந்ததால் தடுமாறிப் போனான் கர்ணன்..

''நான் என்ன செய்ய வேண்டும் அங்கிள்..''

''உங்கள் காதலை விட்டுக் கொடுக்க வேண்டும்... இரண்டு நாள்களாக என் மகள்.. படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறாள்.. அவள் மனதிலிருக்கும் உங்களைப் பற்றிய நினைவை நீங்கள் அகற்ற வேண்டும்.. படிக்கிற காலத்தில் மனதில் காதல் வந்து விட்டால் படிப்பில் புத்தி போகாது தம்பி.. என் மகளை எனக்குத் திருப்பிப் கொடுங்கள்..''

கர்ணன் மனதை கல்லாக்கிக் கொண்டான்.. அவரது கைபிடித்து வாக்குக் கொடுத்தான்.

''இங்கே படித்து முடிக்கிற காலத்தில் ஆர்த்திக்கு என்னால் மனத்தடுமாற்றம் வராது அங்கிள்.. இனி நான் ஒதுங்கிக் கொள்கிறேன்..''

அன்று சொன்ன வார்த்தையை இன்று வரை காப் பாற்றிக் கொண்டிருந்தான் கர்ணன்.



''அவனை எதுக்குலே வம்புக்கு இழுக்கிறே.. அவனே பாவம் நொந்து நூடுல்ஸாகி இருக்கிறான்...''

அஜித் பேச்சைத் துண்டித்து விட்டு ஹாஸ்டாலுக்குள் செல்ல மற்ற இருவரும் பின் தொடர்ந்தனர்.

பவித்ரா அறைக்குள் நுழைந்த போது சாரா போனில் பேசிக் கொண்டிருந்தாள்.. பவித்ராவைப் பார்த்ததும்..

''இதோ அவளே வந்து விட்டாள் சித்தி.. நீங்களே பேசிக் கொள்ளுங்கள்.... நானா.. நான் சொல்லுவதை எங்கே அவள் கேட்கிறாள்...'' என்றபடி போனை அவள் கையில் கொடுத்தாள்..

''யார்.... அம்மாவா... ஓ மாம்.. நான் அவுட்டோர் போயிருந்தேன் மதுரையை சுற்றிப் பார்க்க..ம்ம்.. போனை ரூமில் வைத்து விட்டுப் போய்விட்டேன்... நல்ல பிரண்ட்தான்... அதெல்லாம் நான் செலக்டிவாய் தான் பழகுகிறேன் மம்மி....''

போன் பேசி முடித்த பவித்ரா சாராவிடம்

''தேங்க்ஸ்....'' என்றாள்.

''எதற்கு....''

''அம்மாவிடம்.. என்னையும்.. அஜீத்தையும் பற்றிப் போட்டுக் கொடுக்காததற்கு...''

சாரா புதிராய் புன்னகைத்தாள்... பின் பவித்ராவிடம் வினவினாள்.

''பவி... நீயேன் அஜீத்துடன் வெளியே போனாய்...''

''அவனுடன் நிறைய நேரம் பேசிப் பழக வேண்டும் என்று தோன்றியது.. காலேஜிற்குள் அது முடியாது... அதனால் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்

படுவதாய் அவனிடம் சொன்னேன்... அழைத்துக் கொண்டு போனான்....''

''பேசிப் பழகினாயா?''

''யெஸ்...''

''பவி... உனக்காக யு எஸ் ஏவில் ஆகாஷ் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறான்.. மறந்து விடாதே....''

பவித்ராவிடமிருந்து பதில் வரவில்லை.... அவள் கட்டிலில் படுத்து தூங்கி விட்டாள்... சாரா யோசனை யுடன் அறையை விட்டு வெளியே சென்றாள்.

மறுநாள் வகுப்பறையில் பவித்ரா அஜீத்தைப் பார்த்து புன்னகைத்தாள். அவன் வெறுமனே தலை அசைத் தான்.. அலெக்ஸ் அதைக் கவனித்து விட்டான்.

''தல... இது என்ன புதுப்படம் ஓடுது...''

''உனக்குத்தான்டா இது புதுப்படம்.. எனக்கும் கர்ண னுக்கும் இது பழைய படம்....'' என்றான் ஸ்ரீதரன்..

''ஏய்... அடங்குலே...''

''எதற்கு அடங்கச் சொல்கிறாய்...? இருந்திருந்து ஒரு மங்கையர்குல திலகத்தைப் பார்த்து நீ தலை அசைக் கிறாய்... அந்தப் புன்னகைப் பூவும் உன்னைக் கண்டு... புன்னகையை உதிர்க்குது.. என்னதான் நடக்குது?''

''அது எது எதுவோ நடக்குதுடா...''

''சொல்லுடா ஸ்ரீதரா கேட்போம்...''

''நேற்றுக் காலையில் நகர் உலா போனவன்..... இருட்டினதுக்கு அப்புறம் திரும்ப வருகிறான்....''

''இவன் தனியாகப் போக மாட்டானே....''



''தனியாகப் போனான்னு யார் சொன்னது?''

''நீ கூடப் போனாயா?''

''இல்லை.....''

''கர்ணன் போனானா?''

''அவனும் போகவில்லை...''

''வேறு யார்தான் கூடப் போனது?''

''பவித்ரா...''

''என்னது...''

அலெக்ஸ் வாய் பிளந்தான்... அடுத்த சில நிமிடங் களில் அந்தச் செய்தி கல்லூரி முழுவதும் பரவியது.. செய்தியின் சாராம்சம் மெல்ல... மெல்ல மருவி...

'அஜீத்தும்... பவித்ராவும் ஒருவரை ஒருவர் உயிருக் குயிராய் காதலிக்கின்றனர்...' என்று ஆனது....

# 23



தோட்டத்திலிருக்கும் செடிகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் ராதா... பக்கத்து வீட்டுக் காம்பவுண்டு சுவரின் அந்தப் பக்கமிருந்து கோதாவரி அழைத்தாள்...

''என்ன ராதா.. இன்றைக்கு ஆபிஸ் போகலையா?''

''லீவ் கோதாவரி....''

''நீ லீவ் போட்டிருக்கிறாயா....?''

''இல்லை.. ஆபிஸ் ஹாலிடே....''

''அதுதானே பார்த்தேன்.. உனக்கெங்கே லீவ் கிடைக்கப்போகுது...''

'நீயெல்லாம் கேலி பேசுவது போல் என் நிலைமை ஆகிவிட்டது...' மனதிற்குள் குமைந்து கொண்டாள் ராதா.

தபால் துறையில் பணியாற்றும் அவளுக்கு லீவ் கிடைப்பது குதிரைக் கொம்பு... ஒவ்வொரு லீவையும் போராடி வாங்குவதற்குள் அவளுக்கு உயிர் போய் உயிர் வரும்... எல்லாவற்றிலும் அரசியல் இருப்பது போல்.. லீவ் வழங்குவதிலும் பாராபட்சமும்.. சங்க அரசியலும் இருப்பதால்... ராதா போன்ற ஊழியர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர்.. தன்னை விட வயதில் மிகவும் குறைந்த ஜூனியர்கள் நினைத்த நாள்களில் லீவ் போடுவதையும்.. அவர்கள் கேட்ட உடன் லீவ் அளிக்கப் படுவதையும் ஆற்றாமையோடு பார்த்துக் கொண் டிருக்கும் ராதாவிற்கு தன்னிரக்கம் பொங்கும்.

இதில் ஒரு கொடுமை என்னவென்றால் அவளது பணிக்காலம் முழுவதும் மற்றவர்களின் லீவிற்காக டெபுடேசன் போய் கொண்டிருந்தாள். அவள் உடல் நிலை சரியில்லாமல் இழுத்துக் கொண்டிருந்தாலும் அவளுக்கு லீவ் கொடுத்து டெபுடேசனுக்கு ஒரு ஆள் அனுப்ப நிர்வாகமும்... சக ஊழியர்களும் தயாராக இல்லை.

கோதாவரி பேசுவதற்கு பதில் சொல்லாமல் தன் கைவேலையை தொடர்ந்தாள் அவள்.. கோதாவரி விடுவ தாக இல்லை... அவள் முதல்நாள் போய் வந்த டூரைப்



பற்றிப் பெருமை பேசாவிட்டால் அவளுக்கு தூக்கம் வராது.... எனவே ராதா பதில் சொன்னால் எனக்கென்ன... பதில் சொல்லாவிட்டால் எனக்கென்ன என்ற முடிவோடு அவள் சொல்ல வந்ததை ஒப்பிக்க ஆரம்பித்தாள்.

''காலையில் ஐந்து மணிக்கெல்லாம் கிளம்பிவிட்டோம்...''

''அப்படியா...''

''எங்கேயென்று கேளேன்...''

''எங்கே....?''

''கொடைக்கானலுக்கு....''

''ஓஹோ....''

''யார்... யாரென்று கேளேன்...''

''யார்.. யார்...?''

''எங்க குடும்பமும்.. சாந்தா குடும்பமும் தான்.''

''அப்படியா....?''

''எதில் போனோம்ன்னு கேளேன்...''

''எதில் போனீங்க....''

''ஏஸி வேன் பிடித்திருந்தோம்.. வீடியோ கோச்.. புதுப்பட சிடி முதல் நாளே வாங்கி வைத்திருந்தோம்....''

''ஓஹோ...''

''சாப்பாடைப் பற்றிக் கேளேன்...''

''என்ன சாப்பாடு.. எங்கே சாப்பிட்டிங்க?''

''காலையில் சப்பாத்தி சிக்கன் வறுவல் நான் செய்து கொண்டு போயிருந்தேன்... மதியத்திற்கு மட்டன்

பிரியாணி.. எக்.. பிஷ் பிரை சாந்தா செய்து கொண்டு வந்திருந்தாள்.. நைட் ஹோட்டல்.....''

''அப்படியா.....''

''ஏழுமணிக்கெல்லாம் மலையேறிவிட்டோம்.. மூடுபனி... அருமையான கிளைமேட்... எல்லா இடங் களும் பார்த்ததுதான்.. அதுதான் வருஷா வருசம் கொடைக்கானல் போகிறோமே.. ஆனாலும் எத்தனை தடவை போனாலும் அலுக்கவேயில்லை... ஏரியில் சுற் றியது மட்டும் இரண்டு மணி நேரம்ன்னால் பார்த்துக் கோயேன்...''

இவளுக்கு எத்தனை தடவைதான் அப்படியா.. ஒஹோ' போடுவது..'

சலிப்புடன் மௌனமானாள் ராதா...

'இருப்பது ஒரு நாள் லீவ்.. அதில் வீட்டு வேலைகள்.. கை வேலைகள்ன்னு ஆயிரம் இருக்கு.. அதைச் செய்ய விடாமல் இவள் தொண தொணப்பதை கேட்க வேண் டுமா.. கொடுமைடா சாமி.. இவள் வருவாள்ன்னு தெரிந் திருந்தால்... வீட்டுக்குள்ளேயே பதுங்கியிருக்கலாம்..' என்று எண்ணமிடும் போதே...

'வீட்டுக்குள் இருந்தாலும் இவள் விட்டு விடுவாளா.. காலிங் பெல்லை அழுத்தி.. வீட்டுக்குள் புகுந்து உட் கார்ந்து கதை பேசுவாளே..' என்று அவளது உள்மனம் பதிலுக்கு கேள்வி கேட்டு நகைத்தது.

ராதாவிற்கு பிடிக்காத ஒரு விசயம் இந்த 'ஊம்' போடு வது.. ஆனால் அதைப் பற்றியெல்லாம் கோதாவரி போன்ற பிரகிருதிகள் கண்டு கொள்வதில்லை... இவர்



களுக்குப் பயந்தே.. ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட் களில் அரசு விடுமுறை வந்தால் வீட்டுக்கு வெளியே தலை காட்டாமல்.. ராதா வீட்டிற்குள்ளேயே பதுங்கிக் கொள்வாள்.

''ஏன் ராதா.. இந்த சம்மருக்கு நீங்கள் எங்கேயும் போகவில்லையா?''

''குடும்பத்தோடு கோவிலுக்குப் போய் வந்தோம் கோதாவரி..''

''நானும் கேட்கணும்.. கேட்கணும் என்று நினைத் திருந்தேன்..''

'என்னன்னு கேளேன்..' என்று அவள் எடுத்துக் கொடுக்கும் முன் தானாகவே

''எதைக் கேட்கணும்ன்னு நினைத்திருந்தாய்..?''

''நீயேன் எப்போது பார்த்தாலும் குடும்பத்தோடு கோவில்களுக்கு மட்டும் போய் வருகிறாய்.. எங்களைப் போல டூர் போய் வரவேண்டியது தானே..''

ராதா பதில் சொல்லாமல் புன்னகைத்து விட்டு வீட் டிற்குள் சென்று விட்டாள்.

கோதாவரி சொல்வது போல் கோவில் தவிர மற்ற இடங்களுக்குப் போக இந்த மூன்று வருடங்களாய் ராதா வினால் முடிவதில்லை. காரணம் ஒன்றே ஒன்றுதான்.

'பிரசாத்...'

அவன் நண்பர்களுடன் வெளியே செல்வதில் காண் பிக்கும் ஆர்வத்தை பெற்றோருடன் வெளியில் செல் வதில் காண்பிப்பதில்லை... முகம் சுளிப்பான். கோவி லுக்கு மட்டும் தட்டமுடியாமல் உடன் வருவதால்..

ராதாவும் ஜனார்த்தனமும் சுற்றிப் பார்ப்பதை கோவில்களோடு நிறுத்திக் கொண்டனர்.

ராதாவிடம் ஒரு பழக்கம் உண்டு.. எப்போது பிரசாத் பிறந்தானோ.. அப்போதிருந்து அவளுடைய உலகம் பிரசாத்தை மையமாகக் கொண்டு சுழல ஆரம்பித்து விட்டது... அவனுக்கு பிடித்தவற்றை.. மிகவும் சிறப்பானதை அவனில்லாமல் பார்க்க அவள் விரும்ப மாட்டாள்.. அலுவலக விருந்துகளில் பிரசாத்திற்கு பிடித்தமான உணவு வகைகள் பரிமாறப் பட்டால் சாப்பிட மாட்டாள்..

'இது பிரசாத்திற்கு பிடிக்கும்.. அவனில்லாமல் சாப்பிடுவதா..'

கல்லூரியில் சேரும்வரை தாயின் மடியில் இருந்தவன்... மெல்ல மெல்ல அவளிடம் இருந்து விலக ஆரம்பித்ததை ராதா உணர்ந்தாள்.. அவளுக்கும் மகனுக்குமான இடைவெளி அதிகமானது போல் ஓர் தோற்றம் அவளுக்குத் தட்டுப்பட்டது.

என்றேனும் ஓர் நாள் இது நிகழும் என்பதை அறிந்தவள்தான்.. அதை எதிர்பார்த்தவளும் கூட.. தன் அதீத அன்பும்.. பாசமும்.. பிரசாத்தின் மனைவிக்கு போட்டியையும்.. பொறாமையையும் உண்டு பண்ணிவிடும் என்பதால்.. தான் தவமிருந்து.. வரம் வாங்கிப் பிறந்த ஒற்றை மகனுக்கு திருமணம் ஆனவுடனே.. தனிக்குடித்தனம் வைத்துவிட வேண்டும் என்ற முடிவோடு இருப்பவள்.. அதற்கு முன்னரே.. மகனுக்கு சிறகுகள் முளைத்து விலகிப் பறக்க ஆரம்பிப்பதை உணர்ந்தாள்..

அன்பு என்பது எது.. தாய் பாசம் என்பது எது.. நீ எது கேட்டாலும் நான் தருவேன் என்பதுதானே... ராதாவும் தன் மகனுக்கு சுதந்திரத்தை தந்தாள்.



# 24



பிரசாத் ஆண்மகன்... பதினாறு வயதிலிருந்தே... தன்னை பெரியவனாகக் கருத வேண்டும் என்று ராதாவிடம் சொல்லிக் கொண்டுதான் வருகிறான்.. இப்போது அவனுக்கு இருபத்தியொரு வயதாகிறது.. இன்னும் ஒரு வருடத்தில் டாக்டர் பட்டம் வாங்கப் போகிறவன்...

அவனைப் போய் ராதா இன்னும் சிறு வயதுக் குழந்தை போல் கொஞ்ச ஆரம்பித்தால்.. அது அவனுக்கு ரசிக்குமா? பிரசாத் கோபம் கொள்வதில் தவறில்லை..

''பிரசாத்.. தங்கம்.. என் செல்லம்.. சாப்பிட வாடி..'' என்று ராதா அழைத்தால்..

''என்னை இர்ரிடேட் பண்ணாதீங்கம்மா.. இன்னும் குட்டிப் பையன் போல என்னை ட்ரீட் பண்ணாதீங்க.. எனக்கு அது பிடிக்கவில்லை..'' என்று கண்டிப்பாகக் கூறி விடுவான்.

ராதாவிற்கு ஏக்கமாய் இருக்கும்.. தன் குழந்தை வளர்ந்து பெரியவனாகி விட்டான்.. தன்னிடம் இனி செல்லம் கொஞ்சமாட்டான் என்பதை அவள் ஜீரணித்துக் கொண்டாள்.

பிரசாத் பிறந்ததில் இருந்து.. ஒற்றைப் பிள்ளையான அவனுக்கு தோழமை கொடுக்கும் நட்புடன் இருந்து பழகியவள் ராதா..

தவழ்ந்து வரும் பிரசாத்திற்கு இனையாக தவழ்வதில் ஆரம்பித்து அவன் வளர.. வளர.. அவனது ஒவ்வொரு வயதிலும்.. அவனுக்கு இணையாய் சிறு குழந்தையாக மாறி.. விளையாடி.. உரையாடி.. அவனை வளர்த்தவள் அவள்..

இன்று பெரியவனாகி நிற்கும் மகனுடன்.. அவனுக்குச் சரியான தோழமை கொடுத்து.. தன்னை ஓர் நட்பாக அவனுக்கு உணர்த்தினாள் ராதா.

தன் பாசமென்னும் பிடியில் அவன் மூச்சுத் திணறிப் போகாமல் அவனை விட்டு விலகி நின்று.. அவனுக்கு சுதந்திரம் கொடுத்தாள்..

சிறகு முளைத்த குஞ்சு... பறவையாய் பறப்பதை.. தாய் பறவை தள்ளி நின்று ரசித்து மகிழ்ந்தது..

பிரசாத் எதையும் தன் தாயிடம் இருந்து மறைத்ததில்லை.. தன் வகுப்புத் தோழர்களின் குணாதிசயங்களில் ஆரம்பித்து.. கல்லூரியில் நிகழும் அனைத்து நிகழ்வுகளையும் அவளுடன் பகிர்ந்து கொள்வான்... அவன் மனதிற்குப் பிடித்த பெண்ணின் பெயரைத் தன் தாயிடம்தான் முதன் முதலில் அவன் சொன்னான்.

இந்த.. நட்பைத்தான்.. இந்த பகிர்ந்து கொள்ளலைத்தான்.. இந்த நம்பிக்கையைத்தான்.. ராதா.. தன் மகனுக்கு அளித்திருந்தாள்.

''அம்மா.. டிவியில் இந்த விளம்பரத்தைப் பாருங்களேன்..''

பிரசாத் காட்டிய விளம்பரத்தில் வரும் 'காத்ரினா கைப்' அமைதியான அழகோடு... புத்திசாலித்தனமான முகபாவத்தோடு... 'கிளாஸிக் பியூட்டி..' என்று அழைக்கப் படும் விதத்தில் வனப்பாக இருந்தாள்..



''இது.. காத்ரினா கைப் ஆயிற்றே... இதற்கு என்னடா...''

''லேகாவும் இதே ஜாடையில்தான் இருப்பாள்...''

ராதாவின் முகத்தில் மகனின் ரசனையைப் புரிந்து கொள்ளும் பாவனை தோன்றும்.. அவள் சிரித்துக் கொள்வாள்... பிரசாத்தும் அதற்குமேல் எதுவும் பேசமாட்டான்..

வாழ்க்கை தரும் அற்புதமான விசயங்களில் ஒன்று இந்தத் தாய்.. மகன் உறவு.

ராதா சாப்பாட்டு மேஜையில் பாத்திரங்களை வைத்து விட்டு வந்தபோது.. வெளியில் போயிருந்த ஜனார்த்தனமும்.. பிரசாத்தும் வீட்டுக்குள் வந்தனர்.. பிரசாத் சிடுசிடுவென்ற முகத்துடன் மாடிக்குப் போய்விட்டான்.

ராதா கவலையுடன் கணவனின் முகத்தைப் பார்த்தாள்.. மகனின் முகத்திற்கு குறையாமல் அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''என்னங்க...?''

''வண்டியை ஸ்பீடாய் ஓட்டுகிறான்.. கொஞ்சம் வேகத்தைக் குறைடான்னா கேட்க மாட்டேன் என்கிறான்.. இது சரியில்லை ராதா...''

''இவ்வளவுதானே.. நான் அவனிடம் சொல்கிறேன்.. விடுங்க..''

''என்னத்தை விடுவது? வெளியே வந்து பார்.. டிராபிக் இப்போது முன்னே மாதிரியில்லை.. வீட்டுக்கு ரெண்டு கார்.. நான்கு பைக் வைத்திருக்கிறாங்க.. மனுசன் வெளியே நடந்து போவதே இல்லை.. இதில் இவன் இஷ்டத்திற்கு இப்படி வேகமாகப் போனால் எப்படி..? என் மனசு படக்கு.. படக்குன்னு அடிச்சுக்குது ராதா..''

அவரின் பயம் புரிந்தது.. ராதா பிரிட்ஜைத் திறந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.. மாடியேறினாள்..

பிரசாத்.. காலில் இருந்த ஷூவைக் கழற்றி திசைக் கொன்றாய் எறிந்திருந்தான்.. குனிந்து ஷீக்களை எடுத் தவள்..

''ஷூவை.. வாசலிலேயே விட்டு விட்டு வரவேண் டாமா பிரசாத்..'' என்று கேட்டாள்.

''மறந்து விட்டேன் போதுமா.. எப்போது பார்த்தாலும் என்னை ஏதாவது குறை சொல்லனும்னு நீங்க இரண்டு பேரும் முடிவு பண்ணியிருக்கீங்களா?''

''ஏண்டா..?''

''பின்னே என்னம்மா.. வண்டியில் என் பின்னால் டாடி உட்கார்ந்தால் ஓட்டவே பயமாயிருக்கிறது.. கை காலெல்லாம் நடுங்குது..''

''நீயும் கொஞ்சம் வேகத்தைக் குறைத்து ஓட்டக் கூடாதா?''

''எப்படிம்மா..? போனவாரம் இப்படித்தான்.. இவர் சொல்கிறார்ன்னு வேகத்தைக் குறைத்து ஓட்டினேன்.. நடந்து போகிறவனெல்லாம் என்னை ஓவர்டேக் பண்ணி விட்டுப் போனான்கள்.. எனக்கு எப்படி இருந்திருக்கும்..? நீங்களே சொல்லுங்கள்...''

ராதாவிற்கு சிரிப்பு வந்தது.. சிரித்தாள்.

''சிரிக்காதீங்கம்மா.. நான் கோபமாய் இருக்கிறேன்..''

''டாடி உன் நல்லதிற்காகத்தானே சொல்கிறார்.. இது உனக்குப் புரியவில்லையா..?''



''அப்படி என்னம்மா.. என் நல்லதிற்காக சொல்கிறார்.. பின்னாடி உட்கார்ந்து கொண்டு டைரக்சன் கொடுத் தால்.. மனுசன் டென்சனாகி ஓட்ட மாட்டானா?''

ராதா மௌனமாய் மகனைப் பார்த்தாள்.. ஜனார்த் தனத்தின் பதட்டத்திற்கு அடிப்படைக் காரணம்.. மக னின் மீதுள்ள அக்கறை.. அவன் வேகமாக வண்டியை ஓட்டுவது அவருக்கு அச்சத்தையும்... கவலையையும் அளிக்கிறது... அது பிரசாத்திற்குப் புரியவில்லை... தன்னை இன்னும் சிறுவனாக தந்தை நினைக்கிறார் என்று கோபப்படுகிறான்.

ராதா.. பிரசாத்தின் உணர்வுகளை புரிந்து கொண் டவள்.. அதே சமயம்.. தன் உணர்வுகளையும்... பாசத் தையும் பிரசாத் புரிந்து கொள்ளவேண்டும் என்று என் றுமே அவள் எதிர்பார்த்ததில்லை.

அந்த எதிர்பார்ப்பு ஜனார்த்தனத்திடம் இருந்தது.. அவர் பிரசாத்தின் உணர்வுகளை புரிந்து கொள்ள முயலவும் இல்லை.. அதே சமயம் தன் உணர்வுகளை யும்.. பாசத்தையும் பிரசாத் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்..

தகப்பனுக்கும்.. மகனுக்கும் இடையில் பாலமாக செயல்பட ஆரம்பித்தாள் ராதா.

''பிரசாத்.. டாடி... உன் மேலிருக்கும் பாசத்தால் உன்னை கன்ட்ரோல் பண்ண நினைக்கிறார்.. நீ அதை பெரிது படுத்திக் கொள்ளாதே...'' என்று மகனிடம் ஜனார்த்தனத்தை உணர்த்துபவள்..

''ஏங்க.. அவன் என்ன இன்னும் கைக்குழந்தையா? தோளுக்கு மேல் வளர்ந்தால் மகனும் தோழன்தாங்க..

அவனை ரொம்பவும் கன்ட்ரோல் பண்ணுவதாய் அவன் நினைக்கிறான்.. குறைத்துக்கங்க..'' என்று கணவனிடம் பிரசாத்தை உணர்த்துவாள்.

பார்க்கும் பார்வைகளின் தன்மைகள் வேறாக இருந்தாலும்... ராதா... ஜனார்த்தனம்.. இருவரின் உயிரும் பிரசாத்திடம் இருந்தது..

# 25



அனல் பறக்கும் மேட்ச் ஆரம்பமாகிவிட்டது.. மரத்தடி மாநாட்டில் அதைப் பற்றிய விவாதங்கள் ஏற்கனவே அரங்கேறி முடித்திருந்தன.. அஜித் பார்வையாளனாய் நின்றிருந்தான்.

''அவனுக ஆட்டத்தை ஒய்க்கனும்டா..'' பிரசாத் பல்லைக் கடித்தான்.

''நீ முதலில் ஒழுங்காய் ஆடுலே.. அவனுக ஆட்டம் தானாய் ஓய்ந்து விடும்..'' என்றான் அஜித்.

''பயபுள்ள.. பார்வையை பலபக்கம் அலைய விடாமல் இருந்தால் ஈஸியா ஜெயிப்பாண்டா.. இவன்தான் தேவையில்லாமல் அலைபாய்கிறானே.'' என்று அங்கலாய்த்தான் ராதாகிருஷ்ணன்..

''அதில் உனக்கென்னடா கஷ்டம் வந்திருச்சு.. இப்படி போட்டு பல்லைக் கடிக்கிற..?'' அலெக்ஸ் வினவ..

''வந்துட்டியாடா.. வா.. வா.. கண்ணழகனைக் காணோம்னுதான் காத்திருக்கிறேன்..'' என்று ராதாகிருஷ்ணன் விறைப்பானான்.



''ம்ஹூம்.. இதுதான் ஹிந்திக்காரன்களோட நீங்க மோதப் போகிற லட்சனமாலே.. இப்படியே போய் மேட்ச் நடக்கிற இடத்தில் கட்டி உருளுங்கலே.. மேட்ச் விளங்கிரும்.. ஏன்லே அலெக்ஸ்.. நீ கொஞ்சம் வாயை அடக்கி இருக்க மாட்டியாலே.. அவன் சொல்வதும் சரியாகத்தானே இருக்கு.. நீ அவனைக் கண்டாலே ஜெர்க் ஆகிறலே..'' அஜீத் அலெக்ஸை கண்டிக்க... அலெக்ஸ் ராதாகிருஷ்ணனை சமாதானப்படுத்த முனைந்தான்.

''ராதே.. உனக்கு கோபம் ஆகாதடி..'' அலெக்ஸ் ஒரு காதைப் பொத்திக்கொண்டு இன்னொரு கையை ராதாகிருஷ்ணனை நோக்கி நீட்டிப் பாடினான்.

''டாய்.. நானும் வேணாம்.. வேணாம்ன்னு விலகிப் போகிறேன் நீ வெறியேத்தற..'' என்றவாறு ராதாகிருஷ்ணன் அலெக்ஸ் மேல் பாயப்போக.. கர்ணன் விலக்கி நிறுத்தினான்.

''டேய்.. அடங்குடா.. எப்பப் பார்த்தாலும் முசுட்டுத்தனமாய் முறைச்சுக்கிட்டு.. இப்ப என்ன ஆகிப்போச்சு.. அவன் நம்ம பிரண்ட்தானே..''

''உன் பிரண்டுன்னு சொல்லு..''

''நீ தேற மாட்டடா..''

''எலேய்.. யுனிவர்சிட்டியில் கோல்டு மெடல் வாங்கினவன்டா நானு.. என்னைப் பார்த்தா தேறமாட்டேன்கிற..''

சண்டை முற்ற.. அஜீத் எல்லோரையும் ஒரு அதட்டல் போட்டான்.

''லே... எல்லோரும் ஆக வேண்டிய வேலைகளைப் பாருங்கலே.. எப்பப் பார்த்தாலும் அடிச்சுக்கிட்டு..''

ஒருவழியாய் எல்லோரும் ஒற்றுமையாய் களத்தில் இறங்கினர். பிரசாத் இந்த அணியின் கேப்டன்.. எதிர் அணிக்கு கேப்டன் அரவிந்தசிங்...

தொடக்க ஆட்டக்காரர்களாக ராபர்டும்.. ஆனந்தும் களம் இறங்கினார்கள்..

''டேய்.. பார்த்து ஆடுங்கடா..'' என்று அலெக்ஸ் கூற.. ராபர்ட் திரும்பிக் கூட்டத்தைப் பார்த்தான்..

''அதெல்லாம் செல்வி ஓரமாய் நின்று பார்ப்பாள்டா மச்சான்..'' கவலைப்படாமல் போ.. நான் அவளைப் பார்த்து ஆடச்சொல்லவில்லை..''

அலெக்ஸை பல்லைக் கடித்தபடி முறைத்த ராபர்ட் மட்டையைத் தூக்கிக் கொண்டு மைதானத்திற்குள் சென்றான்..

எதிரணியில் ஓடிவந்து பந்தைத் தூக்கிப் போட, ராபர்ட் அதை ஓங்கி அடித்தான். முதல் ஆறு ஓவர்களை அவனும் ஆனந்தும் இணைந்து வெற்றிகரமாய் ரன் எடுத்துக் கொண்டிருந்தனர்.. ஏழாவது ஓவரில்.. ராபர்ட் அடித்த பந்து நான்கை நோக்கி ஓடியது.. அதைக் கவனித்த ராபர்ட் ரன் எடுக்காமல் நின்றவனாய் ஆனந்தை தடுக்க முயன்றான்.. ஆனால்.. வேகம் நிறைந்த ஆனந்த்.. ராபர்ட்டின் சைகையைக் கவனிக்காமல் ஓடிவர எதிரணியைச் சேர்ந்தவன் பந்தை வீசினான்.. ஆனந்த் அவுட் ஆகிவிட்டான்..

பிரசாத் களம் இறங்கினான்.. மாணவர்கள் கை தட்டி ஆர்ப்பரித்தனர்.. கூட்டத்தில் லேகா தென்படுகிறாளா.. என்று அவனது விழிகள் தேடின.. அவளைக் காணோம்.. அவனது நெஞ்சில் ஏமாற்றம் சூழ்ந்தது... வேகம் குறைந்தவனாய் விளையாடச் சென்றான்.



கிரிக்கெட்டோ.. ஜல்லிக்கட்டோ.. ஒரு பெண்ணின் முன் தன் திறமையை நிரூபிக்க விரும்பியே ஆண் களம் இறங்குவான்.. இங்கும் அப்படித்தான்.. பிரசாத் தன் கிரிக்கெட் ஆடும் திறமையை லேகா பார்க்க வேண்டும் என்று விரும்பினான்.. ஆனால் அவள் கூட்டத்தில் தென்படவில்லை..

சற்று நேரம் அவன், பந்து வீச்சை.. கட்டை கொடுத்து நிறுத்திக் கொண்டிருக்க.. ஒவ்வொரு ரன்னாய் எடுத்த ராபர்ட்டே அலுத்து விட்டான்..

''ஏய்.. உனக்கு என்னடா ஆச்சு..''

''ஒன்னுமில்லை ராபர்ட்..''

''இதுவா நீ விளையாடும் லட்சணம்..''

''டென்சன் ஆகாதே..''

''டேய் உன்னை நம்பித்தான் டீமே இருக்குது.. ஒழுங்காய் விளையாடு..''

அசுவாரஸ்யமாய் மட்டையைப் பிடித்த பிரசாத்.. அடுத்த பந்தையும் தவற விட.. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கூச்சல் போட்டனர். கூட்டத்தை நோக்கித் திரும்பி..

'நான் பார்த்துக் கொள்கிறேன்..' என்ற பாவனையில் கையை ஆட்டிய பிரசாத்தின் கண்களில் மின்னல் அடித்தது..

அங்கே அவனையே பார்த்துக் கொண்டு லேகா நின்றிருந்தாள்.. உற்சாகத்துடன் திரும்பிய பிரசாத்.. தன்னை நோக்கி வந்த பந்தை ஓங்கி அடித்தான்.. பந்து மைதானத்தை விட்டுப் பறந்தது..

''சிக்ஸர்..'' என்று கூட்டம் கூவியது..

அடுத்த பந்தில் ராபர்ட் அவுட்டாகி விட.. ஸ்ரீதரன் களம் இறங்கினான்.. அவனுக்கு அடுத்து கர்ணன்.. அவனுக்கும் அடுத்து அபிஷேக்.. என்று பிரசாத்தின் கூட ஆடுபவர்கள் மாற.. பிரசாத் மட்டும் அவுட்டாகாமல் நின்று ஆடினான்.. அவன் நூறாவது ரன்னை எடுத்து முடித்த சமயம் எதிர்பாராத விதமாய் அவனும் ஆட்டத்தில் அவுட்டாக.. அலெக்ஸும்.. ராதாகிருஷ்ணனும் களம் இறங்கினார்கள்..

எதிரணியில் வெறி பிடித்தவர்கள் போல் மாறிவிட்டனர்.. அடுத்து அவர்கள் வீசிய பந்துகள் அலெக்ஸையும்.. ராதாகிருஷ்ணனையும் நிலைகுலைய வைத்தன.. கடைசி ஒரு ஓவரே மீதமிருந்தது.. அதில் ஆறு ரன்கள் எடுக்க வேண்டும்.. கூட்டம் நிசப்தமாகியது.. லேகா நகம் கடிக்க ஆரம்பித்தாள்..

''அலெக்ஸ்.. ஏதாச்சும் செய்யனும்டா..''

''ஆமான்டா ராதா.. இந்த ஒரு ஓவரில் நாம் ஜெயித்துக் காட்டணும்..''

எதிரணியில் வெற்றி நிச்சயம் என்ற களிப்புக் குறி தென்பட.. பந்து வீசுபவன் ஓடிவந்து பந்தை வீச.. அலெக்ஸ் வெறியுடன் அதை ஓங்கி அடித்தான்.. பந்து.. ஓட..

''ராதா.. ஓடு..'' என்று கத்தியபடி அலெக்ஸ் ஓடினான். எந்த நினைவும் இல்லாமல் வேகத்துடன் ராதாகிருஷ்ணன் பாய்ந்தான்.. பாய்ந்த வேகத்தில் கால் தடுக்கி விழுந்தான்..

''ராதா..'' என்று அருகில் வந்த அலெக்ஸிடம்..



''ஓடு..'' என்று கூறியபடி எழுந்த ராதாகிருஷ்ணன் வலியை உணர்ந்தவனாய் ஓடினான்..

பந்தை எடுத்து கண்சிமிட்டும் நேரத்திற்குள் எதிரணியினர் வீசியும்.. அலெக்ஸும்.. ராதாகிருஷ்ணனும் புயல் வேகத்தில் அதற்குள் ஆறு ரன்களை எடுத்து முடித்திருந்தனர்..

விசில் பறக்க.. கூட்டம் 'ஹோ' வென்று ஆர்ப்பரித்தது.. பிரசாத்தும்.. கர்ணனும்.. முதல் ஆளாக மைதானத்திற்குள் ஓடினர்.. பிரசாத் அலெக்ஸை அலேக்காக தூக்க.. கர்ணன் ராதாகிருஷ்ணனை கட்டிக்கொண்டான்



# 26

அன்றைக்கு ஆட்ட நாயகனாக பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.. அவர்கள் வெற்றி பெற்று விட்டனர்.. வெற்றிக் கோப்பையை பிரசாத் குழுவினர் பெற்றுக் கொள்ளும்போது பிரசாத் திரும்பி லேகாவை பார்த்துக் கொண்டான்.

மறுநாளைய மரத்தடி பஞ்சாயத்தில் மேட்சைப் பற்றியே பேச்சு இருந்தது..

''இந்தா.. மேன் ஆப் தி மேட்ச் வந்து விட்டான்லே..''

''நீ தான் அவனை மெச்சிக்கணும்..''

''ஏன்லே ராபர்ட் இப்படிச் சொல்கிற.. நீ எல்லோரையும் மெச்சிக் கொள்கிறவன் ஆச்சே.. அதுவும் இவனை அதிகமாக மெச்சிக்கொள்வாயே..''

''இவனை மெச்சிக் கொண்டாலும்.. லேகா வந்து நின்னாளோ.. இவன் ஒழுங்காய் மட்டையை பிடித் தானோ... இல்லாவிட்டால் சொதப்பியிருப்பான் அஜீத்..''

''என்னலே கேப்டன்.. இவன் இப்படிச் சொல்கிறான்..?''

பிரசாத் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''அவன் கதைதான் நமக்குத் தெரியுமே அஜீத்.. அதை விடு.. நம்ம அலெக்ஸும்.. ராதாவும் கூட்டணி போட்டு தூள் பரத்திட்டாங்க இல்லே.. அதைச் சொல்லு..''

''ஆமாலே.. ஸ்ரீதரன் சொல்வதும் சரிதான்.. ராதா கிருஷ்ணன் கால்களில் ரத்தம் கொட்டுதுலே.. அதைக் கூட கவனிக்காமல் பயபுள்ள.. அந்த ஓட்டம் ஓடுகிறான்.. டீமை ஜெயிக்க வைத்ததே இந்த ரெண்டு பயல்களும் தான்லே..''

அங்கிருந்த எல்லோரும் அதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டு தலையை ஆட்டினர்.. அலெக்ஸ்.. ராதாகிருஷ் ணனின் கால்களைப் பார்த்தான்.. மருந்து வைத்துக் கட்டப்பட்டிருந்தது..

''அந்த இடத்தில் கூரான கல் நீட்டிக் கொண்டிருந்தது அஜித்.. இவன் விழுந்த வேகத்தில் குத்திக் கிழிச்சிருச்சு.. நான் அதைப் பார்த்து விட்டுத்தான் இவன்கிட்ட ஓடி னேன்.. ஆனால் இவன் எழுந்த வேகத்தில் 'ஓடு..' என்று என்னைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே ஓட ஆரம் பித்து விட்டான்.. ஆயிரம் தான் சொல்லு அஜீத்.. நம்ம ராதா எல்லாத்திலயும் கெட்டிக்காரன்தான்..''

''டேய் கண்ணழகா.. நீ பாராட்டுகிறாயா.. இல்லை பொடிவைத்துப் பேசுகிறாயா.. உன்னை நம்ப முடியா துடா..''



''அதைச்சொல்லு.. நீ என்னை எப்படி நம்புவாய்.. சுடிதார் போட்டிருக்கும் பெண்களையில்ல நம்புவாய்?''

அலெக்ஸ் ராதாகிருஷ்ணனை வம்பிழுக்க.. கர்ணன் சந்தேகம் கேட்டான்.

''அப்போ.. நம்ம மச்சான்.. சேலைகட்டிய பெண்களை நம்ப மாட்டான்னா சொல்கிற..?''

''நம்ம காலேஜில் எந்தப் பொண்ணுடா சேலை கட்டி யிருக்கு...?''

''நம்ம புரபொஸர்ஸ் கட்டியிருக்காங்களே...''

''அவங்க எல்லாம் தெய்வங்கள்டா... சாதாராண மனித குலமில்லை...''

''நீ பிழைத்துக்கொள்வாய்... அஜீத்... கேட்டாயா...''

''நான்தான்... அவன் வாய் அவனை எப்பவும் வாழ வைக்கும்ன்னு சொன்னேன்லே..... அதுக்கு மேலயும்.. அவன் திறமையை பாராட்டனுமா..''

ராதாகிருஷ்ணன் கால்களை மெதுவாக நீட்டிக் கொள்ள.. அடிபட்ட கால் வலித்தது... முகத்தில் வலியைக் காட் டியவனாய்....

''ஸ்....ஆ..'' என்றான்.

''மெல்லடா ராதா.... ரிஸ்க் எடுத்துக்காதே....'' என்று பதறினான் அலெக்ஸ்.

''என்னலே இது... ரிஸ்க் எடுத்துக்கறதெல்லாம் ராதா வுக்கு ரஸ்க் சாப்பிடுகிற மாதிரின்னு சலம்பல் பண்ணு வான் இந்த அலெக்ஸுன்னு பார்த்தால் பயபுள்ள பாசத் தைப் பிழியறான்...''

ஸ்ரீதரன் அலெக்ஸைப் பார்த்துச் சிரித்தான்.

''அது அப்படித்தான் அஜீத்.. நம்ம ராதா கால் குண மாகிற வரைக்கும் இவன் அடக்கித்தான் வாசிப்பான்...''

''ராதா... உண்மையிலேயே நீ கிரேட்லே... படிக்கிற படிப்பில் எல்லா சப்ஜெக்டிலும் கோல்டு மெடல் வாங்கு கிறாய்... விளையாட்டுன்னு போனால் வெறி பிடித் தவன் போல் ஆடி ஜெயிக்க வைக்கிறாய்..... பெண் களிடம் நல்ல பெயர் வாங்குகிறாய்... எப்படிலே... இது எப்படிலே......''

அஜீத் நடிகர் திலகமாக... ராதாகிருஷ்ணன் பயந்தது போல் முகபாவனை காட்டினான்...

''அஜீத் வேண்டாம்... கிட்ட வந்து கட்டிக் கொள் கிறேன்னு.. மிச்சம் இருக்கிற காலையும் ஒடித்து வைக் காதே... உனக்கு புண்ணியமாகப் போகும்... அடங்கியிரு....''

''இதைப் பாருலே சன்டேக்கு அவுட்டிங் போகாமல் அடங்கிருன்னு அர்த்தம்...'' என்று கர்ணன் சொல்ல... ஸ்ரீதரன் பலமாகச் சிரித்தான்.

அந்த நேரம் பார்த்து பவித்ரா... தமிழரசியுடன் பேசிக் கொண்டு அவர்களைக் கடந்து சென்றாள்.. இருவருமே திரும்பி மரத்தடி மாநாட்டை பார்வையிட்டபடி சென்றனர்..

''உன்னைக் கண் தேடுதே....க்கு...'' என்று விக்கிய வாறு அலெக்ஸ் பாடினான்.

''என்னைக் கண் தேடுவது இருக்கட்டும்... தமிழரசி யின் கண்கள் யாரைத் தேடுதுலே....''

''அது தெரியாதா அஜீத்... ஹா..ஹா...''

''சொல்லிவிட்டுச் சிரிலே.....''

''என்னடா..ராதா.. சொல்லிவிடவா....?''

''டேய்.... நீ எங்கிட்ட மாத்து வாங்கப் போகிறாய்....''



''ஏன்லே அவனை மிரட்டுகிற... அலெக்ஸ் நீ சொல் லுலே....''

''தமிழரசியோட கண் ராதாவைத் தேடுது மச்சான்...''

''லே ராதா... நீ பெண் குலத்திற்கு சப்போர்ட் பண்ணு வதற்கு காரணம் இதுவாலே.... இப்படி ஒரு பிட் ஓடிக் கொண்டிருப்பது எனக்குத் தெரியாம போச்சேலே....''

''எப்படித் தெரியும்... நீதான் பவித்ராவின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறாயே....''

''நான் ஒன்னும் அவள் பின்னால் ஓடவில்லை...''

''அதுதானே... அவள்தானே மச்சானைத் தேடிவந்து பழகுகிறாள்...''

ஸ்ரீதரன் அஜித்திற்கு ஆதரவாய் பேச வாய் திறந்து அலெக்ஸின் வாயில் மாட்டிக் கொண்டான்.

''இப்ப.. வைதேஹி உன்னை தேடிவந்து பேசுகிறாளே... ஆதுபோலவாடா....''

''இதப் பாருங்கலே... இது வேறா? என்னலே ஸ்ரீதரா... என்ன விசயம்?''

''நீ சும்மாயிரு அஜீத்.... இவனிடம் ஒருதரம் தெரியாத் தனமாய் ஒரு வார்த்தை சொல்லிவிட்டேன்... இவன் அதையே பிடித்துக் கொண்டு தொங்குகிறான்டா... இவனிடம் போய் வாயைத் திறக்கலாமா?''

''அதுதானே.... நான் திருநெல்வேலிச் சீமைக்காரன்.. இவன் என்கிட்டயே அல்வா கொடுக்கப் பார்ப்பானே.. நீ வாயைத் திறந்தால் சும்மா விடுவானாலே... அல்வாவைத் திணிக்கத்தான் பார்ப்பான்? ஆமாம். அப்படி அவன் கிட்ட என்னதான் வாய்விட்ட?''

''அந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லி விட்டேன்...''

''எந்தப் பெண்ணலே... வைதேஹியா?''

ஸ்ரீதரன் 'ஆமாம்' என்று தலையாட்ட நண்பர் குழுவாம்... 'ஹோ...' வென்று சிரித்தது.

''டேய் கண்ணழகா.. ரொம்பத்தான் சிரிக்காதே.. உன் கதை எனக்குத் தெரியாதா? அதைப் போட்டு உடைத் தேன்னு வை... நீ தாங்கமாட்டே...''

''அதையேன்ல... நீ விட்டு வைக்கிறே... சொல்லு... சொல்லு....''

''இவன் காவ்யாவை லவ் பண்ணுகிறாண்டா.....''

''ஆகமொத்தம்... படிக்கிறதை விட்டுவிட்டு... இதைத் தான் தொழிலா வைத்திருக்கீங்க... போல... உருப்பட்டிரு வீங்கலே....''

''முதலில் நீ உருப்படுவியான்னு பாரு...''

''ஏன்லே.....''

''அங்கே பாருப்பா.. பவித்ரா உன்னைத் தேடி திரும்பி வருது...''

அலெக்ஸ் கை காட்டிய திசையில் பார்த்த அஜீத்தை பவித்ரா கை அசைத்து அழைத்தாள்... சுற்றியுள்ள நண் பர்கள் வெளிப்படையாய் சிரித்துக் கலாட்டா பண்ண அஜித் தர்ம சங்கடத்துக்கு உள்ளானான்.

## 27



'இவள் ஏன் இப்போது போய் வருகிறாள்....' என்ற கடுப்புத் தோன்றியது அஜீத்தின் மனதிற்குள்... அலெக்ஸ் நமட்டுச் சிரிப்பு சிரித்தான்..



''போடா... அதுதான் கூப்பிடுதுல்ல...''

அஜித் எரிச்சலுடன் எழுந்து பவித்ராவின் அருகில் சென்றான்....

''என்ன....?''

''கோபமாய் இருக்கீங்களா.....?''

''அதைப்பற்றி உனக்கென்னம்மா....? நீ சொல்ல வந்ததைச் சொல்லு...''

பவித்ராவின் மனம் கூம்பிவிட்டது... ஆவலாய் பேச வந்தால்... ஏன் இப்படி முகத்தில் அடித்தது போல் இவன் பேசுகிறான்?

''அஜீத்... உங்களிடம் பேசி இரண்டு நாள்களாகி விட்டது.. நீங்கள் மேட்ச்... மேட்ச்சுன்னு உங்க பிரண்ட்ஸ் கூடவே இருந்தீங்க... இப்பத்தான் மேட்ச் முடிந்து விட்டதே... பேசலாம்ன்னு வந்தேன்...''

''என்னிடம் பேச நல்ல நேரம் பார்த்தாய்.....?''

''ஏன்... இப்போது நல்லநேரம் இல்லையா....''

''பவித்ரா.. ஆர் யு மேட்...?''

''வாட்....?''

''நான் என் பிரண்ட்ஸோடு உட்கார்ந்து பேசிக்கொண் டிருக்கிறேன்... இப்போது வந்து என்னைக் கூப்பிடு கிறாயே... அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்? இந்த அடிப்படை அறிவுகூட உனக்கு இல்லையா?''

''ஐ ஆம் ஸாரி..... உங்களோடு பேச வேண்டும்கிற ஆர்வத்தில்.....''

''பேச்சு... பேச்சு...பேச்சு... அப்படி என்ன பேசப் போகி றாய்? உனக்கும் எனக்கும் பேச பொதுவான விசயம் என்ன இருக்கிறது?''

''அஜீத்.. நமக்குள் பேச ஒன்றுமேயில்லையா....?''

''இல்லை.... என்னவோ.. வந்தாய்.. பழகினாய்.. நீ கேட்டுக்கொண்டதால் போனால் போகிறது என்று ஒருநாள் ஊர் சுற்றிப் பார்க்க அழைத்துப் போனேன்.... அதற்கே காலேஜ் முழுவதும் கண்டபடி கதை கட்டி விட்டு விட்டார்கள்... உன்னிடம் ஆயிரம் முறை படித்துப் படித்துச் சொன்னேன்... இது மதுரை.. பெங்களூர் இல்லையென்று கேட்டாயா....''

பவித்ரா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் கண்கள் கலங்கி நீர் முத்துக்கள்... நிற்கவா... உதிரவா.. என்று கேட்டது... அவளது முகத்தைப் பார்த்த அஜீத் பேச்சை நிறுத்திக் கொண்டான்... அவன் மனம் வலித்தது...

'ஆசையாய் பேச வந்தவளின் மனம் நோகப் பேசி விட்டேனா....?'

பவித்ரா வானத்தை வெறிக்க.. அஜீத் மெல்ல வினவினான்..

''சரி.. சரி.. என்ன விசயம்?''

''ஒன்றுமில்லை....''

''ஒன்றுமேயில்லையா...?''

பவித்ரா கேட்ட கேள்வியை அஜீத் இப்போது அழுத்தமா கேட்டான்.. பவித்ரா சட்டென்று அவன் முகம் பார்த்தாள்.. அவள் உதடுகள் எதையோ சொல்லத் துடித்தன... பின் முகம் திருப்பிக் கொண்டு கூறினாள்..

''ஒன்றுமேயில்லை...''

''ஒன்றுமேயில்லாததற்கா.. உரிமையுடன் என்னை அழைத்தாய்?''



''அழைத்தது தப்புதான்... மன்னித்து விடுங்கள்... இனி உங்களை தொந்தரவு செய்யமாட்டேன்....''

பவித்ரா.. சடாரென்று திரும்பிச் சென்று விட்டாள்.. அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அஜித்... திரும்பி மரத்தடிக்கு வந்தான்.

''என்ன தலை... தலைவி கோபமா போகுது....''

''அது ஒன்னுமில்லைலே....பேச்சைவிடுங்க..''

அவர்கள் வேறுபேச்சிற்கு மாறி... பவித்ராவை மறந்து போனார்கள்.. அன்றிரவு அஜீத்திற்கு தூக்கம் வரவில்லை... நீர் தழும்பிய விழிகளுடன் நின்றிருந்த பவித்ராவே அவன் மனக் கண்ணில் தோன்றினாள்.

வகுப்பறையில் அஜீத் இருக்கும் பக்கம் திரும்பிப் பார்க்காமல் பவித்ரா அமர்ந்து... வகுப்பு முடிந்ததும்.. ஹாஸ்டலுக்கு சென்றுவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டாள்... அஜித்தின் எதிரே வர நேர்ந்தால்... வேறுபக்கம் பார்த்துக் கொண்டே கடந்து சென்று விடுவாள்..

அவளது இறுக்கம் அஜீத்திற்கு புரிந்தது.. அவனும் அவள் போட்டுக் கொண்டிருந்த வேலியை உடைக்க முயலவில்லை... ஒருநாள் மாலையில் கடைத்தெருவிற்கு சென்று விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த போது.. மழை வந்து விட்டது.. நனைந்து கொண்டே வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவன்.. பஸ் நிறுத்தத்தில் சொட்டச் சொட்ட நனைந்தவளாய் பஸ்ஸிற்கு காத்துக் கொண்டு நின்ற பவித்ராவைப் பார்த்தான்... அவளருகே சென்று வண்டியை நிறுத்தினான்..

''தனியாகவா... வந்திருக்கிறாய்..''

''ம்ம்....''

''வண்டியில் ஏறு..''

''நோ... தேங்க்ஸ்..''

''வழக்கடிக்காதே பவித்ரா... மழை கொட்டுகிறது..''

''ஏற்கனவே நனைந்து விட்டேன்....''

''இன்னும் ஏன் நனைய வேண்டும்...?''

''உங்கள் வண்டியில் ஏறினால் மட்டும் நனைய மாட்டேனா?''

''நனைந்தாலும் கொஞ்ச நேரத்தில் ஹாஸ்டல் போய் விடலாம்...''

''நான் பஸ்ஸில் போய் கொள்வேன்...''

''பஸ்... உன் ஹாஸ்டல் வாசல்வரை வருமா...?''

''வராவிட்டால் எனக்குக் கால்கள் இல்லையா? நடந்து போய் கொள்ளுவேன்....''

''பிடிவாதமா.....?'' அஜீத் கோபத்துடன் கேட்டான்.

''இல்லை.. ரோஷம்...'' பவித்ரா மழைநீர் வழிந்த முகத்தை துடைத்துக் கொண்டே பதில் கூறினாள்.

''அதற்கு இப்போது என்ன அவசியம் வந்து விட்டது?''

''எப்போதோ வந்து விட்டது...''

''எப்போது.. வந்தது?''

'உங்கள் பிரண்ட்ஸின் முன்னால் நான் கூப்பிட்டதற்கு என்னைத் திட்டினீகளே.. அப்போதே வந்து விட்டது..''

''கோபத்தில் ஓர் வார்த்தை சொல்லக்கூடாதா?''

''அடேங்கப்பா.... நீங்கள் ஒரு வார்த்தை தான் சொன்னீங்களா? ஓராயிரம் வார்த்தைகள் சொன்னீர்கள்.. பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆசிட் போல் என் காதில் இறங்கியதே....''



பவித்ரா துக்கத்துடன் கூறியபோது.. வானத்தில் ஒரு மின்னல் வெட்டியது தொடர்ந்து பலமான இடிச்சத்தம் கேட்க...

''அம்மா...'' என்றபடி கண்களை மூடி.. காதுகளைப் பொத்திக் கொண்டாள் பவித்ரா.. அவள் உடல் கிடுகிடு வென்று நடுங்கியது.

அஜித் வண்டியை விட்டு கீழே இறங்கிவிட்டான்...

''இப்போது வண்டியில் ஏறுகிறாயா... இல்லையா...?''

அவனது உக்கிரத்தைக் கண்ட பவித்ரா வழக்காடாமல் அவன் வண்டியின் பின் ஏறிக் கொள்ள.. அஜீத் வண்டியை ஓட்டினான்... மழை வலுத்தது.. வழியில் ஒரு ஹோட்டலின் முன் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கியவன். பவித்ராவைப் பார்த்து

''வா....'' என்றான்.

''எங்கே...''

''சூடாய் ஏதாவது சாப்பிடலாம்... அதற்குள் மழை விட்டு விடும்..''

பவித்ரா... பதில் சொல்லாமல் அவன் பின்னே சென்றாள்.. பேன் காற்றில் ஈரமான உடைகள் கொஞ்சம் உலரத் துவங்க.. அஜீத் சர்வரிடம் ஆர்டர் செய்து விட்டு அவள் முகத்தைப் பார்த்து..

''ஐ ஆம் ஸாரி....'' என்றான்..

பவித்ரா மௌனமாக இருந்தாள்.. அவள் முகம் வாடியிருந்தது...

''நான் அப்படிப் பேசியிருக்க கூடாது.. ஏதோ ஓர் எரிச்சலில் பேசிவிட்டேன்..''

''எரிச்சல் வந்தால்... நீ பைத்தியமான்னு கேட்பீங்களா?''

''நான்தான் ஸாரி சொல்லி விட்டேனே..''

''ஸாரி சொல்லிவிட்டால் சரியாப் போய்விடுமா.. நீங்கள் பேசிய வார்த்தைகள் பேசியதுதான் அஜித்.. அவை மாறாது....''

''கோபத்தில் பேசுவதை குதர்க்கமாக அர்த்தம் செய்து கொள்ளாதே பவித்ரா....''

''கோபத்தில் பேசினாலும்.. மனதில் இருப்பதைத் தானே.. பேசுகிறீர்கள்....?''

அதற்குள் ஆர்டர் செய்திருந்த உணவு வகைகள் வந்து விட.. அதை அவள் பக்கம் நகர்த்தி வைத்து...

''சாப்பிடு....'' என்றான் அஜீத்...

பவித்ரா பதில் சொல்லாமல் அஜீத்தையே முறைத்துப் பார்த்தாள்... சற்றுமுன் மழையில் நனைந்துக் கொண்டு நின்றபோது மனதில் ஏற்பட்டிருந்த தனிமை உணர்வு மறைந்து போயிருந்தது.. குளிரில் நடுங்கிய உடல்.. இப்போது உலர்வான உடையில்.. தன் வசத்திற்கு திரும்பியிருந்தது... பவித்ரா... பழைய பவித்ராவாகி அவனை நிமிர்வுடன் நோக்கினாள்.

# 28



எந்தவித ஒப்பனையுமில்லாமல்... மழையில் நனைந்து களைத்திருந்த முகம்... கலைந்திருந்த தலை.. முழுதாய்



உலராமல் இன்னும் ஈரத்துடன் சுருங்கியிருந்த உடை.. இந்தக் கோலத்தில்... இயல்பான அழகோடு இருந்தாள் அவள்....

அவள் முகத்திலிருந்த கோபத்தையும்.. வைராக்கியத்தையும் ரசித்தபடி...

''சாப்பிடு....'' என்று மீண்டும் சொன்னான் அஜித்...

''எனக்கு வேண்டாம்...''

''ஏன் வேண்டாம்....? என்னைத் திட்டுவதற்கு தெம்பு வேண்டாமா?''

''அதற்கும்.. நான் சாப்பிடுவதற்கும் என்ன சம்பந்தம்?''

''சாப்பிட்டால் தெம்பு வரும்.. அதனால் நான் வாங்கிக் கொடுப்பதை சாப்பிட்டு விட்டு... இன்னும் தெம்பாக என்னைத் திட்டு....''

''அஜித்... வேண்டாம்...''

''எனக்கு உன் நட்பு வேண்டுமே..''

அஜித்தை பவித்ரா முறைக்க.. அவன் கேலியாக புருவம் உயர்த்தினான்.

''நீங்கள் வேண்டுமென்றால் பழகுவதற்கும்.. வேண்டாமென்றால் விலகிப் போவதற்கும்.. நான் ஒன்றும் கிள்ளுக் கீரையல்ல...''

''தெரியுமே....''

''என்ன தெரியும்...?''

''உன் பெயர் பவித்ரா.. கிள்ளுக் கீரையில்லைன்னு தெரியும்....''

இவனுடன் சண்டை போடுவது இவ்வளவு கடினமான செயலாக இருக்கக் கூடும் என்பதை அறியாத பவித்ரா திகைத்தாள்.

'இவனை எல்லோரும் சண்டைக்காரர் என்கிறார்கள்.. இவன் என்னடாவென்றால் இப்படி சண்டைக்கே வராமல் இழுத்தடிக்கிறானே...

''என்ன யோசிக்கிறாய்....? சண்டையை இன்னும் எப்படி டெவலப் பண்ணலாமென்றா...? வேண்டாம் பவித்ரா விட்டுவிடு....''

'விட்டு விடுவதா...'

''எதை விட்டுவிடச் சொல்கிறீர்கள்?''

''என்னை விடச் சொல்லவில்லை... சண்டையை விட்டுவிடு...''

அஜித்தின் கண்கள் சிரிக்க.. பவித்ரா.. தன் வசமிழந்தாள்.. இவன் மாயக்காரன்... அந்தக் கண்ணனைப் போன்ற கள்வன்.. இவனிடம் மயங்கிவிடக் கூடாது..

தன் மனதை அடக்கிக் கொண்டவள் கேட்டாள்..

''ஏன் சண்டையென்றால் பயமா? நீங்கள் பயமறியாதவர்ன்னு நினைத்தேனே...''

''அந்த நினைப்பை அப்படியே வைத்துக்கொள்... அதுதான் உண்மை....''

''அப்புறம் ஏன் என்னிடம் வெள்ளைக் கொடி காட்டுகிறீர்கள்?''

''பருந்திடம் சண்டை போடலாம்.. வெண்புறாவிடம் வெள்ளைக் கொடிதான் காட்ட வேண்டும்....''

''அஜித்.. வேண்டாம்... என் கோபத்தைக் கிளராதீர்கள்..''

''உன் கோபம் என்ன ரவா கேசரியா... நான் கிளர.. ம்ம்.. சாப்பிடு...''



''எனக்கு வேண்டாம் என்றேனே.....''

''நீ குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறாய்... சூடாக சாப்பிட்டால் நல்லது... சாப்பிடு....''

''வேண்டாம்...''

''சொல்வதைத் கேள்.. சாப்பிடு....''

''வேண்டாம்...''

அஜித்தின் முகத்தில் எரிச்சல் வந்தது... அவன் உக்கிரத்துடன் முறைத்தான்..

''எது வேண்டாம்... சாப்பாடா... இல்லை நானா?''

பவித்ரா பதறிப்போய் அவன் முகம் பார்த்தாள்... அவன் தொடர்ந்தான்.

''எனக்குத் தெரியும்... உனக்கு என்மேல் இருப்பது கோபம்.. வெறுப்பு இல்லை.. கோபம் குறைந்துவிடும்.. மறைந்துவிடும்.. வெறுப்பில் இவை இரண்டும் நடக்க சாத்தியம் இல்லை.. இப்போது இதை நீ சாப்பிட்டால் நீ என் மேல் கொண்டிருப்பது வெறுப்பு இல்லை என்று அர்த்தமாயிடும்.. சாப்பிடா விட்டால் எழுந்து போய்விடுவேன்... ஆனால் ஜென்மத்திற்கும் உன் பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டேன்.. எப்படி வசதி....?''

பவித்ரா உதடுகளை கடித்துக் கொண்டாள்.. அவள் விழிகளில் நீர் ததும்பியது... சாப்பாட்டு பிளேட்டை இழுத்து தன் முன்னால் வைத்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

''இப்ப எதுக்கு கண் கலங்குகிறாய்....''

''நீங்கள் என்னை அடிமைப் படுத்துகிறீர்கள்...''

''இதே குற்றச்சாட்டை நானும் உன் மேல் சொல்லலாமில்லையா?''

''நான் என்ன செய்தேன்?''

''என் பிரண்ட் என்னை சினிமா பார்க்கக் கூப்பிட்டான்... அதை மறுத்து விட்டு... நான் உன்கூட வெளியில் வந்தேன்... இது என்னை அடிமைப் படுத்தும் விசயமில்லையா? ஒரு மணி நேரம்... ஒரு இடத்தில் அடங்கி உட்கார மாட்டேனென்று எனக்குப் பெயர் உண்டு... ஒரு நாள் பூராவும் உன்னோடு ஊர் சுற்றினேன்.... இது நான் அடிமைப்பட்ட விசயமில்லையா....?''

''அஜித்....''

''ஒரு நேரம் அப்படித்தான்... ஒரு நேரம் இப்படித்தான்... இதற்காக கோபித்துக் கொள்வதா...?''

''உங்கள் பிரண்ட்ஸின் முன்னால் நான் உங்களுடன் பேசக்கூடாதா? இதில் என்ன ஒளிவு மறைவு வேண்டியிருக்கிறது....''

''ஒளிவு.. மறைவா...? நானா....? குட்ஜோக்.. பவித்ரா.. நான் உன்னுடன் தான் ஊர்சுற்றிப் பார்க்கப் போகிறேன்னு என் பிரண்ட்ஸிடம் சொல்லி விட்டுத்தான் வந்தேன்.. நான் உன்னுடன் பழகுவது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.. அவர்கள் உன்னையும்.. என்னையும் இணைத்து கிண்டல் செய்வார்கள்.. நான் இல்லையென்று அவர்களிடம் மறுத்தது கிடையாது.. இவ்வளவு ஏன்....? நீ அவர்கள் முன்னால் என்னைக் கூப்பிட்டபோது நான் உன்னைத் தெரியாதவன் போல் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லையே... உடனே எழுந்து உன்னிடம் வந்தேனா இல்லையா....?''

''வந்து சண்டை போட்டீர்கள்....''

''சண்டைபோடக்கூட அவர்கள் முன்னால் எழுந்து உன்னிடம் வந்தேன் தானே.. அதை மறந்து விட்டுப்



பேசுகிறாயே.. நான் வெளிப்படையானவன் பவித்ரா.. என்னிடம் ரகசியம் இருக்காது...''

''அப்புறம் ஏன்.. அவர்கள் முன்னால் கூப்பிட்டதற்கு எரிந்து விழுந்தீர்கள்....''

''அதுவா.. அது வேறு ஒன்றிற்காக.. பவித்ரா.. நீ யோசித்துப் பார்த்தால் உனக்கே புரியும்.. நண்பர்கள் நான்கு பேர் கூட்டாக பழகுவார்கள்.. எங்கே போனாலும் சேர்ந்தே போவார்கள்.. சேர்ந்தே வருவார்கள்.. அவர்கள் ஒவ்வொருவருக்கும் கல்யாணம் ஆகி.. அவர்கள் வாழ்வில் பெண் ஒருத்தி வந்துவிட்டால்.. அந்த நட்புச் சங்கிலி அறுந்து விடும்....''

''இதை ஏன் இப்போது சொல்கிறீர்கள்....?''

''என் பிரண்ட்ஸ் ஒவ்வொருவருக்கும்.. ஈர்ப்போ.. நட்போ.. காதலோ.. உண்டு.. ஆனால் நாங்கள் ஒன்று கூடி விட்டால்.. அங்கே நாங்கள்தான் பிரதானம்.. அப்படித்தான் நாங்கள் இதுவரை இருந்திருக்கிறோம்.. இனியும் இருப்போம்.. அவர்களிடமிருந்து என்னைப் பிரிப்பதுபோல் நீ அழைத்துவிட்டாய்.. அதனால் நான் கோபப்பட்டு விட்டேன்...''

விழி அகல கேட்டுக் கொண்டிருந்த பவித்ராவின் முகம் ஒளிர்விட்டது.

''ஹெள நைஸ்.. இப்படியொரு பிரண்ட்சிப்பா?''

''ஆமாம்.. இப்போது கோபம் போய்விட்டதா...?''

''போயே.. போச்சு.. இட்ஸ் கான்..''

''அப்போ காபி சாப்பிடலாமா..''

''ஓ யெஸ்...''

பவித்ரா பழைய கலகலப்பிற்கு திரும்பினாள்.. வாய் ஓயாமல் அவள் பேசிக் கொண்டிருக்க.. ரசித்துக் கேட்ட படி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தான் அவன்...

''அஜித்...''

''சொல்லு...''

''சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே...''

''கோபமெல்லாம் பறந்துவிட்டது... நீ சொல்லு...''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால்.. நான் வேண் டாமான்னு கேட்டீர்களே.. நீங்கள் எனக்கு வேண்டும்ன்னு நான் கேட்டால்... வாழ்க்கை முழுவதும் என்னோடு வருவீர்களா?'' பவித்ரா கேட்டு விட்டாள்.

அஜித் சட்டென்று அவள் முகம் பார்த்தான்.. அவள் விழி தாழ்த்திக் கொண்டாள்.. அஜித்தின் முகத்தில் யோசனை வந்தது...

'என்ன பதில் சொல்வது? இவள் மனதில் தோன் றியதை கேட்டு விட்டாள்... உடனே எப்படி இதற்குப் பதில்சொல்வது....?'

''பவித்ரா... நான் உன்னுடன் பழகும் இந்தப் பழக்கத் திற்கு பெயர் நட்பா... இல்லை காதலா என்று எனக்குத் தெரியாது.. ஆனால் ஒன்றை மட்டும் என்னால் உறுதி யாகச் சொல்லமுடியும்.. உன் கண்ணீர் என்னை பாதிக் கிறது.. உன் துன்பம் காண எனக்குச் சகிக்க மாட்டேன் என் கிறது.. இதற்கு அர்த்தம் என்ன என்று எனக்குத் தெளி வாக விளங்கிய பின் உனக்கு முடிவு சொல்கிறேன்...''

இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்த போது வானம் மேகங்கள் இல்லாமல் நிர்மலமாக காட்சி யளித்தது.. இதமான இளம்வெயில் அடித்தது.



# 29



ராபர்ட் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான்.. வாசலில் நின்று ஒரு மணி நேரமாக பல் தேய்க்கிறேன் பேர் வழியென்று தெருவில் போவோர்.. வருவோரையெல் லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான் அலெக்ஸ்.... தெருமுனையிலேயே பிரசாத்தின் வண்டியை பார்த்து விட்டவன்.

''வாடா.. மச்சி....'' என்று வரவேற்றான்..

''ராபர்ட் எங்கேடா...'' என்று கேட்டவாறு வாசலில் வண்டியை நிறுத்திப் பூட்டினான் பிரசாத்.

''படிப்பாளி.. வேறு என்ன செய்வான்...? ஒரு மணி நேரமாக விழுந்து.. விழுந்து படித்துக் கொண்டிருக்கிறான்..''

''நீ....?''

''ஒரு மணிநேரமாக பிரஷ் பண்ணிக் கொண்டிருக் கிறேன்.. உள்ளே வா....''

அலெக்ஸ் உள்ளே செல்ல.. பிரசாத் பின் தொடர்ந் தான்.. ராபர்ட் மிக.. மிக... தடிமனான புத்தகத்திற்குள் தலையைக் கொடுத்திருந்தான்...

''புத்தகப்புழு... புத்தகப்புழு என்று சொல்வார்களே.. அதை நேரில் பார்த்திருக்கிறாயா பிரசாத்....''

''பார்த்ததில்லை....''

''இப்போ பார்.. கால் மட்டும் வெளியே தெரிய புத் தகத்திற்குள் ஒளிந்திருக்கான் பார்த்தியா... இவன்தான் புத்தகப்புழு....''

ராபர்ட் புத்தகத்தை மூடிவைத்து விட்டு அலெக்ஸை முறைத்தான்.

''என்ன ராபர்ட்... புத்தகத்தை தலைகீழா மனப்பாடம் பண்ணிட்டாயா?''

''எங்கே பண்ணுவது? வாசலில் நின்றவன் வீட்டுக்குள் வந்துட்ட இல்ல.. இனி நான் படித்தது போலதான்.. நீ ஏன்டா வீட்டுக்குள் வந்தே...''

''அதுசரிடா.. சன்டேன்னா.. லேட்டா எழுந்து கொள்ளலாம்.. ஒருமணி நேரம் பல் தேய்க்கலாம்.. உனக்காக நாள் பூரா வாசலில் நின்று நான் பல் தேய்த்துக் கொண்டிருந்தால் பக்கத்து வீட்டுப் பார்கவி என்னைப் பற்றி என்னடா நினைப்பாள்.....?''

''பக்கத்து வீட்டு பார்கவியா...? அவள் நினைப்பைப் பற்றி உனக்கென்னடா கவலை?''

''வயசுப் பொண்ணு... பாவம்....''

''பாவப்பட்டியானால் அவளைப் பார்ப்பதை விட்டு விடேன்....''

''அது எப்படி முடியும்? அவள் வருத்தப்பட மாட்டாளா....?''

''ஏண்டா.. நேற்றுத்தான் எதிர்வீட்டு பாமாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தாய்...''

''பாமாவின் அப்பாவைப் பார்த்தால் அசப்பில் என் மாமா போலவே இருக்கிறார்டா....''

''அப்புறம் ஏன் அதை விட்டுவிட்டு பக்கத்து வீட்டுப் பக்கம் உன் கண் திரும்புது?''

''நேற்றே ஓர் விசயம் கேள்விப்பட்டேன்....''



''என்னடா....''

''எதிர் வீட்டு மாமாவுக்கு கராத்தே தெரியுமாம்....''

பிரசாத் வாய்விட்டுச் சிரித்தான்... ராபர்ட் தலையில் அடித்துக் கொண்டான்.

''டேய்.. பேச்சிலர்ஸிற்கு வாடகைக்கு விடமாட்டோம்ன்னு சொன்ன ஹவுஸ் ஓனரின் கையில்.. காலில்.. விழுந்து வீடு பிடிச்சிருக்கேன்... பார்த்து இருடா....''

''பார்த்துக் கிட்டுத்தானேடா இருக்கேன்....''

பிரசாத் இன்னும் சிரித்தான்.. அலெக்ஸ் பாத்ருமிற்குள் புகுந்து கொள்ள பிரசாத் ராபர்ட்டின் எதிரில் அமர்ந்தான்....

''டிவியைப் போடேண்டா.....''

''இரு போடறேன்....''

''பரவாயில்லைடா.. நீங்க இரண்டு பேரும் சேர்ந்து.. டிவி... கேஸ்... வாஷிங் மெஷின்னு.. தனிக்குடித்தனம் பண்ணுகிற ஜோரில் சாமான்களை வாங்கிச் சேர்த்துட்டீங்க...''

''ஐந்தரை வருசம் இருக்கணுமே...''

அலெக்ஸ் குளித்துவிட்டு வந்தான். சமையலறைக்குள் சென்று ஒரு தட்டில் இரண்டு இட்லிகளை வைத்து சட்னியை ஊற்றிக்கொண்டு வந்து அவர்களருகில் அமர்ந்து கொண்டான்...

''ஒரு சந்தேகம் அலெக்ஸ்....''

''கேளு பிரசாத்.. உனக்கில்லாத விளக்கமா...?''

''காலேஜில்தான் காவ்யாவை சைட் அடிக்கிறாயே....''

''அது லைப் பார்ட்னராய் ஆவதற்காக...''

''இந்த எதிர்வீடு.... பக்கத்து வீடு....''

''இது டைம் பாஸ் ஆவதற்காக...''

ராபர்ட்டின் முகம் கோபத்தில் கடுத்தது... அலெக்ஸை எரித்துவிடுவது போல் பார்த்தான்.. அதைக் கண்டு அஞ்சாத அலெக்ஸ்.

''பார்க்காதே.. என்னைப் பார்க்காதே'' என்று பாடினான்.

''எப்படிடா நீ வந்து என்கூட ஹவுஸ் மேட் ஆன?''

''அதெல்லாம் எழுதப்பட்ட விதி ராபர்ட்.. நீ டென்சன் ஆகாதே...''

ராபர்ட் பிரசாத்துடன் பேசிக் கொண்டே டிவி பார்க்க ஆரம்பித்தான்.. நிகழ்ச்சியின் இடையில் ஓர் நகைக் கடை விளம்பரம் வந்தது...

கோவிலின் உள்ளே... ஊர் பெரிய மனிதரான அப்பாவும்... அம்மாவும்.. அவர்களின் ஒரே மகளோடு சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்....

மகளின் தோழியிடம் மகள் கவலையாக வினவுகிறாள்.

''அப்பா என் காதலுக்கு சம்மதிப்பாரா....''

''அதெல்லாம் சம்மதிக்க மாட்டார்.... உன் காதலன் காரோடு.. கோவில் வாசலில் வெயிட் பண்ணுகிறான்... ஓடிவிடு.....''

இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் தாய்... பதறியடித்து தன் கணவரிடம் போய் சொல்லுகிறாள்.

''என்னங்க... நம்ம பொண்ணு ஓடிப்போகப் போகிறாளாம்....''

கணவர் பலமான நம்பிக்கையுடன் மனைவியை அதட்டுகிறார்..



''ஏய்.. அவள் என் பொண்ணுடி.....''

சாமி கும்பிட்டு விட்டு... கோவிலை விட்டு வெளியில் வந்து படியில் இறங்குகிறார்கள்.. மகளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அந்தத் தந்தை நகர்ந்து விடுகிறார்.. எதிர்பார்ப்போடு காத்திருக்கும் காதலனின் காரைத் தாண்டி அந்தப் பெண் சென்று தகப்பனின் கையைப் பிடித்துக் கொள்கிறாள். தாய் சந்தோசப்பட்டுப் போகிறாள்.

இந்த விளம்பரத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த ராபர்ட்டிற்கு சந்தேகம் வந்து விட்டது.

''ஏண்டா பிரசாத்... இதுவோ நகைக்கடை விளம்பரம்...''

''ஆமாம்....''

''இதற்கு ஏன்.. இப்படி ஒரு கான்செப்டை எடுத்திருக்கிறார்கள்....''

''எதற்கு...''

பிரசாத் யோசிக்க ஆரம்பிக்க.. அலெக்ஸ் வாயைத் திறந்தான்.

''ரொம்ப அலட்டிக்காதேடா பிரசாத்.. நான் சொல்கிறேன்..''

''வேண்டாம்டா பிரசாத்.. அவனை வாயைத் திறக்கச் சொல்லாதே...''

''நீயேண்டா ராபர்ட் எப்போதும் என்னை சந்தேகமாகவே பார்க்கிற?''

''பொறு ராபர்ட்.. அவன் என்ன சொல்கிறான்னு கேட்போமே... அலெக்ஸ் நீ சொல்லுடா....''

''வேறு ஒன்னுமில்லைடா பிரசாத்.. பெண்ணும்.. நகையும்... நம் கையை விட்டு எப்போதும் போகாதுங்கிற நம்பிக்கையை இந்தக்கடை தருகிறதாம்....''

ராபர்ட் கையிலிருந்த ரிமோட்டைத் தூக்கி அலெக்ஸின் மேல் விட்டெறிய.. அவன் அதைத் தாவிப் பிடித்தான்..

''இங்கே விளையாடுவதை மேட்ச்சில் விளையாடுங்கடா... நாம ஜெயிக்கலாம்... அதை விட்டு விட்டு வீட்டுக்குள் கிரிக்கெட் விளையாடதீங்க..''

''இல்லைடா பிரசாத்... அலெக்ஸ் சொல்வது விளையாட்டுத்தனமாய் இருந்தாலும் அதுதான் கரெக்ட் ஆன்ஸர்.... நம்பிக்கை... என்பதுதான் இந்த விளம்பரம் நம் முன் வைக்கும் பாயிண்ட்... எங்கள் கடையில் நீங்கள் நகை வாங்கினால் தரம் நிச்சயம்.. என்பதை சொல்லாமல் சொல்கிறது இந்த விளம்பரம்.. பெற்று வளர்த்த பெண் எப்படி பெற்றவர்களை ஏமாற்ற மாட்டாளோ.. அப்படி நம்பி வரும் வாடிக்கையாளரை நாங்களும் ஏமாற்றமாட்டோம்ன்னு அந்த நகைக்கடைக்காரங்க சொல்றாங்க....''

''அப்படியா.. இதில் இவ்வளவு விசயம் இருக்கா?'' என்று கேட்டது ராபர்ட் அல்ல... அலெக்ஸ்...

இப்போது பிரசாத் தன் கையிலிருந்த வண்டிச் சாவியை அவன்மேல் எறிந்தான்.



## 30

மருத்துவப் படிப்பிற்கான கடைசி வருடப் படிப்பு என்பதால் மரத்தடி மாநாடுகளைக் குறைத்துக் கொண்டு



படிப்பில் கண்ணும் கருத்துமாய் மூழ்கினார்கள் மாணவர்கள்..

ஸ்ரீதரன் தனியாகப் படித்துக் கொண்டிருக்கையில்.. அவனைத் தேடி வைதேஹி வந்தாள்... தன் முன் நிழல் படிவதைக் கண்டு தலை நிமிர்ந்த ஸ்ரீதரன் வைதேஹியைக் கண்டதும்.... நிமிர்ந்து உட்கார்ந்தான்...

''என்ன வைதேஹி...''

''சும்மா... உங்ககிட்ட நோட்ஸ் வாங்கலாமென்று... வந்தேன்..''

'ஏன்... உன்தோழிகள் யாரிடமும் நோட்ஸ் இல்லையா... அவர்களிடம் இல்லாத நோட்ஸா என்னிடம் இருக்கிறது...?' என்று ஸ்ரீதரன் கேட்கவில்லை.

அவனுக்குத் தெரியும்.. இது அவனுடன் பேச அவள் சொல்லும் காரணம்... அவனும் அவள் வழியை பின்பற்றி பேச்சைத் தொடர்ந்தான்..

''என்ன நோட்ஸ் வேண்டும்?''

அவள் சொன்னாள்.. அவன் இல்லாத நோட்ஸை தேடி விட்டு..

''அடடே.... அது என் ரூமில் இருக்கிறதே.. நாளைக்கு கொடுக்கிறேன்..'' என்று கூறினான்.

அவள் மகிழ்ந்து போனாள்...

'மறுநாளும் பேசக் காரணம் கிடைத்து விட்டதே...'

அவனோ மனதிற்குள் திட்டம் வகுத்துக் கொண்டான்.

'நாளைக்கு அந்த நோட்ஸை பிரண்ட் எடுத்துக்கிட்டுப் போயிட்டான்னு சொல்லனும்.... இந்த வாரம் முழுவதும் மீட் பண்ணக் காரணம் கிடைத்து விட்டது...'

''உட்கார் வைதேஹி.. படிப்பெல்லாம் எப்படி போய் கிட்டு இருக்கு?''

வைதேஹி அமர்ந்து கொண்டாள்... கொஞ்ச நேரம் படிப்பைப் பற்றிப் பேசினார்கள்.. கொஞ்ச நேரம் நண் பர்களைப் பற்றிப் பேசினார்கள். கொஞ்ச நேரம் அவர்கள் இருவரின் வீட்டைப் பற்றிப் பேசினார்கள். மெல்ல.. மெல்ல... தங்களைப் பற்றிப் பேசிக்கொள்ள ஆரம் பித்தார்கள்...

''உனக்கு பிலிம் பார்க்கப் பிடிக்குமா...?''

''ம்ம்.. பிடிக்கும்.. உங்களுக்கு....''

''வேறு என்ன வேலை...? பிரண்ட்ஸோடு டைம் பாஸ் பண்ண பிலிம்தானே வசதி.. உனக்கு எந்த ஆக் டர்ஸ் பிடிக்கும்?''

''நான் டைரக்டர் யாருன்னு பார்த்துவிட்டு.. விமரி சனங்களை படித்து விட்டுத்தான் சினிமா பார்க்கவே போவேன்...''

''ஈஸிட்....''

காலம் காலமாய் காதல் வயப்பட்ட ஆணும் பெண் ணும் ஏன் அர்த்தமே இல்லாமல் அதிகம் பேசுகிறார்கள் என்று இன்னும் எந்த அறிஞரும் கண்டுபிடித்துச் சொல்லவில்லை.. அதேபோல்.. பெண்ணை ஏன் ஆண் இயல்பாய் ஒருமையில் விளிக்கிறான் என்பதையும்... ஆணை பெண் ஏன் மரியாதை கொடுத்து அழைக்கிறாள் என்பதையும் கண்டுபிடிக்கவில்லை.

ஸ்ரீதரனும் வைதேஹியும் சில நாள்களில் பொய் காரணம் சொல்லிக் கொள்ளாமல் உண்மையைச் சொல்லி சந்தித்துக் கொண்டார்கள்.



''நேற்று நீ ஏன் கிளாஸிற்கு வரவில்லை வைதேஹி...?''

''நான்தான் போனில் சொன்னேனே.. தலைவலி ஸ்ரீதர்...''

''நீயில்லாமல் கிளாஸ் ரூம் வெறிச்சுன்னு இருந்தது தெரியுமா?''

''பொய் சொல்லாதீங்க....''

''நிஜமாய்தான் சொல்கிறேன்...''

''பிராமிஸ்...?''

''பிராமிஸ்.....''

சத்தியத்தை இதற்கெல்லாம் பயன்படுத்துவார்களா என்று சத்தியம் கவலை கொண்டதைப் பற்றி அவர்கள் கவலைப் படவில்லை..

ராதாகிருஷ்ணன் ஒரு பக்கம் தமிழரசியுடன் ஐக்கிய மாகி விட்டான்...

''தமிழ்... நீ எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறாய்?''

''ஐஸ்.. ஐஸ்....''

''ஏய்.. நிஜமாகத்தான் சொல்கிறேன்...''

''நீங்க எப்படி இவ்வளவு அறிவாளியாய் இருக்கீங்க....?''

''ஏன் நீ மட்டும் என்னவாம்.. மார்க்குகளை அள்ளிக் குவிக்கிறாயே..''

''நீங்கள் கோல்டுமெடல்களையில்ல குவிக்கிறீங்க....''

''உன் பியூச்சர் பிளான் என்ன தமிழ்....?''

''உங்கள் பிளான் என்ன...?''

''நீ முதலில் சொல்லு..''

''நீங்கள் சொல்லுங்கள்....''

''ஏன் என் பிளானை முதலில் சொல்லச் சொல் கிறாய்?''

''உங்கள் பிளான் எதுவோ... அதுதான் என் பிளான்...''

ராதாகிருஷ்ணன் தமிழரசியை எல்லையில்லாத காதலுடன் பார்த்தான். அதே ஒளிர்ந்த முகத்துடன் வகுப்பறையில் போய் அமர்ந்தான்.

''ஏன்லே ராதா.. இன்றைக்கு என்ன உன் முகம் தேய்த்து வைத்த குத்து விளக்கு மாதிரி இப்படி பளபளான்னு இருக்கு?'' அஜீத் ஆதுரமாய் வினவ... அலெக்ஸ் அதற் குப் பதில் சொன்னான்..

''வேறு என்ன மச்சான்... 'செம்மொழியான தமிழ் மொழியே..' செம்மொழி மாநாட்டுப் பாட்டைப் பாடி விட்டு வந்திருப்பான்.. என்னடா ராதா... நான் சொல்வது சரிதானே...''

அலெக்ஸை ராதாகிருஷ்ணன் முறைக்கவில்லை... மாறாக ''நீ எப்போதுலே தப்பாகச் சொல்லியிருக்கிறாய்...'' என்று சொல்லிச் சிரித்தபடி அவன் தோள்மீது கை போட்டுக் கொண்டான்.

அலெக்ஸிடம் காவ்யா சந்தேகம் கேட்க ஆரம்பித் தாள்... இவனும் பாடபுக்கை விரித்து வைத்துக்கொண்டு அவளுக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்... காவ்யா வின் மேல் அலெக்ஸ் கொண்ட காதல் சுலபமாக கைகூடி யது... நினைத்ததை செய்து விடும் அலெக்ஸ் காவ்யா விடம் நேராகவே சொல்லிவிட்டான்.

''காவ்யா.. ஐதிங்க்... ஐலவ்யு.....''

''நான் திங்க்கெல்லாம் பண்ணவில்லை அலெக்ஸ்...''

''ஐயோ.. என்ன இது காலை வாருகிறாயே...''

''ஐ பீல்.. ஐ லவ்யு...''



''அப்பாடி தப்பித்தேன்.. என் வயிற்றில் பாலை வார்த் தாய் தாயே..''

''நீ கூட பயப்படுவாயா அலெக்ஸ்..''

''அப்புறம் நான் என்ன பெரிய வீரனா? காதல்ன்னு வந்துவிட்டால் எல்லோரும் கோழைகள் தாம்மா...''

''மாவீரன் அலெக்ஸாண்டர் பெயரை வைத்திருக் கிறாயே.. அந்தப் பெயரை வைத்துக்கொண்டு காதல் தோல்விக்கு பயப்படலாமா?''

''நீ கூடத்தான் காவ்யான்னு பெயரை வைத்திருக் கிறாய்.. அதற்காக தமிழ் படித்துவிட்டு காவியமா இயற்றிக்கொண்டிருக்கிறாய்...? டாக்டருக்கு படிக்க வரவில்லையா? அதுபோல்தான் இதுவும்.. பெயரில் என்னம்மா இருக்கிறது....?''

''எல்லாம் சரிதான் அலெக்ஸ்... ஆனால் நீ வார்த்தைக்கு வார்த்தை அம்மா போடுவதுதான் என்னை யோசிக்க வைக்கிறது...''

''என்ன யோசிக்கிறாய்....?''

''நம் காதலை மறு பரிசீலனை செய்யலாமான்னு யோசிக்கிறேன்...''

''அடிப்பாவி.. காரியத்தையே கெடுக்கப் பார்க் கிறாயே.. இதற்கா இந்த நான்கு வருடமும் உன் பின்னால் 'ஜொள்' விட்டுக் கொண்டு அலைந்தேன்.. கடைசி நேரம் காலை வாராதே காவ்யா..''

''அப்போ இனிமேல் அம்மா போடாதே...''

''இனிமேல் போடுவேனா?''

அலெக்ஸ் உருப்படியாய் காதலுக்கு ராஜபாட்டை போட்டுக்கொண்டிருக்க.. ராபர்ட் செல்வியிடம் பேச வார்த்தைகளைத் தேடி தவித்துக் கொண்டிருந்தான்.. கடைசியில் அவளே வந்து பேசினாள்..

''ராபர்ட்.. எனக்கு உங்கள் அமைதியும்... குணமும் ரொம்பப் பிடிக்கும்....''

''எனக்கு உங்களையே பிடிக்கும்ங்க...''

அவர்கள் ஒன்று பட்டார்கள்.. ஆனந்த் தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாக சாராவை பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்... எதிர் மறைத்துருவங்கள் இரண்டும் ஒன்றையொன்று ஈர்க்க ஆரம்பித்தன.



# 31

கல்லுக்குள் இருந்து நீர் சுரப்பதைக் கண்ட ஆனந்திற்கு ஆச்சர்யம். அவனைக் கண்டதும் நின்ற சாரா வம்பிழுப்பாள் என்று பார்த்தால்... அவள் அவன் முகத்தையே காதலாகப் பார்த்தாள்... ஆனந்தின் விசில் நின்றுவிட்டது.

'என்னடா இது.. இன்றைக்கென்று இவள் இந்தப் பார்வை பார்க்கிறாள்..'

''ஏன் ஆனந்த் உங்கள் விசிலை நிறுத்திவிட்டீர்கள்..'' சாரா அன்பொழுகக் கேட்டாள்..

உலக மகா அதிசயத்தைப் பார்ப்பவன் போல் அவளைப் பார்த்த ஆனந்த்..



''ஏன் சாரா.. என் விசிலின் இசையை அவ்வளவு ரசிக்கிறாயா? அந்த இசையென்னும் இன்ப வெள்ளத்தில் மூழ்கத்தான் காலேஜிற்கு ஓடோடி வந்தாயா?'' என்று கேட்டான்...

''பார்த்தீர்களா.. கிண்டல் பண்ணுகிறீர்கள்...''

''பழக்கதோசம்.. அது சுலபத்தில் போகாது..''

''இப்படிச் சொன்னால் எப்படி ஆனந்த்...''

''வேறு எப்படிச் சொல்லனும்னு நீதான் சொல்லிக்குடேன்...''

''அடேங்கப்பா.. விசிலடிக்க நான்தான் சொல்லிக் கொடுத்தேனா...? என் பின்னால் சுற்றுவேனென்று வீர சபதம் போட நான்தான் சொல்லிக் குடுத்தேனா.. இத்தனை நாளும்.. என் பின்னால் பாலோ பண்ண நான்தான் சொல்லிக்குடுத்தேனா...?''

''நாள்கணக்கில் பாலோ பண்ணினேனா..?''

''ஓ.கே..ஓ.கே.. வருசக் கணக்கில் பாலோ பண்ணீர்கள் போதுமா?''

''சாரா.. திடீர்ன்னு என்ன என்மேல் கரிசன மழையை பொழிகிறாய்?''

''என்ன செய்வது? இன்னும் ஆறு மாதங்களில் நம் படிப்பு முடிந்து விடுகிறதே... அதற்குள் நாம் பேச வேண்டியதை பேசிக் கொள்ளலாமே...''

''என்ன பேசுவது...?''

''எதிர்காலத்தைப் பற்றித்தான்...''

''என் எதிர்காலத்தைப் பற்றியா... இல்லை... உன் எதிர்காலத்தை பற்றியா?''

''நம் எதிர்காலத்தைப் பற்றி....''

ஆனந்த் ஆனந்தப் பட்டுப் போனான்.. இருவரும் மரத்தடியில் அமர்ந்து கண்ணோடு கண் கலக்க பேச ஆரம்பிக்க.. அவர்களைக் கடந்து போன அஜீத் ஆச்சரிய மானான்..

''என்னலே இது.. நம்ம பய கடைசியில் அவனோட வீரசபதத்தில் ஜெயித்து விட்டான்போல இருக்கே.. வெள்ளைக்காரியுடன் உட்கார்ந்து வேலைமெனக்கெட்டு கதை பேசுகிறானே...'' என்று கூட வந்த பிரசாத்திடம் வினவினான்.

''அப்படித்தான் தெரிகிறது அஜீத்குட்டி....

''எங்க அம்மாவுக்கு அடுத்து என்னை குட்டின்னு கூப்பிடுகிறவன் நீதான்லே.... அதுசரி... காலேஜெல்லாம் காதல் அலை அடிக்குது.. உன்கதை என்ன ஆச்சு...?

''அதே நிலையில் நிற்குது...''

''ஏன்லே....?''

''இன்னும் நான் டாக்டராக வில்லையே...''

அஜித் பிரசாத்தின் முகத்தை ஆழமாகப் பார்த்தான்.. அவன் முகத்தில் தெளிவு இருந்தது.. அவன் பார்வையைக் கண்டு சிரித்தான்..

''ஏன் அப்படிப் பார்க்கிறாய் அஜித்?''

''நீ வித்தியாசமானவன்தான்லே.. காதல்ன்னா கதை பேசனும்கிறதை நீ உடைத்து விட்டாயே... உண்மையிலேயே... நீ செய்வதுதான் காதல்...''

பெண்களின் ஹாஸ்டலில்.. சாராவின் அறையின் உள்ளே லேகா வந்தாள்.... சாரா போனில் பேசிக்கொண்டிருந்தாள்.. சற்று நேரம் கழித்து லேகாவைப் பார்த்தவள்..

''வா லேகா...'' என்றாள்...

''யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய்?''



''ஆனந்துடன்...''

''என்னால் உன்னைப் புரிந்து கொள்ளவே முடிவில்லை சாரா..''

''ஏன்...?''

''அவன் மேல் அவ்வளவு வெறுப்பை கக்கினாயே...''

''அதீதமான அன்புக்கு அடிப்படை... அதீதமான வெறுப்புதான்...''

''என்னவோ.. போ.. எனக்கொன்றும் புரியவில்லை..''

''புரியாததால்தான் நீ இன்னும் உன் காதலை பிரசாத்திடம் சொல்லாமல் இருக்கிறாய்...''

''இப்போது பிரசாத்தைப் பற்றி நீ எதற்குப் பேசுகிறாய்...?''

''ஏண்டி....''

''அவன் ஒன்றும் சாதாரணம் இல்லை.. காரணமாகத்தான் நான் அவனிடம் என் காதலைச் சொல்லாமல் இருக்கிறேன்..''

''என்ன காரணம்?''

''அவன் உட்கார்ந்து படித்தால் நன்றாகப் படிப்பான் சாரா.. ஆனால் உட்கார மாட்டான்...''

''இது உனக்கு எப்படித் தெரியும்...''

''அவனுடைய பிரண்ட்ஸ்கள் பேசிக் கொள்வதை வைத்துத் தெரியும்...''

''ஒட்டுக் கேட்டாயா?''

''ஒட்டுக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை.. அவர்களும் நம் கிளாஸ்தானே... கிளாஸ் ரூமில் அவர்கள் பேசிக் கொள்வது நம் காதில் விழுகாதா?''

''ஓ.. நீ அப்படி வருகிறாயா...?''

''ஆமாம்... அவன் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதால் தான் இப்படி ஒரு கண்டிசனைப் போட்டிருக்கிறேன்...''

''படிப்பு முடிந்ததும் அவன் வந்து உன்னிடம் காதலைச் சொல்வான்னு நீ நம்புகிறாயா?''

''நிச்சயம் நம்புகிறேன்?''

''எந்த நம்பிக்கையில் சொல்லுகிறாய்...''

''அவனது காதலின் மேல் இருக்கும் நம்பிக்கையில் தான் சொல்கிறேன்..''

லேகா போய்விட்டாள்... அவள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட பவித்ரா..

''அருமையான ஜோடி'' என்றாள்..

''நீதான் மெச்சிக்கனும்...'' என்று சாரா பதிலளித்தாள்.

பவித்ராவின் செல்போன் ஒலித்தது.. எடுத்து காதில் வைத்துப் பேச ஆரம்பித்தாள்.

''ஹாய் சுரேன்..''

''......''

''பைன்.. ஹவ் ஆர்யு...'

''....''

''ஓ.. அப்படியா.. எப்போது வருகிறீங்க....''

''......''

''நெக்ஸ்ட் மன்த்தா... வாங்க..வாங்க....''

''......''

''என்னது... அம்மாவும்.. அப்பாவும் வருகிறாங்களா? உங்களுடனா? அப்பாவுக்கு புரொஜெக்ட் வொர்க் முடிந்துவிட்டதா...?''

''.....''

''இல்லையா.. அப்புறம் ஏன் திடீர்னு வருகிறாங்க....''



''......''

''இல்லை சுரேன்... என்னிடம் எதுவும் சொல்லவில்லை...''

''.......''

''சர்ப்ரைஸா வைத்திருக்கிறாங்களா.. என்ன அது?''

''........''

''சொல்லமாட்டாங்களா.. சொல்லாவிட்டால் போங்க....''

''......''

''என்னது போக வரவில்லையா...? என்னவோ போங்க... உங்க பேச்சு எதுவுமே எனக்குப் புரியவில்லை.....''

ஆனால் அவள் பேச்சை செவிமடுத்துக் கொண்டிருந்த சாராவிற்கு பவித்ராவிற்குப் புரியாத பல விசயங்கள் புரிந்தன.. அவளது புருவங்கள் சுளித்து முடிச்சாகின.

# 32



அஜீத் தன் பல்சரை வேகமாக ஒட்டிக் கொண்டிருந்தான்.. பின்னால் அமர்ந்திருந்த பவித்ரா சளசளவென்று பேசிய வண்ணம் வந்தாள்..

''நெக்ஸ்ட் வீக் எக்ஸாம் ஸ்டார்ட் ஆகுது.. இப்போது போய் அவுட்டிங் போகணும்னு அடம்பிடிக்கிற நீ.....''

''இப்படி வெளியே வந்தால்தானே உங்களோடு பேச முடியுது.. காலேஜிக்குள் தான் நீங்கள் உங்கள் பிரண்ட்ஸுக்கு மட்டும் சொந்தமாகிடறீங்களே....''

''இப்போது எங்கேதான் போகணும்கிறாய்?''

''உட்கார்ந்து பேசுவது போல் ஓர் இடத்திற்கு கூப்பிட்டுக் கொண்டு போங்க.''

''அதிசயம்... தீம்பார்க் போகலாமா?''

''ஓ...''

அஜித் வண்டியை 'அதிசயம்' செல்லும் சாலையில் திருப்பினான்... நீர் விளையாட்டுகளை ரசித்தபடி இருவரும் தண்ணீர் குளத்தின் கரையில் நடந்தனர்..

''அப்புறம்...'' என்றான் அஜித்..

''அடுத்த வாரம் எக்ஸாம் ஸ்டார்ட் ஆகுது...''

''இதைச் சொல்லத்தான் இங்கே வந்தாயா....?''

''இல்லை அஜித்.. இன்னும் இரண்டு வாரங்களில் நம் எக்ஸாம் முடிந்து விடும்.. அப்புறம்.. நாமெல்லோரும்.. ஹவுஸ் சர்ஜனாகி விடுவோம்... இந்த ஸ்டூடன்ட் லைப் இருக்காது....''

''ஆமாம்....''

''அம்மா.. அப்பா வேறு இந்த மன்த் என்டில் வருகிறாங்க..''

''அப்படியா.. உன் அப்பா போன வேலை முடிந்து விட்டதா?''

'''இல்லையாம்... அவர்கள் சர்ப்ரைஸ் விசிட் கொடுக்கப் போகிறார்கள்...''

''அவர்கள் வருவதுதான் உனக்குத் தெரிந்திருக்கிறதே.. அப்புறம் என்ன சர்ப்ரைஸ் விசிட்....?''

''அவர்கள்தான் ஏதோ சர்ப்ரைஸ் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள்....''

''ஓஹோ.. அப்படி உட்காருவோமோ....''

இருவரும்.. புல்வெளியின் மீதிருந்த மரப்பெஞ்சில் அமர்ந்தனர். பவித்ரா விரல்களால் பெஞ்சின் மேல் கோலம் போட்டுக் கொண்டிருக்க அஜீத் அவளையே பார்த்தான்..



அவள் கேட்கத் தவிக்கும் விசயம் என்ன என்பது அவனுக்குப் புரிந்தது.

'நீ என்னைக் காதலிக்கிறாயா.. இல்லையா...?' இதைத்தானே அவள் கேட்கத் தவிக்கிறாள்...

பவித்ரா மஞ்சள் நிற சுடிதாரில் இருந்தாள்.. அவளது நிறம் வேறு சந்தனத்தின் நிறத்தில் இருந்ததால் இன்னும் அழகாகத் தெரிந்தாள். குட்டையான முடியை இரண்டு பின்னல்கள் போட்டு மஞ்சள் நிற ரப்பர் பேன்டில் இருக்கியிருந்தாள்.

'எனக்கு முடியை விரித்துப் போட்டிருந்தால் பிடிக்காது...' என்று அஜீத் ஒருமுறை சொன்னதன் எதிரொலி இது.

காதுகளில் வெள்ளைக் கற்கள் பதித்த வளையத்தை மாட்டியிருந்தாள்.. கழுத்தில் சின்ன செயின்.. முகத்தில் அவளது அழகை உணராத அறியாமை.. இவை எல்லா வற்றையும் தாண்டிய இயல்பான குணம்...

அனைத்து வகைகளிலும் அஜீத்தை ஈர்த்தாள் அவள்... அஜீத் காதல் வசப்பட்டான்.

''பவித்ரா....'' என்று மென்மையாக அழைத்தான்.

''ம்ம்...'' என்று நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் அவள்.

''கடைசிவரை என் வாழ்வில் என்னோடு இணைந்து வருவாயா?'' பவித்ராவின் விழிகள் மின்னின...

''காத்திருக்கிறேனே அஜீத்...''

''திடீரென்று வந்தாய்... என்னைப் பிடித்திருக்கிறது என்றாய்.. என்னுடன் பழகினாய்.. ஆனால் எதுவரை நீ என்கூட வருவாய் என்று எனக்குத் தெரியவேண்டும் பவித்ரா...''

''என் மேல் சந்தேகமா?''

''உன் காதல் மேல் சந்தேகம்....''

''ஏன்....?''

''நீ பார்த்துப் பழகிய ஆண்களிடமிருந்து நான் வித்தியாசப் பட்டதால் நீ என்னை விரும்பியிருக்கலாம்.. அது ஒருவகையான ஈர்ப்பு... அதையும் தாண்டிக் காதல் எப்படி வந்தது?''

''நான் பார்த்துப் பழகிய ஆண்கள் வேறு.... நீங்கள் வேறு அஜீத்.. உங்களிடம் போலித்தனமில்லை... பெண்கள் உங்களை வெறுப்பாகப் பார்த்தார்கள்.. அதிலிருந்து தேவையில்லாமல் பெண்களிடம் வழியும் குணம் உங்களுக்கு இல்லை என்பது எனக்குப் புரிந்து போனது.. உங்கள் நண்பர்களுக்காக பாசத்தைக் கொடுக்கும் உங்கள் குணம் என்னை கவர்ந்து விட்டது.. இதற்கு மேல் நான் என்ன சொல்ல அஜீத்?''

சொல்வதற்கு எதுவுமில்லைதான்.. அவர்கள் மௌனமாகத் திரும்பினார்கள்... அடுத்து வந்த நாள்களில் அனைவரும் தேர்வுக்கு தயாராகினார்கள்.. தேர்வு முடிந்தது... ஊருக்குக் கிளம்பத் தயாரான அஜித் பவித்ராவைத் தேடிப் போனான்... அவள் லேடிஸ் ஹாஸ்டல் வாசலில் உயரமாய்.. சிவந்த நிறத்துடன்... கவர்ச்சியான தோற்றத்துடன் இருந்த வாலிபன் ஒருவனுடன் உரையாடிக் கொண்டிருந்தாள்.. இவனைக் கண்டதும் கண்கள் பிரகாசிக்க..

''அஜித்...'' என்றாள்.

அவளுடன் பேசிக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தான்.

''சுரேன்... இவர் அஜித்....'' என்று அவனுக்கு அஜீத்தை அறிமுகப்படுத்தி வைத்தவள்.. அடுத்து



''அஜீத்... இது...'' என்று ஆரம்பிக்கும் போது அவன் முந்திக் கொண்டான்.

''ஐ ஆம் சுரேன்... பவித்ராவின் வுட் பி....''

''என்னது...'' அஜீத் அதிர்ந்து போய் பவித்ராவைப் பார்க்க... அவள்,

''சுரேன்...'' என்று திகைத்தாள்.

''யெஸ் பவி... நம் திருமணத்தை இங்கே நடத்தி முடிக்கத்தான் அங்கிளும்.... ஆண்ட்டியும் கிளம்பி வந்திருக்கிறாங்க... பெங்களூரில் இந்த மாதமே நம் திருமணம்... உனக்காக விசா.. பாஸ்போர்ட் தான் ரெடியாக இருக்கிறதே.. நீ ஹவுஸ் சர்ஜன் முடித்ததும் யு எஸ் ஏவிற்கு பறந்து விடப் போகிறாய்... இதைத்தான் நாங்கள் சர்ப்ரைஸ் என்கிறோம்...'' என்று சுரேன் கூறிக்கொண்டே போனான்...

''அஜித்...'' என்று பவித்ரா ஏதோ சொல்ல முயல.. அவளை கை அமர்த்திய அஜீத்.. சுரேனைப் பார்த்து

''உங்களை பவித்ராவிற்கு ஏற்கனவே தெரியுமா?'' என்று கேட்டான்..

''பூலிஷ் கொஸ்டின்.. நாங்கள் சிறு வயதாக இருந்த போதே எங்களது திருமணம் உறுதியாகி விட்டது... பவியின் பர்த்டேக்கு.. முதல் கிப்ட் என்னிடமிருந்துதானே அவளுக்கு வரும்? அவள் இதை உங்களிடம் சொல்லவில்லையா?''

''சொல்லவில்லை சுரேன்.. நீங்கள் ஒருவர் அவருக்காக இருப்பதையே எனக்கு அவள் சொல்லவில்லை.. மறைத்து விட்டாள்...''

''அஜீத்... அஜீத்....''

பவித்ரா அழைக்க... அழைக்க... அஜித் வேகமாகத் திரும்பிச் சென்று விட்டான். பவித்ரா அவனைப் பின்

தொடர்ந்து ஓடியும் அவனிடம் பேசமுடியவில்லை.. காத்திருந்த காரில் ஏறிப்பறந்து விட்டான்.

பவித்ரா அவன் எப்போதும் நண்பர்களுடன் அமர்ந்து பேசும் மரத்தடியிலேயே அமர்ந்து விட்டாள்... அவளைத் தூரத்தில் இருந்து பார்த்த சுஜாதா சாராவிடம் சொன்னாள்.

'' உன் ஆசை நிறைவேறிவிட்டது சாரா.... அஜீத் காதலில் தோற்று விட்டான்.. நீ உன் சபதத்தில் ஜெயித்து விட்டாய்....''

''இல்லை சுஜி.. நான் ஜெயிக்கவில்லை.. இது நடக்கக் கூடாது என்றுதான் நான் மனமார விரும்பினேன்.. அஜீத் காதலில் தோற்கவில்லை சுஜி... பவித்ராவின் மனதில் இருப்பது அஜீத் மட்டும்தான்...அவன் அதை உணராமல் போய்விட்டான்...''

''என்னடி இப்போது இப்படிப் பேசுகிறாய்?''

''இப்போது நான் காதலித்துக் கொண்டிருக்கிறேனே சுஜி.. காதலின் வேதனை எனக்குப் புரிகின்றதே.. அஜீத்தின் காதல் தோற்கக்கூடாது சுஜி....''

சாரா ஆனந்தைத் தேடிப்போனாள்.



# 33

ஹவுஸ் சர்ஜன் பயிற்சிக்காலம் முடிந்து.. அனைவரும் முழு டாக்டர்களாகி எம்.பி.பி.எஸ் பட்டத்துடன் வெளி வந்தனர்...

ஆஸ்பத்திரியின் நீண்ட காரிடாரில் நடந்து வந்து கொண்டிருந்த அலெக்ஸ் தூரத்தில் நின்ற லேகாவைப் பார்த்து விட்டான்... அருகில் வந்து கொண்டிருந்த பிரசாத்தைப் பார்த்து...



''லேகா உனக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்....'' என்றான்.

பிரசாத் அமைதியாய் லேகாவின் அருகே சென்றான்.. லேகாவின் மனம் படபடத்தது... இதோ.. இப்போது இவன் காதலைச் சொல்லப் போகிறான்... இன்பமான எதிர்பார்ப்பில் மனம் சிறகடிக்க அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹாய்....'' என்றான் பிரசாத்...

ஐந்தரை வருடங்களாய் காதலித்தவளைப் பார்த்து அவன் சொல்லும் முதல் வார்த்தை இது..

''ஹாய்....'' என்றாள் லேகா பதிலுக்கு...

''அப்புறம்.. மேலே என்ன செய்யப் போகிறீங்க?''

''இன்னும் யோசிக்கவில்லை....''

''அப்படியா.. ஓகே... பை... ஸீ யு...''

பிரசாத் கிளம்ப முனைய... லேகா பதட்டமாய் அவனைத் தடுத்தாள்.

''அவ்வளவுதானா பிரசாத்... வேறு ஒன்றுமில்லையா?''

''வேறு என்ன சொல்வேன் என்று எதிர்பார்த்தீங்க...''

''காதல் சொல்வீங்கன்னு எதிர்பார்த்தேன்.....''

இனி காலதாமதம் செய்ய முடியாது என்ற நிலையில் லேகா பட்டென்று தன் மனதைக் கூறிவிட்டாள்.. பிரசாத் நிதானமாக அவள் முகம் பார்த்தான்..

''எதுக்குங்க... நான் காதல் சொல்வேன்.. நீங்க.. பி.ஜி கோர்ஸ் எதையாவது முடித்து விட்டு வந்து காதல் சொல்லுன்னு சொல்லப் போகிறீங்க.. ஒருவழியாய் பி.ஜியை முடித்து விட்டு வந்து காதல் சொல்லுகிறேனே....''

பிரசாத் மீண்டும் கிளம்ப முனைய... லேகா அவன் கரம் பற்றித் தடுத்தாள்.

''நாம் இரண்டு பேருமே பிஜி பண்ணலாம் பிரசாத்.. கணவன்.. மனைவியாக...''

பிரசாத் லேகாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.. முறைப்படி அவனைப் பெண் கேட்டு லேகாவின் வீட்டிற்கு ஜனார்த்தனமும்... ராதாவும் சென்றனர்.. திருமணம் நிச்சயிக்கப்பட்டு விமரிசையாக நடந்தது.

கர்ணன் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஹாஸ்பிடலுக்கு ஆர்த்தியின் அப்பா அவனைத் தேடிவந்தார்...

''ரொம்ப நன்றி தம்பி... என் மகள் டாக்டராகிவிட்டாள்.. நீங்கள் என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து விலகி நின்றீர்கள்.. இனியும் நான் உங்களை சோதிக்கப் போவதில்லை... முறைப்படி அப்பா அம்மாவோடு ஆர்த்தியை பெண் கேட்டு வாங்க... நான் அவளை உங்களுக்கு கல்யாணம் செய்து கொடுக்கிறேன்.''

கர்ணனின் விழிகள் வியப்பில் விரிந்தன.. அவனும் பிரசாத்தைப் பின்பற்றி காதல் திருமணம் செய்து கொண்டான்.

ராதாகிருஷ்ணனும்... தமிழரசியும் மேலே படித்து முடித்து விட்டுத்தான் கல்யாணம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்... ஆனால்... அவனும் தமிழரசியின் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டுவிட்டான்.

அலெக்ஸ்.. ராபர்ட்... இருவரின் வீடுகளிலும் மதம் மாறித் திருமணம் செய்துகொள்ள எதிர்ப்பு எழுந்தது... அவர்கள் போராடி ஜெயித்தனர்.

ஸ்ரீதரின் அத்தை தன் மகளைத்தான் கட்டவேண்டுமென்று மறிக்க.. ஸ்ரீதரின் அப்பா.. மகனா.. தங்கையா..



என்று தவிக்க.. ஓர் நாள் உதயத்தின்போது ஸ்ரீதரின் அம்மா போர் கொடியைத் தூக்கி தன் மகனின் பக்கம் சாய்ந்தாள். அவனது காதல் பிழைத்தது.

எல்லோரும் காதலில் ஜெயித்து மேற்படிப்பை ஆரம்பித்திருந்த போது அஜீத் மட்டும் தனியே.. தன் மேல் படிப்பைத் தொடர்ந்தான்.. நண்பர்களின் திருமணங்களுக்கு போய் வந்தான்..

அவன் சமீபத்தில் கலந்து கொண்டது ஆனந்த்... சாராவின் திருமணத்தில்தான்...

பவித்ராவை சந்திப்போமென்று தெரிந்திருந்ததால்.. சஞ்சலமான மனதோடு தான் போனான்.. பவித்ரா வந்திருந்தாள்.. இளைத்திருந்தாள்.. முகம் சோபையில்லாமல் இருந்தது.. மேலே படிக்கிறாள் என்று ஆனந்த் சொன்னான்.. மேற்கொண்டு அவன் பவித்ராவைப் பற்றி பேச முனைய அஜீத் காது கொடுத்துக் கேட்காமல் வந்துவிட்டான்.

அஜீத்தின் படிப்பு முடிந்தது.. அவனுடைய அப்பா அவனுக்காக தூத்துக்குடியில் மிகப்பெரிய மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்தார்.. ஒருநாள் அவன் மருத்துவமனையில் இருந்தபோது.. அவனைத் தேடி ஒருபெண் வந்திருப்பதாக நர்ஸ் வந்து சொன்னாள்.. வரச்சொன்னான்... உள்ளே வந்தது பவித்ரா...

''நீயா... உனக்கு என்ன வேண்டும்...''

''வேலை வேண்டும்...''

''வேலை தேடி இங்கு ஏன் வந்தாய்?''

''நான் வேறு எங்கு போவேன்...?''

''வெளிநாட்டிற்கு உன் கணவனோடு போ...''

''என் கணவனாக உங்களைத்தானே நினைத்திருக்
கிறேன்.. நான் உங்களை.. விட்டு எப்படிப் போவேன்...''

அஜித் திகைத்தான்.. இவளுக்கு இன்னும் மணமாக
வில்லையா...

''இல்லை.... அஜீத்.. நீங்கள் என்னை மறந்து வேறொரு
திருமணம் செய்து கொண்டீர்களா? உங்களால் முடி
யாதது என்னால் மட்டும் எப்படி முடியும்? அந்த சுரேன்
என் ரிலேடிவ்... என் சம்மதம் கேட்காமல் திருமண ஏற்
பாடுகளை பண்ணினார்கள்.. என் மனம் உங்களிடம்ன்னு
தெரிந்ததும் அவன் விலகிப் போய்விட்டான்... நான்
உங்கள் பவித்ரா.. அஜீத்....''

எல்லையற்ற நிம்மதியுடன் பவித்ராவின் கரம் பிடித்
தான் அஜீத்.. தூத்துக்குடியில் நடந்த அவனது திருமணத்
திற்கு அவனது நண்பர்கள் அனைவரும் வருகை
தந்தனர்...

கல்லூரிக் காலம்.. எல்லோருக்குமே பொற்காலம்..
கல்லூரிக் காலத்திலே நிகழ்பவை எல்லாமே இனிமை
யானவைதான்... துன்பம் என்பதே இல்லை.